The Family Library, No. 5.

குடும்ப வாசிகசாலை இலக்கம் 5.



யேசு[illegible] சூசை.

# EDUCATION OF CHILDREN

# பிள்ளை வளர்ப்பு

முதற் பாகம்.

யாழ்ப்பாணம்.
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

✠

The Family Library, No. 5.
குடும்பவாசகசாலை, இலக்கம் 5.

# EDUCATION OF CHILDREN
# பிள்ளை வளர்ப்பு

முதற் பாகம்

By,
The Revd. B. A. Marcellin, O. M. I.
வண. வ. அ. மரிசலின்சுவாமியார்
அவர்களால் இயற்றப்பட்டது

*All Rights Reserved*



JAFFNA
ST. JOSEPH'S CATHOLIC PRESS
1923

*Imprimatur* :

✠ J. A. BRAULT, O. M. I

Bishop of Jaffna.

Jaffna, 9th Nov. 1921.

# பதிப்புரை

"குடும்பவாசகசாலை" எனும் வரிசையிற் சேரும் சிறு புத்தகங்களெல்லாம் நம் கிறீஸ்த குடும்பங்களுக்கு மிகப் பிரயோசனமுள்ளவைகளாகவே யிருக்கவேண்டுமென்பது நமது ஆசை. ஆதலால் இப்போது "பிள்ளை வளர்ப்பு" எனும் இச் சிறந்த நூலை 5-ம் இலக்கமாக வெளிப்படுத்துகிறோம். யாழ்ப்பாண மேற்றிராசனக் கிறீஸ்தவர்களெல்லாரும் நன்றாயறிந்த சனரஞ்சித மதுர பிரசங்கியாராகிய வண. மரிசலின்சுவாமியார், தாம் அநேக ஞான ஒடுக்கங்கள் போதித்தும் பற்பலவிடங்களில் மீசாம்பார்த்தும் அடைந்துகொண்ட முற்றிய அனுபவத்தை இந்நூலிலே அமைத்திருக்கிறார். அவரவருடைய மனோநிலையைப் பொட்டிட்டாற்போலச் சுட்டிப்பாய் விபரிப்பதிலேயும், கேட்போருடைய அநுதாபத்தைக் கவர்ந்து மனதைக் கிள்ளி அருட்டுவதிலேயுஞ் சுவாமியார் எவ்வளவு வாலாயப்பட்டவர் என்பதை அவருடைய கிளர்ச்சி நிறைந்த பிரசங்கங்களைக் கேட்டோரெல்லாம் அறிவார்கள். இக் குணங்கள் இந்நூலிலும் விரவியிருக்கின்றன. இதில் ஒவ்வொரு போதகமும் அனுபவத்தையொட்டிய பல சரித்திரங்கள் சம்பவங்களாலும், சத்தியவேத நூலாசிரியர்களிடத்திலும், பிறசமய நூலாசிரியர்களிடத்திலுங் கண்ட பல மேற்கோள்களாலும் வாசிப்போர் மனதுக்குப் பிரீதியையுந் தெளிவையும் உண்டாக்கத்தக்கவிதமாய் ஊன்றிவிடப்பட்டிருக்கின்றது. இதை வாசிப்பதிலே எவ்வித நிரம்பாமனமுள்ளவர்களுக்கும் அலுப்புத் தோற்றாது. இது புத்தியை நல்லறிவுகளால் நிரப்பி மனதைத் தூண்டிக் கிளரச்செய்யும் ஓர் இன்பமான வாசிப்பேயாகும்.

இப்போது பிரசுரிக்கப்படுகிறது நூலின் முதற்பாகம் மாத்திரமே. சில்காலம் பொறுத்து இரண்டாம், மூன்றாம் பாகங்களும் வெளிவரும்.

சா. ஞானப்பிரகாசசுவாமி

## பாயிரம்

சன்மார்க்க வித்துவான்களின் கொள்கைப்படி சகல தொழில்களிலும் அதி முக்கியமும் மேன்மையும் பிரயாசமுமான தொழில் பிள்ளைகளை நல்லொழுக்கமும் தேவபத்தியுமுள்ளவர்களாக வளர்ப்பதேயாம். இவ்வளவு பிரயாசையான தொழிலை இயன்றளவு இலகுவாக்குவதே இந் நூலின் நோக்கம்.

இது சத்தியவேதபாதுகாவலனில் வெளிப்பட்டபோது சில குருமார் இதை ஞாயிற்றுக்கிழமைதோறும் கோவில்களில் வாசிப்பித்தும் விளக்கியும் வந்தார்கள். சில உபாத்திமார்களும் தங்கள் பாடசாலைகளில் ஞானோபதேசநேரம் இதை வாசிப்பித்து வினா விடைசெய்தார்களென்று கேள்விப்பட்டேன். இதனை வாசிப்போர் விநோதப்பிரியத்தினால் மாத்திரம் இங்குமங்கும் பரும்படியாய் அல்லது தீவிரமாய் வாசித்துமுடிக்கப்பாராமல் நாளுக்குநாள் குடும்பங்களில் கொஞ்சங்கொஞ்சமாயும் அவதானமாயும் மீண்டும்மீண்டும் வாசித்து யோசித்து அனுசரிக்கப் பிரயாசப்படவேண்டுமென்பதே எனது பேராசை.

இதை எழுதும்படி தூண்டிவிட்டு வேண்டிய உதவிகள் புரிந்தவரான வண. ஞானப்பிரகாசசுவாமியாருக்கும், இதைப் பிரசுரப்படுத்த எனது குருத்துவ வெள்ளியுபிலிச்சமயத்தில் வேண்டிய பணஉதவிசெய்த என்னுடைய பங்குக் கிறீஸ்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இந்நூலைக் கிறீஸ்துவ குடும்பங்களுக்கு நன்முன்மாதிரியான திருக்குடும்பத்துக்கே சமர்ப்பணஞ் செய்கின்றேன்.

இதனை வாசிப்போரனைவரும் தங்கள் குடும்பங்களை யேசுநாதருடைய திருக்குடும்பத்துக்கு ஒப்புக்கொடுத்து அதன் சுகிர்தமாதிரிகையைக் கண்டுபாவித்துச் சன்மார்க்கத்திலும் தேவபத்தியிலும் வளர்ந்தோங்கவேண்டுமென்பதே எனது கோரிக்கை.

ஆக்கியோன்

# பிள்ளை வளர்ப்பு

## முதல் அதிகாரம்

### பெற்றோரின் மேன்மையும் அதிகாரமும்.

அருமையான பெற்றோரே! சருவேசுரன் உங்களுக்குப்பிள்ளைப்பாக்கியம் அருளியபோது உங்களை அவர் எவ்வளவு மேன்மைப்படுத்தியிருக்கிறார் என்பதை எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

உள்ளபடி பார்த்தால் பிதா மாதா என்னும் பட்டங்களே உலகத்தில் வழங்குகிற சகல பட்டங்களிலும் மேலானவைகள். பிதா என்னும் பெயர் விசேஷமாய் நம்மைப் படைத்தவருக்கு உரியது. அவரே பரலோகத்தையும் பூலோகத்தையும் உண்டாக்கிக் காத்துக்கொண்டுவருகிற ஆதிகாரணராயும் பரிபாலனராயுமிருக்கிறபடியால், அவர் மாத்திரம் பூரணமான அர்த்தத்தின்படி பிதாவாயிருக்கிறார். ஆகையினாலேதான் சருவேசுரனுக்குரிய பிதாத்தன்மையிலிருந்து பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள பிதாத்தன்மையெல்லாம் உண்டாகின்றது என்று அர்ச். சின்னப்பரும் வசனித்தார். (எபேசி. 3; 15.) தேவ திரித்துவத்தின் முதலாம் ஆளாகியவரே பிதா என்று அழைக்கப்படுகிறார். இப்பெயர் அவருக்கு இன்பமும் ஏற்றதுமானதால் அல்லவோ அவருடைய ஏக குமாரனாகிய யேசுநாதர் தாம் உண்டாக்கிய பரமண்டல மந்திரத்தில் அவரைப் "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று நாமெல்லாரும் அழைக்கவேண்

டுமென்று எமக்குக் கற்பித்திருக்கிறார். பின்னும் சருவேசுரன் மாத்திரம் சரியான அர்த்தத்தின்படி பிதா என்று சொல்லப்படத்தக்கவர் என்பதைக் காட்டும்பொருட்டு "பரமண்டலங்களில் இருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்" என்றும் வசனித்தருளினார். (அர்ச். மத். 23; 9.)

இயல்வேத காலத்தில் விசேஷ தேவாசீர்வாதம் பெற்றுப் பெருஞ் செல்வாக்குடையவர்களாய் இலங்கிய ஆபிரகாம் யாக்கோபு முதலாம் மகாத்துமாக்கள் இன்றைக்கும் பிதாக்களென்றும் அதிபிதாக்களென்றும் அழைக்கப்படுகிறார்கள். மேலும் பூர்வகாலத்தில் ரோமை இராச்சியத்திலே சட்டங்களை உண்டாக்குவோராயிருந்த வயோதிகப் பிரபுக்களுக்கும் பிதாக்களென்னும் பேர் வழங்கிவந்தது. இவ்விதமாகத்தான் திருச்சபையிலே அப்போஸ்தொலிக்க பாரம்பரியத்தை எழுதிவைத்தவர்களும், அவ் அப்போஸ்தலர்களுக்குப் பின் திருச்சபைக்கு அஸ்திவாரங்களாய்ப் பிரகாசித்தவர்களுமான வேதபாரகர்கள் பிதாக்களென்று அழைக்கப்படுகிறார்கள்.

புத்திர பாக்கியம் பெற்ற ஆடவர்களே! நீங்களும் பிதாக்களென்று அழைக்கப்படுகிறீர்கள். நீங்கள் எவ்வளவு எளியவர்களாயிருந்தாலும், எவ்வளவு கீழான நிலைபரத்திலிருக்கிறவர்களாயிருந்தாலும் உங்கள் ஒவ்வொருவரையும் சருவேசுரன் இத்தனை மேலான பேருக்கும் நிலைமைக்கும் அழைத்திருப்பது உங்களுக்குப் பெரும் மேன்மை அல்லவா?

பிதாவின் மகிமைபோலவே மாதாவின் மகிமையும் பெரிதாயிருக்கிறது.

உலக இரட்சகர் பூமியில் உதித்தபோது தமது திருமாதாமூலமாய் மாதாக்களின் ஸ்திதியையும் மேன்மைப்படுத்தியிருக்கிறார். அத்தாயை அவர் மாசில்லாமல் உற்பவித்துப் பிறக்கப்பண்ணினதுமன்றி, அவளைப் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இராக்கினியாய் ஏற்படுத்தி மனுமக்கள் அனைவருக்கும் மாதாவும் தலைவியுமாக்கி, தாமும் இவ்வுலகில் இருக்கையில் முப்பது வயதுமட்டும



அவளுக்கு அமைந்து அவளை நேசித்துக் கனம்பண்ணி வந்தாரல்லவா? கானாவூரின் கலியாண வீட்டிலே தம்முடைய தாயின் விருப்பத்தை நிறைவேற்றும்பொருட்டுத் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றித் தமது முதற்புதுமையைச் செய்ததினாலே அவளைப் பிரசித்தமாய் மகிமைப்படுத்தினாரல்லவா?

வேதாகமத்தின்படி "தன் தாயைச் சங்கிக்கிறவன் திரவியத்தைச் சேகரித்து வைக்கிறவனுக்கு ஒப்பாயிருக்கிறான்" (சர்வபிரசங்கி 3; 5.)

அறிவுள்ளவர்கள் எக்காலத்திலும் மாதாக்களின் அந்தஸ்தைக் கனம்பண்ணி வந்திருக்கிறார்கள்.

தேவனிடத்தில் விசேஷ ஞானம்பெற்றவரான சலமோனின் அன்னையாகிய பெத்சபி ஒரு அலுவல் நிமித்தம் அவரிடம்போனபோது அவர் தம் சிம்மாசனத்தை விட்டெழுந்து தண்டனிட்டு அவளைத் தன் வலப்பக்கத்தில் வேறோர் சிங்காசனத்தில் உட்காரச்செய்ததுமன்றி அவள் தான் ஓர் உபகாரத்தைக் கேட்க வந்தேனென்றபோது "தாயே கேளும் நீர் கேட்பதை நான் மறுப்பது சரியல்ல" என்று வசனித்தார். (3·ம் அர. 2-ம் அதி.)

"சருவேசுரனுக்குப் பயப்படுகிறவன் தன் பெற்றோரைச் சங்கித்து அவர்களை மதித்துத் தன்னை உலகத்துக்குக் கொண்டுவந்த குடும்பபதிகளாக அவர்களை மதித்து அவர்களுக்குப்பணிசெய்வான்" (சர்வபிர. 3; 8.) என்னும் தேவவாக்குப்படி, தேவன்மேல் உண்மையான பயபத்தி உள்ளோராய் வளர்க்கப்பட்டவர்கள் தங்கள் பெற்றோரைப்பார்க்கிலும் தாங்கள் எவ்வளவு மேற்பட்டிருந்தாலும் அவர்களுக்குரிய சன்மானத்தை அவர்கள் பெறவேண்டியவர்கள் என்றதை ஒருபோதும் மறவாமல் அவர்களை எக்காலமும் கனம்பண்ணிவருவார்கள்.

## பெற்றோரின் மேன்மை

சமுசாரிகள் அனைவரும் பெற்றோராயிருக்கப் பேராசைப்படுவது வழக்கம். ஆனால் சிலர் எவ்வளவு ஆவல் கொண்டு நேர்ச்சிகளைப்பண்ணிவந்தாலும் அந்த வரத்தை

அடையாமலிருக்கிறார்கள். தாய் தந்தையரே! கடவுள் உங்களைப் பெற்றோராக்கி உங்கள் பிள்ளைகளால் உங்கள் வயோதிகத்துக்கும் கிடைதலைகாலத்துக்கும் பெரும் ஆதரவுண்டாகவும் உங்கள் பேர் உங்களோடு அற்றுப்போகாமல் நிலைத்திருக்கவும் பண்ணத் தயைகூர்ந்தது உங்களுக்கு மேன்மையும் பாக்கியமுமல்லவா?

ஏழைகளான பெற்றோர்கூடத் தங்கள் பிள்ளைகள் தம்மார்பிலும் மடியிலும் முதுகிலும் சாய்ந்து தங்களைப் புடைசூழ்ந்திருப்பதில் பெருமையும் ஆனந்தமுங் கொள்ளுகிறார்கள். இவர்களுக்குத் தாங்கள் பிள்ளைகளால் சூழப்பட்டிருப்பது இராசாக்கள் தங்கள் பிரசைகள் மத்தியில் வீற்றிருப்பதைப்பார்க்கிலும் அதிக ஆனந்தமாகும். ஏனெனில் பயத்திலும் நேசமே மேலானது. பிரசைகள் பயத்தினால் அரசனைச் சங்கிப்பது வழக்கம். ஆனால் பிள்ளைகளோ நேசத்தினால் பெற்றோரைக் கனம்பண்ணுகிறார்கள். பிள்ளைகள் பெற்றோருக்குப்போல வேறுயாருக்குத் தங்கள் மனதிலுள்ள எல்லாவற்றையும் அச்சங் கூச்சமின்றி வெளிவிடுவார்கள்?

தாய் தந்தையர் பிள்ளைகள் மட்டில் தேவனுடைய ஸ்தானாபதிகளாகவும் அவர்களை ஆண்டு நடத்தும் தலைவர்களாகவும் இருக்கிறார்கள். தனவான்கள் அரசர்களின் ஸ்தானாபதிகளாயிருப்பதில் பெருமை பாராட்டுவது வழக்கம். தேவசமுகத்தில் அற்ப பூச்சி புழுக்களுக்கு ஒப்பாயிருக்கும் இராசாக்களின் ஸ்தானாபதிகளாயிருப்பது இவ்வளவு மேன்மையாகில், இராசாதிராசாவாகிய தேவனின் ஸ்தானாபதிகளாயிருப்பது பெற்றோருக்கு எவ்வளவு மேலான மகத்துவம்!

இராசகுமாரர்களைச் சம்பளத்துக்காக வளர்த்துப் பயிற்றுவதை உலகம் பெரும் மகிமையாக எண்ணினால், தேவாதிதேவனின் காரியஸ்தர்களாய்த் தெரியப்பட்டு அவர் தங்களுக்கு ஒப்படைத்த பிள்ளைகளை அவருக்கு ஏற்றவர்களாய் வளர்ப்பது பெற்றோருக்கு எவ்வளவு உன்னத மேன்மை! எவ்வளவு பெரும் பாக்கியம்!

தேவன் பிள்ளைகளுக்குப் பெற்றோரைத் தமது பதிலா



ளிகளாகவும் பிள்ளைகளுடைய உயிருக்குக்காரணர்களாகவும் நல்வாழ்வுக்கு அடி அத்திவாரமாகவும் அவர்களை மோட்சவழியில் நடத்துங் காவல் சம்மனசுகளாகவும் அவர்களுக்கு வேத அறிவு உணர்த்தும் முதல் குருப்பிரசாதிகளாகவும் கல்வி அறிவூட்டும் பிரதம உபாத்திமாராகவும் அவர்களை ஆண்டு நடத்தும் அரசர் அதிகாரிகளாகவும் காப்பாளராகவும் ஏற்படுத்தியிருக்கிறார்.

தனவான்கள் அரசர்களாற் பிரபுத்துவநிலைக்குத் தெரிந்துகொள்ளப்படுவதைப் பெரும் மேன்மையாய் எண்ணுகிறார்கள். ஆனால் மனிதர் தேவனால் பெற்றோர் என்னும் பதவிக்கு அழைக்கப்படுவது அதிலும் மேலான மேன்மையல்லவா?

## பெற்றோரின் பூரண அதிகாரம்

இதுவரையும் சொல்லப்பட்டவைகளால் பெற்றோரின் அந்தஸ்து எவ்வளவு மேன்மையுள்ளதென்று வெளியாகும். பெற்றோர் அனுபவிக்கும் இந்த உன்னத மேன்மையானது தனக்கேற்ற அதிகாரத்தையுங் கொண்டிராமல் இல்லை. பிள்ளைகள்மேல் அதிகாரமில்லாமற்போகில், பெற்றோருடைய மேன்மையானது பெயரளவிலே ஒரு மேன்மையாயிருக்குமல்லாமல் காரியத்தளவில் அப்படியிராது. சருவேசுரன் பெற்றோருக்குப் பிள்ளைகள் பேரில் பூரண அதிகாரம் அளித்திருக்கிறார். இராசாக்களுக்குக் கட்டளைச்சட்டத்துளடங்கிய அதிகாரம் மாத்திரம் பிரசைகளின்மேலுண்டு. ஆனால் பெற்றோரே! உங்களுக்கோ உங்கள் பிள்ளைகள்மேல் சுபாவமுறைக்கு மாறில்லாதவைகளிலெல்லாம் சர்வ அதிகாரமும் அருளப்பட்டிருக்கிறது. உங்கள் அதிகாரமே அதிக பூர்வீகமானதென்றும் அது தேனுடைய பரம அதிகாரத்தின் ஒரு பிரதிமையென்றும் ஓர் நூலாசிரியர் கூறுகிறார்.

உங்கள் பிள்ளைகளை நீங்கள் சிநேகித்து வளர்த்துக் காப்பாற்றினாலும் கிரயத்துக்கு விற்றாலும், அவர்களைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், தழுவி அணைத்தாலும் அவர்

களுக்கு அபராதமிட்டு ஆக்கினைப்படுத்தினாலும், அவர்களுக்குள்ளவைகளை எடுத்துக்கொண்டாலும் உங்கள் பொருள்பண்டங்களை அவர்களுக்குக்கொடுத்தாலும், கொடாதுவிட்டாலும், அவர்கள் உங்களை மதியாமல் உங்களுக்கு அமையாமல் துன்மார்க்கராய்ப்போகையில் நீங்கள் அவர்களை வெறுத்துச் சபித்தாலும் உங்களிடம் நியாயம் கேட்கத்துணிபவர் யார்?

பிள்ளைகளின் ஆத்தும சரீர நன்மைகளுக்கேற்ற ஒழுங்குக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, ஒவ்வொரு பிள்ளையின் தன்மைக்கும் குணத்துக்கும் வேண்டியவிதமாய் அக்கட்டுப்பாடுகளைக் கூட்டவும் குறைக்கவும், மாற்றவும் அழிக்கவும், பாவமற்ற எதையும் செய்யும்படி கற்பிக்கவும் செய்வதைத் தடுக்கவும் பெற்றோருக்குப் பூரண தத்துவமுண்டு.

## பெற்றோரின் ஆசீர்வாதமும் சாபமும்

இதனாலேதான், பெற்றோரே, நீங்கள் உத்தமராய் நடந்து பிள்ளைகளின் வாழ்வுக்கேற்க நன்மையை விரும்பி அவர்களை ஆசீர்வதித்தாலும் தின்மையை விரும்பிச்சபித்தாலும் உங்கள் அதிகாரத்தை விளக்கும்பொருட்டுச் சர்வேசுரன் அதையெல்லாம் அவர்களிடத்திற் பலிக்கச்செய்துவருகிறார் என்று வேதசரித்திர சம்பவங்களால் அறிகிறோம். இதனாலல்லவா வேதபாரகரும் பீலோ முதலாம் பெயர்படைத்த பிறசமயிகள் தாமும் பெற்றோரைக், கண்கண்ட தெய்வங்களென்றும், பூவுலக தேவர்களென்றும், இரண்டாம் சிருட்டிகர்களென்றும் சிருட்டிகரின் பிரதிமைகளென்றும் அழைக்கிறார்கள். (Raineri vol. 3. p. 85.) "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்றது நம்முடைய தமிழ் ஒளவையார்வாக்கு. "தன் தந்தையைப் புறக்கணிக்கிறவன் எவ்வளவோ நிந்தைக்குரியவன்; தாயை மனம்நோகச்செய்கிறவன் சருவேசுரனாற் சபிக்கப்பட்டவன்." (சர்வபிர. 3;18)

நோவா என்னும் அதிபிதா சலப்பிரளயத்துக்குப்பின்



புதியமுந்திரிகைரசத்தின் சத்தைச் சிந்தியாமல் அதைக் குடித்து மயக்கமாய்த் தமது கூடாரத்துக்குள் வஸ்திர அலங்கோலமாய்ப் படுத்திருந்தார். அவர் புத்திரருள் ஒருவனாகிய காம் என்பவன் பிதாவின் அலங்கோலத்தைக்கண்டவுடன் அதை மறைத்துவிடாமல் வெளியேயிருந்த தன் சகோதரர்களுக்கு அறிவித்தான். இவர்கள் தந்தையின் நிர்வாணத்தைக் கண்ணுற்பாராமல் அவரை மூடிவிட்டார்கள். அவர் மயக்கந்தெளிந்து எழுந்தபோது இளைய மகனாகிய காம் தமக்குச்செய்ததை அறிந்தவுடன் அவனைச்சபித்து அவன் தன்சகோதரரின் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றார். தம்மைச் சங்கித்த மற்றிரு குமாரருமாகிய சேமுக்கும் யாப்பேத்துவுக்கும் தேவ ஆசியைவிரும்பி அவர்களை ஆசீர்வதித்துவிட்டார். (ஆதியாகமம் 9) அவர் விரும்பிய நன்மைதின்மைகளின் பலிப்பு இன்றைக்கும் இவர்கள் சந்ததிகளில் தீர்க்கமாய் நிறைவேறிவருவது உலகம் அறிந்த விஷயம்.

மீளவும் அதிபிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, தொபியாஸ் முதலானோரும் மற்றும் நல்லோரும் தங்கள் புத்திரசந்தானத்துக்கு விரும்பிய நன்மைகளைச் சருவேசுரன் ஈந்துவந்தாரென்று வேதாகமத்திற் காண்கிறோம். "பிதாவின் ஆசீர்வாதம் பிள்ளைகளின் குடும்பங்களை ஸ்தாபிக்கும். தாயின் சாபமோ அவைகளின் அத்திவாரத்தை நிர்மூலமாக்கிவிடும்" (சர்வபிர சங்கி. 3;11) இந்த வேதவாக்கியத்தின் பொருளே "தாயிடு சாபம் தனயரைச்சுடுந்தீ" என்னும் தமிழ்க்கட்டுரையிலேயும் காணப்படுகின்றது.

கப்பதோசியாவில் ஒருதாய்க்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளுமிருந்தார்கள். அவர்களில் தலைச்சன் மகன், ஒருநாள் தாயை வெகுவாய் நிந்தித்ததுமன்றிக் கையோங்கியுமடித்தான். மற்றப்பிள்ளைகள் இதைக்கண்டும் தங்கள் கடமைப்படி தாயைப் பாதுகாக்கத் தெண்டியாமல் சும்மா நின்றுவிட்டார்கள். தாய் இதனால் மிகுந்த துக்கமுங் கோபமுங்கொண்டு கோவிலுக்குப்போய்த் தன்பிள்ளைகளெல்லாரையுஞ் சபித்து சருவேசுரன் அப்

பிள்ளைகளை உலகம் முழுதும் அஞ்சிநடக்கத்தக்கதாய்த் தண்டிக்கவேண்டுமென்று மன்றாடிக்கொண்டாள். அவள் வீட்டுக்குத் திரும்பியபோது பிள்ளைகள் சர்வாங்கமும் நடுநடுங்கிப் பெரும் உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பின் இந்த வேதனையைத் தாங்கமாட்டாமல் வீட்டைவிட்டுத் தாயின் சாபத்தோடு ஊரூராயலைந்துதிரிந்தார்கள். தாயும் தன்யோசனையில்லாத செய்கையினால் பிள்ளைகளுக்கு நேரிட்ட நிர்ப்பாக்கியத்தைச் சகிக்கமாட்டாமல் அவநம்பிக்கையாகிக் கழுத்தைத் திருகித் தற்கொலை செய்துகொண்டாள். பிள்ளைகள் எல்லோரும் தேசாந்தரிகளாய்த்திரிகையில் அவர்களில் இருவர் கிப்போ நகரியில் அர்ச். முடியப்பரின் கல்லறையிருந்த கோவிலுக்குப் போனார்கள். அச்சமயம் அங்கு கூடியிருந்த விசுவாசிகள் இவர்களுடைய நடுநடுக்கத்தையும் பரிதாப கோலத்தையுங்கண்டு ஏங்கிப் பிரமித்திருக்க, இருவரும் அர்ச். முடியப்பரையிரந்து மன்றாடி அவருடைய சலுகையால் புதுமையாய்ப் பூரண ஆரோக்கியம் அடைந்தார்கள். அப்புதுமை நடந்தபோது அங்கிருந்தவரான அர்ச். அகுஸ்தீன் எனும் வேதபாரகர் இச்சம்பவத்தை எழுதி வைத்திருக்கிறார். இத்தாய் செய்தது படுபாதகமென்று சொல்லவேண்டியிருந்தாலும், தாய்மாரின் அதிகாரம் எவ்வளவு என்றதைக்காட்டுதற்குச் சருவேசுரன் இவள்மூலமாய்ச் செய்தருளிய புதுமையைக்கண்டு அதிசயிக்கக்கடவோம்.

அர்ச். பிராஞ்சிஸ் றேஜிஸ் தமது குடும்பத்தில் நடந்த ஓர் சம்பவத்தைப் பின்வருமாறு அறிவித்திருக்கிறார்: இவருடைய மாமனாரின் குமாரரெல்லாரும் அந்நாட்களில் நடந்த ஒரு யுத்தத்துக்குப்போகத் தகப்பனாரிடம் உத்தரவு கேட்டார்கள். அவர் தம் தலைச்சன்மகன் தமக்குத் துணையாகத் தம்மோடிருக்கவேண்டுமென்றும் மற்றவர்கள் போகலாமென்றும் மனரம்மியமாய் விடைகொடுத்தார். ஆனால் தலைச்சன் மகன் தானும் கட்டாயம்போகவேண்டுமென்று பிடிவாதமாய்நின்றான். அதினால் தகப்பன் கோபங்கொண்டு நீ எனக்குக் கீழ்ப்படியாதபடியால்



போகலாம், நான் திரும்ப ஒருபோதும் உன்முகத்தைக் காணாமலிருப்பேனாக என்றார். மகன் தன்னெண்ணப்படிபோய் யுத்தத்தில் மாண்டுபோக, அவனுடைய பிரேதத்தைப் போர்க்களத்தில் அடக்கஞ்செய்துவிட்டார்கள். யுத்தம் முடிந்தபின் அவ்விடத்தில் ஓர் இடைப்பெண் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கையில் ஒருநாட் சடுதியாய் இரத்தக்கறையால் மூடப்பட்ட ஒரு போர்ச்சேவகன் அவளுக்கு முன்பாக எழுந்துநின்று, தான் இன்னாரென்றும் ஆசீர்வதிக்கப்படாத அவ்விடத்தில் அடக்கப்பட்டிருக்கும் தன்மேனியைக்கிளப்பித் தன் முன்னோரின்பிரதிஷ்டையான கல்லறையில் அடக்கஞ்செய்யும்படி தான் கேட்டுக்கொள்வதாகத் தன்பெற்றோருக்கு அறிவிக்க வேண்டுமென்றும் சொல்ல அவள் அப்படிச்செய்தாள். அப்போது றேஜிஸ் வமிசத்தாரும் குருப்பிரசாதிகளும் சவக்குழிக்குப்போய்ச் சவத்தையெடுத்துக் குறித்த கல்லறைக்குக் கொண்டுபோனார்கள். கல்லறையைக் கிட்டினபோது சவத்தைச்கொண்டுபோனவர்கள் முன்னேறிநடக்கமுடியாமல் பிரேதம் மிகப்பாரமாய்ப்போயிற்று. இதைக்கண்ட எல்லாரும் அதிசயித்துத் திகிலடைந்து நிற்க தகப்பன்மாத்திரம் காரியத்தை விளங்கிக்கொண்டார். ஐயையோ! என்மகனின் அமைச்சலீனத்துக்காக நான் அவனைச் சபித்திருந்தேனே. அதனாலல்லவோ இன்று இப்படிநேரிட்டிருக்கிறது என்றெண்ணி வானத்தைப்பார்த்து: நீதியும் பரிசுத்தமுமுள்ள ஆண்டவரே! என் பையனின் குற்றத்தை நான் முழுமனதோடு மன்னிக்கிறதுபோல தேவரீரும் என்பாவத்தை யன்னித்தருளும் என்று மன்றாடினார். உடனே பிரேதம் முன்போல் இலேசாகவே, அதைக்கல்லறைக்குக் கொண்டுபோய்த்திருச்சபைமுறையின்படி அடக்கஞ்செய்தார்கள்.

## பெற்றோர் சருவேசுரனின் பதிலாளிகள்

பெற்றோரே! ஆண்டவருடைய ஸ்தானாபதிகளாயிருக்கும் உங்களைப் பிள்ளைகள் நேசித்துக் கனம்பண்ணி உங்களுக்கு அமைந்து உதவி புரிந்துவந்தால் சருவேசுரன்

இதெல்லாந் தமக்கே செய்தாற்போல் அவர்களை ஆசீர்வதித்து விருத்தியடையப்பண்ணுகிறார். சின்னத் தோபியாஸ் தமது பெற்றோரைச் சங்கித்து நடந்ததினால் கர்த்தர் அவருக்கு ஐந்தாந் தலைமுறைமட்டும் தேவபயத்தோடு சீவித்துப் பாக்கியமாய் மரிக்கக் கிருபைசெய்தார். "தன் பிதாவைக் கனம்பண்ணுகிறவன் தன் பிள்ளைகளால் சந்தோஷம் அடைவான். அவன் செபம்பண்ணும்போது கேட்டருளப்படுவான்" (சர்வபிர. 3;6) "தன்பிதாவைப் பேணுகிறவன் நீடிய வாழ்வடைவான். தன் தந்தைக்குக் கீழ்ப்படிகிறவன் தாய்க்கு ஆறுதல்கொடுக்கிறான்." (சர்வ பிர. 3;7)

அன்றியும் பிதாமாதாக்களே! தேவனுக்குப் பதிலாளிகளாயிருக்கும் உங்கள் அதிகாரத்தைப் பிள்ளைகள் மதியாமல் உங்களைத் துன்புறுத்தித் துன்மார்க்கராய்ப்போகுங்கால் அவர் தமக்கே இத்துரோகங்கள் செய்யப்பட்டதாகவைத்து அவர்களைத் தண்டிக்கிறார். அப்சலோம் தன் தந்தையாகிய தாவீதிராசாவுக்கு எதிராய் எழும்பிக் கலகஞ்செய்ததற்குத் தண்டனையாக, அவன் போரிற் தோற்கடிக்கப்பட்டுப் பின்னிட்டோடும்போது சிந்தூரமரக்கொப்பிற் தொங்கிப் பிதாவின் விருப்பத்துக்கு மாறாய் மூன்று ஈட்டிகளினால் ஊடுருவப்பட்டு "மரத்திலே தொங்குகிறவன் சருவேசுரனாலே சபிக்கப்பட்டவன்" (உபா. 21; 23.) என்ற தேவசாபத்தோடு அவலமாய்ச் செத்தான். (2-ம் அரசர் 18;14-15) தன் பிதாமாதாவின் சொற்கேளாமல் அவர்களால் தண்டிக்கப்பட்டபோதிலும் அவர்களுக்கு அடங்காமற்போகிற முரட்டுத்தனமும் மூர்க்கமுமுள்ள பிள்ளையிருந்தால்..............இசிறவேலர் எல்லாருங்கேட்டுப் பயப்படத்தக்கதாக நகரவாசிகள் அனைவரும் அவனைக் கல்லாலெறிந்து கொன்றுவிடுவார்களாக. (உபா.21;18-21) என்று சருவேசுரன் வேத புத்தகத்தில் கற்பித்திருக்கிறார்.

பெற்றோரே! இவையாவையும் வாசிக்கும்போது உங்கள் மனதில் உண்டுபடும் எண்ணம் என்ன? சருவேசுரன் உங்களுக்கு அளித்திருக்கும் இவ்வளவு மேலான மேன்மையையும் அதிகாரத்தையும்பற்றி அகமகிழ்ந்து பெருமைகொள்ளுகிறீர்களா? பெருமைகொள்ள இடமுண்டுதான். ஆனால் ஒருகமக்காரனுக்கு வேண்டிய சரீரபெலம் நிலம் புலம் ஏர் எருதுகளிருந்தும் அவன் கமஞ்செய்யும் பிரயாசப்படாமல் இருந்தால் அவைகளால பிரயோசனமடைவானா? இல்லை. அப்படியே நீங்களும் சருவேசுரன் உங்களுக்கு அருளியிருக்கும் மேன்மையையும் அதிகாரத்தையும் தக்கவிதமாய் உபயோகித்துப் பிள்ளைகளைச் சன்மார்க்கராய் வளர்க்காதிருந்தால் அவர்களால் நீங்கள் நன்மையடையமுடியாது. தேவன் தின்மைக்கல்ல நன்மைக்கே உங்களுக்குப் பிள்ளைகளைத் தந்திருக்கிறார். அவர்களால் நன்மையடையவேண்டுமாகில் அவர்கள்மட்டில் உங்களுக்குள்ள கடமைகளைச் சரியாய் அனுசரிக்க வேண்டும். அக்கடமைகள் எவையென்று வரும் அதிகாரங்களிற் காட்டப்படும்.



—o—

## இரண்டாம் அதிகாரம்

### பெற்றோர் அன்பு

பிள்ளைகளைச் சீராய்வளர்ப்பதிலுள்ள பிரயாசம்,கவலை, செலவு முதலியவைகளைப் பெற்றோர் அனுபவத்தால் அறிவார்கள். இவைகளையெல்லாம் இலகுவாக்கும்பொருட்டுத் தயாபர சருவேசுரன் தாய்தந்தையருக்கு வேண்டிய மேன்மையையும் அதிகாரத்தையுமன்றி, பிள்ளைகள் மேல் உருக்கமான அன்பையும் அருளியிருக்கிறார். இவ்வன்பு அவர்களுக்கு ஒரு இயற்கையானகொடை. இது பிள்ளைகள்மேல் பெற்றோருக்கு இயல்பாயுள்ளபடியால் அல்லவோ பிள்ளைகளை நேசிக்கும்படி பெற்றோருக்குச் சருவேசுரன் விசேஷகற்பனையைக்கொடுக்கவில்லை.

அன்பு மிகவேகமும் வல்லமையுமுள்ளது. அது பஞ்ச

பூதியங்களிலொன்றாகிய நெருப்புக்கு ஒப்பிடப்படும். நெருப்பு குளிர்ந்ததை அனலாக்கும். இருளைநீக்கி ஒளியைத்தரும. சடப்பொருட்களின் கனத்தைக்குறைத்து அவைகளை இலேசாக்கும். இவ்வாறே அன்பும் தன்னாற் பிறக்கிற அலுவல்களிலுள்ள அலுப்பையும் பிரயாசத்தையும் குறைத்து அவைகளை இலேசும் இன்பமுமாக்கும்.

பிள்ளையை வளர்ப்பதிலுள்ள வருத்தத்தை இலகுவாக்கும்பொருட்டே அப்பிள்ளை பிறக்கும்போது பராபரன தாயிடத்திற் பாலும் பட்சமும் சுபாவமாய்ச் சுரக்கச் செய்கிறார். இந்தப்பட்சத்தினாலேதான் தாய் தன்பிள்ளைக்கு அடிக்கடி பாலூட்டி, வேண்டிய சமயங்களில் இராவிராவாய் நித்திரை விழித்து, அதையழவிடாமல் தாலாட்டி உறங்கச்செய்து, அதற்கு யாதேனும் நோய் வரும்போது தன்சுகத்தையும் பேணாமல், ஊணுறக்கமில்லாமல், கஸ்தியைச் செலவைப்பாராமல் எவ்விதத்திலும் அந்த நோயைக்குணமாக்கவேண்டிய பிரயாசமெல்லாம் படுகிறாள். பாலகர் விளையாட்டுக்காக அவளை எவ்வளவு அரிகண்டப்படுத்தினாலும் அது அவளுக்கு அலுப்பாயிராமல் ஆனந்தமாயிருக்கப்பண்ணுவதும் அன்பேயாம்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகள்மேலுள்ள பட்சத்தினால் இனிமையான ஒரு கொடுங்கோன்மைக்கு உள்ளாயிருக்கிறார்களென்று அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் சொல்லுகிறார். தாய் தந்தையர் எவ்வித அபாயங்களையும் கட்டங்களையும் கஸ்திவருத்தங்களையும் அனுபவித்துத் தங்கள் பிள்ளைகளை உயிருக்குயிராய்ச் சிநேகிக்கப்பண்ணுவது இவ்வினிய கொடுங்கோன்மையேயாம். சிறிதுகாலத்துக்குமுன் ஊர்காவற்றுறையில் நல்ல குடும்பத்தைச்சேர்ந்த ஓர் இளந்தாய் தன் பிள்ளைகளைக் கிணற்றடியில்குளிப்பாட்டிக்கொண்டிருக்கும்போது சவிரிமுத்து என்னும் அவள் மகன் தற்செயலாய் அக்கிணற்றில் விழுந்துவிட்டான். இதைக்கண்ட தாயானவள் தன் உயிரைப்பார்த்தாளா? மாரி மழையினால் கிணறும் நிறைந்திருக்கிறதே, நீந்தவுந் தெரியாதே; இப்படியிருக்கக் கூபத்திற் குதித்தால் மகனோடு தானும் மாண்டுபோவாளேயென்று யோசனை



பண்ணினாளா? பயப்பட்டாளா அல்லது தாமதித்தாளா? இல்லை. பெற்றவளுக்குத்தெரியும் பிள்ளையின் அருமை. தன் பிள்ளை மோசம்போகிறதே என்ற துயரத்தைத் தாங்கமாட்டாமல் உடனுக்குடனே கிணற்றில் பாய்ந்துவிட்டாள். இப்படி தன் உயிரைப் பாராமல் சட்டெனக் கிணற்றுள் குதிக்கச்செய்தது தாயின் நேசமென்னும் இனிய கொடுங்கோன்மையல்லவா? வேதாகமஞ் சொல்வதுபோல "திரளான தண்ணீர் நேசததை அவிக்கமாட்டாது; வெள்ளங்களும் அதைத்தணிக்கமாட்டா......" உன்னதகவி 8;7 ) தாயும் பிள்ளையும் எட்டாத தண்ணீரில் இறக்கவேண்டியதேசகசமானாலும் தேவாதீனமாய் அவள் குழந்தையையும் தீங்கில்லாமல் தூக்கிக்கொண்டு தப்பிவிட்டாள்.

இப்படியே பொதுவாய்ப் பெற்றோர் தம்மக்கள்மட்டில் இயல்பாக அன்புள்ளவர்களாயிருக்கிறார்கள். சிலரோ இதற்குமாறாய்ப் பிள்ளைகள் மட்டில் கல்நெஞ்சுத்தனமுள்ளவர்களாயும், இன்னுஞ்சிலர் மிதமிஞ்சிய முறைகேடான அன்புள்ளவர்களாயும் இருந்துவருகிறார்கள். இங்கு நாம் இந்தக் கல்நெஞ்சுத்தனத்தினாலும் முறைகேடான அன்பினாலும் விளைகிற தீமைகளை விவரித்து அவ்விரண்டையும் கண்டித்தபினபு, பெற்றோர் பிள்ளைகளை நேசிப்பதற்கான உத்தம முறையை விளக்கிக்காட்டக் கருதுகின்றோம்.

## பெற்றோர் சிலரின் கன்னெஞ்சுத்தனம்

"தீக்குருவி தன் குஞ்சுகளைத் தன்னுடையவையல்லாதவைபோலப் பாவித்து அவைகளைக்காக்காமற் கடினகுணம் காட்டும். அவைகளைப்பற்றி அதற்குக் கவலையில்லாதபடியால் அது (முட்டையிடுவதில்) பட்டவருத்தமும் விருதாவாம்" (யோபு 39; 16.) என யோபுஎன்னும் மகாத்துமா வசனித்த வாக்கியத்தை நூலாசிரியர்கள் சிலர் பிள்ளைகள்மேல் பட்சமற்ற பெற்றோருக்குப் பொருத்திச் சொல்லுகிறார்கள். மிகப் பெலனும் வேகமுமுள்ள இந்தப் பட்சியைப்பற்றிச் சுபாவ நூலோர் அநேக அபூர்வமான விருத்தாந்தங்களை வரைந்திருக்கிறார்கள். அவைகளுள்

ஒன்று யாதெனில், தீக்குருவியானது தான் தரையிலிடும் முட்டைகளைப் பாதுகாத்து அடையிருந்து குஞ்சுபொரிக்காமல் தேடாக்கூறாய் விடுவதினால், அவைகள் வனாந்தரத்தில் ஊடாடும் மனுஷர் கையில் அகப்படவும் பாமபுகுடிக்கவும் கான மிருகங்களின் காலுக்குள் மிதிபட்டுநெரியவும் நேரிடுகிறது. இவ்வித அபாயங்களுக்கெல்லாந் தப்பி சூரியவெப்பத்தினால் பொரிக்குங் குஞ்சுகளை அயலிற் திரியும் தாய்க்குருவியானது கண்டாலும் அவைகளை அணைத்துச் சேர்த்துக்கொள்ளாமல் விலகிவிடுமாம்.

கிறீஸ்துவேதம் உலகிலுதிக்குமுன் இரக்கமற்ற இக்குருவியிலும் கொடிய பெற்றோர் தொகைவகையாயிருந்தார்களெனச் சரித்திரங்களிற் காண்கிறோம். பூர்வகாலத்தில் கிரேக்க தேசத்திற் பெயர் பெற்றிலங்கிய ஸ்பார்த்தாநாட்டில், ஓர் குழந்தை பிறந்தவுடன் அதின் குடும்பத்துக்குச் சேர்ந்தமுதியோர் அதைப்பார்வையிட்டு, அது பலமும் அழகுமுள்ளதாயிருந்தால் அதைவளர்க்கவும் அவைகள் அற்றதாய் இருந்தால் கொன்றுவிடவும் வேணுமென்று தீர்ப்பார்கள்.

புராதன உரோமைக் கட்டளைச்சட்டத்தின்படி மக்களின் சீவியமும் மரணமும் பிதாவின் அதிகாரத்தின்கீழ் இருந்தன. அகமெம்னோன், மாரியுஸ் லசேனா, தெமெத்திரியா முதலான கல்விமான்களும் வேறநேகருந் தம்மக்களைத் தங்கள் கையாற் கொன்றுவிட்டார்கள். அக்காலம் மனுத்தன்மையற்ற அநேக மாதாக்கள் தங்களரிய குழந்தைகளைச் சற்றேண், தியனா ஆதிய குரூர தெய்வங்களுக்குப் பலி கொடுத்தும்வந்தார்கள். இந்தியாவிலே முற்காலம் சிறுவர்களைக் கங்கை எனும் நதிக்குப் பலியாக அதினுள் எறிந்துவிடும் வழக்கமிருந்தது.

பிளேற்றோ, அரிஸ்தொத்தில், சோலன், லிக்கூர்க்குஸ் முதலாம் வித்துவான்கள் ஆதரவற்ற குழந்தைகளைக் கொல்ல விடைகொடுத்ததுமன்றி, அவைகள் கொல்லப்படும் வேளை சிலசமயங்களில தாங்களுஞ் சமுகமாயிருந்து அகமகிழ்ச்சி கொண்டார்களாம். ஆதரவற்ற குழந்தைகளையும் வளர்ந்தவர்களையும் ஊணற்றுத் தெருவீதிகளிற் திரியும்



நாய்களைப்போலப் பாவித்துக் கொன்றுவிடுவது உத்தமமென்று அமெரிக்காவிலுள்ள அவிசுவாசிகள் சிலகாலத்துக்கு முன்னும் போதித்துவந்தார்கள். கடும்பஞ்சகாலங்களிற் பலமுறையும பெற்றோர் தம்பிள்ளைகளைப் பட்சித்தார்களென்றுஞ் சரித்திரங்கள் கூறுகின்றன. சிலர் அற்ப ஆதாயத்துக்காகத் தங்களரிய பாலகரைக் கிரயத்துக்கு விற்கவுந் துணிந்திருக்கிறார்கள். அல்லது அசட்டையினாலேநோய்வாய்ப்பட்டிறக்கவும்விட்டிருக்கிறார்கள்.

ஆனால் சூரியனுதிக்க இருள் படிப்படியாய் மறைந்துவிடுவதுபோல, கிறீஸ்துவேதம உதித்துப் பரந்த ஊர் தேசங்களிலெல்லாம் இக்குரூரசெயல்களும் தீவிரமாய் மறைந்துபோகின்றன. எக்காலமும இத்திருவேதத்தின் முதலனுவல்களிலொன்று பெற்றோருக்குப் பிள்ளைகள்மேலுள்ள பாரமான கடமைகளைப் படிப்பிப்பதேயாம். இப்படிப்பினையை அநேக பெற்றோர் கைக்கொண்டதினால் ஆதிகாலந்தொட்டுத் திருச்சபையிற் திரளான சுத்தவாளரும் வேதபாரகரும் வேதசாட்சிகளும மகாத்துமாக்களும் விளங்கிவந்திருக்கிறார்கள். நாலாம் நூற்றாண்டில் அந்துசா என்னுமோர் புண்ணியவதி அருளப்பரென்னும் தன் ஏக மகனைச் சிறப்பந்தொட்டுச் சன்மார்க்கராய் வளர்த்து வித்தியாசாலைக்கனுப்பியபோது, அவரைப் படிப்பித்த லிபானியுஸ் என்னும் அஞ்ஞானப் பண்டிதர் அவருடையபோக்குவாக்கையும் குணம் நடை உடை பாவனைகளையும் குறிப்பாய்க் கவனித்திருந்து "கிறீஸ்தவர்களுக்குள் எவ்வளவு ஆச்சரியமான மாதாக்கள் இருக்கிறார்கள்" என்று பிரமிப்பாய்ச் சொல்வாராம். இந்த அருளப்பர் தாம் பிற்காலம் பெருஞ் சாதுரியராகிக் கிறிசோஸ்தம் அதாவது பொன்வாய் அருளப்பரென்று அழைக்கப்பட்டுத் திருச்சபையிலே பெரிய அர்ச்சியசிஷ்டரும் வேதபாரகருமாய் விளங்கினார். இவ்வித பல உதாரணங்களை இந்நூலின் வேறிடங்களில் எடுத்துக்காட்டுவோம்.

எக்காலமும் திருச்சபையிலே தர்மசிந்தனையுள்ள ஆயிரக்கணக்கான ஆடவர்களும் மாதர்களும் உலகத்தைவிட்டுத் துறவிகளாகி அனாத பிள்ளைகளைத் தொகையாகச்

சேர்த்து, அவர்களுக்காக பிச்சையிரந்தும் பிரயாசப்பட்டுழைத்தும் அன்ன வஸ்திரங்கொடுத்தும் கல்வியறி ஊட்டுவதிற் தங்கள் சீவியகாலத்தைக் கழித்துவருகிறார்கள். அர்ச்சியசிஷ்டர்களான வின்சென் டீ போல், யோண் பப்திஸ்ற் தெலசால் முதலானோர் வறிய பிள்ளைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் சபைக்குச் சேர்ந்தவர்கள் ஏழைக் குழைந்தைகளுக்கும் இளைஞருக்கும் செய்துவரும் நன்மைகளை உலகங் கண்ணாரக்கண்டுங் காதாரக் கேட்டுமிருக்கின்றது.

இரக்கம்நிறைந்த பரிசுத்தமாதாவாகிய திருச்சபை அந்நியதேசங்களிற் கணக்கற்ற பிள்ளைகள்படும் வறுமை தனிமை முதலிய இடர்களைக்கண்டு, ஐரோப்பாவிலுள்ள பெருந்தொகையான துறவிகளைப் பிறதேசங்களுக்கனுப்பி அவர்கள் ஆங்காங்கு தருமசாலைகள்திறந்து ஏழைக்குழந்தைகளின் ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய நன்மைகளைச்செய்து அவர்களை ஆட்படுத்திவிடும்படிசெய்துவருகின்றது. இக்காலத்திலும் அஞ்ஞான இருளில் அமிழ்ந்தியிருக்கும் சீனா முதலிய தேசங்களிலே பலமனைவிகளை வைத்திருக்கும் துர்வழக்கத்தினால் சென்மிக்கும் கணக்கற்ற குழந்தைகளில் அநேகரைப் பெற்றோர் பிறந்தவுடனே பல உபாயங்களாலும் கொன்றுவிடுகிறார்கள். அல்லது வழிப்போக்கர் எடுத்துக்கொண்டுபோகும்படி வாசல்களிலும் வெளித்திண்ணைகளிலும் தெருவீதிகளிலும் போட்டு விடுகிறார்கள். இப்படிக் கைநெகிழப்பட்ட பச்சைக் குழந்தைகளையும் அங்கங்குள்ள துறவறச்சபையார் பவித்திரமாய் எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துவருவது பிறசமயத்தோரும் பரிபூரணமாய் அறிந்தவிஷயம். இத் தருமசாலைகள் உலகெங்கும் அதிவிஸ்தாரமாய்ப் பரந்திருக்கும் திருப்பாலர் சபையாரின் பரோபகார உதவியைக்கொண்டு நடைபெற்றுவருகின்றன. பெற்றோர் அனைவரும் பிள்ளைகள்மேல் மெய்யான அன்பும் இரக்கமும் உடையவர்களாயிருப்பார்களானால் மேற்கூறிய குரூரசெயல்கள் நடக்குமா? அல்லது அன்னியரின் அடைக்கலமும் ஆதரவும் பிள்ளைகளுக்குத் தேவையாயிருக்குமா?

## பிள்ளைகளுக்குட் பாரபட்சம்

பெண்பிள்ளைகளின் அருமையை அனுபவத்தால் அறியாத அநேக அன்னை பிதாக்கள் ஆண்குழந்தைகளின் பிறப்பில் அகமகிழ்ந்து பெண்குழந்தைகளின் பிறப்பிற் பிரியவீனப்படுவார்கள். ஆனாற் பெரும்பாலும் பெற்றோருக்கு வயோதிகத்திலும், கிடைதலையிலும் விசேஷமாய்ப் பெண்பிள்ளைகளே அடைக்கலமும் ஆறுதலும் உதவியுமாயிருப்பதை எந்நாளுங் கண்டுகொண்டுவருகிறோம். "அஞ்சுபெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்" என்கிறார்கள்; ஆனால் இரண்டொரு ஆண்களைப் பெற்ற அரசர் ஆண்டிகளானதில்லையா? சில அரசர்களைச் சிறை இருத்தினவர்கள் அல்லது அவர்களுடைய உயிரைப்பறித்தவர்கள் அவ்வரசர்களின் ஆண்மக்களா அல்லது பெண்மக்களா? ஆண்மக்களென்றே சரித்திரங்கள் கூறுகின்றன. செனக்கெரிப் என்ற இராசாவை அவன் குமாரர்தாமே கோவிலிற் கொன்றுபோட்டார்கள். (II நாளாகமம் 32; 21. )

ஆபிரிக்காவிலே சோமாலி எனுஞ் சாதியாருள் பெண்களின் பிறப்பிலே பிதாக்கள் ஆனந்தங்கொள்வார்களாம். ஏனெனில் அவர்களால் இவர்களுக்குப் பெரும் ஆதாயமுண்டு. எப்படியெனில் பெண்பிள்ளைகள் வளர்ந்து மணம்புரியப் பிராயம் ஆகும்போது பிதாக்கள் இவர்களைப் பிரசித்த ஏலத்திற் கூறிவிற்றுத் தொகையான பணத்தை அல்லது ஆடுமாடுகளைப் பெற்றுக்கொள்வார்கள். விற்கப்படுவதில் இப்பெண்கள் வெட்கமாவது துக்கமாவது படாமல், தாங்கள் இவ்வளவவ்வளவு பெறுமதியானதைப்பற்றி அகமகிழ்ந்து பெருமை பாராட்டுகிறார்களென்று சிலநாட்களுக்குமுன் ஓர் பத்திரிகையில் வாசித்தோம். ( Cath. Missions).

ஒரு குழந்தை பிறந்த அந்நியநாட்களில் தந்தை இறந்தால் தகப்பனைத்தின்னி என்றும், தாய் இறந்தால் தாயைத்தின்னி என்றும், வேறேதும் பொல்லாங்கு நேரிட்டால் அதற்கும் அந்தப்பிள்ளையே காரணமென்றும் விசு

வாசமற்ற பெற்றோர் பழிகூறுவார்கள். இவ்விதமான எண்ணமும் பேச்சும் பெற்றோர் பிள்ளைமேற்கொண்டிருக்கவேண்டிய உருக்கமான நேசத்தைப் போக்கடித்து அவர்கள்மேல் வெறுப்பு வருவிக்க வழியாகின்றன. பிள்ளைகளின் பிறப்பு பெற்றோரின் இறப்புக்கோ வேறுகெடுதிக்கோ காரணமென்று எண்ணுவது நியாயத்துக்கொவ்வாத பெரிய மூடத்தனம். எப்போதாவது அபூர்வமாய் ஒருபிள்ளையாற் பெற்றோருக்குக் கெடுதிதான் நேரிட்டாலும் அதை ஒரு பொதுவிதியாக எடுத்துக்கூறுவது அற்ப அறிவுக்கு அடையாளமாகும். அன்றியும் தேவசித்தமின்றி யாதொன்றும் ஆவதில்லையென்று இவ்வித பெற்றோர் அறியக்கடவார்கள்.

பெற்றோர், பிள்ளைகளை ஆண்பெண்ணென்றும், சமர்த்தர் சமர்த்தில்லாதவர்களென்றும் பாரபட்சஞ்செய்யாமல் அனைவரையும் இயன்ற அளவு சமனாய் நடத்துவதே நீதியும் நியாயமுமென்று அறிவிற்சிறந்தவர்கள் போதிக்கிறார்கள். உள்ளபடி, பலபிள்ளைகளுள்ள ஒருகுடும்பத்தில் தாய் தந்தையர் ஒருபிள்ளையை அல்லது சிலபிள்ளைகளை விசேஷமாய்ச் சிநேகித்து மற்றப்பிள்ளைகளைப் பாரபட்சமாய் நடத்துவது தேவனுக்கு ஏராத கொடிய செய்கையேயாம். மற்றப்பிள்ளைகளுந் தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவர்களல்லவா? அதிபிதாவாகிய யாக்கோபு தம் பன்னிருபுத்திரரில் ஒருவரையும் பாராமுகம்பண்ணாதிருந்தாலும், யோசேப்பை விசேஷமாய் நேசித்து அவருக்கு ஒரு பலவர்ண அங்கியையுங்கொடுத்ததினாலேயே மறுகுமாரர்கள் பொறாமைகொள்ளவும், குடும்பத்திற் சமாதானமற்று வேற்றுமை உண்டுபடவும், அவர்கள் யோசேப்பை வெறுத்துப் பாழ்ங்கிணற்றிற் தள்ளிவிடவும், திரும்ப அந்நியதேசத்து வியாபாரிகளுக்கு அடிமையாய் விற்றுவிடவும், அதனாற் தங்கள் அரிய பிதாவை வயோதிகத்தில் நெடுங்காலந் துக்கசாகரத்தில் அமிழ்த்திவைக்கவும் நேரிட்டது.

பல ஆண்மக்களுள்ள சமுசாரங்களில் சிலபெற்றோர், தங்கள் புத்திரருள் ஒருவனை நன்றாகப் படிப்பித்துவிட்



டால் இவன் தன்சகோதரர்கள் அனைவரையும் தாபரித்துக் காப்பாற்றுவானென்று நம்பி இவனைத் தங்கள் பணம்பொருளிற் பெரும்பங்கைச் செலவழித்துப் படிப்பிப்பார்கள். இவன் தன் கல்வியில் நிச்சயமாய் அனுகூலப்படுவானென்றும், நெடுங்காலஞ் சீவிப்பானென்றும், சீவித்துழைத்தாலும் தன்சகோதரர்களுக்குத் தப்பாமல் தக்க உதவிபுரிந்து தன்னைப்போல அவர்களையும் நல்நிலையில் வைப்பானென்றும் நம்பியிருக்க ஆதாரமென்ன? இவ்வித நம்பிக்கை எத்தனையோமுறை சித்தியாமற்போகின்றது. போகவே, மறுசகோதரர் எக்காலமும் மனம் நொந்து பெற்றோரைத்திட்டி வைது பகைத்துப் பழிவாங்கவும் நேரிடுகின்றது.

இப்படியே பல பெண்மக்களுள்ள வீடுகளிற் சிலர் தங்களுக்குள்ள ஆஸ்தி பணங்களிற் பெரும்பங்கை மூத்தபிள்ளைகளுக்கும், முக்கியமாய்த் தலைப்பிள்ளைக்கும் கொடுத்துவிட்டு, இளையவர்களைக் குறைந்த நிலைபரத்தில் இருக்கவும், அந்தரிக்கவும் அல்லது மரணமட்டும் குமரிருக்கவும் விடுகிறார்கள். எத்தனையோ தாய் தந்தையர் பிற்காலம் உழைத்து இளையபிள்ளைகளுக்குக் கொடுப்போமென்று போக்குச்சொல்லியபோதிலும், அப்படிச்செய்யுமுன் செத்துப்போகிறார்கள். அல்லது தளர்ந்த வயதில் உழைக்கத் திராணியற்றவர்களாகி இளையபிள்ளைகளுக்கென்று வைத்திருந்ததையும் தங்களுக்கே செலவழிக்க நேரிடுகின்றது. அன்றியும் பலமுறை, மூத்தவர்களைப் பார்க்க இளையவர்கள் அனேகம் பிள்ளைகள் பெற்றுப் பொறுத்த சமுசாரிகள் அல்லது விதவைகளாகிப் பிள்ளைகளைவளர்க்க வழிவகையற்று அந்தரிக்கிறார்கள். ஒருதகாத உலகவழக்கத்தைப் பின்பற்றி மூத்தபிள்ளைக்கு மிகக்கூட்டியும் இளையபிள்ளைகளுக்கு மிகக் குறைத்தும் கொடுப்பது நீதியல்ல. அவரவர் தகுதி அவசியங்களுக்கிசைய நீதிப்பிரகாரம் ஆஸ்திபாஸ்தியைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்..

மூத்தபிள்ளை இளையபிள்ளைக்கு மேலான நிலைபரத்திலிருக்கவேண்டுமென்பது அவசியமான ஓர் பிரமாண

மல்ல. பலசமயங்களிலே தேவன் இளையவர்களை மூத்தவர்களுக்கு மேலாக்கியருளினார் என்று வேதாகமங்களாலறியவருகிறோம். அதிபிதாவாகிய ஈசாக்கின்மனைவியாகிய ரெபெக்காள் கர்ப்பவதியாயிருக்கையிற் சருவேசுரனே அவளைநோக்கி "உன் உதரத்தில் இரண்டுசாதிகளுண்டு; (அவர்களில்) மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" என்றருளிச்செய்தார். அவ்வாறே அவளுடைய இரட்டைப்பிள்ளைகளில் மூத்தவனாகிய ஈசாவு இளையவனாகிய யாக்கோபுக்கு எக்காலமும் பணிந்திருக்க நேரிட்டதென்று வேதாகமத்தில் வாசிக்கிறோம். (ஆதியாகமம் 5) அன்றியும் யாக்கோபின் கோத்திரத்திலேயே உலக இரட்சகரும் பிறந்தார். யாக்கோபுவும் வயோதிகராகி மாரணத்தருவாயிலிருக்கையில் தம் மகனாகிய யோசேப்பின் இருபுத்திரரையும் ஆசீர்வதிக்க முயன்றபோது, யோசேப்பு தன்மக்களில் மூத்தவனாகிய மனாசேயை யாக்கோபின் வலதுபக்கத்திலும், இளையவனாகிய எப்பிராயீமை இடதுபக்கத்திலும்விட்டார். ஆனால் யாக்கோபு தமது கரங்களை மாறி, வேணுமென்று வலதுகையை இளையவன்மேலும், இடதுகையை மூத்தவன் மேலும் வைத்து ஆசீர்வதிக்கத் தொடங்கினார். இதைப்பற்றி யோசேப்பு மிகப்பிரியவீனப்பட்டுப் பிதாவின்கைகளைப் பிடித்து, அப்படியல்ல வலதுகையை மூத்தோனாகிய மனாசேயின்சிரசில் வைக்கவேணுமென்றார். அதிபிதாவோ சம்மதியாமல் "அது எனக்குத்தெரியும், என் மகனே எனக்குத்தெரியும். இவனும் ஒருசனக்கூட்டமாகப் பலுகுவான், ஆனால் இவன் தம்பி இவனிலும் பெரியவனாவான்; அவனுடைய சந்ததியார் திரளான சனங்களாகப் பெருகுவார்கள்" என்றுரைத்து இருவரையும் ஆசீர்வதித்தார். (ஆதி. 48) சருவேசுரன் ஈசாயின் எட்டுக் குமாரரில் ஒருவனை இசிறவேல் சனங்களுக்கு இராசாவாகத் தெரியச்சித்தமானபோது, தகப்பன் தன் தலைச்சன்பிள்ளையையே முதல் சாமுவேலெனும் தீர்க்கதரிசியிடம் கூட்டிவந்தான். அப்போது ஆண்டவர் தீர்க்கதரிசியைநோக்கி: "நீ இவனுடைய முகத்தையும் தேக



வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நாம் இவனைப் புறக்கணித்தோம். மனுஷன் பார்க்கிறபடி நாம் பாரோம். மனுஷன் முகத்தைப்பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப்பார்க்கிறார்" என்று திருவுளம்பற்றினார். மற்றப் பிள்ளைகளையும் அப்படியே நீக்கிவிட்டு எல்லாருக்கும் இளையவனாகிய தாவீதையே இராசாவாகத் தெரிந்துகொண்டார். (1-ம் அரசர் 16)

தாய்தந்தையர் தம்மக்கள் அனைவர்மேலும் கொண்டிருக்கவேண்டிய பட்சம் தராசின் கோலைப்போலச் சமனாயிருக்கவேண்டுமென்று நூலாசிரியர்கள் கூறுகிறார்கள்.

## மறுதாரப் பிள்ளைகள்

புனர்விவாகஞ்செய்த அதாவது இரண்டாம் மூன்றாந்தாரம் முடித்த சிலகுடும்பங்களில் முற்தாரத்துப்பிள்ளைகள் பலமுறையும் அனுபவிக்கும் வறுமை, தனிமை, துயரம் முதலிய இடையூறுகள் பல. அன்றியும் அவர்களுக்குள்ளவைகளில் சிறியதாய் அல்லது சிறியதகப்பன் உறிஞ்சக்கூடியதெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய் நாளிலும் பொழுதிலும் உறிஞ்சிக்கொள்வதும் அபூர்வமல்ல. நடபடித்தமிழில், சிறியதாய் சிறியதகப்பனுக்கு வழங்கும் பெயர்களுக்குப் பதிலாய் நூலாசிரியர்கள் "மாற்றாந் தாய்" "மாற்றாந் தகப்பன்" எனும் மொழிகளை வழங்குகிறார்கள். மாற்றானென்பது சத்துரு. ஆனாலவர்கள் பதிற்தாய்தந்தையென்னுங் கருத்தில் அம்மொழிகளை உபயோகிக்கிறார்கள். என்றாலுஞ் சில சிறியதாய் தகப்பன்மாரின் நடக்கை சத்துரு என்னுங் கருத்துக்கே இலக்காயிருக்கிறது. இவர்களுக்குத் தங்கள் வீடுவாசலில் முற்தாரத்து மக்களிருப்பதுகூட ஏதோ பெரும் அலுப்பும் ஆக்கினையும் அரிகண்டமும்போலிருக்கிறதினால், அவர்களை வாக்குமாறின பேரன் பேர்த்தியிடம் அனுப்பி, அங்கு தங்களெண்ணப்படி நடந்து கெட்டலைந்துபோக விட்டுவிடுவார்கள். கூடுமானால் அவர்களைத் தருமசாலைகளுக்கு அல்லது கூலிப்பிழைப்புக்கு அனுப்பவும்

பின்னிடார்கள். வீட்டிலிருந்தாலும் பிற்தாரத்துப்பிள்ளைகள் செல்வருக்கிருக்க, முற்தாரத்துப்பிள்ளைகளே வேலைகாரருக்குரிய வீட்டுவேலைகளெல்லாஞ் செய்யவேண்டியவர்களாகிறார்கள்.

இனி அவர்கள்கேட்கும் பேச்சும், படும் அடியாக்கினையுங் கொஞ்சமல்ல. பலமுறையும் அவர்கள் இவைகளைத் தாங்கமாட்டாமல் வீட்டைவிட்டு அயலில் அலைந்துதிரிவார்கள். இவ்விதசமயங்களில் சிறியதாய்தகப்பன் அயலாரின் பழிக்குத்தப்பும்படி தங்களில் யாதொருகுற்றமுமில்லையென்றும், தாங்கள் அவர்களுக்காகப்படும் பிரயாசம் கடவுளுக்குமாத்திரந் தெரியுமென்றும், அந்தப் பிள்ளைகளின் நடை குணம் கூடாதென்றும் விதம் விதமான கதைகளையெல்லாம் முடிவார்கள். இவையெல்லாவற்றையும் உலகம் நம்புமென்று நினைக்கிறார்கள்போலும்! அந்தப்பிள்ளைகளிலுள்ள குறைகுற்றங்களைத் தயவாய்த் திருத்தி நல்வழியில் நடப்பிக்கவேண்டியவர்கள் இவர்களல்லவா?

அல்லாமலும், சிறியதாய்தந்தையர்கள் தாங்கள் தண்டித்தால் பிள்ளைகள் மனம் நோவார்களென்றும், அயலார் அநீதமாய்க் குற்றஞ்சொல்லுவார்கள் என்றும் எண்ணி, அவர்களைத் தங்கள் இட்டப்படி நடந்து கெட்டுப்போகவிடுவதும் தேவபழிக்குரியதாம். இவ்விதமுறைகேடான இளக்காரத்துக்கு நேரெதிராய்ச் சிலர்செய்யும் அநியாயங்கள், குரூரங்களைச் சிலசமயங்களில் அரசாட்சியார்தாமும் தலையிட்டுத் தடுக்கவேண்டியதாகின்றது. “தந்தையற்ற பிள்ளைகளுக்கு நீதி செலுத்துகையில் தகப்பனைப்போல இரக்கங்காண்பி. அவர்களுடைய தாய்க்குக் காவலாளியைப்போலிரு. தேவன் தாயைவிட உன்மட்டில் அதிக இரக்கங்கொள்வார்.” (சர்வ பிரசங்கி 4, 10) அப்பிள்ளைகளுக்கு இடையூறு பண்ணுகிறவன் அவர்களைத் தன்னிடம் ஒப்படைத்த தேவனுக்கே யூதாஸ்கரியோத்தைப்போல நம்பிக்கைத் துரோகஞ்செய்கிறான். அதன் பயனாக “அவனுடைய நியாயம் விசாரிக்கப்படும்போது அவன் குற்றவாளியாகக் காணப்படு



வான்... அவனுடைய ஆயுசு குறைந்துபோகக்கடவது. அவனுடைய பிள்ளைகள் தகப்பனில்லாதவர்களாகவும், அவன் மனைவி விதவையாகவும் ஆகக்கடவாள். அவன் பிள்ளைகள் ஆங்காங்கு அலைந்துதிரிந்து பிச்சையெடுக்கக்கடவார்கள். அவர்கள் தங்கள் வாசஸ்தலங்களினின்று துரத்தப்படக்கடவார்கள். ... அவனுடைய சந்ததி நிர்மூலமாகக்கடவது. ஒரேதலைமுறையில் அவன் பேர் அற்றுப்போகக்கடவது... அவன் இரக்கங்கொள்ள நினையாமல் போனபடியால் அவர்களுடைய (அவன் பிள்ளைகளுடைய) ஞாபகம் பூமியிலற்றுப்போகக்கடவது.” (சங்கீதம் 108; 6-15)

இவ்வித தேவபழிக்குத் தப்பவேண்டுமாகில் பிற்தாரத்துப் பிள்ளைகளைப்போல முற்தாரத்துப் பிள்ளைகளையும் சமனாய் நேசித்துக் காப்பாற்றவேண்டும். ஆனால் முற்தாரத்துப் பிள்ளைகளும் தங்கள் சிறியதாய் தந்தையர்கள் தங்களுடைய பெற்ற தாய்தந்தையரைப்போலத் தங்களுக்குத் தேவனுடைய ஸ்தானாபதிகளாயிருக்கிறார்களென்பதை மறந்துபோகாமல் அவர்களை நேசித்துக் கனம்பண்ணி அவர்களுக்குப்பணிந்து தக்க உதவிசெய்துவரவும், அவர்கள் கொடுக்கும் புத்திமதிகளையும் இடுந் தண்டனைகளையும் நல்லமனதுடன் ஏற்றுக்கொள்ளவும் பெருங் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது நிச்சயம்.

சோரப்புருஷன் தன் விபசாரத்தின்பயனாகத் தனக்குப்பிறந்த பிள்ளைகளை வெட்கத்துக்கஞ்சித் தன்னுடையவர்களல்லவென்று மறுப்பதும், அவர்களைச் சரியாய் வளர்க்காமலும், படிப்பியாமலும் தரித்திரப்பட்டு அலைந்துலைந்துதிரிய விடுவதும் பெரும் பாதகமாம். இவர்கள் சோரப்பிள்ளைகளானாலும், இவர்களை ஈன்ற தாய்தந்தையரே சுபாவ முறைப்படி இவர்களுக்கு மெய்யான பெற்றோரும், இவர்களைத் தங்கள் பிள்ளைகளாக நேசித்து வளர்க்கத் தேவநீதிப்படி பாரமான கடமையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அப்படி நடவாவிடில் அது சுபாவ முறைக்கும், மனுத்தன்மைக்கும் மாறாகி மிருகத்தன்மையிலும் மிகக் கீழாய்ப்போய்விடும். இவர்கள் சோ

ரப்பிள்ளைகளானதற்கு இவர்களல்ல பெற்றோரே காரணர்கள். ஆகையால் குற்றவாளிகள் இப்பிள்ளைகளல்ல, பிதாமாதாக்களேயாம்.

## வேறுசில கொடுமைகள்

பெற்றோர் பிரயாசப்பட்டு உழைத்துப் பிள்ளைகளைச் சீராய் வளர்க்கவும், படிப்பிக்கவும், நன்னிலையில் வைக்கவும் பாரமான கடமை பூண்டவர்களா யிருக்கையில், இவை யெல்லாவற்றையும் நினையாமல், உள்ளதையும் உழைப்பதையும் குடியிலும் சூதிலும், தங்கள் நிலைமைக்கு மேலான போசன பதார்த்தங்களிலும், விலையுயர்ந்த உடையிலும், வீண் கொண்டாட்டங்களிலும், மிதமிஞ்சிய சுகானுபவங்களிலும் செலவழித்துப்போட்டு, பிற்காலத்திற் பிள்ளைகளை அந்தரிக்கவிடுவதும் பெருங் கொடுமையாம்.

வேறுசிலர், பணவாஞ்சையினால் பிள்ளைகள் படிக்க வேண்டிய வயதில் அவர்களை அற்றைக்கூலிக்கு உழைக்க, அல்லது அந்நியர் வீடுகளில் வேலைகாரராயிருக்க அனுப்பிவிடுவது பெரும்பாதகம். இன்னுஞ் சில தாய் தந்தையர் சோம்பேறிகளும் சுகப் பிரியருமாயிருந்து பிள்ளைகளுக்காகத் தாங்கள் உழைக்கவேண்டிய காலத்தில் பிள்ளைகளே தங்களுக்காக உழைக்கும்படி செய்வார்கள். கொஞ்சக்காலத்துக்குமுன் அசீசிநகரியில் அநேக பெரிய தனவான்கள் சேர்ந்திருந்த சங்கமொன்றில் பின்வரும் பரிதாபமான வர்த்தமானம் வாசிக்கப்பட்டது: "தற்காலத்திலும் சிசிலி தீவிலுள்ள கந்தகச் சுரங்கக்காரர் அவ்விடங்களிலுள்ள வறிய பெற்றோருக்கு ஒரு சிறுதொகைப்பணங்கொடுத்து அவர்களுடைய பிள்ளைகளைச் சிறுவயதிற்றானே கூலிக்காரராகப்பிடிக்கிறார்கள். அடிமை வியாபாரம் நடந்தகாலங்களில் சிறைப்பட்ட பிள்ளைகள்மேற் கொடிய எசமான்களுக்கு இருந்த பூரண அதிகாரம் சுரங்கக்காரருக்கும் இப்பிள்ளைகள்மேல் உண்டு. இவர்கள் யாதொரு சம்பளம் இல்லாமல் கடுஞ்சூடுள்ள அச்சுரங்கங்களில் நாள்முழுதும் கந்தகஞ் சமப்



பார்கள். இவ்வளவு கடினமான வேலையை ஒவ்வொரு நாளும் மிதமிஞ்சிச் செய்வதினால் புத்திக்கூர்மையும் தேகவளர்ச்சியுமற்று அந்தங்கெட்டுச் சீவியகாலமுழுதும் நோயாளிகளும் நிர்ப்பாக்கியருமாகிறார்கள்" என்பது. இதையெல்லாங் கண்டறிந்திருந்தும் அங்குள்ள இரக்கமற்றபெற்றோர் தங்கள் வறுமையைக்காட்டி இன்னும் அப்படித் தங்கள் பிள்ளைகளைக் கொடுக்கத் துணிகிறார்களே. சிலநாட்களுக்குமுன் நாம் இவ்விஷயத்தைப்பற்றி எழுதிக்கொண்டிருக்கையில் பிள்ளைகளின் அருமையை அனுபவத்தாலறிந்த ஓர் நடுவயதுப்பெண், தன்வீட்டில் அடைக்கலந்தேடிவந்திருந்த ஒரு பத்து, பன்னிரண்டு வயசுப் பெண்பிள்ளையைக் கூட்டிக்கொண்டுவந்து விபரித்த சரித்திரம் மிகப்பரிதாபத்துக்குரியது. அதன் பொழிப்பாவது: உழைக்கக்கூடிய தாயுந் தகப்பனுமுள்ள இச்சிறுமியைத் தாயானவள் தன்னூரிலிருந்து இவ்விடங்கொண்டுவந்து ஓர்வீட்டில் வேலைக்குவைத்தாள். இவள் அவ்வீட்டிலிருக்க விருப்பமற்று வேறுவீடுகளிற்போயிருந்து பார்த்தாள். வேலைக்கிருந்த வீடுகளில் பட்ட அடி ஆக்கினையையுஞ் சிறுப்பணையையும், கேட்ட நிந்தையான பேச்சுகளையுந் தாங்கமாட்டாமல், மேற்சொல்லியபெண் வீட்டிற் பலமுறையும்வந்து ஒளித்துக்கொள்வாள். வேலைக்கு வைத்திருந்தவர்கள் இவளைப் பிடிக்கவரும்போதெல்லாம் ஒரு பழம் பாயினால் தன்னை மூடிக்கொள்வாள். அல்லது அயல்வீடுகளிற்போய் மறைந்துவிடுவாள். இவளிருக்கும் கேவல ஸ்திதியுஞ் சிந்துங்கண்ணீரும் பார்க்குமெவர்க்கும் பரிதாபமெழுப்பக்கூடியது. இதை இவள் பிதா மாதா அறிந்திருந்துங் கவனியாமல் இருக்கிறார்களாம். ஐயையோ! கவலை, கஸ்தி, மிடிமை, தனிமை இவைகளின்றிப் பள்ளிக்கூடத்தில் படித்து வீட்டிலே விளையாடிப் பிதா மாதாவின் அன்பு, அணைப்பு, ஆதரவு முதலியவைகளை அனுபவிக்கவேண்டிய வயதில் இவளுக்கு நேரிட்டிருக்கும் நிர்ப்பாக்கியம் இரக்க உருக்கமற்ற வேறெத்தனையோ பெற்றோரின் பிள்ளைகளுக்கும் சம்பவிப்பதை உலகங் கண்டுவருகின்றதே.

பிள்ளைகள் அறிந்தும் அறியாமலும் எதுங் குற்றஞ் செய்யும்போது பெற்றோர் பொறுமையீனங்கொள்ளாமல், அவர்களுக்குத் தயவாய் நற்புத்தியூட்டி முன்மாதிரிகைகாட்டி வேண்டிய சமயங்களில் நியாயமாய்த் தண்டித்துத் திருத்துவதேமுறை. என்றாலும் பெற்றோரின் திட்டு, பிள்ளைகளுக்குப் பெருந்தின்மைகளை விளைவிக்குமென்பதைக் கவனியாமல் சிலர் வாயில்வந்தபடி அவர்களைத் திட்டிச் சபிப்பார்கள். மேலுந் தங்கள் கோபந்தீரக் குழந்தைகளைத் தூஷணித்துக் கிள்ளிக், குட்டி, அடித்து இழுத்து வாதிப்போருமுண்டு. இதனால் பிள்ளைகள் பெற்றோர்மட்டிற் பற்றுதலற்று ஏங்கிக் கலங்கிப் புத்தி மழுங்கி மூடரும் முரண்டருமாய்ப் போகிறார்கள். சில சமயங்களில் பிதா மாதா கோபவெறியினால் மக்களை எக்கச்சக்கமாய் அடித்து உதைப்பதினாலும், வேறுபலகுரூரமான ஆக்கினைகளை இடுவதினாலும் பிள்ளைகள் வலதுகுறைந்து அல்லது நோயுற்றுச் சீவியகாலமுழுதும் கேவலப்பட்டு வருந்த நேரிடுகின்றது. அறிவற்ற துஷ்ட மிருகங்களுள்முதலாய்க் கண்டுகேட்டறியாத இக்குரூர செயல்களை முற்றாய் விலக்கிப் பிள்ளைகளை அன்பாய் நடத்துவதே இவர்கள் பிற்காலம் பெற்றோரை நேசித்துக் கனம்பண்ணவும் குடும்பத்தில் சமாதானம் நிலைத்து அதன்மேல் தேவாசீர்வாதம் இறங்கச்செய்யவும் வழியாகும்.

## முறைகேடான அன்பு

மேற்குறித்த குரூரசெயல்களுக்கு நேரெதிராய்ப் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யும் வேறோர்வித தின்மையுண்டு. அது யாதெனில், தம்மக்களுக்கு மிதமிஞ்சினசெல்லங்காட்டுதல், அல்லது அவர்களை மட்டுக்கடந்து பேதமையாய்ச் சிநேகித்தலாம். இது கணக்கற்ற தீமைகளுக்குக் காரணமாயிருப்பதினாலன்றோ இப்படி மக்களை முறைகேடாய் நேசித்துக் கெட்டுப்போக விடும் பெற்றோரைப் பெற்றோரல்ல, சத்துருக்களேயென்று அர்ச். அகுஸ்தீனும், பிள்ளைகொல்லிகளென்று வேறோர் நூலா



சிரியரும் அழைக்கிறார்கள். இதனாலேதான் "உன்பிள்ளைகளுக்குப் பிதாவாயிரு; சிநேகங்காட்டி வினையஞ்செய்யும் சிநேக துரோகியாயிராதே" என்று அர்ச். சிப்பிரியன் எச்சரிக்கிறார். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்." முக்கியமாய் ஒரேபிள்ளையுள்ள குடும்பங்களில் இத்தவறு பெரும்பாலும் நடக்கிறது. செல்லங்காட்டும் பெற்றோர் செய்யுந் தவறுகளும் அவைகளால் விளையுங் கேடுகளும் அநேகமானாலும் அவைகளிற் சிலவற்றைமாத்திரம் இங்குவிபரிப்போம்.

பிள்ளைகள் செய்யுந் தப்பிதங்களைக் கவனமாய்த்தடுத்துவிடுவதற்குப்பதிலாய், யோசனையற்றவர்கள் அவைகளில் அகமகிழ்ச்சிகொண்டு, பிள்ளைகள் மீண்டும் மீண்டும் அப்படிச்செய்யும்படி ஏவிவிடுவார்கள். ஒருபிள்ளை தகாத வார்த்தைகளைச் சொல்லவும், பெற்றோரை அல்லது பிறத்தியாரை அடிக்கவும், உதைக்கவும், பழிவாங்கவும், பரிகாசம்பண்ணவும் அல்லது அவர்கள்மேற்துப்பவும், அமையாமல்பிடிவாதமாயிருக்கவும் இவைமுதலியவேறுபலகுற்றங்களைச் செய்யவும் நேரிடும்போது, பெற்றோர் அகமகிழ்ச்சிகொள்வதும் அப்பிள்ளை வெகுவிச்சுளியனாய் வருவானென்றெண்ணுவதும் சொல்லுவதும் பெரும்பிழை. "குட்டிநாய்க்கும் குழந்தைப்பிள்ளைக்கும் இடங்கொடுப்பதாகாது" என்பதில்உண்மைமெத்த உண்டு. சிறியோரின் சிறுகுற்றங்களைப் பறுவாய்பண்ணாதிருப்பதும் பெரும்பிழைகளைச் சிறிதாயெண்ணுவதும், தண்டிக்க அல்லது கண்டிக்கவேண்டிய சமயங்களில் பிள்ளைக்கு நோகும், பிள்ளையழும், கோபங்கொள்ளும், துக்கப்படும், முரண்டு பண்ணுமென்ற வீண்பயத்தினால் கண்டுசாய்ப்பாய் விடுவதும் பெருந் தவறாம்.

பிள்ளைகளின் பிழைகளைப்பற்றி யாராகுதல் முறையிடும்போது பெற்றோர் அம்முறைப்பாட்டை விசாரித்துத் திருத்துவதற்குப் பதிலாய், பிள்ளைகள் பக்கமாய் நியாயம்பேசுவதும் இவர்கள் தீமையில் வளர வழியாகின்றது. உபாத்திமார் வேண்டிய தருணங்களில் மாணாக்கரைத் தண்டிக்க நேரிட்டால், செல்லங்கொஞ்சும்

பெற்றோர் தாங்கள் ஒருபோதும் அடியாமல் தொடாமல் செல்லமாய் வளர்க்கும் தம்மக்களை உபாத்திமார் எப்படி அடிக்கலாமென்று சீறிச்சினந்து முறையிடுவதும், அவர்களில் நெருங்கி அவர்களைத் தூஷணித்துக் கலாதிபண்ணுவதும் புத்திகேடன்றி உண்மையான அன்பின் அடையாளமல்ல. அநேக மாணாக்கர் தங்களைச் சீர்கெட்ட நேசத்தால்கெட்டுப்போகவிடும் பெற்றோரைப்பார்க்கிலும் தங்களைக் கண்டிப்பும் அன்புங்கலந்தமுறையாய் நடத்தித் தங்களுக்குக் கல்விபயிற்றும் உபாத்திமாருக்கு அதிகமாய் அமைந்து நடந்து அவர்களை எக்காலமும் நேசித்துக் கனம்பண்ணிவருவதைக் கண்டுவருகிறோம்.

பிள்ளைகளின் இகபரநன்மைகளைக்கவனியாமல், நன்மை தின்மையைப்பாராமல் அவர்கள் கேட்டதையெல்லாங் கொடுப்பதும், விரும்புவதையெல்லாஞ் செய்வதும் அவர்களைத் தங்கள் எண்ணப்படியெல்லாம் செய்யவிடுவதும் மட்டற்ற தீமைகளுக்கு வழியாகும்.

தாய்தந்தையர் தம்மக்களை விமரிசைப்படி நடப்பிப்பதற்குப் பதிலாய், ஒரு தவறான அன்பினால், அவர்களின் எண்ணத்துக்கும் போக்குக்கும் இசைந்தும் அமைந்தும் நடப்பதினால் பிள்ளைகள் அமைச்சலென்னும் புண்ணியத்தை முற்றாய் அறியாதவர்களாய்ப்போகிறார்கள். இதினால், தாங்கள் வளர்ந்த பின்னும், தங்கள் ஆராதூரித்தனமான விருப்பத்துக்கெல்லாம் பெற்றோர் அமையத்தவறினால் கோபவெறிகொண்டு "ஒருவனுக்குப் பகைஞர் அவன்வீட்டார்தாமே" (மத். 10; 36) என்றவேதவாக்கியப்படி தம் பெற்றோருக்குப் பகைஞராய்ப் போகிறார்கள்.

பிதா மாதாக்களின் நெறிகேடான நேசத்தையும் இளக்காரத்தையும் அனுபவத்தால் அறிந்த மக்கள், தங்கள் எண்ணத்துக்கு அவர்களை இசைக்கப் பெரும்பாலும் உபயோகிக்கும் ஓர் தந்திரம் யாதெனில் சாப்பிடாமல் விஷமம்பண்ணுதலாம். நாம் நன்றாயறிந்த ஓர் கைம்பெண்ணுக்கு ஒரேயொரு புத்திரனிருந்தான். இவன் ஒருநாள் தன் உடன் மாணாக்கர் தாங்கள் இவ்



வித தந்திரத்தாலடைந்த அற்ப அனுகூலங்களைப்பற்றி வீம்பாய்க் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு, தானும் இப்படிச் செய்துபார்க்கவேண்டுமென்றெண்ணி அன்றிரவு தாயிடம் ஒருகாரியத்தைக்கேட்டான். அவள் அதை உடனேகொடாததினால் தனக்குத் தீனுந் தேவையில்லையென்று சாப்பிடாமலிருந்தான். மகனை அருமையாயும் புத்தியாயும் நேசித்துவந்த தாய் அவனைச் சாப்பிடும்படி கெஞ்சாமல்தடவாமல், மகனே! இந்தவிளையாட்டு என்னிற்பலியாது. இது வீண்செல்லங்காட்டிப் பிள்ளைகளைக்கெடுக்கும் பிதா மாதாக்களிடத்திலென்றாற் பலிக்குந்தான். உனக்கு வேண்டியது தக்க நேரத்திற் கிடைக்கும். இப்போது சாப்பிடவிருப்பமானாற் சாப்பிடு விருப்பமில்லாவிடில் போய்ப்படுக்கலாம் என்று திடமாய்ச் சொன்னாள். பையன் இதைக்கேட்டு மலைத்துத் தன் எடுப்பு வாய்க்காததையிட்டு வெட்கினாலும் தன் பிடிவாதத்தையும் விட மனதில்லாததினால், யாதொன்றும் பேசாமலும் சாப்பிடாமலும் படுத்துவிட்டான். ஆனால் திரும்ப ஒருபோதும் தன்னரியதாய்க்கு இவ்வித தந்திரம் விளையாடத்துணியவில்லை. இப்படியே வேண்டிய தருணங்களிலெல்லாம் நேசத்தோடு கண்டனையுந் தண்டனையுங் கலந்து வளர்த்ததினால் தனக்குப் பிற்காலம் எய்திய நன்மைகளை நினைத்துப் பலசமயங்களிலும் அவளைப்பற்றி மிகப் புகழாய்ப் பேசிக்கொண்டுவருவான். மிக விவேகியான இவ்வரிய தாயைப்பற்றி வேறிடங்களிலும் பேசுவோம்.

தேவபயமும் பத்தியுமற்ற பெற்றோர், பிள்ளைகள் மேற் தாங்கள்கொண்ட பேதமையான அன்பினால் அவர்களின் சன்மார்க்க நடையைப்பற்றிச் சற்றும் பறுவாய்பண்ணாமல், அவர்கள் தேவசன்னிதியில் எவ்வளவு துஷ்டராயிருந்தாலும் லௌகீக நன்மை பெருமை சிலாக்கியங்கள்மாத்திரம் உள்ளவர்களாயிருக்க ஆத்திரப்படுவார்கள். ஒருகாலம் றோமைநகரை அரசாண்ட பஞ்சமாபாதகனாகிய நீரோ என்பவன் சிறுவனாயிருக்கையில் குறிகாரர் இவனது தாயைநோக்கி இக்குழந்தை ஒருகா

லம் சக்கிரவர்த்தியாகி உன்னையுங் கொலைசெய்வான் என்றார்கள். குருட்டுத்தனமாய்த் தன்மகவை நேசித்த இவள் அதற்கு மறுமொழியாக, என்மகன் என்னைக் கொல்வதைப்பற்றிக்காரியமில்லை அதற்கு நான் சம்மதிகாரியாயிருக்கிறேன். அவன் சிம்மாசனமேறி அரசாண்டால் அதுவேபோதுமென்றாள். குறிகாரர் குருட்டுவாய்ப்பாய்ச்சொல்லியபடி அவன் தன் தாயைக்கொன்றேவிட்டானென்று சரித்திரங் கூறுகின்றது.

இதைப்பார்க்கிலும் பயங்கரமான ஒருசம்பவம் சில காலத்துக்குமுன் நடந்தது. அது உண்மையானதாயினும் அதை நம்பச் சிலர் சற்றுப் பின்வாங்குவார்கள். அதெப்படியெனில் மக்களை முறையாய்நேசிக்கத்தெரியாத ஓர் தந்தை, உலக நன்மையை விரும்பித் தன்பிள்ளைகள் வேத விசுவாசத்தை இழந்து கெட்டுப்போகக்கூடிய ஓர் துன்மார்க்க ஸ்திதியில் அவர்களை வைத்திருந்தான். இதை அறிந்த ஒருகுருவானவர் அவனை வீடுதேடிப் போய்க்கண்டு, சருவேசுரன் தனக்கொப்படைத்த பிள்ளைகளை இளமைதொட்டு அவருக்கேற்கத் தேவபத்திவிசுவாசமுள்ளவர்களாய் வளர்ப்பது அவனுக்கு எவ்வளவு பாரமான கடமையென்றும், அப்படிச்செய்யாமல் அவர்களைக் கெட்டுப்போகவிடுவது அவனுக்கும் அவன் சந்தானத்துக்கும் எவ்வளவு தேவபழியான காரியமென்றும் வேண்டிய புத்திசொன்னார். அவன் இவற்றையெல்லாம் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து சுருக்கமாய்ச் சொன்ன மறுமொழியாவது: சுவாமீ என்பிள்ளைகள் உலகத்தில் உத்தியோகஸ்தராய் வந்தால் அது எனக்குப் போதும். அவர்களை உத்தியோகத்தில் வைக்கிறதற்காக நான் நரகத்தில் விழவும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.

இவ்வளவு மதிகேடாய்ப் பிள்ளைகளைநேசித்துக் கெடுக்கும் பெற்றார் உலகிற் பலருண்டானபடியாலன்றோ செனேக்கா என்னும் பிறசமய சாஸ்திரி "நாம்பிறக்கும்போதே பெற்றோரின் தீவினைநடுவிற் பிறக்கிறோம்" என்றார்.



பிள்ளைகள்மேலுள்ள பிரமாணமற்ற பற்றுதலினால் அவர்களுக்காகச் சிலபெற்றோர் களவாண்டும், அநியாய வட்டிவாங்கியும், வேறு பற்பலவிதமாகப் பொருள்பண்டங்களை அபகரித்தும் பணந்தேடுவார்கள். இதனால் தங்களுக்கும் அவர்களுக்கும் நித்தியகேட்டையே சூழுகிறார்கள். ஏனெனில் அநியாயமாய்ச் சம்பாதிக்கிறவர்கள் மாத்திரமல்ல அப்படிச்சம்பாதித்ததை ஆண்டு அனுபவிக்கிறவர்களும் அந்த அநியாயத்துக்குப் பங்காளிகளாய்ப் போவார்கள். பெற்றோர் அநியாயமாய்ச் சம்பாதித்ததைத் திரும்பச் சொந்தக்காரருக்கு இறுத்துவிட்டுத் தாங்கள் தரித்திரப்பட மனந்துணியும் பிள்ளைகள்யார்? அன்றியும் தாய்தந்தையர் நீதிநெறிகெட்டுப் பிள்ளைகளைச் சன்மார்க்கராய் வளர்க்காமல் அவர்களுக்காக அநியாயமாய் எவ்வளவு திரவிய சம்பத்தைத்தேடி வைக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் கருவங்கொண்டு உழைப்பாளிகளாகாமல் அழிப்பாளிகளாய்ப் போவதையும் காண்கிறோம். அவர்கள் சம்பத்தும் வந்ததுபோலப் போகின்றதென்று, அதாவது, பெற்றோரால் அநியாயமாய்த்தேடப்பட்டது பிள்ளைகளால் அநியாயமாய் அழிக்கப்படுகின்றதென்று அயலார் தூற்றவும் நேரிடுகிறது.

பிள்ளைகளுக்குப் பெருந்தொகையாய்ச் சம்பாதித்துவைப்பதைப்பார்க்கிலும் அவர்களை நீதியாய் உழைக்கப்படிப்பிப்பதும் பழக்குவதுமே உண்மையான அன்பின் அறிகுறியாம். போசியோன் என்ற ஞானி தமது பிள்ளைகளை உருக்கமாயும் விமரிசையாயும் நேசித்து, அவர்கள் ஊதாரிகளாகாமல் உழைப்பாளிகளாகும்படி பயிற்றிவந்தார். இவரது பேராசையற்ற நடபடிகளை மகா அலெக்சாந்தர் என்னும் அரசன்கேட்டறிந்து மிகச் சந்தோஷப்பட்டு இவருக்கு விலைபெற்ற பல கொடைகளை அனுப்பினார். இவர் அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் அரசன் என்னைப்பற்றி அப்படிமேன்மையாய் எண்ணினால் இன்னும் நான் அவ்வித மேன்மைக்குப் பாத்திரனாயிருக்க உத்தரவளிப்பாராகவென்றார். அதற்கு அரசதூதர் மறுமொழியாக இக்கொடைகள் உமக்குத் தே

வையில்லாதிருப்பினும் உமது பிள்ளைகளுக்காக நீர் இவைகளை ஏற்றுக்கொள்வது இராசாவின் சித்தமென்றார்கள். இவர் அதற்கு: என்பிள்ளைகள் என்னைக்கண்டுபாவிக்க வேண்டும். அவர்கள் என்சுகுணங்களைப் பின்பற்றினால் அவர்களுக்கும் இக்கொடைகள் தேவையாக வரமாட்டா. அவர்கள் என்சுகுணங்களைப் பின்பற்றார்களென்றால் நான் அவர்களுக்காக லௌகீக நன்மைகளைச் சேகரித்துவைக்கவேமாட்டேனென்றார். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் பேராசைகொள்ளாமற் புண்ணியவழியில் நடக்க அவர்களுக்கு முன்மாதிரிகாட்டிப் பழக்குவதே அவர்கள்மேல்வைக்கத்தகும் அன்புக்கு மெய்யான அறிகுறியும் அவர்களுக்குத் தேடிக் கொடுக்கத்தக்க அழியாத திரவியமுமாம். கடுஞ்சிநேகம் கண்ணைக் கெடுக்கும் என்றவாறே தாய்தந்தையர் தம்மக்களை மிதமிஞ்சிக் குருட்டாட்டமாய்ச் சிநேகித்து, அவர்களைப் பிரியவீனப்படுத்தப் பயந்து, கண்டிப்பு தண்டனை கட்டுப்பாடு நல்லொழுக்கம் யாதொன்றுமின்றித் தங்களெண்ணப்படி நடக்கவிடும்போது அவர்கள் இயல்பாய்க் கெட்டழிந்து மூர்க்கருந் துஷ்டருமாய்ப் போகிறார்களன்றித் தங்கள் பெற்றோரை அவமானப்படுத்தித் துக்கசாகரத்தில் அமிழ்த்தியும்விடுகிறார்கள். இவ்வித தீமைகளையெல்லாம் விலக்கவேண்டுமாகில் பெற்றோர் பிள்ளைகளை நேசிக்கவேண்டிய முறையை அறிந்து அநுசரிக்கக்கடவார்கள்.

## முறையான அன்பு

தாய் தந்தையர் தங்கள் மக்களைச் சுபாவமுறைப்படி மாத்திரம் நேசிப்பதைப்பற்றி ஆச்சரியப்படவும் அவர்களைப் புகழவும் அவசியமில்லையென்றும் அப்படிச் சிநேகியாதவர்களைப் படுபாவிகளென்று அழைக்கவேண்டுமென்றும் அர்ச். அகுஸ்தீன் வசனிக்கிறார். ஏனெனில், அறிவற்ற கரடி புலி முதலிய துஷ்ட மிருகங்கள்முதலாய்த் தங்கள் தங்கள் குட்டிகளைச் சுபாவமுறைப்படி அருமையாய்ச் சிநேகிக்கின்றன. இயற்கைமு



றைக்கு மேற்படாததும் தேவநோக்கமற்றதுமான இந்தச் சுபாவ அன்பு நிலையற்றது. குழந்தைகள் வளர வளர இச்சுபாவ நேசத்தின் வேகமும் உறுதியும் குறைவது வழக்கம். பிள்ளைகள் தங்களுக்கு ஏற்கநடந்தால் அவர்களைத் தாய்தந்தையர் நேசிப்பதும், ஏற்க நடவாவிடில் அவர்களைப் பராமுகம்பண்ணுவதும் வெறுப்பதும் நிலையற்ற சுபாவ நேசத்தின் கூறாம். மக்களின் சாமர்த்தியம் சாங்கம், கீர்த்தி, அழகு, வயது, குணம், நடை ஆதியவைகளையிட்டு எல்லோரையும் சமமாய் நடத்தாமல் ஓரவாரம்பண்ணுவதும் சுபாவ அன்பின் சொந்தக் குணம். கிரமந்தப்பிய சுபாவ அன்பில் குருட்டாட்டமும் உண்டு. உதாரணமாக பெற்றோர் தம்மக்கள் எவ்வளவு துர்ச்சனராயிருந்தாலும் தங்களுக்கு மாத்திரம் பிரியப்பட நடந்துகொண்டால் அவர்களுடைய துர்ஒழுக்கத்தைப்பற்றிச் சற்றும் பொருட்பண்ணாதிருப்பதும், அவர்கள் பிறகு என்னென்ன அடாத்து அநியாயங்களைப் பண்ணினாலும் அவர்களுக்குச் சனுவாய்ப் பேசிப் பிறரைக் குற்றவாளிகளாய்த் தீர்ப்பதும், அவர்கள் அட்டாதுட்டித்தனத்தைத் தெளிவாய்க் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்கவும் திருத்தவும் எண்ணாதிருப்பதும், தேவன் தமக்குச் சித்தமான நேரத்தில் அவர்களை மறுவுலகத்துக் கழைத்துக்கொண்டால் பிள்ளைகள் அவருக்கே சொந்தமானவர்களென்பதை நினையாமல் அவருக்கேராத வார்த்தைகளைச் சொல்லி முறைப்படுவதும் இவைபோன்ற மற்றச்சகல தவறுகளும் மேற்சொல்லிய குருட்டாட்டத்தினாலேதான் விளைகின்றன.

தாய் தந்தையர் மக்கள்மேற் கொண்டிருக்கவேண்டிய அன்பு சுபாவமுறைக்கு மேற்பட்டதும் தேவநோக்கமுடையதுமாயிருக்கவேண்டும். ஏனெனில், பிள்ளைகள் தேவனுடையவர்கள்; அவரே அவர்களை ஆதிதொட்டு அருமையாய் நேசித்துக் காலக்கிரமத்திற் படைத்தருளினவர். "நித்திய நேசங்கொண்டு உன்னைச் சிநேகித்திருந்தேன் ஆதலால் இரக்கங்கொண்டு உன்னை இழுத்

தெடுத்தேன்" (எரேமி. 31; 3) இன்னின்னவிதமான பிள்ளைகள் தங்களுக்கு வேண்டுமென்று விரும்பி அவ்விருப்பத்திற்கிசையப் பிள்ளைகளைச் சென்மிக்கப்பண்ணும் வரம் பெற்றோருக்கில்லை. அன்றியும் அவர்கள் விருப்பப்படியல்ல தேவன் தமது சித்தத்துக்கும் மட்டற்ற ஞானத்துக்கும் ஏற்றபடியே இன்னின்னவிதமான பிள்ளைகளை இன்னின்ன பெற்றோருக்குக் கொடுப்போம் எனக் கொடுத்தருளுகிறார். இதின் நோக்கம் என்னவெனில், தாய் தந்தையர் தங்கள் மக்களைச் சுபாவமுறைக்கு மேலான தூய நேசத்துடன், தமக்கேற்றவிதமாய் நேசித்துக் காப்பாற்றித் தேவ பயபத்தியாய் வளர்க்கவேண்டும் என்பதேயாம். ஆகையால் இவர்கள் மக்களைத் தங்களுக்கல்ல தேவனுக்கே சொந்தமானவர்களென்றதையும், தாங்கள் அவர்களை வளர்த்து பாதுகாத்துக் கொடுக்கவேண்டிய காரியஸ்தர்களே என்பதையும் ஒருகாலும் மறவாமல், அவருக்காகவும் அவருக்கேற்றவிதமாயும் அவர்களை நேசிக்கவேண்டும். யேசுநாதசுவாமி ஒருநாள் ஒரு குழந்தையைத் தம்மிடம் அழைத்து அதைச் சீஷர்கள் நடுவில் நிறுத்தி, இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை நமது நாமத்தின் நிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் நம்மையே ஏற்றுக்கொள்ளுகிறானென்றருளிச்செய்தார் (மத். 18; 5) சருவேசுரன் பிள்ளைகள் மேற்கொண்டிருக்கும் மேலான நேசத்தை அவரது பதிலாட்களாயிருக்கும் பெற்றோரிடத்திலேயே பிள்ளைகள் கண்டடையவேண்டும். ஆகையால், அவர் பிள்ளைகளை நேசிப்பதுபோலவே அவரிடமாயிருக்கும் பிதா மாதாக்களும் அவர்களை நேசிக்கக்கடவார்கள். ஒரு இராசா தம் மக்களை ஒரு பிரபுவிடம் வளர்க்கும்படி ஒப்பித்திருந்தால் இப்பிரபு அவர்களை எவ்வண்ணம் நேசித்து வளர்ப்பாரோ, அவ்வண்ணமே இராசாதிராசாவாகிய கடவுள் பெற்றோருக்கு ஒப்புவித்த பிள்ளைகளை அவர்கள் சுபாவத்துக்கு மேலான அன்போடு, தேவனுக்கேற்றவிதமாய் நேசித்து வளர்க்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.



## இவ்வன்பின் இலட்சணம்

இந்த நேசம் தாய் தந்தையரின் மனதிலும், வாக்கிலும், கிரிகையிலும் விளங்கவேண்டியது. என்னமுகாந்திரத்தையிட்டும் இவர்கள் மக்கள்மட்டில் வெறுப்பான எண்ணங்கொள்ளுவார்களாகில் அவர்களைத் தக்கவிதமாய் நேசிக்க முடியாது குறையற்றவர்கள் பூமியில் ஒருவருமில்லை. ஆகையால், பிள்ளைகளிடத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும் இவைகளைப் பாராட்டப்படாது. மேலும், அவர்கள் தேவ சாயலாகப் படைக்கப்பட்டவர்களாகையால் தேவன் அவர்களை அருமையாய்ச் சிநேகித்து அவர்கள்மேல் எப்போதும் கண்ணாயிருக்கிறார். வழக்கமாய்ப் பெற்றோரைப்பார்க்கப் பிள்ளைகளே தேவ சமுகத்தில் அதிகம் பரிசுத்தராயிருக்கிறார்கள். அவர்கள் பலமுறையுங் குடும்பத்தின் பெருமையும் பாக்கியமும் பிதா மாதாவுக்கிடையிலுள்ள நேச ஒற்றுமைக்குக் காரணமுமாகிறார்கள். பெற்றோர் அவர்களைச் சன்மார்க்கமாய் வளர்த்தால், அவர்கள் பிற்காலம் இம்மையில் பெற்றோருக்குப் பெருமுதவியும் பேர்புகழுமாய் இருப்பதுமன்றி, மறுமையில் மட்டற்ற நித்திய சம்பாவனைக்கு வழியுமாயிருப்பார்கள். இந்த உண்மைகளைத் தாய் தந்தையர் சிந்தித்துக்கொண்டால் தங்கள் பிள்ளைகளை மனதில் சிநேகிப்பது அவர்களுக்குக் கஷ்டமாயிராது.

மக்களை அற்பகாரியங்களுக்கெல்லாம் திட்டிச் சினந்து பேசுவதும் அவர்களைப்பற்றிப் புறணி கூறுவதும் பிறத்தியாரிடம் முறையிடுவதும் அவர்கள்மேல் இருக்கவேண்டிய உருக்கமான நேசங்கெட்டு வெறுப்புண்டாவதற்கு ஏதுவாகும். பிள்ளைகள் குற்றஞ்செய்யும்போதெல்லாம் அதனால் விளையும் தீமைகளை அவர்களுக்குப் பொறுமையாயும் தயவாயுஞ் சொல்லிக்காட்டி ,அதை அவர்கள் திருத்திநடக்கவேண்டிய முறையையுந் தெரிவித்து, அவர்கள் செய்யும் நன்மைகளைப்பற்றி இடையிடையே சற்றுப் புகழ்ந்து ,தாங்கள் அவர்களிடம் ஒருகாலங் காத்திருக்கும் நன்மை சங்கை சலாக்கியங்களை

அவர்களுக்கு நினைப்பூட்டுவது பெற்றோருக்கும் பிள்ளை
களுக்குமிடையிலுள்ள அன்னியோன்னிய நேசத்தைப்
பெலப்பிக்க வழியாகும்.

பெற்றோரின் நேசம் அதிமுக்கியமாய் இவர்களது
கிரியைகளிலே விளங்கவேண்டியது. தங்கள் பிள்ளைக
ளின் இகபர நன்மைகளில் என்றுங் கண்ணுங் கருத்து
மாயிருந்து அவர்களுக்காக உழைப்பதும், அவர்களுக்
கு நேரிடும் தீமைகளை நீக்குவதும், அவர்களுக்கு நல்லறி
வூட்டிக் கல்வி கற்பிப்பதும், அவர்களைக் கண்டிக்க அல்
லது தண்டிக்கவேண்டிய சமயங்களில் அப்படிச்செய்து
அவர்கள் குறைகுற்றங்களைத் திருத்தி நன் முன்மாதிரி
காட்டுவதும், அவர்கள் நற்செய்கைகளுக்குப் பதிலளித்
து அவர்களை உற்சாகப்படுத்துவதும், அவர்களுக்காக
நாள்தோறுந் தேவனை வேண்டுதல் செய்வதும், அவர்
களைச் சன்மார்க்கராய் வளர்த்து நன்னிலையில் வைப்பது
மே அவர்களை நேசிக்கும் உத்தமமுறையாம். பின்வரும்
பிரிவுகளில் இவைகளைப்பற்றி விரிவாய்ப் பேசுவோம்.

மக்களின் லௌகீக நன்மையைக் கவனிப்பது தாய்
தந்தையருக்கு இயல்பு. இதுமாத்திரம்போதுமென் றெ
ண்ணாமல் அவர்களுடைய அழிவற்ற ஆத்தும நன்மை
யிலேதான் அதிக கவனஞ்செலுத்துவது மெய்யான அன்
பின் அடையாளமாகும். பிள்ளைகளுடைய ஆத்தும
நன்மையை அசட்டைபண்ணிச் சரீர சிலாக்கியங்களை
மாத்திரம் பேணும் பெற்றார் சிநேகங்காட்டி வினையஞ்
செய்யுஞ்சத்துருவுக் கொப்பாயிருக்கிறார்கள். ஆத்து
மங்கெட்டுப்போனால் புகைபோல மறைந்துபோகிற சரீர
சுக வாழ்வினால்வரும் பயனென்ன? பிள்ளைகளைச் சரி
யாய் நேசிக்க அறிந்திருந்த சன்மார்க்க பிதா மாதாக்கள்
தங்கள் மக்களுடைய ஆத்துமகதி அபாயத்துக்குள்ளா
யிருக்கும் வேளைகளில் இவர்கள் சரீர சௌக்கிய வாழ்
வையிழந்தாலும் ஆத்துமத்தின் நித்திய பேரின்ப வாழ்
வையடையவே வழிபண்ணுவார்கள். வரிவேதகாலத்
தில் தேவப்பிரசைகளாயிருந்த யூதசனங்களை அந்தியோ
க்கஸ் என்னும் அன்னியவரசன் எதிர்த்துக் கலகம்பண்



ணிவருகையில் மக்கபேயர் என்னுங் குடும்பத்தைச்சேர்
ந்த ஒரு தாயையும் ஏழு குமாரரையும்பிடித்து வரிவேத
முறைமைக்கு மாறாய்ப் பன்றியிறைச்சி சாப்பிடவேண்
டுமென்றுஞ் சாப்பிடாவிடில் அவர்கள் அனைவரும்
வதைத்துக் கொல்லப்படுவார்களென்றும் அச்சுறுத்தி
னான். சொல்லரிய மாதாவென்று வேதாகமம் துதிக்கும்
இத்தாயுடைய நல்வளர்ப்பின் பயனாக பிள்ளைகள் தேவ
கட்டளையை மீறுவதிலும் தங்கள் உயிரை இழக்கவே
துணிந்து நின்றபடியால் அரசன் தாய்க்கு முன்பாக
அவர்களுடைய தோலை உரிப்பித்தும் நாக்கையும் கை
கால்களையும் வெட்டுவித்தும் அவர்களை நெருப்பில் எரிப்
பித்தான். இப்படி ஆறு குமாரரும் ஒரே தினத்தில்
ஒருவருக்குப்பின் னொருவராய்க் குரூரமாய்க் கொல்லப்
படுவதைத் தாய் கண்ணாரக் கண்டுகொண்டுநின்றும் சற்
றாவது மனம் பதறாமல் வேதாகமம் சொல்வதுபோல
"ஞானம் நிறைந்தவளாய்" பெண்பிள்ளையின் நேசப்பற்
றுதலோடு ஆண்பிள்ளையின் திடனையுஞ்சேர்த்து அவர்க
ளுக்குத் தைரியமும் தேவநம்பிக்கையுமான வார்த்தை
களைச்சொல்லித் தேற்றிக்கொண்டிருந்தாள். இராயன்
இதெல்லாங்கண்டு ஆச்சரியமுங் கோபாவேசமும் நிறை
ந்தவனாய் ஏழாம் பிள்ளையாகிய தன் கடைக்குட்டிக்
காகுதல் புத்திசொல்லி அவனுயிரைத் தப்புவிக்கும்படி
தாயை நெருக்கினான். அவள் அந்தமகனுக்கு உரைத்
தமொழி யாதெனில், என்மகனே உன்னை ஒன்பதுமாசம்
உதரத்திற் சுமந்துபெற்றுப் பாலூட்டி இந்தவயது
வரைக்கும் வளர்த்துக் காப்பாற்றின என்மேல் இரக்க
மாயிரு. மகனே வானத்தையும் பூமியையும் அவைகளி
லுள்ள யாவையும் கண்ணோக்கிப் பார்க்கும்படி உன்னை
மன்றாடுகிறேன். ஒன்றுமில்லாமையிலிருந்து சருவேசு
ரன் தாமே சகலத்தையும் மனுச் சன்மத்தையும் படைத்
தாரென்று யோசித்து அவருக்கேயன்றி இந்தக்கொலை
பாதகனுக்கு நீ அஞ்சாதிரு. உன் சகோதரருக்குப்
பாத்திரமான பங்காளியாகி அவர்களோடு தேவ இரக்
கத்தில் நானுன்னை ஏற்றுக்கொள்ளும்படி நீ மரணத்தை

ஏற்றுக்கொள் என்றாள். தாயின் ஏவுதற்படி அந்தச் சிறு பிள்ளையும் சகலத்திலும் சருவேசுரனைநம்பி மாசற்றதாய் மரித்துவிட்டது. பிள்ளைக்குப்பின் தாயும் கொலைசெய்யப்பட்டாள். (2 மக்கபேயர். 7) இதுவல்லோ பெற்றோர் பிள்ளைகளை அவர்களது நித்திய நன்மைக்காகவும் தேவனுக்காகவும் நேசிக்கவேண்டிய சுபாவத்துக்கு மேலானமுறை.

### தேவசித்தத்துக்குக் கீழ்ப்பட்ட அன்பு

மக்கள் மேல் முறைகேடாய் அன்பு பாராட்டுகிற பெற்றோர் அவர்களை விக்கிரகங்களாக வணங்கி கடவுளைப்பார்க்கிலும் அவர்களையே அதிகமாய் நேசிக்கிறவர்கள்போலாகிறார்கள். இவ்வித தாய் தந்தையரைப் பற்றி உலக இரட்சகர் வசனித்ததென்னவெனில், "மகனையாவது மகளையாவது நம்மிலும் அதிகமாய் நேசிக்கிறவன் நமக்குப்பாத்திரமானவனல்ல" என்பதாம் (மத். 10.37.) பிள்ளைகள் தேவனுக்கே சொந்தமானவர்களென்றும் அவர் சித்தப்படியே பெற்றோர் அவர்களை நேசிக்கவும் நடப்பிக்கவும் வேண்டுமென்றும் அதிபிதாவாகிய ஆபிரகாம் மூலமாய் சருவேசுரன் சகலருக்கும் படிப்பிக்கச்சித்தமாயினார். இந்தப் புண்ணிய சீலரைக் கடவுள் தமது பிரசைகளுக்குப் பிதாவாக ஏற்படுத்தச் சித்தமானபோது அவரைநோக்கி சாராள் என்னும் உன்பத்தினி ஓர் புத்திரனைப் பெறுவாள் அவன் பலசாதிகளுக்குத் தலைவனாவானென்றருளிச்செய்தார். ஆபிரகாமிதைக் கேட்டு முகங்குப்புறவிழுந்து புன் சிரிப்புக்கொண்டு நூறுவயசுள்ளவனுக்குப் பிள்ளைபிறக்குமா? தொண்ணூறு வயசுள்ள சாராள் பிள்ளையைப் பிரசவிப்பாளாவென்று ஆச்சரியப்பட்டார். அதிக வயசுவரைக்கும் மலடியாயிருந்த சாராளுக்கும் சம்மனசு இதை அறிவித்தபோது அவளுஞ் சிரிப்புற்றாள். அப்படியிருந்தும் இவர்கள் தேவவாக்குப்படி ஈசாக்கென்னும் புத்திரனைப் பெற்று அவனை அருமையாய் நேசித்து வளர்த்தார்கள். அவன் வாலிபனாயிருக்கையில் சருவேசுரன் ஆபிரகாமி



ன்விசுவாசத்தைப் பரிசோதிக்கும்பொருட்டு ஓர் இரவு அவரைநோக்கி: நீ இவ்வளவாய் நேசிக்கும் உன் ஏகபுத்திரனாகிய ஈசாக்கைக் கூட்டிப்போய் நாம் உனக்குக் காட்டும் மலைமேல் அவனை நமக்குத் தகனப்பலியிடுவாயாகவென்று வசனித்தார். ஆபிரகாம் இதைக்கேட்டுத் துக்கித்துக் கலங்கினாரா? ஏங்கினாரா? முறுமுறுத்தாரா? முறையிட்டாரா? ஆண்டவரே இதைமாத்திரம் என்னிடங் கேளாதேயுமென்று கெஞ்சிக்கேட்டாரா? அல்லது தேவகட்டளையை நிறைவேற்றச் சற்றாவது தாமதித்தாரா? இல்லை. உடனுக்குடனே எழுந்து இரவிரவாகத் தம் நேச மகனையும் இரு ஊழியரையும் அழைத்துக்கொண்டு பலிக்குவேண்டிய விறகு நெருப்பு வாள் இவைகளோடு புறப்பட்டார். மூன்றாம்நாளில் சருவேசுரன் குறித்த மலைக்குக் கிட்டச்சேர்ந்து அங்கோர் பலிபீடத்தையியற்றி அதன்மேல் தம்மகனைக் கட்டிவளர்த்தி, உறையிலிருந்த வாளையுருவி அவனை வெட்ட ஓங்கினார். ஓங்கவே ஒரு தேவதூதன் வானத்தினின்று அவரைத் தடுத்து ஆபிரகாமே உன்மகனுக்கு யாதொன்றுஞ் செய்யாதே. நீ தேவபயமுள்ளவனென்று இப்போது அறிந்திருக்கிறோம். ஆகையால், ஆண்டவர் வசனிக்கிறதாவது: நம்மைக்கொண்டு நாம் ஆணையிட்டு வாக்குப்பண்ணுகிறதென்னவெனில், நீ இச்செயலைச் செய்ததினாலே,— நம்மைப்பற்றி உன் புத்திரனைக் கொல்லத் துணிந்ததினாலே, நாமுன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலும் கடற்கரையின் மணலைப்போலும் பெருகப்பண்ணுவோம். உன் சந்ததி தன் சத்துருக்களுடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளும்: நீ நமது சொல்லுக்கு அமைந்தபடியாற் பூமியிலுள்ள சகல பிரசைகளும் உன் சந்ததியினால் ஆசீர்வதிக்கப்படுமென்று அருளிச்செய்தார். (ஆதி 22.) ஆபிரகாமின் சந்ததியாராகிய இசிறவேல்சனங்கள் தேவபிரசைகளாய் நன்னெறி வழுவாதிருந்த காலமெல்லாம் தலைமுறை தலைமுறையாய் இந்த வாக்குத்தத்தத்தின் பலனை அநுபவித்து வந்தார்களென்று வேதபுத்தகத்தில் வெளி

ப்படையாய்க் காண்கிறோம். பலமுறையும் பிதாமாதாக்கள் கனபொருள்செலவு செய்து பிள்ளைகளை அருமையாய் வளர்த்துப் படிப்பித்து அவர்களால் நயம்பெறக் காத்திருக்கையில் அப்பிள்ளைகள் கடைசியாய் மரணமென்னும் மாற்றானுக்கு இரையாய்ப் போகிறார்கள். அவ்வேளைகளில் பெற்றோர் தங்களிடம் தேவன் ஒப்படைத்த பிள்ளைகளை அவர் அழைத்துக்கொண்டாரென்றும், அவரே தாங்கள்பட்ட பிரயாசத்துக்குப் பிரதி பலன் அளிப்பாரென்றும் நம்பி யோபென்னும் மகாத்துமாவைப்போல மன அமரிக்கையாய்த் தேவசித்தத்துக்கு அமைச்சலாயிருப்பதே தாவிளை. யோபுவானவர் தம்முடைய அருமையான ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் ஒரே நாளில் இறந்த சங்கதியைக் கேள்வியுற்றபோது தரையில் விழுந்து சருவேசுரனை வணங்கி, கர்த்தர் தந்தார் கர்த்தரே எடுத்துக்கொண்டார். அவருடைய நாமத்துக்குத் தோத்திரமுண்டாவதாக என்றார். மேலும் வேதாகமஞ் சொல்வதியாதெனில், இவையெல்லாவற்றிலும் யோபு தன் வாயினால் பாவத்தைக் கட்டிக்கொள்ளவுமில்லை தேவனைக்குறித்து மதியீனமாய்ப் பேசவுமில்லை என்கிறது (யோபு 1). இவ்விதமான பொறுமைக்கும் ஆச்சரியமான அமைச்சலுக்கும் பிரதிபலனாக சருவேசுரன் திரும்பவும் அவருக்கு ஏழு புத்திரரையும் மிகச் சவுந்தரியமுள்ள மூன்றுபுத்திரிகளையும் தந்தருளினார். (யோபு42)

மக்கள் நோயுறும்போது வைத்தியஞ்செய்விப்பதும் தேவனை மன்றாடுவதும் நேர்த்தி தபசுபண்ணுவதும் பெற்றோரின் நல்லவழக்கம். ஆனாலிவையாவுக்கும் மிஞ்சித் தேவசித்தப்படி பிள்ளைகள் இறக்க நேரிடும்போது தாய் தந்தையர் தேவனை நிந்தித்து அவரிற் பழிவாங்கப்பாராமல் தாவீதிராசாவைக் கண்டுபாவிப்பார்களாக. இவருக்குப் பெத்சபி என்பவள் பெற்றிருந்த பச்சைக் குழந்தை சாகவே சாகுமென்று நாத்தானென்னுந் தீர்க்கதரிசி அறிவித்தபிரகாரம் பிள்ளை வியாதியில் விழுந்து அவஸ்தையாகிவிட்டது. இதைக்கண்டு தாவீது தமது பாலனுக்காகத் தேவனைப் பிரார்த்தித்துக் கடுந்தபசு செய்துகொண்டு தமது அறைக்குச்சென்று தரையில்விழுந்து கிடந்தார். வீட்டிலுள்ள பெரியோர் வந்து அவரை எழுந்திருக்கச்சொல்லி எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அவர் சம்மதியாததுமன்றி அவர்களோடு சாப்பிடப் போகவுமில்லை. ஏழாம்நாள் குழந்தை இறந்தது. இதைக்கண்டு அரசன் ஊணுறக்கமற்று ஆகுலித்தாரா? அல்லது வேறு சிலரைப்போல் இனித் தெய்வமென்ன, கோயிலென்ன, பூசையென்ன, செபமென்னவென்று மாசக்கணக்காய் கடவுளிற் பழிவாங்கிக்கொண்டிருந்தாரா? அல்லது தேவனை மனநொந்து தூஷித்தாரா? இல்லை. குழந்தை காலஞ்சென்றுவிட்டதென்று அறிந்தவுடன் தரையினின்றெழுந்து ஸ்நானம் பண்ணி தைலம் பூசி தமது வஸ்திரங்களை மாற்றிக்கொண்டு தேவாலயஞ் சென்று தொழுது கொண்டபின் போசனமருந்தினார். இதைக்கண்டு ஊழியர் அவரை நோக்கி குழவி உயிரோடிருக்கையில் உபவாசமாயிருந்தீரே. அது மரித்தபின் நீரெழுந்து அசனம்பண்ணுகிறதென்ன என்றார்கள். அதற்கு அவர் மாறுத்தரமாக பாலன் இன்னும் உயிரோடிருக்கையில் ஒருவேளை அது பிழைக்கும்படி கர்த்தர் கிருபை செய்வாரென்றெண்ணி உபவாசமாயிருந்தழுதேன். இப்போது அது மரித்திருக்கிறது. இனி நான் உபவாசமாயிருக்கவேண்டியதென்ன! அதைத் திரும்ப வரப்பண்ண என்னாற் கூடுமா! அதனிடத்துக்கு நான் போவேனேயன்றி அது என்னிடம் பரிச்சேதம் வரப்போகிறதில்லைஎன்றார். அம்மகாராசா தமது அரிய புத்திரனைப் பரமராசாவாகிய தேவன் அழைத்துக்கொண்டதையிட்டு மனங்கருகாமல் பொறுமையோடு அவர் சித்தத்துக்குப் பூரண அமைச்சலாய் இருந்ததற்குச் சம்பாவனையாக கொஞ்சக்காலத்துக்குள் சலமோனென்னுஞ் சீர்சிறந்த ஞானியைப் பெற்றார். (2. அரசர் 12)

## ஒரு மகா பெருங் குருட்டாட்டம்

பிள்ளைகளைப் படைத்துப் பெற்றோரிடம் ஒப்படைத்த கடவுள் அவர்கள் சிலகாலம் வியாதியாய்க் கிடக்கும்

படி விடச் சித்தமாகும்போது அவ்வியாதியைத் தீர்க்கப் பிரயோகிக்கும் வழிபாடுகள் சித்தியாமற்போனால் சில அன்னைபிதாக்கள் அங்கலாய்ப்புக்கொண்டு பேய்க்கிருத்தியங்களைச் செய்து அல்லது செய்வித்து அதினால் தேவபழியைத் தேடிக்கொள்ளுகிறார்கள். இது பிள்ளைகளை நேசிக்க வேண்டிய சரியான முறைக்கு முழு மாறு. சபிக்கப்பட்ட இச்செய்கைக்குக் காரணர் பெரும்பாலும் போலிவைத்தியர்களாம். அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பிசாசு என்றவாறு அறிவிற் குறைந்த பேதைப்பரிகாரிகளுக்குப் பிணியெல்லாம் பேயாகும். திறமானவைத்தியர்கள் இவ்வெளிய பேய்த்தொழிலைப்பற்றி வெட்கப்படுவார்கள். ஆனால், மூடவைத்தியர்கள் நோயாளிக்குக் கைநாடி பார்ப்போர்போல் பாசாங்குபண்ணிவிட்டு அனுங்கிப் பதுங்கி காற்று அணுகிநிற்குது, ஓதிப்பார்க்கவேணும், நூல்கட்டவேணும், மடைபோடவேணும், அதற்கு இன்னின்ன சாமான் தேவையென்பார்கள். இதெல்லாம் அவகடமாயுந் தங்கள் வயிறு வளர்க்கவுமென்று செய்யும் பாசாங்கேயல்லாமல் நோய்தீரும் வழியல்ல. இச்சால மாலங்களை நம்பி வேண்டிய வைத்தியஞ்செய்வியாமல் மக்களைமாளவிடும் அன்னைபிதாக்களும் ஐயையோ பலருண்டே. அவிசுவாசிகள் பெரும்பாலும் பேய்க்காரியங்களைச் செய்விக்கிறார்களே, செய்விப்பதினால் அவர்கள் மக்கள் எல்லாரும் மாளாமற் தப்பிவிடுகிறார்களா? தேவபழிக்குப்பயந்து இப்படிச் செய்வியாமல் விடுகிறவர்கள் அனைவரும் மாண்டுபோகிறார்களா? இதையிட்டு ஒருசங்கதி சொல்லுவோம்: சத்தியவேதத்தைக் கைக்கொண்ட ஒரு சைவருக்கு ஒரேயொருமகன் இருந்தான். இம்மகனுக்கு ஏறக்குறைய பன்னிரண்டு வயது நடக்கையில் வியாதியில் விழுந்து ஈரொட்டான நிலையிலிருந்தமையால் அவனுடைய பிறசமய இனபந்துக்கள் ஏதோ சில பேய்க்கிருத்தியங்களைச் செய்விக்கும்படி தகப்பனை வெகுவாய் நெருக்கினார்கள். சொல்லொண்ணாத துயர்நிறைந்த இந்தத் தந்தை அவர்களுக்கு மறுமொழியாக: என் பிள்ளையைப் படைத்தவர் அதை



இவ்வளவு சீக்கிரத்தில் அழைத்துக்கொள்ளச் சித்தமாயிருந்தால் அழைத்துக்கொள்ளட்டும். ஆனால் இவ்வித துரோகத்தைச் செய்து நானும் என்குடும்பமும் அவருக்குச் சத்துராதிகளாய்ப்போக நான் ஒருபோதும் உடன்படேனென்று உறுதியாய்ச் சொன்னார். அன்றிரவு வியாதியின் உக்கிரத்தால் பையன் பேச்சுமூச்சற்று மூர்ச்சையாய்ப்போக அக்கம்பக்கமிருந்தவரெல்லாரும் இனி முடிந்ததென்றெண்ணி வழமைப்படி ஓலமிட்டழுதார்கள். ஆனால், விடியுமுன்னே பையன் மூர்ச்சைதெளிந்து படிப்படியாய்ச் சுகப்படத் தொடங்கிக் கொஞ்சநாட்களுள் பூரண சௌக்கியமடைந்தானன்றி பின்பு தேவபத்தியும் செல்வாக்குமுடைய ஓர் குடும்பத்துக்குப் பிதாவாயிருந்தான்.

தாய் தந்தையரே உங்கள் பிள்ளைகளை நேசியுங்களென்று உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில், நீங்கள் அவர்களை இயல்பாய் நேசிக்கிறீர்களென்பது மெய். ஆனால் நிலையற்றதும் மேலான நோக்கமில்லாததுமான ஒரு சுபாவமான அன்பு போதாது. அது சருவேசுரனுடைய பரிபூரண சம்பாவனைக் கேற்றதல்ல. ஆகையால், மேலே விளக்கியவண்ணம் இரக்கமற்ற குரூர செயல்களையும் முறைகேடான அன்பையும் முற்றாய் விலக்கித் தேவனுக்கேற்றவிதமாய் மக்களுடைய இகபர நன்மையை நாடி அவர்கள்மேல் சுபாவத்துக்குமேலான, தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிந்த அன்புடையவர்களாயிருங்கள். மெய்யான அன்பின் அறிகுறிகள் சோராமுயற்சி, சுறுசுறுப்பு, சகிப்பு, உதாரம் முதலியவைகளாம். பெற்றோருக்குப் பிள்ளைகள்மேலுள்ள நேசத்தில் இவ்வறிகுறிகள் விளங்குவது அகத்தியம். இவ்வறிகுறிகளைத் தாய் தந்தையர் காட்டவேண்டியது முதல் உழைப்பினாலும் கட்டுமட்டான நடையினாலுமாம். ஆகையால், அடுத்த அதிகாரத்தில் பிதாமாதாக்கள் உழைக்கவும் ஒறுப்பனவாய் நடக்கவும் வேண்டிய வகையை விபரிப்போம்.

## மூன்றாம் அதிகாரம்

### உழைப்பும் ஒறுப்பான நடையும்

மனுஷன் வேலைசெய்யவேண்டுமென்பது தேவ நியமம். இந்த நியமம் மனுச்சந்ததியைப்போலப் பூர்வமானது. ஆதியிற் கடவுள் ஆதாமைப் படைத்து அவனைச் சோம்பேறியாயிருக்க விடாமல் பரதீசுஎன்னும் நந்தனவனத்தைப் பண்படுத்திப் பாதுகாக்கும்படி கற்பித்திருந்தாரென்று வேதாகமஞ் சொல்லுகின்றது. (ஆதியாகமம் 2.15) ஆதாம் பாவஞ்செய்யுமுன் அவருக்கு வேலை அலுப்பாயிராமல் இன்பமாயிருந்தது. அவர் பாவத்தினாற் சருவேசுரனுக்கு விரோதியாய்ப் போகவே படைப்புண்டயாவும் தேவசித்தப்படி அவருக்கும் அவர் சந்ததிமுழுவதுக்கும் விரோதிகளாய்ப்போயின. நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து புசிக்கவேண்டாமென்று நாம் விலக்கியிருந்த விருட்சத்தின்கனியைப் புசித்ததினாலே பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உன் வாழ்நாளெல்லாம் கஷ்டப்பட்டே அதன் பலன்களைச் சாப்பிடுவாய். அது உன்க்கு முட்களையும் குருக்குத்திகளையும் முளைப்பிக்கும். பூமியின் பயிர்களை உண்பாய். உன் முகத்தின் வெயர்வையால் ஆகாரம் புசிப்பாய். கடைசியில் நீ எதினின்று எடுக்கப்பட்டாயோ அந்தப்பூமிக்குத் திரும்பிப்போவாய். ஏனெனில், மண்ணாயிருக்கிறாய் மண்ணாய் மாறுவாய் என்று தேவன் சாபமிட்டார். (ஆதியாகமம் 3.17-19.) அந்நேரந்தொட்டு மனுஷ சந்ததியார் அனைவரும் பிரயாசத்தோடுவேலைசெய்யவேண்டியவர்களானார்கள். "மனுஷன் பிறந்தது வேலைசெய்யவும், பட்சிபிறந்தது பறக்கவுமே" (யோபு.5;7). இப்படியே தனவான்களும் தரித்திரரும், பெரியோரும் சிறியோரும், ஆண்களும் பெண்களும், தங்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்க வேலைசெய்வது தேவ நியமமாயிற்று.

தேவசித்தத்துக்கமைந்து சாக்கிரதையாய் வேலைசெய்வதினால் விளையும் நன்மைகள் எண்ணிறந்தவை. கிரமமானவேலையினாற் சரீரம் பலநோய்களுக்குத் தப்பிச் சுகத்



தையும், பெலனையும், வளர்ச்சியையும், நீடிய ஆயுளையும் அடையும். வேலை முயற்சியுடையவர்களுக்குத் தீன் விருப்பம், நல்லுறக்கம், ஊக்கம், சுறுசுறுப்பு, மனக்களிப்பு, ஆதிய சுகானுபவங்களோடு செல்வஞ் சீர்சிறப்பு செல்வாக்கு முதலிய நன்மைகளுமுண்டுபடும். பிரயாசப்பட்டு உழைக்கிறவனுக்கு இடையூறு நேரிடும்போது அயலார் அவனுக்கு இலகுவாயிரங்கி உதவி புரிவார்கள். "பாடின்றி பட்டமில்லை" "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பன முதுமொழிகளன்றோ. சோம்பலோ பற்பல பாவங்களுக்குக் காரணமாகிய தலையான பாவங்களிலொன்று. சுறுசுறுப்புடையவர்கள் சோம்பலால் விளையுங் கணக்கற்ற பாவங்களுக்கு இலகுவாய்த் தப்பிக்கொள்வார்கள். அனுதினஞ் சாக்கிரதையாய் வேலைசெய்கிறவர்களிடத்தில் பாவச்சோதனைகளும் துர்ச்செயல்களும் துர்ப்பழக்கங்களும் வழக்கமாய் மிகக் குறைவு. ஆகவே, வேலையினாற் சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் அநேக நன்மைகள் உண்டாகுமென்பது வெளிப்படை.

வேலைசெய்து உழைப்பது மனுமக்களனைவருக்கும் தேவநியமமென்றால் பெற்றோருக்கு இது இருமடங்கான கடமையாகின்றது. ஏனெனில், இவர்கள் தங்களைமாத்திரமன்றி தங்கள்மக்களையுந் தக்கமேரையாய்த் தாபரிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். பிள்ளைகளைத்தாபரித்தலானது பெற்றோர் நெடுங்காலம் அனுசரிக்கவேண்டிய பிரயாசமான பெருங் கடமைகளில் ஒன்று. சகல சீவபிராணிகளிலும் மனுக்குழந்தைகளுக்கே பிறவிதொட்டு அதிக உதவியும் பராமரிப்புந் தேவை. அன்றியும், மறுபிராணிகளைப்பார்க்க இவைகளே மிக நெடுங்காலம் தங்கள் சீவனத்துக்குப் பெற்றோரில் முற்றாய்த் தங்கியிருக்கின்றன. மறு செலவுகளைநீக்கி பிள்ளைகள் உண்ணவும் உடுக்கவும் படிக்கவும்மாத்திரம் பண்ணவேண்டிய செலவைப் பார்த்தாலும் அது சிறிதல்லவென்பதைப் பெற்றோர் அனுபவத்தால் அறிவார்கள். இதற்கு பெற்றோர் பிரயாசப்பட்டு உழைப்பதுமாத்திரம் போதாது. உழைப்பதில் நியாயமான செலவுகளைச்செய்து மீதியைப் பத்திரம்பண்

ணுவதும் அவசியம். முறையாய் உழைக்கவும் மட்டாய்ச் செலவழிக்கவும் அறியாததினால் நிர்ப்பாக்கியப்படுங் குடும்பங்களுக்குக் கணக்கில்லை. ஆகையால், ஆண்களும் பெண்களும் பெற்றோராகுமுன்னும் பெற்றோரானபின்னும் உழைக்கவும் ஒறுப்பனவாய்நடந்து மிச்சம்பிடிக்கவும் வேண்டிய அவசியத்தையும் அதற்குரியமுறையையும் அப்படிச்செய்யாமல் விடுவதினால் விளையும் இடையூறுகளையும் சுருக்கமாய்க் காட்டுவோம்.

## பெற்றோராகுமுன் உழைப்பும் ஒறுப்பும்

எதொரு கருமத்தையும் தகுதியாய்ச் செய்வதற்குப் பழக்கம் அவசியம். பழக்கம் அலுவலை இலகுவும் இன்பமுமாக்கும். வேலைசெய்து உழைக்கவும், உழைப்பதை வீண்போக்காமல் பத்திரம்பண்ணவும் தேவைக்கேற்க மட்டாய்ச் செலவழிக்கவும் வாலவயசில் பழகிக்கொண்டால் பெற்றோரான பின்னும் இப்பழக்கத்தை அனுசரிப்பது எளிது. நீ வாலிபத்திற் செய்யப் பழகுவதையே வயோதிகத்திலுஞ் செய்வாயென்று அங்கிலேய பாஷையில் ஒரு பழமொழியுண்டு. இளமையில் உழைப்பாளியாயிருக்கிறவன் வழக்கமாய் முதுமையிலும் அப்படியே யிருப்பான். வாலிபத்திற் கையொறுப்பானவன் வயோதிகத்திலும் அப்படியே இருப்பான். வாலிபத்தில் ஊதாரி வயோதிகத்திலும் ஊதாரியேயாவான். உழைப்பாளியாயிராமல் அழிப்பாளியாயிருக்கிற ஒருவன் சமுசாரியானபின் உழைப்பாளியாகிவிடவும் கட்டுமட்டாய்ச்செலவழிக்கவுங் காத்திருப்பது பெரும்பிழையாம். இது கடலையுங் கப்பலையுங் கண்டுகேட்டறியாத ஒருவன் தான் கப்பலோட்டக்கூடுமென்று காத்திருப்பதை ஒக்கும்.

ஆகாயத்திற் பாடிப் பறந்துதிரியும் பட்சிகளும் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்குமுன் குஞ்சுகளைக் காப்பாற்றுகிறதற்காகப் பிரயாசத்தைப்பாராமல் பலநாளும் சுறுசுறுப்பாய்ப் பத்திரமான இடந்தேடி சுள்ளித்தடி, இற



கு, இலை, புல், பூண்டு, வைக்கோல், கூந்தல், பழந்துணி முதலானவைகளைச் சேகரித்துக் கூடுகட்டுகின்றன. காட்டிலுள்ள துட்டமிருகங்களுங் குட்டிபோடுமுன் வேண்டிய முஸ்திப்புச்செய்வதுவழக்கம். இவைகள் தங்கள் குஞ்சுகளையும் குட்டிகளையும் தாபரித்துக்காப்பாற்றவேண்டிய காலம் மிகச் சொற்பம். ஆனால், மனுஷர் தம் மக்களை அநேகவருடகாலமாய்த் தாபரிக்க வேண்டியவர்களானபடியால் அதற்குத் தக்கதாய் முன்னேறவே நெடுங்காலம் வேண்டிய ஆயத்தஞ்செய்வது அவசியம். ஆகையால், இவர்கள் பெற்றோராகுமுன் வாலிபந்தொட்டே உழைக்கவும் கையொறுப்பாய் நடக்கவும் பழகவேண்டியது.

இளமைதொட்டு வேலையில் அப்பியாசப்படாத சரீரம் பின்னடியில் வேலையை வெறுக்குமேயன்றி விரும்பாது. "சோம்பித்திரியேல்" என்பது சான்றோர்மொழி. வேதாகமம்சொல்வது யாதெனில் "சோம்பேறியே எறும்பினிடம்போய் அதின் வழிகளைக் கவனித்துப்பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குத் தலைவனும் கற்பிப்போனும் இராசனும் இல்லாதிருந்தும் அது தானே கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்துத் தான் பிற்காலத்தில் தின்னவேண்டியதை அறப்புக்காலத்தில் சேகரிக்கின்றது. சோம்பேறியே நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய். எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? கொஞ்சந் தூங்குவேன், சற்றுநேரம் உறங்குவேன், இன்னுங் கொஞ்சங் கைமுடக்கிக்கொண்டு நித்திரைசெய்வேனென்கிறாய். அதற்குள்ளே எளிமையானது யாத்திரைக்காரன்போலவும் தரித்திரமானது ஆயுதமணிந்தவனைப்போலவும் உன்னிடம்வந்துவிடும். நீ சுறுசுறுப்புள்ளவனாயிருந்தாலல்லோ உன் வேளாண்மை நீரூற்றைப்போல் சுரக்க எளிமைத்தனம் உன்னை விட்டு அகல ஓடிப்போகும்" (பழமொழி 6.6-11). இளமைதொட்டுச் சுறுசுறுப்பாய் வேலை செய்யப்பழகினவனின் தேகம் பெலப்பட்டுப் பின்னடியிலும் இளைப்புக்களைப்புகளையும் கஸ்திவருத்தங்களையும் நன்றாய்த்தாங்கிக்கொள்ளும். அவன் மனமும் பிரயாசத்தைக்கண்டு சோர்வடையாமல் தைரி

யமாயிருக்கும். கிரமமாய் வேலைசெய்துழைப்பதும் மட்டுத்திட்டமாய்ச் செலவழித்து மிச்சம்பிடிப்பதுமே ஒரு வாலிபனுடைய மேன்மையான முதுசொமாம்.

## பெண்கள் வேலையும் ஒறுப்பான நடையும்

வேலைசெய்யவேண்டியவர்கள் ஆண்பிள்ளைகள்மாத்திரமென்றெண்ணுவது பெருந்தவறு. பெண்பிள்ளைகளும் தங்கள் அந்தஸ்துக்குரிய கருமங்களைச்செய்வது குடும்பசித்திக்கு அவசியம். இவர்கள் கதைக்கவும் கதை காவவும் தங்களை அலங்கரித்துக்கொள்ளவும் வீண்நேரம்போக்கவுமே படைக்கப்பட்டவர்களா? இவைகளால் எண்ணற்ற தின்மைகளேயன்றி யாதோர் நன்மையும்வாராது.

ஓர்பெண் விவாகம்பண்ணும்போது மனைவி என்றும், இல்லாள் என்றும் எசமாட்டி என்றும் அழைக்கப்படுகிறாள். மனை என்பதும் இல் என்பதும் வீடு; மனைவி, அல்லது இல்லாள் என்பது வீட்டுக்குச் சொந்தக்காரி. எசமாட்டி என்பது வீட்டுக்கருமங்களை நடத்தவும் நடப்பிக்கவும்வேண்டியவள். சமையல் சாப்பாட்டுக்கடுத்த வேலைகளைச் செய்வதும், அல்லது கூடநின்று செய்விப்பதும் வீடுவாசலைப் பெருக்கித் துப்பரவாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதும் ஆண்பிள்ளைகளுக்கல்ல பெண்பிள்ளைகளுக்கே உரியகருமம். மேலும், வீட்டுப்பொருட்களைச் சேதம்போகாமற் காப்பாற்றுவதும், வரவு செலவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையுங் கணக்குவைப்பதும் அவர்கள் கருமமே; பிள்ளைகளுடைய ஊண், உடை, சுகம், வீட்டுப் படிப்பு முதலியவைகளைக் கவனித்து அவர்களைச் சீராயும் சன்மார்க்கராயும் வளர்ப்பதும் பெண்களுக்கே முக்கியமாய் உரிய அலுவலாம்.

சற்று நிலைவரமுள்ள குடும்பங்களில் பெண்கள் சமைக்கப்பழகுவதைச் சிற்பகாரியமாயும் இழிவானதொளிலாயுமெண்ணி அசட்டைபண்ணிவிடுவதினால் குடும்பங்களுக்கு வீண் செலவுகளும் பெருந்தொல்லைகளும் விளைவதுண்டு. திறமான சமையற்காரரைப் பெருஞ் சம்பளத்துக்குவைக்கவும் வரும்படி கட்டாது. அற்பசம்பளத்துக்



கேற்படுகிறவர்களுமோ சாதங்கறிமுதலியவைகளை விதம் விதமாயும் வாய்க்கிதமாயும் ஆக்குவதரிது. அதற்காக அவர்களுக்குப் பேச்சும் அடி ஆக்கினையுங் கொடுத்தாலோ அவைகளைத் தாங்கமாட்டாமல் விலகிவிடுகிறார்கள். இதனால் முறைக்குமுறை குடும்பங்களுக்கு எய்தும் சோலிகள் மெத்த. அல்லாமலும் அவசியமின்றிய சுயம்பாகிமுதலிய வேலைகாரர் உள்ள வீடுகளிலே நாளிலும் பொழுதிலும் குறைந்தும் காணாமலும் போகும் பண்டங்களுக்குக் கணக்கெங்கே! ஊழியர் சமைக்கும் வீடுகளில் உண்பதெல்லாம் எச்சிற்படாததா? சமையல் சாப்பாட்டுக்கு வேலைகாரரிற் தங்கியிருக்கும் பணக்காரர் எப்போதும் பணக்காரராயிருப்பார்களென்பது நிச்சயமா? "முன்னேரம் கப்பற்காரன் பின்னேரம் பிச்சைக்காரன்" என்றவாறு ஒருகாலம் செல்வம் செழித்தோங்கிய எத்தனையோ குடும்பங்கள் சிலகாலத்துக்குப்பின் வறுமையின் வாய்ப்பட்டுச் சிறுப்பனைப்பட நேரிடுகின்றது. செல்வத்தைப்போல நிலையற்றதென்ன? "ஆறிடும்மேடும் மடுவும்போல்ஆம் செல்வம், மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்". அதாவது ஆற்றுவெள்ளத்தினால் உண்டாகிக்கொண்டிருக்கும் மேடும் பள்ளமும் போல செல்வம் மாறிமாறி வளர்கிறதுந் தேய்கிறதுமாக இருக்கும் என்று ஔவையார் சொல்லியது உண்மையே. வட இந்தியாவில் தெல்லிநகரத்துக் கடைசியரசனின் பீட்டன் அங்கிலேய அரசாட்சியிடம் மாதம் ஐந்து ரூபாய் உதவிபெற்று ஒரு கல்லூரியிற் சமையற்காரனாயிருக்கிறதாக சிலநாட்களின் முன் பத்திரிகைகள் கூறினவே. இயல்புள்ள குடும்பங்களில் பெண்கள் சரியாய்ச்சமைக்க அறிந்திருப்பார்களானால், இங்குள்ள அநேக ஐரோப்பிய துரைசானிகள் செய்வதுபோலத் தாங்களேபணிவிடைகாரருக்குக் காட்டிக்கொடுத்துச் சமைப்பிக்கலாமே. நேர்த்தியாய் ஆக்க அறிந்தபெண்ணிருக்கும் வீட்டில் புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் அன்னபானமளவில் எவ்வளவோ வசதியும் நயமும் வேறுபல நன்மைகளுமுண்டு.

குடித்தனம் செவ்வையாய் நடைபெறவேண்டுமென்றசிந்தனையுள்ள சிலபெண்கள் மேற்குறித்த அலுவல்களைத்தவிரப் பலவித கைத்தொழில்களையுஞ் செய்து தங்கள் குடும்பங்களைச் சீராய்க் காப்பாற்றி வருகிறார்கள். பெண்கள் உழைக்கவல்ல செலவழிக்கப்பிறந்தார்களென்றெண்ணுவது பெரும் பேதமை. இவர்கள் தம் வீட்டலுவல்களைக் கிரமமாய்ப் பார்ப்பதில் உழைப்புஞ் செலவுச்சுருக்கமும் உண்டாகும். வீட்டுவேலைசெய்வதும் மட்டாய்ச் செலவழித்து மிச்சம்பிடிப்பதுமே மாதர்க்கழகு. இப்பழக்கங்களே இவர்களுக்கு உறுதியான சீதனம். இவர்கள் மனைவிகளானபின் சீராய்ச் சிறப்பாய்ச் சீவிக்கவேண்டுமானால், சிறுமிகளாய் இருக்கும்போதே சுறுசுறுப்பாய் வேலைசெய்யவும் மட்டுத்திட்டமாய்ச் செலவிடவும் பழகுவது மிக அவசரமாம்.

பணம் சம்பத்துள்ள சில குடும்பங்களில்முதலாய்ப் புத்தியும் நன்றியறிவுமுள்ள சிலகன்னிப்பெண்கள் வேலைசெய்ய வெட்கப்படாமல் தாய்மாரைத்தடுத்து, தாங்களே வீட்டுக்கடங்கிய சகல அலுவல்களையும் பார்த்து, வீண்செலவுகளை வெறுத்துப் பொருளைப் பத்திரம்பண்ணி நடப்பதைக்காண்பது எவ்வளவு சந்தோஷமானவிஷயம். இவர்களைப் பெற்றணைத்துப் பிரயாசப்பட்டு வளர்த்தமாதாக்களுக்கு எவ்வளவு ஆறுதல்; எவ்வளவு உதவி; இதல்லவோ பிள்ளைகளுக்குப் பெற்றோர் மட்டிலுள்ள மெய்நன்றிக்கு அத்தாட்சி. இம்மாதர்களை வாழ்க்கைப்படுத்துவதும் பெற்றோர்க்குப் பிரயாசமல்ல. இவர்கள் சமுசாரிகளாகும்போது தங்கள் குடும்பங்களை மலைப்பின்றி இலகுவாயுஞ் சீராயும் நடத்துவார்கள். "சுறுசுறுப்புள்ள ஸ்திரீ தன் கணவனுக்கு ஓர் கிரீடமாம்" (பழமொழியாகமம் 12. 4) "விவேகமுள்ளவள் தன் கணவனின் ஆஸ்தி" (சர்வபிரசங்கி 22. 4) இப்படி எல்லாப்பெண்களுமிருப்பார்களானால் குடும்பங்களில் சந்தேகமில்லாமல் சமாதானமும் பாக்கியமும் நிலைகொள்ளுமே.



## பெற்றோரானபின் உழைப்பு

ஆடவரும் மங்கையரும் மணம்புரிந்து பெற்றோரானபின்னும் வயோதிகமாகும்வரையும் தங்கள் அந்தஸ்துக்கேற்ற வேலைகளை இயன்றளவு செய்வது குடும்பசேமத்துக்கு அவசியமென்பது யாவரும் நன்றாயறிந்த விஷயம். பிள்ளைகள் சற்றுப் பிராயமானவுடனே சில தாய் தந்தையர் தாம் வேலைசெய்யக் கூடுமாயிருந்தும், செய்யாமற் சும்மாவிருந்து வீண்பொழுது போக்கிக்கொண்டு மக்களைக்கொண்டு மாத்திரம் வேலைசெய்விக்கவும் உழைப்பிக்கவும்பார்த்தல் தகுதியுமல்ல, நீதியுமல்ல. இது அவர்களின் இகபர நன்மைக் குதவுவதுமல்ல. ஒரு சமுசாரத்தின் சவாட்சணைக்கு வேண்டிய காரியங்களைக் கணக்கிடுவது இலேசல்ல. கணக்கிடுவது கடினமென்றால் அவைகளைச்சேகரிப்பது எவ்வளவு பிரயாசமென்பதை எடுத்துச்சொல்லவேண்டியதில்லை. இவ்வளவு பிரயாசமான அலுவலைப் பிறர் உதவி இல்லாமற் செய்யப் பிள்ளைகளால் ஒருபோதும் இயலாது. பிறரால் பிள்ளைகளுக்குப் பலவிதஊழியமுஞ் செய்யப்பட்டுவர, பெற்றோர் பார்த்துக்கொண்டு சும்மாவிருப்பது நீதியா? இந்த ஊழியங்களெவையென்பதைப் பெற்றோர் சுருக்கமாயறிந்திருப்பது நலமென்றெண்ணுகின்றேம்.

தாய்தந்தையரே, மனுக்குலமுழுதும் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குமாக எவ்வளவுவேலை செய்கின்றதென்பதை எப்போதாகுதல் யோசித்திருக்கிறீர்களா? உங்களுக்கு எத்தனை பணம்பண்டமிருந்தாலும் பிறமனுஷர் உங்களுக்காக வேலைசெய்யச் சம்மதியாதிருந்தால் நீங்கள் பூமியிற் சீவிக்கவே முடியாது. பணவலிமையையும் சொல்வலிமையையும் பூரணமாய்க் கொண்டிருக்கிறதாகிய அரசாட்சியின் கீழேதானே கூலிச்சனங்கள் காலத்துக்குக்காலம் ஒன்றாய்த்திரண்டு "கூலிக்குழப்பம்" செய்யும்போது, அரசாட்சியாரும் குடிசனங்களும் படுந்தொல்லையும் மாய்ச்சலும் நஷ்டமும் எவ்வளவென்றும், ஈற்றில் வழக்கமாய்க் கூலிக்கா

ரரின் போக்குக்கே அரசாட்சியார் இளகவேண்டியதாய்ப் போகின்றதென்றும், உலகம் நன்றாய்க் கண்டுவருகின்றது. அப்படியிருக்கப் பெற்றோரே, மனுஷர்எல்லாரும் உங்களைக் கைநெகிழநேரிட்டால் உங்கள் குடும்பந் திடீரென முற்றாய் அலைந்து மறைந்துபோமென்பதற்கு ஐயமுண்டா? உங்கள் சவரட்சணைக்கு அவசியமான காரியங்கள் அநேகமுண்டு. ஆகவே அநேகருடைய ஊழியமும் உங்களுக்குத் தேவை. ஆகையாலன்றோ, உலகத்தில் ஊழியஞ்செய்து ஒருவருக்கொருவர் உதவத்தக்க வழிவகைகளைச் சருவேசுரன் சுபாவமுறையில் அமைத்திருக்கிறார். அதன்பயனாகவே சிற்பருந் தச்சரும் கொல்லரும் கூலியாட்களும் நீங்கள் வசிக்கிறதற்கு வீட்டைக் கட்டுகிறார்கள். இன்னும் உங்கள் வீட்டுப் பாவிப்புக்கு வேண்டிய பெட்டி மேசை கட்டில் கதிரை உரல் உலக்கை முதலிய மரச்சாமான்களையும், கத்தி பூட்டு சருவம் வட்டில் விளக்கு கிண்ணம் கரண்டி மணி முதலிய பஞ்சலோகச் சாமான்களையும், பலவகைக்கண்ணாடிச் சாமான்களையும், பீங்கான் கோப்பை ஆதிய சீனப்பாத்திரங்களையும், பானை சட்டி முதலிய மட்பாண்டங்களையும், பாய் கடகம் முதலிய பன்னச்சாமான்களையும், மற்றுங் கணக்கற்ற பண்டம்பாடிகளையும், உங்கள் உபயோகத்துக்காகச் செய்வோர் பத்தெட்டுப்பேரல்ல, பல்லாயிரம்பேரேயாம். உங்கள் போசனத்துக்கு வேண்டிய பலவகைத் தானியம் காய்கனி சரக்கு முதலிய தாவரவர்க்கங்களைக் கமக்காரர் பயிரிடுகிறார்கள். வேட்டைக்காரர் காட்டிலே திரிந்து மாமிசத்தையும், மீன்பிடிகாரர் கடலிற்றாழ்ந்து மிதந்து மச்சத்தையுங் கொண்டுவர, வேறு சிலர் எண்ணெய் விறகு நெருப்பு தண்ணீர் முதலியவைகளுக்கு வழிபண்ணுகிறார்கள். நீங்கள் உடுக்கிறதற்கு வேண்டிய விதம்விதமான வஸ்திரங்களையும், தொப்பி சப்பாத்துக்களையும், காதுகழுத்திலணிய நானாவித நகைகளையும், வெயில் மழை தாங்கக் குடைகளையும், நேரமறியக் கடிகாரங்களையும், வேறு பலர் செய்கிறார்கள். உங்கள் பிள்ளைகளின் படிப்புக்குவேண்டிய புத்தகம்



கற்பலகை, கடுதாசி, மை, எழுதுகோல் ஆதியவைகளை ஆக்குவது இரண்டொருவரல்ல. நீங்கள் பயணம்பண்ணுவதற்குத் தேவையான வண்டி, புகையிரதம், தோணி, கப்பல் முதலானவைகளைச் செய்வதிலும் ஓட்டுவதிலும் எத்தனையோபேர் முயற்சியாயிருக்கிறார்கள். அந்தந்தத் தொழிலுக்குவேண்டிய உபகரணங்களைத் தயாராக்க ஒருவராற் தனியே யியலுமா? மேலே சொல்லப்பட்டவைகள் எங்கெங்கேயிருந்தாலும் வியாபாரிகள் அவைகளையெல்லாம் உங்கள் கைக்கெட்டக் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். பண்டுதொட்டுத் தலைமுறை தலைமுறையாகக் குடிமக்கள் செய்யும் தொழும்புகள் நீங்கள் அறியாத விஷயமல்லவே. நீங்கள் அல்லது பிள்ளைகள் நோயுறும்போது வைத்தியர் இரவும் பகலும் உங்களுக்குச்செய்யும் உதவி சகாயங்களையும் நன்றாயறிவீர்கள். உபாத்திமார் உங்கள் பிள்ளைகளுக்கு வருஷக்கணக்காய் உலக அறிவூட்ட, குருமார் வேதசத்தியங்களைப் படிப்பித்து, அவர்களைச் சன்மார்க்கராக்குவதற்கு வேண்டிய பிரயாசப்படுகிறார்கள். உங்கள் உயிருக்கும் பொருளுக்கும் பிறரால் தீங்கு நேரிடாதபடி காப்பதிலும், உங்களுக்கு வேண்டிய வேறுபல லௌகீக நன்மைகளைக் கவனிப்பதிலும், அரசாட்சியார் என்றுங் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். நீங்கள் அரசாட்சியார் மூலமாய்ச் சிற்பசல்லிக்கனுப்புந் தந்தி தபால்களுக்குக் கூலியாட்பிடித்தனுப்பவேண்டுமாகில் இறுக்கவேண்டிய ரூபாய் எத்தனையாயிருக்கும்! தாய்தந்தையரே, இப்படிச் சகலராலும் சருவேசுரன் உங்களுக்குக் கணக்கற்ற பணிவிடைகளைச் செய்வித்துவர, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காகக் கூடிய பிரயாசப்பட்டு உழைக்கவும் ஒறுப்பனவாய் நடந்து மிச்சம்பிடிக்கவும் அவர்களைச் சன்மார்க்கராய் வளர்க்கவும் அசட்டைபண்ணினால், அது நீதிநியாயத்துக்கு ஒக்குமா? அல்லது கடவுளுக்கு ஏற்குமா? கடைசிநாளில் அவருக்கு எப்படிக் கணக்குக்கொடுப்பீர்கள்?

சில பெரியோர்கள் செல்வம் நிறைந்த பெரும் ஊரதிகாரிகளா யிருந்தாலும், அல்லது கோடு கச்சேரிகளில் உத்தியோகம்பண்ணி நல்ல சம்பளம் பெற்றுவந்தாலும், ஈவான நேரங்களில் தனியே அல்லது தங்கள் வேலைகாரரோடு பெருமை சிறுமை பாராமல் தோட்டத்திலும் வயலிலும் வீடுவளவிலும் பற்பல வேலைகளைச் செய்து வருவதைச் சந்தோஷத்தோடு கண்டிருக்கிறோம். எல்லாரும் இப்படிச் செய்துவருவார்களானால் அவர்களுக்கும் பிறருக்கும் பெரும் நன்மையாயிருக்குமே. ஆனால், சிலருக்கு ஏதும் உத்தியோகம் அல்லது நிலைவரங் கிடைத்துவிட்டால் இனி வேலைசெய்வது தங்களுக்கு மரியாதைக்குறைவென்றெண்ணுவதுமன்றி, தங்கள் பெற்றோர் முன் நடத்திவந்த தொழிலைப் பிறகு நடத்தாதபடி தடுக்கவும் பார்க்கிறார்கள். ஆனாற் சிலபெற்றோர் "தன்தொழில் விட்டவன் சாதியிற் கெட்டவன்" என்றபடி அதையே விடாமல் நடத்தி வருகிறார்கள். நெடுங்காலந்தொட்டு சீன சக்கிரவர்த்திகள் தங்கள் குடிசனங்களுக்கு முன்மாதிரியாக வருஷத்தில் இரண்டொருதரம் கலப்பை பிடித்து உழுவது வழக்கமாம். இங்கிலாந்தில் மிகப்பெயர்பெற்றிலங்கிய கிளாஸ்றன் மந்திரியாரும் தாம் சிறுப்பத்தில் நடத்திவந்த கைத்தொழிலைப்பற்றி வெட்கப்படாமல் எப்போதும் பெருமைபாராட்டி வந்தார்.

## உழைப்புக்கும் ஒறுப்புக்கும் உரியமுறை

உழைப்பும் ஒறுப்பனவும் குடும்ப சீவியத்துக்குரிய புண்ணியங்களாயிருந்தும், அநேகர் இவைகளை முறைகேடாய்ச் செய்வதினால் பாவத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள். அந்திசந்தி ஆசாரமாயும் தாராளமாயுந் தேவனைத் தொழுவது யாருக்குங் கடமை. "ஓதுவதொழியேல்" "ஓதாமலொருநாளுமிருக்கவேண்டாம்" என்பன முதியோர் மொழிகள். "ஓயாமல் செபம்பண்ணுங்கள்" "விழித்திருந்து செபம்பண்ணுங்கள்" என்பன சுவிசேஷ திருவாக்கு. தேவ நேசமுள்ளவர்கள்



சாக்குப்போக்கின்றி காலைமாலையில் தவறாமல் செபஞ்சொல்வதுடன், தேவாசீர்வாதத்தையும் பாவமன்னிப்பையும் பரலோக பாக்கியத்தையுந் தங்களுக்கு வேண்டிய மற்றும் நன்மைகளையு மிரந்துகேட்டு, தங்களையும் தங்களுக்குச் சேர்ந்தவர்களையும் தாங்கள் அன்றாடுசெய்யும் அலுவல்களையும் சருவேசுரனுக் கொப்புக் கொடுப்பார்கள். ஆனால், தேவபத்தியின்றி உலகவாஞ்சை நிறைந்தவர்கள் காலையில் விழித்தவுடன் வேலைக்குப் போகவேண்டுமாகையால் செபம்பண்ண நேரமில்லையென்ற ஓர் போக்கை வைத்துக்கொண்டு, செபத்தை முற்றாய் விட்டுவிடுவார்கள்; அல்லது பயபத்தியின்றிப்பரபரப்பாய்ச் சிலசெபங்களை வாய்ப்பாடமாய் ஓதிவிட்டுப் போவார்கள். மாலையிலும் மெத்த நேரஞ்சென்றுபோயிற்று அல்லது களைப்பாயிருக்கிறதென்று போக்குச்சொல்லிக்கொண்டு, செபத்தைச் சுருக்கவும் சிலநாட்களில் முற்றாய் விட்டுவிடவும் பின்வாங்கார்கள். ஞாயிறு கடன் திருநாட்கள் வேலைவிலக்கித் தேவதொண்டிற் செலவழிக்கவேண்டிய ஓய்வுநாட்களாயிருந்தும், அவர்கள் இந்நாட்களிலும் உழைக்கவேண்டுமென்ற அவாவினால் பூசைமுதலாய்க் காணாமல் உலக பாடுபறப்பிலே திரிவார்கள். "அப்படிப்பட்டவர்கள் நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதருக்கல்ல தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்கிறார்கள்." (ரோமர் 16. 18) என்றும், "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளையே சிந்திக்கிறார்கள்" (பிலிப்பியர் 3. 19) என்றும், அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறார்.

இப்படிப் பலவிதத்தாலும் தங்களாத்தும அலுவல்களை அசட்டைபண்ணி லௌகீக நன்மைகளில் மாத்திரம் கண்ணுங் கருத்துமாயிருந்து செய்யும் வேலை முறையற்றதும் புண்ணிய பேறுபலனில்லாததுமென்பதிற் சந்தேகமில்லை. "முதல் தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள். அப்பொழுது

இவைகளெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும் (அர்ச். மத்தேயு 6: 33) என்ற தேவவாக்கியத்துக் கிணங்கச் சருவேசுரனைத் தேடிக்கொண்டு வேலைசெய்து உழைப்பதே முறையும்புண்ணியமுமாம். ஆனால், மனச்சாட்சியின் குரலுக்குச் செவியடைத்துக் கொண்டு வேலைசெய்தோருக்குக் கொடுக்கவேண்டிய கூலியைக் குறைத்தும், கடுவட்டி வாங்கியும், இப்படிப் பல அநியாயங்கள் செய்து பிறர்பொருளை அபகரித்துத் தன் சரீரத்தில் நோகாமல் பிறர் செலவிற் குடும்பத்தைத் தாபரிக்க முயல்வதினாலே தேவபழி சூழுமன்றி யாதொரு நன்மையுஞ்சித்திக்காது.

நம்முடைய தேசத்திலே அந்தரித்த ஏழைகளுக்கு அற்பதொகை கடன் கொடுக்கிலும் முதற் பேசுவது வட்டி. ஐரோப்பா முதலான மறு சீமைகளில் வங்கி வர்த்தகசங்கம் ஆதிய பெரும் முயற்சிகளுக்கேயன்றி முட்டுப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் கைக்கடனுக்குப் பற்றுச் சீட்டல்லாது வட்டிவாங்குவது வழக்கமில்லையாம். வேதாகமப்படி "நீ...வட்டியாவது பொலிசையாவது வாங்காமல் உன் தேவனுக்குப் பயந்து உன் சகோதரனை உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்குங் கொடாதிருப்பாயாக" (லேவி. 25. 36—37) நல்லவன் "நாள்தோறும் மனமிரங்கிக் கடன் கொடுக்கிறான். அவன் சந்ததிக்கு ஆசீர்வாதமுண்டு" (சங்கீதம் 36. 26) நமது நாட்டிலே சிலவிடங்களில் ஒருவெள்ளிரூபாய் மாற்றுவிக்கமுதலாய் வட்டமிறுக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். நியாயமான வட்டிவாங்குவதிற் பாவமில்லாவிட்டாலும் ஏழைகளுக்கு இரங்கி இயன்ற உதவி செய்வதே பிறர்சிநேக முறையாகும்.

சில பெண்கள் வீண்நேரம்போக்காமலும் குடும்ப நன்மைக்காகவும் வியாபாரம் பண்ணுவார்கள். இது நல்வழக்கமாயினும் இம்முயற்சிக்கு இயல்பான அடாத்து அநியாயங்களை விலக்கிநடக்கச் சாக்கிரதையாயிருக்க வேண்டியது. மிதமிஞ்சிய இலாபம்வைப்பதும், பழுதான



பண்டங்களை நல்லவைகளாகக்காட்டி விற்பதும், செல்லாக்காசைச் செலுத்துவதும், பால் அரிசி ஆதியவைகளிற் தண்ணீர் சேர்ப்பதும், நிறையில் அல்லது அளவில் அகட விகடம்பண்ணுவதும், அபகரிப்பேயன்றி நீதியான உழைப்பல்ல. "உன் பையில் பெரிதுஞ் சிறிதுமான பலவித நிறைகற்களை வைத்திருக்கவேண்டாம். உன் வீட்டிற் பெரிதுஞ் சிறிதுமான மரக்கால்களை வைத்திருக்கவேண்டாம். குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லும் குறையற்ற சுமுத்திரையான மரக்காலும் உன்னிடத்திலிருக்க வேண்டும்....ஏனெனில், இதற்கு மாறு செய்பவனெவனோ அவனைத் தேவனாகிய கர்த்தர் அருவருக்கிறார். அநியாயமானது எதுவோ அவர் அதைத் துவேஷிக்கிறார். (உபாக. 25.13-15)

அநியாயமாய்த் தேடுவது, நிலைப்பதுமில்லை, அதனால் மெய்யான ஊதியம் வருவதுமில்லை. யேசுநாதசுவாமி உரைத்த ஐசுவரியவானின் உவமையை மறவாதிருப்பது உத்தமம். அவன் தன் தானியங்களைச் சேமித்துவைக்கக்களஞ்சியம்போதாதென்றுகண்டு வீட்டை நீட்டிக்கட்டி தானியங்களைக் குவித்துக்கொண்டு தன் ஆத்துமாவை நோக்கி: என் ஆத்துமமே இதோ அநேகவருஷ காலத்துக்கு உனக்காக மிகுந்த சம்பத்துக்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. ஆகையா லிப்போது நீ இளைப்பாறிப் புசித்துக் குடித்து விருந்தாடுவாயாகவென்றான். ஆனால், தேவனோ அவனை நோக்கி மதிகேடனே இந்த இராத்திரியிற்தானே உன் ஆத்துமம் உன்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும், அப்போது நீ சேகரித்தவைகளெல்லாம் யாருடையதாகுமென்று திருவாக்கருளினார். (அர்ச். லூக்கா 12. 19-20) ஐயையோ சருவேசுரனை நினையாமல் ஐசுவரியம்தேடிவைத்திருந்த எத்தனையோபேரின் பிள்ளைகள் பிச்சையாற் சீவிக்கிறார்கள். அல்லது பிச்சைக்குத் திரியக் கூச்சப்பட்டுப் பசிபட்டினியால் வருந்துகிறார்கள். ஆனால், இதற்கெதிராய் நீதியாக நடந்து உழைத்தவர்களைக்குறித்து தீர்க்கதரிசியான தாவீதிராசா "வாலிபனாயிருந்து வயோதிக

னானேன்; நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்த
திபிச்சையெடுத்ததையும் நான் கண்டதேயில்லை” (சங்
கீதம் 36. 25) என்றெழுதினார்.

ஒறுப்பான நடை புண்ணிய பேறுபலனுள்ளதா
யிருக்கவேண்டுமாயின் பிசினித்தனத்தைப் பிசாசைப்
போலப் பகைப்பது அகத்தியம். தனவான்கள் தரித்
திரரைத் தாபரிப்பது தேவ திருவுளமன்றோ. “மகனே
தரித்திரனுக்குப் பிச்சையிடுவதை விலக்காதே. எளி
யவனைவிட்டு உன் முகத்தைத் திருப்பிக்கொள்ளாதே.
பசியினால் வருந்துகிறவனை நிந்தியாதே, தரித்திரனை
அவன் வறுமையிற் புறக்கணியாதே. ஏழையின் இரு
தயத்தை வருத்தப்படுத்தாதே. வருந்துகிறவனுக்குக்
கொடுப்பதைத் தாமதிக்காதே...மனநொந்து உன்னைச்
சபிக்கிறவனுடைய வேண்டுதல் கேட்கப்படும். ஏனெ
னில், அவனை உண்டுபண்ணினவர் அவன் வேண்டுதலைக்
கேட்பார்” (சர்வபிர. 4. 1-6) “உங்களுக்குள்ளவைக
ளில் பிச்சை கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குச்
சகலமும் சுத்தமாயிருக்கும்” (அர்ச். லூக். 11. 41)
“கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்
படும்” (அர்ச். லூக். 6.38) நீங்கள் அளந்திருக்கும் அ
ளவால் உங்களுக்கு அளக்கப்படுவதன்றி அதிகமும் உங்
களுக்குக் கொடுக்கப்படும்” (அர்ச். மாற்கு 4. 24) இ
வைகள் திருவாசகம். “அறஞ்செய விரும்பு” “இயல்
வது கரவேல்” “ஐயமிட்டுண்” “தானமது விரும்பு”
என்பன ஔவையாரின் உலக நீதிமொழிகள்.

உலகத்திலுள்ள ஊழியரனைவரிலும் உருக்க இரக்
கங்கொண்டிருந்த பதின்மூன்றாம் சிங்கராய பாப்பரசர்
வேலைகாரருக்கு நியாயமான சம்பளங் கொடுத்து அவர்
களை அன்பாய் நடத்துங்களென்று விடுத்த சாதாரண
நிருபத்தை அநேகர் வாசித்திருப்பார்கள். “புத்திசா
லியான ஊழியனை உன் ஆத்துமத்தைப்போல நேசிப்
பாயாக, அவன் சுதந்தரத்தை அவனிடத்தினின்று ப
றிக்காதே, அவனை வறுமையில் விட்டுவிடாதே” (சர்வ
பிர. 7. 23) “கூலிக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய



கூலியைக் கொடுக்காமல் இருக்கவேண்டாம். அவன்வே
லைசெய்த நாளிற்றானே சூரியன் அஸ்தமிக்குமுன் அ
வன் கூலியை அவனுக்குக் கொடுத்துவிடக்கடவாய்”
(உபாக. 24. 14.15) என்ற தேவவாக்கை மீறி நாளுக்
குநாள் தவணைபோட்டுக் கடத்துவதும், பல சாக்குப்
போக்குச்சொல்லிக் கூலியைக் குட்டிவெட்டிக் குறைப்
பதும், அநியாயமும் லோபித்தனத்தின் செயலுமேயன்
றி மட்டுத்திட்டமாய்ச் செலவழிக்கும் முறையல்ல. தாய்
தந்தையர் முட்டுப்படும்போது பிள்ளைகள் அவர்களுக்
குத் தங்களாலியன்ற உதவிபுரியாமல் மிச்சம் பிடிப்ப
தும், புருஷன் தன்னிற் தங்கியிருக்கும் பெண்சாதி பிள்
ளைகளுக்கு நேரத்துக்குநேரம் பற்றும்பற்றாதென்ற அ
ளவாய்ப் படியளந்து செலவைச் சுருக்கித் தேட்டம்தே
டப்பார்ப்பதும், லோபித்தனமேயன்றிச் செலவொடுக்க
மென்னும் புண்ணியமல்ல.

மேலே காட்டியவண்ணம் பெற்றோரும் பிள்ளைக
ளும் முறைமையாய் வேலைசெய்து உழைப்பதை நியா
யமாய்ச் செலவழித்து மிச்சம் பிடிக்கப் பழகுவார்களா
னால் தற்காலம் எண்ணிறந்த குடும்பங்களிலுள்ள வறு
மை எளிதாய் மறைந்து போகும். கிடைதலைகாலத்
தில் அந்தரிக்கவும் தேவையில்லை. இவ்வித பெற்றோ
ரும் பிள்ளைகளுமுள்ள குடும்பங்கள் தலைமுறை தலைமு
றையாய்த் தளம்பாமல் தரித்திரப்படாமல் நிலைநிற்பது
பிரயாசமல்ல. “முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்”
என்னும் முதுமொழியினுண்மை இக்குடும்பங்களிற் பி
ரசித்தமாய் விளங்கும். “உள்ளவனுக்கே கொடுக்கப்
படும். இல்லாதவனிடத்திலோ உள்ளதுமுதலாய்ப் ப
றித்தெடுக்கப்படும் (அர்ச். மாற்கு 4. 25) என்னும்
வேதவாக்கியப்படி முறையாய்ப் பிரயாசப்படுகிறவனுக்
குச் சருவேசுரன் இலகுவாய்ச் சித்தியின்மேற் சித்தி
யையும் மனரம்மியத்தையும் அருளுவார். பிரயாசப்
படாதவனோ தனக்குள்ளதையும் எளிதாய் இழந்துபோ
வான்.

## உழைப்பும் ஒறுப்புமில்லாமையால் விளையும் கேடுகள்

உழைப்பும், செலவொடுக்கமுமில்லாத குடும்பங்களுக்கெய்தும் நஷ்டம், வறுமை, கடன், நாணயவீனம், கலிபிலி, கவலை, துக்கம், இழிவுமுதலியவைகளை வரையறைவாய் விவரிப்பது அருமை. சுறுசுறுப்பற்ற சில ஆண்பிள்ளைகள் சாட்டுக்கு எட்டிலே பத்திலே மாத்திரம் வேலைசெய்து, மற்றப்படி ஒன்றிகளாயிருக்கையில் பெற்றோரைக்கொண்டும், சமுசாரிகளானபின் பெண்சாதி பிள்ளைகளைக்கொண்டும் உழைப்பித்து வயிறு வளர்ப்பது எவ்வளவு இழிவும் துரோகமுமென்பதை அவர்கள் உணராதிருப்பது பெரும் ஆச்சரியம். இத்தன்மையானவர்களைப்பற்றி அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறதாவது: "எப்படி எங்களைக் கண்டு பாவித்து நடக்கவேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு நடுவிலேஒழுங்கற்றவர்களாயிருந்ததில்லை. ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும் உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கும் இரவும்பகலும் பிரயாசத்தோடு வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேற் பாரத்தை வைப்பதற்கான அதிகாரமெங்களுக் கில்லையென்பதினாலப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம். ஒருவன் வேலைசெய்ய மனமில்லாதிருந்தால் அவன் சாப்பிடவுங்கூடாதென்று உங்களிடத்திலிருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோம். அப்படியிருந்தும் உங்களிற் சிலர் யாதொரு வேலையுஞ் செய்யாமல் ஒழுங்கற்றவர்களாய்த் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் மௌனத்தோடு வேலைசெய்து தங்கள் சொந்தப்போசனத்தைச் சாப்பிடவேண்டுமென்று நம்முடைய ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் நாமத்தினாலே அவர்களுக்குக்கட்டளையிடுகிறோம்" (தெசலோனிக்கர் 3.7-12)

உழைக்கவும் கட்டுமட்டாய்ச் செலவழிக்கவும் பழகாதவாலிபர் விவாகம்பண்ணுங் காலம் வரும்போது



தேசவழமைப்படி பெண்பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய தாலிகூறைக்கும் சடங்குச்செலவுக்கும் ஏதில்லாமல் ஒன்றிற் கடன்படுவார்கள், அல்லது கூடுமானால் பெண்பிள்ளையின் பெற்றோரே இவையாவுக்கும் வழி பண்ணும்படி கேட்பார்கள். அதுவும் வாய்க்காவிடில் இனியாகுதல் உழைத்துத் தாலிகூறை தேடி முடிக்கலாமென்று சடங்கை நெடுகிலும் பின்போடுவார்கள், அல்லது காற்காசுபெறாத ஒரு மோதிரத்தோடு காரியத்தை ஒப்பேற்றுவார்கள். உள்ளபடி யாதொன்றுக்கும் வழியில்லாத ஏழைகள் அல்லது பிரயாசப்பட்டுழைத்து வறிய தாய் தந்தை சகோதரங்களைத் தாபரிக்கிறவர்கள் இப்படிச் செய்வதிற் பழுதில்லை. ஆனால், உழையாமல் ஊதாரித்தனமாய்த் திரிகிறவர்கள் இப்படிச் செய்வது யோக்கியமல்ல. வேறுசிலர் கலியாணம் முடித்தபின் பெண்பிள்ளையின் சீதனத்தில் ஒருபகுதியை விற்று அல்லது ஈடுவைத்துக் கடனைத் தீர்க்குங் கருத்தோடு கலியாணச் செலவுக்காகக் கடன்படுவார்கள். இது எவ்வளவு எளியசெய்கையென்பதை விளக்கவேண்டியதில்லை. இதனால் பிறகு குடும்பத்திற் பெருஞ்சோலிசுறட்டு நேரிடுவதும் அபூர்வமல்ல. வேறுசிலர் தாங்களொன்றிகளாயிருக்கும்போது உழைத்துத் தங்கள் சகோதரிகளை வாழ்க்கைப்படுத்துவதற்குப் பதிலாய் முதல் தாங்கள் மணம்புரிந்து பின்பு மனைவியின் சீதனத்தை ஈடுவைத்து அல்லது கொஞ்சங்கொஞ்சமாய்க் கவர்ந்து அவர்களை விவாகம்முடித்துவைக்கப் பார்ப்பார்கள். இது நீதியுமல்லக் கெட்டித்தனமுமல்ல. இதனாற் குடும்பத்திற் பற்பல நெரிசல் உண்டாகவும் "அவதந்தரம் தனக்கந்தரம்" என்றவாறாய் முடியவும் நேரிடுகின்றது. இத்தன்மையானவர்களுக்கு முதுசொமாயுள்ளவை எவையெனில் கடன், குடிவெறி, சூது, சோரத்தனம், துர்நடையாலுண்டுபட்ட தீராநோய், சோம்பித்திரிதல், கோள்மூட்டுதல், சண்டைபிடித்தல் முதலிய துர்ப்பழக்கங்களேயாம்.

முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த யூதாஸ்கரியோத்துக் கொப்பான சிலகணவர் செய்யும் வேறோர் பெருந்

துரோகம்யாதெனில், விவாகஞ்செய்த சிலகாலத்துக்குப் பின் மனைவிக்கு வருத்தம் அல்லது பிரசவகாலம் வரும்போது அல்லது புத்திரபாக்கியமில்லாமற் போம்போது அவளுக்கு நேசங்காட்டி ஆசைவார்த்தைசொல்லி அவளை அனுப்பி அல்லது பயமுறுத்தி அவளுடைய சீதனத்தை இரகசியமாகத் தங்கள்பேரில் எழுதுவித்துக் கொள்ளுவார்கள். அதில் முற்றாய் அனுகூலமடையாவிடில் அவளைக்கடனுறுதிக்குக் கையெழுத்துவைக்கப் பண்ணி, அல்லது அவள் பிள்ளைகளில்லாமல் மரிக்கநேரிட்டால், கள்ளக்கணக்குக்காட்டி அவளுடைய சீதனத்தில் அபகரிக்கக்கூடியளவு அபகரிக்கப் பார்க்கிறார்கள். அதெல்லாம் எவ்வளவு ஈனமான செய்கையென்பதை அவர்களுடைய மனச்சாட்சிதானே அவர்களுக்குச் சொல்லும். இவ்வித அபகடங்கள் செய்து தேவதுரோகிகளாவதற்குப் பதிலாக இவர்கள் பிரயாசப்பட்டுழைத்துச் சம்பாதிப்பார்களானால் எவ்வளவோ நன்மையாயிருக்குமே.

பெற்றோரானவர்கள் உள்ளதையும் விருத்தியாக்கி இன்னும் உழைத்து மிச்சமும்பிடித்துப் பிள்ளைகளை நன்னிலையில் வைக்கவேண்டியது. ஆயினும், சிலர் மனைவியின் சீதனத்தைக்கொண்டு தாங்களும் பிள்ளைகளும் நெடுங்காலஞ் சீவித்தபின் மிஞ்சியதை மாத்திரம் நாலு ஆறு பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக்கொடுப்பார்கள். அப்போது பிள்ளைகளின் நிலைவரம் எவ்வளவு குறைந்ததாயிருக்குமென்று விளக்கவேண்டியதில்லை. சற்று நிலைவரமுள்ள சில குடும்பங்களிற் பெற்றோரும் பிள்ளைகளும் பிற்காலத்தை நினையாமல் ஒறுப்பனவின்றிச் சம்பிரமமாய்ச் சாப்பிடுவதிலும் குடிப்பதிலும் விலையுயர்ந்த விதம்விதமான வஸ்திரங்களை அணிவதிலும் நானாவித சந்தோஷங்களிலும் கொண்டாட்டங்களிலும் உள்ளதையும் உழைப்பதையுஞ் செலவழிப்பதினால் பின்னடியில் பிள்ளைகள் வெறுஞ் சோறு சீலைக்குமுதலாய்த் தட்டுக்கெட்டுத்திரிய நேரிடுகின்றது.



“ அகடுறயார்மாட்டும் நில்லாது செல்வஞ்
சகடக்கால் போலவரும் ”

அதாவது, செல்வமானது யாவரிடத்தும் நிலையாமல் வண்டிச்சில்லுப்போல 'கீழ்மேலாய் மேல்கீழாய்வரும்.

“ குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர் ”

குடைபிடித்து யானைமேலேறிப் பவனிபோகுஞ் செல்வரும் வறுமைப்பட்டு ஊருக்கூர் கால்நடையாய் நடந்து மெலிந்து உலைய வரினும் வரும்.

“ சிறப்புஞ் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச்சாலை அடையினும் அடைகுவர். ”

அதாவது சீர்செல்வமும் பெருமையுமுடையவர்கள் தரித்திரப்பட்டுத் தருமக்கூழ் வார்க்கும் இடங்களில் அடைக்கலம்புக நேரிடினும் நேரிடும். எங்கே பார்த்தாலும் முன் முட்டுப்பட்டிருந்த சிலர் பிரயாசப்பட்டுழைத்துக் கட்டுமட்டாய்ச் செலவழித்துப் பணம்பண்டமுடையவர்களாய்வர, அவர்கள் சந்ததியார் அதற்குமாறாக வேலையை வெறுத்து ஆராதூரியாய்ச் செலவழித்துக் குசாலாயும் இடம்பமாயுஞ் சீவிக்கத் தலைப்பட்டதினால் உள்ளதையெல்லாம் வெகுசீக்கிரத்தில் இழந்து வறிஞராகிறார்கள். நெடுங்காலம்மட்டாய்ச்செலவிட்டுச் சீவிக்கிறவர்களைப்பார்க்கிலும் இவர்களே வறுமையை அதிகம் ஆழமாய் உணருவார்கள். இவர்கள் பெருநாட்கள் திருநாட்களில் முன்னே தின்றதையுங் குடித்ததையும் உடுத்ததையும் நினைத்து வாயூறித் துக்கிப்பார்களேயன்றி, முன்னேயாகுதல் வேறனேகருக் கொருபோதுங் கிடையாத செல்வத்தை அனுபவித்தோம், இப்பொழுது எங்கள் பாவங்களுக்காகச் சற்று வறுமையை மனச்சந்தோஷத்தோடு அனுபவிப்போமாகவென்று யோபென்னும் மகாத்துமாவைப்போலச் சொல்லச் சம்மதிப்பார்களா? உலகவழக்கம் அப்படியல்ல. உழைப்பதையெல்லாஞ் செலவழிப்பதிலுள்ள ஊதியமென்ன? கிடைதலை காலத்துக்கு அடைமானமென்ன?

## ஊதாரிப்பெண்

சில மனையாட்டிகள் பெருஞ் செலவாளிகளாயிருப்பதினால் புருஷன் எவ்வளவு உழைத்தாலும் மிச்சமேயில்லை. இப்படிப்பட்ட ஓட்டைக்குடத்துக்கொப்பான மனைவிகளால் குடும்பங்களுக்கெய்தும் இழிவு இக்கட்டுகளுக்குக் கணக்கில்லை. இவர்களெண்ணப்படி கடைதெருக்களிலுள்ள தித்திப்பான தின்பண்டங்களெல்லாந் தங்களுக்குத் தேவையாம். புடவைக்காரர் கொண்டு திரியும் சருகை பட்டுமுதலிய விலையுயர்ந்ததெல்லாந் தங்களுக்குத் தேவையாம். அயலாரும் அந்நியரும் அணியும் நகைகளில் வினோதமானதெல்லாந் தங்களுக்கும் பிள்ளைகளுக்குங் கட்டாயந் தேவையாம். அவைகள் சற்று மங்கிப்போனால் முறைக்குமுறை மாற்றவும் பழுக்கச்சுடுவிக்கவும் வேண்டுமாம். சவுக்கியமில்லையென்று தவறணை சாய்ப்புகளிலுள்ள மதுபானங்களுந் தேவையாம். இந்த மனோரதமான அசவுக்கியத்தால் புகைபோலப் பறந்து மறைந்த குடும்பங்கள் அநேகமுண்டு. அன்றியும், எங்கெங்கே வேடிக்கை கொண்டாட்டங்களோ அங்கெல்லாங் கட்டாயஞ் செலவைப்பாராமல் டம்பமாய்ப் போகவேண்டுமாம்.

இந்த எடுப்புச்சாய்ப்புக்கெல்லாம் புருஷன் இணங்காவிடில் உண்டுபடும் மனக்காய்ச்சல் முறுமுறுப்பு கோளாறுகள் மெத்த. பெண்சாதி பசிக்கவில்லையென்று பலநேரஞ் சாப்படாமல் பட்டினிகிடந்து பழிவாங்குவதும் அபூர்வமல்ல. இவ்வித பெண்களைத்தான் வேதாகமம் ஒழுக்குவீட்டுக்கொப்பிடுகின்றது. இடையிடையே இவர்கள் "சாம்பலைத்தின்று வெண்ணெயைப் பூசவேண்டும்" என்று கணவனுக்கு உபதேசமும் ஊட்டுவார்கள். ஆனால், உள்ளபடி இவர்கள் புசிப்பதும் வெண்ணெய் பூசுவதும் வெண்ணெய். பிற்காலம் பிள்ளைகள் வாயில் போடுவதோ சாம்பல். பின்வருஞ்சம்பவத்தைச் சிலகாலத்துக்கு முன் பலர் பத்திரிகைகளில் வாசித்திருப்பார்கள் : புதிதாக விவாகம்பண்ணிய ஓர் அமரிக்க



ஸ்திரியும் புருஷனும் ஒரு இல்லிடந்தேடித்திரிந்து கடைசியாய் ஸ்திரீக்கு விருப்பமான ஒருவீட்டைக்கண்டுபிடித்தார்கள். அதற்கு வாடகை மாசம் அறுபத்தைந்து டலர் (195 ரூபா). அவ்வளவு இறுக்கமுடியாதேயென்று புருஷன் இளநாக்கடித்தாலும் மனைவி அவ்வீட்டில்மிகஆவல்ப்படுவதைக்கண்டு "உமக்குவேண்டுமானால் அதை எடுப்போம்" என்றான். ஆனால், இவர்கள் இவ்வளவு வாடகையிறுக்கக்கூடுமோவென்று வீட்டுக்காரன் சந்தேகித்தபடியால் அவர்களைநோக்கி "உங்களுக்குச் சம்பளம் என்னவென்று சொல்லக்கூடுமா" என்றான். அம்மா அதற்குமறுமொழியாக "மாசம்நாற்பத்தைந்து டலர் (135 ரூபா) என்றாள். "அப்போதுபுருஷனுக்கு வேறுவரும்படி இருக்கவேணும்போல" என்று கிரகபதிசொல்ல, அந்தஊதாரிப்பெண் "இப்போது உடனே இல்லை. ஆனால், இவருடைய அத்தை" என்று அவள் சொல்வதற்கிடையில் வீடுடையவன் அவளைத் தடுத்து "இளம்பெண்ணே உன்புருஷன் நாற்பத்தைந்து டலர் உழைக்க, நீ அறுபத்தைந்து டலர் வாடகையிறுக்கத் துணிவது எவ்வளவுபைத்தியமென்பதை நீ கண்டுபிடிக்கவில்லையா" என்றான். அப்போது அவள் தலையையசைத்து "என்றாலும் இந்த இடம் எனக்கு மெத்தப் பிடித்துக்கொண்டது, இதுதான்எனக்குவேணும், இதை நான் எடுக்கவேபோகிறேன்" என்றாள். (J. C. Guardian, 1.7.16) இவ்வித பெண்களைக்காணக்கடல்கடந்து அமரிக்காவுக்குப்போகத்தேவையில்லை. "வளவனாயினும் அளவறிந்து அளித்துஉண்" என்பதற்கொப்ப நீ பெருஞ் செல்வனாயிருந்தாலும் உன்வரவின் அளவையறிந்து அதற்குத் தக்கதாகச் செலவழித்துப் புசித்தனுபவித்துக்கொள்ளவேண்டும்.

"செல்வர் யாம் என்று தாம் செல்வுழி எண்ணாத
புல்லறிவாளர் பெருஞ் செல்வம்—எல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்தமின்னுப்போற்றோன்றி
மருங்கு அறக் கெட்டுவிடும்"

அதாவது தங்களைச் செல்வரென்றெண்ணி யதிகமாய்ச்

செலவழிக்கும் புத்தியீனருடையபெருஞ்செல்வமானது மின்னலைப்போற்றோன்றி அழியுமாம்.

சளசண்டிகளான பெண்கள் இரகசியமாய்ப்படுங் கடனைத் தடுக்கவும் அழிக்கவும் முடியாததினால் சில கணவர் தங்கள்மனைவிகள்படுங்கடனுக்குத்தாங்கள் பொறுப்பாளிகளல்லவென்று பண்ணிய அறிவித்தலைப் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறோம். வேறுசில மாதர் அயலில் அறிமுகமானவர்களை முகமுறிக்கப்பயந்து கணவரிடங்கேளாமல் அல்லது அவர்களிடங் களவாயெடுத்துக்கைக்கடனாய்க் கொடுத்த காசை அறவிடமுடியாமலும் கணவருக்கறியாமலும் இருக்கவில்லையா? கடன் கேட்கிறவர்களுக்குக் கொடாமல்விட்டால் சிணுங்குவார்கள். கொடுத்தபின் கேட்கப்போனால் கோபங்கொள்வார்கள். கோயிற் திருவிழாக்களையுஞ் சடங்குவீடுகளையுஞ்சாட்டி விலையுயர்ந்த நகைகளை மண்டிரவலாய் வாங்கி அடைவுவைத்து அல்லது அறுதியாய் விற்று வயிறுவளர்க்கிறவர்களால் ஏய்க்கப்பட்ட பேதைப்பெண்களும் பலருண்டு. இவர்கள்கொடுத்ததைக் கேட்டாலும்பழி, கேளாமல்விட்டாலும் நட்டம். இவர்கள்பாடு "உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி" பாடுபோல்ஆகிறது. அப்போதுதான், அணிலை மரத்திலேறவிட்ட நாயைப்போலக் குளறிக் கூத்தாடுவார்கள். அப்போதுதான் தாங்கள்செய்த தவறையும் அதினால்வந்த நட்டத்தையும் உணர்ந்து "இரப்பாரைப்பிடித்ததாம் பறைப்பிராந்து" என்று ஒப்புச்சொல்லி மாரடிப்பார்கள். முறையாய்க் கொடுக்கல் வாங்கல்செய்வது நல்வழக்கமாயினும் முறைகேடாய்ச்செய்வது பலதொல்லைக்கும் நட்டத்துக்கும் வழியாகின்றது.

இப்படியெல்லாஞ் செலவிடவும் பணத்தை அழிக்கவும் பொருளைச் சிதைக்கவும் முற்படுகிறவர்கள் வீட்டுவேலைகளைச்செய்வதிலும் பொருளைத்தேடுவதிலும்பொதுவாகக் கட்டையாயிருப்பது வழக்கம். வீட்டுவேலை செய்யவேண்டியது தாய்க்கிழவியுந் தங்கைச்சிமாருமேயென்றெண்ணுவது பெருந்தப்பிதம். உழைப்பும் ஒ



றப்பான நடையுமாகிய புண்ணியங்கள் விளங்காத வீடுகளில் பெண்சாதி நாட்பட நோய்ப்பட்டிருந்தால் புருஷன் வறுமையினால் பார்வைத்தாழ்ச்சி பண்ணுவதும், பலசாக்குப்போக்குச்சொல்லி மனைவியைக் கைவிடுவதும், அல்லது தருமவைத்தியசாலையிற் கொண்டு போய்ப்போட்டுவிட்டு விலகிவிடுவதும், அதனால் அவளுக்கும் பிள்ளைகளுக்கும் பற்பல இடையூறுகள் நேரிடுவதும் அரிதானசம்பவங்களல்ல.

## குடியனால்வருங் குடிகேடு

குடிவெறியினால் குடும்பங்களுக்கெய்தும் கேடுகள் கணக்கற்றவையாயினும் அவைகளிற் சிலவற்றைப்பற்றி மாத்திரம் இங்கு பேசுவோம். சொத்துச் சம்பத்துள்ள சிலவாலிபர் தங்களுக்குள்ளது குன்றாச் செல்வமென்றெண்ணிக் குடிக்கத்தொடங்குவதினால் சிலகாலத்துக்குப்பின் செல்வமும் செல்வாக்குஞ் சங்கையும் நிலைவரமுங்கெட்டு வீணரும் வெறுவிலிகளுமாய்த்திரிய நேரிடுவதை உலகம் எக்காலமுங்கண்டுவருகின்றது. குடிகாரன் என்றாலும் குலமகன் அல்லது பணக்காரனாயிற்றேயென்றெண்ணிப் பெண்கொடுத்த பேதைப்பெற்றார் படும்பாடு பொதுவாகப் பெரும்பாடு. இவர்கள் தம் மகளைக் குலக்கொலுவில் அல்லது பணமேடையில் ஏற்றுகிறதாக எண்ணிக்கொண்டாலும் உள்ளபடியே பாழ்ங்கிணற்றிலேயே இறக்கிவிடுகிறார்கள். மதுபானிகள் தங்கள் கலியாணத்துக்குத் தடைநேரிடாதபடி தாங்கள் குடியைவிடுவதாகப்பண்ணும் விதம் விதமான வாக்கெல்லாம் "நீர்மேல் எழுத்துக்குநேர்". இவர்கள் பண்ணும் இவ்வித சாலங்களைநம்பிக் கெட்டகுடிகள் அநேகம். ஒருவன்குடிக்கத்தொடங்கியவுடன் குடிகாரனாய்ப் போகிறதில்லை. ஆரம்பத்தில் கொஞ்சமதுபானம் போதும். அதையும் எட்டிலே பத்திலேமாத்திரம் பாவிப்பதுபோதும். அதுகாரணமாக வருஞ்செலவுஞ் சுருக்கம். ஆனால், நாட்போகப்போக அதிகமாயும் அடிக்கடியும் மதுபானம் வேண்டும். இல்லாவிடில் சாப்பட விருப்ப

முமில்லை, வேலைசெய்து உழைக்க உசாருமில்லை. ஆனால், குடிக்கத்தொடங்காதிருந்தால் இந்தத் துர்ப்பழக்கமும் அதனால் விளையும் இத்தொல்லைகளும் வரமாட்டாவே.

வாடிக்கையாய்க் குடிக்கிறசிலர் தாங்கள் அசப்பியம்பேசாமலும் சண்டைசச்சரவு பிடியாமலுமிருந்து அன்றன்று பெண்சாதிபிள்ளைகளுக்கு அரும்பூட்டாய் உண்ண உடுக்கக் கொடுத்துவந்தால் தாங்கள் குடிப்பதினால் யாதொரு நட்டமுமில்லையென்று சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இவர்கள் குடிப்பது கிரயமின்றிக் கிணற்றிலள்ளுந் தண்ணீரா? குடியால் அழியுங்காசைக் கணக்கிட இவர்களுக்கு விருப்பமில்லை. சமுசாரியான காலந்தொட்டு நாள்வட்டத்தில் ஆறுசதத்துக்குமாத்திரங் குடிக்கிறவன் பதினைந்துவருஷத்தில் முன்னூற்றுச் சொச்சரூபாய் குடியிற் செலவழிக்கிறான். இத்தொகை இக்காலம் வறியகுடும்பங்களில் ஒருபிள்ளையின் சீதனமல்லவா? ஆனால், தினவெறியர் நாள்வீதம் ஆறுசதத்துக்குமாத்திரம் குடிக்கிறார்களா? வருஷாவருஷம் இச்சிறிய இலங்கைத்தீவில் கள்ளுச்சாராயக் குத்தகையால் மாத்திரம் அரசாட்சியாருக்குவரும் இலட்சக்கணக்கான பவுணையும் குத்தகைகாரர் அடையும் பெருமிலாபத்தையும் இறுக்கிறவர்கள் யார்? மேலான நிலையிலுள்ளவர்கள் விலையுயர்ந்த ஐரோப்பிய குடிவகைகளை அவாவிநிற்க, ஐவிசுகுறைந்தவர்களே இந்தப் பிரமாண்டமான தொகையைக் கள்ளிலுஞ் சாராயத்திலும் செலவழித்துவருகிறார்கள். குடிவகைகளுக்குமாத்திரமன்றி குடிவெறியால் உண்டுபடும் வருத்தங்களுக்கும் வழக்குகளுக்கும் வேறு வீண்செலவுகளுக்கும் இறைக்கப்படும் பணங்கொஞ்சமா? இதெல்லாங் குடும்பங்களைக் குட்டிக்கொள்ளையடித்தகாசல்லவா? குடியர் குடியைவிலக்கிமட்டசனமென்னும் புண்ணியத்தை அனுசரித்து இந்தப் பெரிய தொகைப்பணத்தை மிச்சம்பிடிப்பார்களானால் எத்தனையாயிரங் குடும்பங்களிற் பெற்றோரும் பிள்ளைகளும் சீராயும் சிறப்பாயும் மனமகிழ்ச்சியாயும் சீவிப்பார்கள்! தகப்பன் உழைப்பது தவறணைக்கானால் தாய்



உழைத்துக் குடும்பத்தைத் தாபரிக்க இயலுமா? புருஷன் நாளுக்குநாள் நாலணா இரண்டணாவாகத் தவறணைக்கு இறுப்பதை பெண்சாதிபிள்ளைகள்கையிற்கொடுத்துவந்தால் இவர்கள் இந்தப் புண்ணியசீலனை எவ்வளவு நன்றியாய்ப் போற்றிப்புகழ்ந்து பசிபட்டினிகிடவாமல் சந்தோஷமாய்க் காலங்கழிப்பார்கள்! நியாயத்தீர்ப்புநாளில் சருவேசுரனும் இவனுக்கு எவ்வளவு சம்பாவனையை அளிப்பார்?

ஆனால், இதற்கெதிராய்க் குடிகாரர்வீடுகளிலேகாணப்படுவதென்ன? உண்ணப்போதியஉணவில்லை; உடுக்க ஆன துணியில்லை; தலைக்கு ஒருதுளி எண்ணெயில்லை; படுக்க ஒரு பாயில்லை; பிள்ளைகளைப்படிப்பிக்கபணமில்லை; வீட்டுக்குவேண்டிய தட்டுமுட்டில்லை; உள்ளசட்டிபானைகளும் முறைக்குமுறை மதுபானியின் வேகவெறிக்கு இரையாய்ப்போவதினால் இடையிடையே சமைக்கவும் சாப்பிடவும்வேண்டிய தளபாடங்களுமில்லை. தேசவழமைக்கும் காலத்தன்மைக்கும் மாறாக குடிகாரன்வீட்டுக் குமர்ப்பிள்ளைகளின் காதும்மூளி, கழுத்தும் வெறுமை. இவர்களுக்குஆனஉடை நகைகளில்லாததினால் கோயிலுமில்லை, பூசையுமில்லை. இவ்வீடுகளில் பெண்பிள்ளைகள் குமரிருக்குங்காலத்துக்குக் கணக்குமில்லை, கேள்வியுமில்லை. இவர்கள் வாழ்க்கைப்பட்டாலும் வழக்கமாய் வெறுவிலிக்கும் வரத்தன்போக்கனுக்குமேயாம். வீடுவாசலின் நிலவரமும் அலங்கோலமே. எவ்வளவு உழைத்தாலும் மிச்சமேயில்லை. வேதாகமஞ் சொல்லுகிறதுபோல, “குடிகாரனான தொழிலாளி ஆஸ்திக்காரனாய்ப் போவதில்லை” (சர்வபிரசங்கி 19.1) கடன்காரரின் வரத்துப்போக்கும் முறைப்பாடும் முறுமுறுப்பும் வீட்டுக்காரருக்குப்பெரும் அரிகண்டம். அவர்களைக்காண மதுபானி மறைந்துவிடுவான். இப்படியெல்லாம் பெண்மக்களைக் குமரிருத்தி, ஆண்மக்களைச் சரியாய்ப்படிப்பியாமல் மூடராய்த் திரியவிட்டு, மனைவிமக்கள்எல்லாரையும் பட்டினிகிடத்திக் குடும்பத்தைக்கெ

டுக்குங் குடிகாரர் கடைசிநாளில் கடவுள்கண்ணில் எப்
படி விழிக்கப்போகிறார்களோ தெரியாது.

மதுபானம் வேலைசெய்ய உசார்கொடுக்கிறதென்று
குடிகாரர் சொல்வது வழக்கம். குடியாதவர்கள் பிர
யாசமான வேலைகளைச் செய்வதில்லையா? மதுபானத்தை
முற்றாய்விலக்கிநடக்கும் மகமதியருக்கு ஊக்கங் குறை
வா? உழைப்புக் குறைவா? சுகம், பெலன், செல்வம்
நீடிய ஆயுள், ஆதியவையில் யாதேனுங் குறைவுண்டா?
குடியாதவன் எப்போதும் ஒரேவிதமாய்ச் சுகத்தோ
டும் சுறுசுறுப்போடும் வேலைசெய்ய, குடிகாரன் விறகு
முடிய நெருப்பு நூர்ந்துபோவதுபோல மதுபானஞ்
சமிபாட்டிற்போக உசாரற்றுச்சோர்ந்துபோகிறான். உ
றக்கமே இவனுக்கு உணவும் உயிரும்போலாகின்றது.
இரவில் ஆறுமணித்தியாலம் மாத்திரஞ் சயனிக்கிறவர்
கள் தங்கள் சீவியத்திலே மட்டமாய் நாலிலொருபங்கை
நித்திரையிற் செலவழிக்க மதுபானியோ வெறிமயக்
கத்திலும் வியாதியிலும் நித்திரையிலுந் தன் சீவியகா
லத்தில் ஏறக்குறைய அரைவாசியைச் செலவழிக்கிறான்
என்னலாம்.

அன்றியும், குடியன் நெடுங்காலஞ் சீவிப்பதும் அ
ரிது. முதுவயசாகுமுன் தேகம் பெலன்கெட்டு நோ
யில் அழுந்த வாழ்நாளுங் குறைகின்றது. பெரும்பான்
மையாய்க் குடியினால் விளையும் வியாதி கிராணி. இது
நோயாளியை நெடுநாளாய் உலைத்து வதைத்துக் குட
லைப்புண்ணாக்கி நாற்றமெடுக்கச்செய்ய இவனுக்கு உல
கமே நரகம்போலாகின்றது. இவன்கிடைதலைகாலம்
மிகப் பரிதாபத்துக்குரியதாயிருந்தாலும் இவனுக்கு ம
னமிரங்குவாரைக்காண்பது அருமையிலருமை. இவன்
சாகிறபாயில்விழவே தவறணைத்தோழருந் தங்கள்பாடு.
குடிகாரன்வீட்டில் மதுபானமிருக்குமட்டும் கூட்டாளி
களின்வரத்துப்போக்குக்கும்பைம்பலுக்குங்குறைவில்லை.
அவன்நெடுநாள் பாய்க்குப்பாரமாய்க் கிடந்தாலோ அ
வனை எட்டிப்பார்க்க அவர்களில் ஒருவருமில்லை. அந்
தியகாலத்தில் உலோகமுறைப்படி துன்பம்பார்க்கவருகி



றவர்களும் குடியின்பலனாகிய கிராணியின் நாற்றத்தைத்
தாங்கமாட்டாமல் சற்றுநேரம் எட்டத்திலிருந்துவிட்
டுப்போய்விடுவார்கள். வழக்கமாகக் குடிகாரர் இரக்க
மில்லாத கன்னெஞ்சராய்ப் போகிறபடியால் பிறரும்
அவர்கள்மேல் இரக்கமில்லாதிருப்பது ஆச்சரியமல்ல.
பெண்சாதிபிள்ளைகளும் பலநாளாய் நித்திரைவிழித்து,
சத்திகழிச்சலெடுத்து, நாற்றமனுபவித்து, உள்ளதை
யும்செலவழித்து ஈடுமவைத்து, கடனும்பட்டு, கடைசி
யில் மனமும் அலுத்து இந்தப் பரமசண்டாளனாற் தங்
களுக்கெப்போதும் அலைக்கழிவும் ஆக்கினையும் அழிவு
மேயன்றி யாதொருநன்மையுமில்லாததினால் இவன் மு
டிவு எப்போதுவருமென்று பொறுமையீனமாய்க் காத்
திருக்கவும் நேரிடுகின்றது. அன்றியும், குடியன் சணத்
துக்குச்சணம் படும்முறுக்குவலியினாற் பக்கத்துக்குப்பக்
கம் புரண்டுருண்டு வேதனைதாங்கமாட்டாமல் தான்
தானே மரணத்தை விரும்புவான். ஆனால், சாவோடு
இவன் உபத்திரவந் தீர்ந்துபோகுமா? தேவசமுகத்தில்
ஒருகுடும்பத்தைத் தாபரிக்க உடன்பட்டுச் சமுசாரி
யானபின்குடித்துவெறித்து தன்பாடுபார்த்துக்கொண்டு
பெண்சாதிபிள்ளைகளை வறுமைப்படவிட்ட அநியாயத்
துக்கு நித்தியமாய் நரகநெருப்பிலெரிந்து உத்தரிக்க
வேண்டியகாலஞ் சமீபித்திருக்கையில் இவன் செத்
தென்ன? சிலகாலம் பிழைத்தென்ன? வேதாகமப்படி
திருடரும், குடிகாரரும், உதாசினரும், கொள்ளைக்கார
ரும் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை
(1 கொரி. 6. 10). பூமியிலும் தலைமுறைதலைமுறையாய்
இவனுக்கு இகழ்ச்சியேயன்றிப் புகழ்ச்சியில்லை.

இப்படியிருக்க, "குடியாதவீடுவிடியாது" என்று
குடிகாரர் சற்றும் வெட்கமில்லாமற் சொல்லிக் குடித்து
வெறித்துத் திரிகிறார்களே. "குடிகாரன்வீடுவிடியாது"
என்றதல்லவோசரியான முதுமொழி. குடிக்கிறவர்களே
குடியாதேயுங்கள், குடியிற் செலவழிக்கும் சல்லியை
குடும்பத்துக்குக் கொடுங்களென்றாற் கேட்பார்களா?
கேட்கமனமில்லாவிடிற் குடிக்கும்போதெல்லாம் "குடி

காரன் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை" என்னும் தேவவாக்கியத்தையாகுதல் நினைத்துக்கொள்வார்களாகில் குடிவெறியைக்குறைக்கவென்கிலும் உதவுமே. மதுபானி குடித்தழித்துச் செத்தபின் அவன்குடும்பம் அனுபவிக்கும் தாங்கொணா வறுமை மிகப் பிரலாபத்துக்குரியது. இக்காலம் சுயிஸ் சாதியாருள் ஒருவன் தன்பெண்சாதிபிள்ளைகளைக் குரூரமாய் நடத்தினால் அல்லது தன்னால் இயன்றளவு அவர்களைத்தாபரியாமல் அசட்டைபண்ணினால் அரசாட்சியார் அவனை ஓர்விதமறியலில்வைத்து வேலைசெய்யப்பண்ணி அவன்உழைப்பை அவனுடையகுடும்பத்துக்கு அனுப்புகிறார்கள். இப்படி இங்கும் அரசாட்சியார் செய்வார்களானால் எத்தனையாயிரம் பெண்சாதிபிள்ளைகள் அரசாட்சியாரைக் கையெடுத்துக் கும்பிடுவார்கள்!

தகப்பன்மாத்திரங் குடிக்கிற குடும்பத்துக்கு இவ்வளவு ஆபத்துக்களானால் தகப்பனுந் தாயுங் குடிக்கிற குடும்பத்தின் நிலைவரம் என்னவாயிருக்கும்! குடிக்கிறவளைப்பற்றி வேதாகமஞ் சொல்வதியாதெனில், "குடிகாரி கடுங்கோபக்காரி, அவள்மேலுண்டான அருவருப்பும் அதினாலுண்டான வெட்கமும் மறைக்கப்படாது" (சர்வபிரசங்கி 26. 11) மதுபானிகளின் மக்கள் குடியாதிருப்பது அரிது. பழக்கமும் பரவணியாகின்றது.

சூதாடுவதும், உழைப்பு ஒறுப்பனவுஆகிய புண்ணியங்களுக்கு அழிவான துர்ப்பழக்கங்களிலொன்று. இதனால் விளையுங் கலிபிலிகளும், வீண்போகும்நேரமும் அழியும்பணமும், இவ்வளவெனக்கணக்கிடக்கூடியதல்ல.

## அசட்டைத்தனம்

தாய்தந்தையர் தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் தின்மை விளைக்கக்கூடியயாவையும் கவனமாய்விலக்கி குடும்பநன்மையில்எந்நாளுங் கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டியது. ஒருதலையைப்பார்க்கிலும் இருதலைவாசியென க்கருத்துள்ள ஒருபழமொழி அங்கிலேயபாஷையிலுண்டு. அதின்படி கணவனும் மனைவியும் தலைக்கொரு எண்ணங்



கொண்டு நடவாமல் இருவரும் ஒத்துமேவி யோசனைபண்ணிச் சகலகருமங்களையும் நடப்பிப்பதே உத்தமம். அன்னியோன்னியமும் அறிவுமுள்ள ஸ்திரீ புருஷர்கள் அப்படியே எந்நாளும் செய்துவருகிறார்கள். அப்படிச்செய்யாது ஒவ்வொருவரும் தன்தன்னிஷ்டமாய் நடக்குங் குடும்பங்களில் சமாதானவீனமுஞ் சச்சரவும் பொருளழிவும் பெருவாரியாய்நடக்கின்றன. சிலர்கிரமமாய்க் கணக்குவையாமல் கொடுக்கல்வாங்கல்செய்துவருகையில் நோய்வாய்ப்பட நேரிட்டால் அந்நேரமாகுதல் தங்கள் கணக்குகளையும் மற்றுங்கருமங்களையும் ஒழுங்குபண்ணுவதுண்டு. ஆனால், வேறனேக பெற்றார் இதைத் தாங்களாகவுங்கவனியார்கள்; பிள்ளைகளும் பயத்தினால் அல்லது வெட்கத்தினால் இதைப்பற்றிக் கேட்கத்துணியார்கள். கேட்டாலும், பெற்றார் "என்ன! நானிப்போது செத்துப்போவேனா, என்னுயிருக்கு முடிவுகட்டிப்போட்டீர்களா" என்று சீறிச்சினப்பார்கள். தங்கள் கருமங்களை ஒழுங்குபடுத்தாமல் சாகச் சம்பவித்தால் கடன்காரர் தாங்கள்கொடுத்ததை அறவிடத் தவறார்கள். ஆனால், கடன்வாங்கினவர்கள் தங்களிடத்திற்கேட்குமட்டும் மௌனமாய் எட்டத்திலிருப்பார்கள். கேட்டாலுங் கண்டதார் கேட்டதாரென்று கைகழுவுவாருமுண்டு. ஆகையால் வேதவாக்கியப்படி "கொடுத்தது வாங்கினதெல்லாங் குறித்துவை" (சர்வபிரசங்கி 42.7) என்றதைஅனுசரித்துக்கொள்ளவேண்டும்.

சிலர் இலகுவாய் மாதந்தோறும் அல்லது வருஷாவருஷம் இறுக்கக்கூடிய கடன், வட்டி, வாடகை, கோவிற்கடமை முதலியவைகளை மரணபரியந்தம் நிலுவையாய்விட்டுவிடுவதினாலே அவர்கள் செத்தபின் சாவீட்டில் பெண்சாதிபிள்ளைகள் காதுகழுத்திலுள்ளவைகளைக் கழற்றி ஈடுவைத்து முழுத்தொகையையும் ஒரேதடவையில் இறுக்கநேரிடுகின்றது. மரணசாதனம் எழுதவேண்டியவர்களிலுஞ் சிலர்நெடுகப்பின்போட்டுஒன்றில் எழுதாமல் அல்லது போதியஅறிவில்லாத அந்தியநேரத்தில் சாதனம் பெறாதவிதமாய் எழுதிவிட்டுச்சாகிற

தினால் குடும்பத்துக்குநேரிடுஞ் செலவுக்கும் தொல்லை
களுக்கும் ஒருஅளவில்லை. இவர்கள் புத்தியாய் நடக்
கவேண்டுமானால் மறுபேர் தூண்டிவிடுமட்டுந் தாமதித்
திராமல் தாங்களாகவே நேரகாலத்தோடு இக்கருமங்களை
முடிக்கவேண்டியது. முடியாமல்விடுவதினால் மனைவிமக்
கள் உரிமைத்தத்துவம்பெறுவதற்குச் செய்யவேண்டிய
செலவும் படவேண்டிய சங்கடங்களும் எவ்வளவென்று
பணக்காரரான சிலகைம்பெண்கள் அனுபவத்திலறிவார்
கள். சிலபுத்திசாலிகள் தளர்ந்தவயதில் தாங்களாகவே
இக்கருமங்களை ஒழுங்குபடுத்திவைத்துக்கொள்ளுகிறார்
கள். எசெக்கியாஸ் என்னும் எபிரேயஅரசன் வியா
தியாய்விழுந்தபொழுது "உன்வீட்டுக்காரியங்களைஒழுங்
குபடுத்திப்போடு" என்று அறிவிக்கச் சருவேசுரன்
தாமே இசையாஸ் என்னுந்தீர்க்கதரிசியை அவ்வரச
னிடம் அனுப்பினாரென்று வேதாகமத்தில் வாசிக்கி
றோம் ( 4. அரசர் 20. 1 )

இவ்வதிகாரத்தின் முதற்பகுதியில் காட்டியவண்
ணம் பெற்றோர் சாக்கிரதையாயுழைத்து மட்டுத்திட்ட
மாய்ச் செலவழித்துச் சுத்தகருத்தோடு பிள்ளைகளைத்
தாபரித்துக் காப்பாற்றிவருவார்களானால் அவர்கள் தங்
கள்பிள்ளைகளுக்குச் செய்ததெல்லாவற்றையுந் தமக்கே
செய்ததாக உலகரட்சகர்பதித்து அவர்களுக்கு முடி
வற்றசம்பாவனையை அளிப்பார். "என் பிதாவினால்
ஆசீர்வதிக்கப்பட்டவர்களேஉலகமுண்டானதுமுதல்உங்
களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் இராச்சியத்
தைச் சுதந்தரித்துக்கொள்ள வாருங்கள், ஏனெனில்
நான்பசியாயிருக்கையில் போசனங்கொடுத்தீர்கள், நான்
தாகமாயிருக்கையில் பானங் கொடுத்தீர்கள், பரதேசியா
யிருக்கையில் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், நான்
வஸ்திரமில்லாதிருக்கையில் வஸ்திரங் கொடுத்தீர்கள்"
என்பார்.நீதிமான்கள்பிரத்தியுத்தரமாகஅவரைநோக்கி:
ஆண்டவரே! எப்போது தேவரீர் பசியாயிருக்கக்கண்டு
தேவரீருக்குப் போசனம் தந்தோம்? தாகமாயிருக்கக்
கண்டு பானந்தந்தோம்? எப்போது தேவரீர் பரதேசியா



யும் வஸ்திரமில்லாமலும் இருக்கக்கண்டு நாங்களும்மைச்
சேர்த்து வஸ்திரந்தந்தோம்...என்றுகேட்க, அவர் மறு
மொழியாக மிகவுஞ்சிறியரான என் சகோதரராகிய
இவர்களிலொருவனுக்குச்செய்தபோதெல்லாம்எனக்கே
அதைச்செய்தீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன்" என்பார் ( அர்ச்.மத்தே 25.34-40 )
ஆனால், பிற்பகுதியில் விவரித்தவண்ணம் பிள்ளைகளைக்
கெட்டலைந்து கேவலப்பட விடுகிறவர்களுக்கு அவரிட
மிருக்கும் தீர்வை திகிலுக்குரியதாம். "சபிக்கப்பட்
டவர்களே பிசாசுக்கும் அவன்தூதர்களுக்கும் ஆயத்
தம்பண்ணப்பட்ட நித்திய ஆக்கினைக்குப்போங்கள்; ஏ
னெனில், நான்பசியாயிருந்தேன், நீங்களெனக்குப் போ
சனங்கொடுக்கவில்லை ; தாகமாயிருந்தேன், நீங்களெனக்
குப் பானங்கொடுக்கவில்லை ; பரதேசியாயிருந்தேன்,
நீங்களென்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை ; வஸ்திரமில்
லாதிருந்தேன், நீங்களெனக்குவஸ்திரங்கொடுக்கவில்லை"
என்பார். அப்போது அவர்கள் மாறுத்தரமாக "ஆண்
டவரே தேவரீர் எப்போதுபசியாயிருக்கவும், தாகமா
யிருக்கவும், பரதேசியாய்த்திரியவும், வஸ்திரமில்லாம
லிருக்கவுங்கண்டு உமக்கு ஊழியஞ்செய்யாமற் போ
னோம்" என்றுவினவ அவர்விடையாக "மிகவுஞ் சிறி
யரான இவர்களுக்குள்ளே ஒருவனுக்கு எப்போது செய்
யாதுபோனீர்களோ எனக்குஞ் செய்யாது போனீர்க
ளென்று நிச்சயமாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்"
என்பார். அப்படியே "இவர்கள் நித்திய ஆக்கினைக்
கும் நீதிமான்கள் நித்திய சீவியத்துக்கும் போவார்கள்"
என்று வசனித்தார் ( அர்ச், மத்தேயு 25.41-46 )

பெற்றோரே உங்களுக்குப் பிரியமான தீர்வையைத்
தெரிந்துகொண்டு காலமிருக்கும்போதே அதற்கு வழி
பண்ணிக்கொள்ளுங்கள். நித்திய சம்பாவனையை அ
டையவிரும்பினால்பிள்ளைகளுக்காகச்செய்கிறவைகளுக்கு
அவர்களிடத்தில்மாத்திரம் கைம்மாறைக் காத்திராமல்
கடவுளுக்காகவேசெய்து அவரிடத்திலேயே சம்பாவ
னையைக்காத்திருங்கள்.

## நாலாம் அதிகாரம்.

### பிள்ளைகளின் உயிரும் சவுக்கியமும்

தாய்தந்தையர் தேவகிருபையாற் புத்திரபாக்கியம் உள்ளோராய்ப் பெற்றோருக்குரிய மகிமையை அடையும்போது அந்தமகிமைக்குரிய கடமைகளையும் இயல்பாய்ச் சுமந்துகொள்ளுகிறார்கள். பிள்ளைகளுக்குச் சரீரமும் ஆத்துமமும் அவைகளுக்குரிய இகபர கதிகளுமுண்டு. ஆகையாற் பிள்ளைகளின் சரீரத்தையும் அதற்குரிய இகலோகநன்மைகளையும், ஆத்துமத்தையும் அதற்குரிய பரலோக நன்மைகளையும் பரிபாலிப்பது பெற்றோரின இன்றியமையாக் கடமையாம். இவ் இகபர நன்மைகளுக்கு உயிரும் சவுக்கியமுமே மூலாதாரமானவை. உயிர் அல்லது சீவன் லௌகீக நன்மைகளில் எல்லாம் மேலானது, ஆனால், சவுக்கியமற்ற சீவியம் சாதாரணமாய் நிர்ப்பாக்கியமானதன்றிப் பாக்கியமானதல்லவென்று பிணியாளிகள் அனுபவத்தால் அறிவார்கள். ஆகையாலன்றோ சில நோயாளிகள் வருத்தத்தினால் உபத்திரவப்படும்போது சவுக்கியமென்னும் பாக்கியத்தை அனுபவிக்க முடியாததினால் சாகவிரும்பி ஒன்றிற் தற்கொலைசெய்துகொள்ளுகிறார்கள் அல்லது வேறுபலவிதமாய்த் தங்கள் வாழ்நாளைக் குறுக்கிவிடுகிறார்கள். இதெல்லாம் பெரும்பாவமாயினும் இப்படிச் சிலசமயங்களிற் சம்பவிக்கிறதைக் கண்டுங் கேட்டும் வருகிறோம். “நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்” என்பது ஆன்றோர்வாக்கு.

சில குழந்தைகள் செத்துப் பிறக்கிறார்கள். வேறு சிலர் பிறவிதொட்டு ஊமைகளாய் அல்லது குருடராய் அல்லது செவிடராய் அல்லது சப்பாணிகளாய் அல்லது நோயாளிகளாயிருக்க நேரிடுகின்றது. இதெப்போதும் பெற்றோரின் தீவினைப்பலனென்று தூற்றுவது பெருந்தவறு. “நீங்கள் குற்றவாளிகளென்றுதீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று



தீர்க்காதிருங்கள்” (அர்ச். மத்தேயு 7. 1) இப்படிப் பிறக்கும் பிள்ளைகளும் சருவேசுரனாற் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டபடியால் இவர்களையும் தாய்தந்தையர் குறையின்றி அருமையாய் நேசித்துக் காப்பாற்றுவது அவர்கள்மேற் கனமான கடமையாம். அன்றியும், இவ்வித அங்கவீனங்களுக்கும் பற்பல நோய்களுக் கும் சில சமயங்களிற் பெற்றோரே காரணராயிருக்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால், பிதா மாதாக்கள் மக்களை நோயால் நிர்ப்பாக்கியப்பட விடாமலும் தாங்கள் தேவபழிக்கிரையாய்ப் போகாமலுந் தப்பிக்கொள்ளவேண்டுமாகில் பிள்ளைகளின் உயிரையும் சவுக்கியத்தையும கண்மணிபோற் காத்துவரவேண்டியது. பிள்ளைகள் சுபாவமுறைப்படி பெற்றோரிலிருந்தே சவுக்கியத்தையும் பலத்தையும் அடைகிறார்கள். தேகசுக பெலங்கெட்ட பெற்றோரிலிருந்து பிள்ளைகள் நற்சுகம் பெலம் பெறஇயலாது.

ஆகையால், முதலாவது தாய்தந்தையர் பெற்றோராகுமுன் இளமைதொட்டே தங்கள்சுகத்தையும் பலத்தையும் பேணிக் காத்துக்கொள்ளவேண்டுமென்றும், இரண்டாவது தங்கள் பிள்ளைகளின் உயிரையும் சுகத்தையும் பரிபாலிப்பது எப்படியென்றுங் காட்டுவோம்.

### பெற்றோராகுமுன் சவுக்கியத்தைப் பேணுதல்

வாலவயதில் அநேகர் தங்கள்தேகசுகத்தை இருவிததுர்ப்பழக்கங்களால் அதாவது, குடிவெறியினாலும் துர்நடையினாலும் பாழாக்கிவிடுகிறார்கள். மதுபானம் துர்ஆசாபாச இச்சைகளை வேகமாய்த் தூண்டிவிடுகின்றது. இத்துர்ப்பழக்கங்களால் தேகம் பெலனற்று நோயுற்று குருக்குத்திபாய்ந்த பயிர்போலும், போர்விழுந்த மரம்போலுமாகின்றது. உள்வயிரமழிந்து போரான பெருமரத்தைத் தறிவைத்துப்பார்த்தாலும் அதிலுள்ள பழுதை எப்போதும் உடனே கண்டுபிடிக்கமுடியாது. அது நல்லமரம்போலத்தோற்றினாலும் விறகுக்கேயன்றி வேலைக்குதவாது. அவ்வாறே குடியினால் அல்லது துர்

நடையினாற் பழுதுபட்ட உடம்புள்ளவர்கள் சிறப்பும் சவுக்கியமுமுள்ளவர்களாய்க் காணப்படினும் அவர்களுடையமாம்சமும்உதிரமும் சத்துக்கெட்டு விஷம்பாய்ந்து பற்பல நோய்களுக் கிரையாய்ப் போகின்றன. இப்படி நோய்த்தவர்கள் செனிப்பிக்குங்குழந்தைகள் தேகசுகமும் பலமுமுள்ளவர்களாயிருத்தல் முடியாது. ஆத்துமம் சரீரத்துடன் ஐக்கியமாய் ஒன்றித்திருப்பதினால் சரீரத்தின்குறைகள் ஆத்துமத்தின் தத்துவங்களையும் தாக்குகின்றன.

மதுபானத்தினாலும் காமாதுரத்தினாலும் தங்கள் தேகங்களுக்கு நஞ்சூட்டுகிறவர்கள் படிப்படியாய்ப் புலன் கெட்டுப் புத்திமயங்கி மனந்தளர்ந்து நினைவுதடுமாறி அறிவற்ற மிருகங்களுக்கொப்பாய்ப் போகிறார்கள். அவர்களிலுள்ள இப்பழுதுகள் சாதாரணமாய் அவர்கள் சந்தானத்திலுந் தாவுகின்றன. மானிடர் அனைவரும் சிறப்பந்தொட்டு மதுவையும் மோகத்தையும் நீக்கி நடப்பார்களாயின் இக்காலம் பெற்றார்மட்டிலும் பிள்ளைகள் மட்டிலும் வைத்தியருக்குள்ளவேலை ஆயிரம் மடங்கு குறைவாயிருக்குமென்று பெக்கெர் என்னும் நூலாசிரியர் கூறுகின்றார். ஆகையால், முக்கியமாய் பெற்றோராக வரவிருக்கும்வாலிபரே மடந்தையரே நீங்கள் மணவாளர் மணவாளிகளாகுமுன்னும் பின்னும் உங்கள்மேலும் உங்கள்வருங்கால புத்திரசந்தானத்தின்மேலும் இரக்கம்வைத்து மதுபானத்தையும் துர்நடையையும் விலக்கி நடக்க உங்களை ஆவலோடு வேண்டுகின்றேன். யாராவது உங்களை இத்துர்ப்பழக்கங்களுக்கு ஏய்த்திழுப்பார்களாகில் அவர்களைச் சிநேகங்காட்டி வினையஞ்செய்யுஞ் சத்துராதிகளாக விலக்கிநடவுங்கள். மேற்குறித்த இருதீச்செயல்களையும் ஒன்றிகளன்றிச் சமுசாரிகளும் நீக்கிநடப்பது எவ்வளவு அகத்தியமென்பதை விளக்கவேண்டியதில்லை.

சிலர் தங்கள் ஆஸ்திபணம் எட்டத்திற் பிரிந்துபோகாதபடி ஒன்றுக்குள்ளொன்றாயிருக்கவேண்டுமென்ற ஆசையினால் அல்லது வேறுசில நியாயங்களையிட்டு கிட்டின இனத்துக்குள் விவாகஞ்செய்வார்கள். இது சுபாவமுறைக்கொவ்வாதிருப்பதுமன்றி மனுக்குலம் விருத்தியானபின் தேவசித்தத்துக்கு மெதிராய்ப்போனதென்று வேதாகமத்திற் காண்கிறோம். "எவனாகுதல் தனக்கு நெருங்கின உறவின்முறையான ஸ்திரீயைச் சார்ந்து அவளை விவாகம்பண்ணலாகாது (லேவி 18. 6) இப்படிக் கலியாணம் முடிக்கிறவர்களில் அநேகர் நோய்வாய்ப்பட்டு அல்லது சந்தானமற்று, பற்பலஇடையூறுகளையும் அனுபவித்ததை ஆங்காங்கு கண்டுவருகிறோம். இவர்கள் பிள்ளைப்பாக்கியம்பெற்றாலும் இவர்களது பிள்ளைகள் பெரும்பாலும் நோய், பெலவீனம், நினைவீனம் புத்திக்குறைவு, அங்கவீனம் முதலியவையுள்ளவர்களாயிருக்கவும் நேரிடுகின்றது. நெருங்கியமுறைக்கலியாணத்தின் பலனைத் தீர்க்கமாய் ஆராய்ந்தறிந்த சில நூலாசிரியரின் அபிப்பிராயப்படி இவ்விவாகங்களில் நூற்றுக்கு ஐந்து சித்தித்து நிலைப்பது அருமையாம். ஆகையால், பெற்றாரும் பெற்றாராக வரவிருப்பவர்களும் தங்களுடையவும் தங்கள்பிள்ளைகளுடையவும் சீவனுக்கும் சவுக்கியத்துக்கும் தீங்குவிளைவிக்கக்கூடிய காரணங்கள் யாவையும் சாவதானமாய் விலக்கிநடக்கக் கடவார்கள்.



### பிள்ளைகளின் உயிர்

சிலர் முறைமைப்படி சமுசாரிகளாகுமுன் தகாத கூட்டுறவினால் துராசைகளுக்கிரையாய்ப் போகும்போது சுபாவமுறைக்கெதிராய நடந்து குழந்தைகளின் உற்பத்தியைத் தடுத்துவிடுகிறார்கள். சமுசாரிகளிலும் பலர் பிரசவ அபாயங்களுக்கு அஞ்சி அல்லது அநேக பிள்ளைகளை வளர்ப்பதிலுள்ள கஸ்தி, பிரயாசம், செலவு ஆதிய சுமைகளைத் தொலைக்கிறதற்காக இவ்வித பாதகம் செய்வதுண்டு. இது சுபாவமுறைக்கும் மனுக்குல விருத்திக்கும் மாறான பெருந்துரோகம். இவ் அக்கிரமம் மிகுதியாயப்பரம்பிய ஊர்தேசங்களில் சந்தானவிருத்தியும் சனத்தொகையுங்குறையத் தேவகோபாக்கினை

பெருகிவருகின்றது. இப்படிச்செய்கிறவர்கள் கடவுளுடைய சிருட்டிக்கும்வல்லமையையும் மெய்விவாகத்தின் நோக்கத்தையும் எதிர்த்து நிற்பதுமன்றி மிருகங்களைப் பார்க்கிலும் கேடுகெட்டவர்களாய்ப் போகிறார்கள். இக்கொடுமைக்கெதிராய் மானிடரை எச்சரிக்கும்பொருட்டு உலகசிருட்டிகர் இயல்வேதகாலத்தில் இத்துரோகத்தைச்செய்த ஓனன் என்பவனைச் சபித்துச் சாகடித்தாரென்று வேதாகமத்திற் காண்கிறோம். (ஆதியாகமம் 38.) சிசுஉற்பத்தியைத் தடுப்பதாகிய பாவதுரோகம் ஐரோப்பிய பாஷைகளில் இவன்நாமத்தாலேயேஅழைக்கப்படுகின்றது.

ஒன்றிகளான சில தூர்த்தர் வெட்கத்துக்குத்தப்பிக்கொள்ளுகிறதற்காகவும், சமுசாரிகள் கர்ப்பஸ்திரீகளை நோயில்நின்று குணப்படுத்துகிறதற்காகவும் அல்லது பிள்ளைகளை வளர்க்குந் தொல்லைகளை நீக்குவதற்காகவும் மருந்தினால் சிசுவைக் கர்ப்பத்தில் அழித்துவிடுகிறார்கள். இப்படிக்கொல்லப்படுங்குழந்தை ஞானஸ்நானமின்றிச் சாகிறபடியால் நித்தியமோட்சபாக்கியத்தை இழந்துபோகின்றது. இவ்வித கொலைசெய்கிறவர்கள் மாத்திரமல்ல, இதற்கு உதவி உடந்தையாயிருக்கும் அனைவரும் தேவசமுகத்தில் இந்தப் பழிபாதகத்துக்குப் பங்காளிகளாகவே இருக்கிறார்கள். ஆதியில் ஆபேலைக் கொலைசெய்த காயீனுக்கு எதிராய்ப் பழிவாங்க ஆபேலின் உதிரம் வானமண்டலமட்டும் குரவையிட்டதுபோல இப்படிஉயிரையும் பரகதியையும் இழக்குங்குழந்தையும் தன்னைக்கர்ப்பத்தில் அழித்தவர்களுக்கும் அதற்கு உதவியாயிருந்தவர்களுக்கும் எதிராய் எக்காலமும் அபயமிடுமென்பதற் கையமில்லை. கரு அழிக்குங்கொலைபாதகரே, அதற்கு உடந்தைக்காரரே, காயீனைக்கடூரமாய்ச் சபித்து அலைந்துதிரியச்செய்த முகம்பாராத நீதியின்கடவுள் உங்களை இலேசாய்த் தப்பவிடுவாரென்று நினைக்கிறீர்களா? உங்கள்மேற் சுமரவிருக்கும் தேவகோபாக்கினை மகா பயங்கரமானதென்பதை மறவாதிருங்கள்.



பிரசவகாலத்தில் பிள்ளைபிறக்குமுன் தாய் இறக்கநேரிடில் அநேகர்பிள்ளையைப்பற்றிப்பறவாய்பண்ணாமல் அது உயிரோடிருக்கிறதோஎன்று அறியவும்முயலாமல் மோசம்போகவிடுகிறார்கள். ஆனால், மனுக்குழந்தையுடைய உயிரின்அருமையையும்மேன்மையையும் அறிந்து மதித்துநடக்கும்அறிவாளிகள் அவ்வுயிரை அபாயத்தில்நின்று நீக்கத் தங்களாலியன்ற பிரயாசப்படவும்வேண்டிய உபாயந்தேடவும் பின்னிடார்கள். இவ்வித ஆபத்துக்களில்நின்று குழந்தைகளை மீட்பது தேவன் தமக்கு எவ்வளவு இதமான செயலென்று நமக்குக் காண்பிக்கும்பொருட்டு இப்படிக்காப்பாற்றப்பட்ட சிலகுழந்தைகளைப் பிற்காலம் பெரியதருமவான்களாக்கி அவர்களால் உலகத்துக்குப் பெரும் நன்மைகளை விளைவிக்கச்சித்தமானார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் பெருந்தருமவானாக விளங்கிய அர்ச். றேமோந்தப்பர் பிறக்குமுன் தாய் இறந்தபடியால் சத்திரவைத்தியர் பிரேதத்தைக் கீறிப் பிள்ளையைப்பத்திரமாய் உயிரோடெடுத்தார்கள். இக்குழந்தை வளர்ந்து பராயப்பட்டபின் தான் அருமையாய்நேசித்துவந்த தேவதாயாரின் ஏவுதற்படி அடிமைகளைமீட்குஞ் சபையிற்சேர்ந்து தருமந்தண்டி தன் செனன தேசமாகிய ஸ்பானியாவைவிட்டு ஆபிரிக்காவுக்கு வந்து அங்கே அடிமைகளைமீட்கும் அலுவலில் அமர்ந்திருந்தார்.

இப்படிப் பெருந்திரளான சிறைகளைத் துலுக்கர் கையினின்று இரட்சித்தபின் கையிற் காசில்லாமற்போக ஒருதொகைப்பணத்துக்குத் தம்மைப்பிணையடிமையாக ஒப்புக்கொடுத்து இன்னும் சில சிறைகளுக்குச் சுயாதீனங்கிடைக்கச் செய்தார். இவருடைய புத்திபோதனையினாற் தொகையானதுலுக்கர் மனந்திரும்பி கிறீஸ்தவர்களானதை மறுதுலுக்கர் அறிந்து அவர்மீது மிகக்கோபங்கொண்டு அவர்வாய்க்கு ஒருவித பூட்டைமாட்டி ஒடுங்கியசிறைச்சாலையில் அடைத்துவிட்டார்கள். அங்கு இத்தருமசீலன் அனுபவித்த உபத்திரவங்களை அக்காலமிருந்த பரிசுத்தபாப்பரசர் அறிந்தபோது அவரை

மீட்டு ஐரோப்பாவுக்கு அழைத்துக்கொண்டதுமன்றி திருச்சபையின் பிரபுக்களாகிய கருதினால்மாருள் அவரையும் ஒருவராக நியமித்தார். அங்கும்பெரும்புண்ணியங்களைச்செய்துகாலஞ்சென்றபின் அவர்மூலமாய்நடந்த அநேக நவமான அற்புதங்களைக்கண்டு பரிசுத்த மாதாவாகிய திருச்சபை அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டியிருக்கிறது.

ரோமர் உலகத்தைக்கட்டி அரசாண்டகாலம் அவர்களுள் அதிசூர சேனாபதியாகவும் சர்வாதிகாரியாகவும் விளங்கி இற்றைக்கும் உலகெங்கும் மங்காப் பெயர்பெற்றிலங்கும் யூலியுஸ் சேசார் என்பவரும் தாயுதரத்திலிருந்து வைத்தியரால் எடுக்கப்பட்டாராம். இவ்வித வைத்தியம் இற்றைக்கும் இவர் நாமத்தாலேயே அழைக்கப்படுகின்றது.

வடதேசத்தின் சிலபாகங்களில் ஓர் கருப்பவதி பிள்ளையைப் பிரசவிக்குமுன் இறக்கச் சம்பவித்தால் அவள் உதரத்திலிருந்து பிள்ளையை எடாவிடில் மழைபெய்யாதென்ற ஒரு அபத்தமான கொள்கையுண்டாம். சவத்தை அடக்குமுன் அல்லது சுடுமுன் இவ்வலுவலை நடத்துவதும் ஓர் நாவிதனாம். தாய் மரித்தபின் அவள் உதரத்திலிருக்கும் குழந்தை இன்னுஞ் சில மணித்தியாலம் உயிரோடிருக்குமென்று வைத்தியர் சொல்லுகிறார்கள். ஆகையால், தாமதமின்றி சத்திர அறிவற்ற நாவிதனுக்குப் பதிலாக ஓர் சத்திர வைத்தியனை அழைத்துப் பிள்ளையை உயிரோடு எடுக்க வழிபண்ணினால் எத்தனையோ பிள்ளைகள் தப்பிப் பிழைப்பார்களே என்று நூலாசிரியர் ஒருவர் கூறுகிறார். அனுபவமுள்ள சில சத்திர வைத்தியர் கருப்பவதிகள் பிரசவிக்கத் திராணியற்று உபத்திரவப்படும்போது சத்திரப் பிரயோகஞ்செய்து பிள்ளையையும் பத்திரமாய் உயிரோடு எடுத்துத் தாயையும் பிழைப்பித்துவருகிறார்கள்.

சில குழந்தைகள் பிறக்கும்போது உயிரோடிருக்கிற அடையாளமொன்றுமில்லாதபடியால் அறியாதவர்கள் அவைகளைச் செத்துப்பிறந்ததாகஎண்ணி அடக்கம்பண்ணி விடுகிறார்கள். ஆனால், கெட்டித்தனமுள்ள சில வைத்தியர் அப்படியிருந்த அநேக குழந்தைகளை வைத்திய கிருத்தியங்களினால் பிழைக்கப்பண்ணியிருக்கிறார்கள். சிலகாலத்துக்குமுன் யாணிப்பாய் வைத்தியசாலைக்குத் தலைவராயிருந்த கனம். ஸ்கொட் ஐயர் அவ்வித சில குழந்தைகளைப் பிழைப்பித்ததை அவ்விடங்களிலுள்ள அநேகர் அறிவார்கள்.



சில கணவர் கடுங்கோபம், குடிவெறி, துராசை, முதலியவைகளுக்கு அடிமைகளாயிருப்பதினால் கர்ப்பவதிகளாயிருக்குந் தங்கள் மனைவிகளின் நொய்மையான ஸ்திதியைக் கவனியாமல் அவர்களை அடித்துதைத்து அவர்களுக்குத் துக்கமும் மனக் கலக்கமும் உண்டுபண்ணி விடுவதால் பிரசவகாலத்தில் தாயும் பிள்ளையும் மோசம்போவது அரிதான சம்பவங்களல்ல.

கர்ப்பவதிகளுடையவும் அவர்களுதரத்திலிருக்கும் பிள்ளைகளுடையவும் உயிருக்கும் சுகத்துக்கும் பெரும் ஆபத்துக்களை விளைவிக்கக்கூடிய அநேக காரியங்களுண்டு. எக்கம், மிகுதியான மனக்கவலை, பயம், துக்கம், கடுங் கோபம், சண்டை, பிரயாசமான வேலைகளைச் செய்தல், நித்திரை விழித்தல், பட்டினி கிடத்தல், ஆதியவை பிரசவகாலத்தில் ஆபத்துக் கேதுவானவையாம். பழந் தீனையும், அசீரணமான பண்டங்களையும், மட்டசனமின்றி நினைத்த நேரமெல்லாம் கைக்கெட்டிய யாவையும் வாயிற்போடுங் கெட்ட பழக்கத்தையும் சகலவித அசுத்தங்களையும் விலக்கி நடப்பது கர்ப்பவதிகளுக்கு அகத்தியம். சிலர் இவைகளைச் சற்றும் பொருட்பண்ணா திருப்பதினாலன்றோ அநேக குழந்தைகள் நோய்பிடித்தவர்களாய்ப் பிறந்து சில நாளைக்குள் இறந்துபோக நேர்கின்றது.

பூமியிலுள்ள சகல சீவசெந்துக்களுக்கும் மேலான படைப்பாகிய மனுஷன் பிறக்கும்போது மற்றச் சர்வ

பிராணிகளிலும் அதி நொய்மையாயிருக்கிறான். கையினாற் றொடுவதுமுதலாய் குழந்தைக்கு வருத்தமாயிருக்கிறபடியாலல்லவோ அது பிறந்த நேரந்தொட்டுச் சில காலமாக அதை மென்மையான துணியில் வளர்த்தி அதைக் கையிலெடுக்கும்போதெல்லாம் அத்துணியோடெடுப்பார்கள். இன்னும் மறு சீவபிராணிகளைப்பார்க்க மனிதனே இளமையில் அதி நெடுங்காலமாய்த் தாய் தந்தையரின் அணைப்பிலும் ஆதரவிலும் தங்கியிருக்க வேண்டியிருக்கிறான். இப்பருவத்தில் பெற்றோரின் பராமரிப்புக் குறையும்போதெல்லாம் பிள்ளையின் உயிரும் சுகமும் இடையூறுக்குள்ளாகும். இக் குறைவினாலன்றோ அநேக குழந்தைகள் தங்களைத் தாங்கள் காப்பாற்றக்கூடிய வயதுவருமுன் மடிந்து போகிறார்கள். பொதுவாகப் பெற்றோர் தலைச்சன் இடைச்சன் பிள்ளைகளிற் செலுத்துங் கவனம் பின் பிறக்கும் சகல பிள்ளைகளிலுஞ் செலுத்துவார்களானால் அவர்கள் நடுத்தீர்வை நாளில் தங்கள் மக்களின் உயிரையும் சவுக்கியத்தையும் பற்றித் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய கணக்கு மிக இலகுவாயிருக்கும்.

உலகிற் தாய் தந்தையரின் கவனக் குறைவால் நாள்தோறும் குழந்தைகளுக் கெய்துந் தின்மைகளைக் கணக்கிட யாரால் முடியும்? பெற்றோரின் அசட்டையால் நெருப்பில் அவிந்த குழந்தைகளெத்தனை? நீரிலமிழ்ந்தினவைகளெத்தனை? மண்ணை, கல்லை வேறு அசீரணமான அல்லது நஞ்சான பண்டங்களை விழுங்கி மோசம் போன குழந்தைகளெத்தனை? கட்டிலிலும், கதிரையிலும், பழுதான பிள்ளைத் தொட்டிலிலும், திண்ணையிலும் குந்திலுமிருந்து விழுந்து கால் கை யொடிந்தவைகளெத்தனை? நாய் கடித்தும், பூனை விறாண்டியும், கோழி கொத்தியும், ஆடு மாடு மிதித்தும், தேள், சர்ப்பம், பூச்சி, புழுத் தீண்டியும் காயம்பட்டவைகளும் இறந்தவைகளுமெத்தனை? தாய்மார் தங்கள் வசதிக்காக ஐந்து ஆறு வயதுப் பிள்ளைகளைப் பள்ளிக்குப் போகவிடாமல் பல நாளும் மறித்துக் கைக்குழந்தைகளை வைத்திருக்கும்



படி செய்தவிடத்தில் அவர்கள் குழந்தைகளை இடுக்கித் திரியப் போதிய பெலனில்லாததினாலும், விளையாட்டுப் பராக்கினாலும் கை தவறிப் போட்டும், தடக்கிவிழுந்தும், அங்கபங்கப்பட்ட அல்லது உயிரிழந்தவைகளெத்தனை? ஆயாளின் அசட்டைத்தனத்தாலும் குரூரத்தாலும் மோசம்போன குழந்தைகளெத்தனை? குழந்தைகளுள்ள வீடுகளிற் கவனஈனமாய் அங்குமிங்கும் விடப்பட்ட ஆயுதங்களால் தங்களை மோசமாய்க் காயப்படுத்திக்கொண்ட பாலியரெத்தனை? வெயிலிலும் பனியிலுந் திரிந்து நோயுற்றிறந்தவைகள் எத்தனை? குளிப்பு முழுக்குக் குறைவாலும், நேரவழிக்குக் கிரமமாய்ப் போசனம் கிடையாததினாலும் அநேக குழந்தைகள் நோய்வாய்ப்படுவதில்லையா? உண்ட உணவு சமிக்குமுன் குளித்ததினால் அல்லது முழுகினதினால் அநேகர் மோசம்போனார்களென்று முறைக்குமுறை கேள்விப்படுகிறோமல்லவா? விளையாடி அல்லது வேலைசெய்து அல்லது வெயிலிற் திரிந்து இளைத்திருக்கும்போது களைதீருமுன் தாகந்தீரத் தண்ணீர் குடித்ததினால் அநேக பிள்ளைகளும் வளர்ந்தவர்களும் நோய்ப்பட்டதை நன்றாயறிவோம். வருத்தமுண்டுபட்ட தொடக்கத்தில் கவனமாய் மருந்துசெய்விக்கத் தவறினதினாலும் பார்வைத் தாழ்ச்சியினாலும் குழந்தைகள் இறந்துபோவதில்லையா? இந்த வீட்டிற் தாய் தன் குழந்தையை உறங்கச்செய்துவிட்டு அயல்வீட்டில் வழக்கம்போற் கதைக்கப்போய்த் திரும்பி வருகிறதற்கிடையில் பிள்ளை விழித்துக் கீழே தவறிவிழுந்து சேதப்பட்டதாம். அந்த வீட்டிலே மாரிகாலத்தில் குழந்தை சாமத்தில் விழித்துத் தாய் பக்கத்தில் கூதற்காய வைத்திருந்த நெருப்புச்சட்டியில் விழுந்து கால்கையை அவித்துக்கொண்டதாம்.

வேறொருவீட்டில் தாய் நித்திரையில் தன் குழந்தையைச் சாக நெரித்துவிட்டாளாம். கொல்லையிற் தாய் தண்ணீரள்ளப் போகும்போதெல்லாங் கூடப்போய்க் கிணற்றடியில் விளையாடிவந்த சிறுபையன் ஒருநாள் விளையாட்டுப்பராக்கில் கிணற்றில் விழுந்திறந்தா

ளும் என்றும், வேறொருநாள் வீட்டுக்கு அருகிலிருந்த தெருக்கரையில் செக்கல் நேரம் பிள்ளைகள் விளையாடிக்கொண் டிருக்கையில் சவாரிவண்டிலேறிச் சிலரை நசித்துவிட்டதென்றும், இன்னுமொருநாள் தாய் தன் மகனுக்கு வெள்ளெனப் பசியாற்றிச் சீலையுடுத்தி வழக்கம்போற் தனிமையாய்ப் பள்ளிக்கனுப்ப, இடைவழியிற் கள்வர் அவனை அணாப்பி அந்தரமான இடத்திற்கொண்டுபோய்க் கை காதிலுள்ளவற்றையும் உடையையுங் கையாடிக்கொண்டு, பையனையுங் கொன்று பிரேதத்தைப் புதைத்து மறைத்துவிட் டோடிவிட்டார்களாம் என்றும், இப்படி நா மிடையிடையே கேள்விப்படும் பரிதாபமான சம்பவங்கள் யாவையும் எப்போதும் தடுக்கமுடியாதாயினும், பெற்றோர் இயன்றளவு கவனமாயும் புத்தியாயும் மக்களைப் பராமரிப்பார்களாயின், அவர்களுடைய சீவனுக்கும் சவுக்கியத்துக்கும் நேரிடும் இப்படியான அநேக அபாயங்களை நிச்சயமாய் விலக்கி விடுவார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை. காட்டிலே திரியுங் கரடி காண்டாமிருகம் சிங்கம் புலி முதலிய துஷ்டமிருகங்கள் தங்கள் குட்டிகளுக்கு ஆபத்து நேரும்போது தங்கள் சொந்த உயிரையும் பொருட்பண்ணாமல் குட்டிகளைத் தப்புவிக்க எவ்வளவோ ஆச்சரியமான உபாயங்களைப்பண்ணுகின்றனவென்று சுபாவநூலோர் சொல்லுகிறார்கள். அப்படியிருக்க அறிவுள்ள மனுஷர் தம் மக்களை அசட்டைத்தனத்தினால் மோசம் போகவிடுவது அவர்களைப் படைத்து இவர்களிடம் ஒப்புவித்த கடவுளுக் கேற்குமா?

## பிள்ளைகளின் சவுக்கியம்.

### பாலூட்டல்

கணக்கற்ற குழந்தைகள் பால்குடிகளாயிருக்கும்போதே நோய்ப்பட அல்லது இறந்துபோக நேரிடுகின்றது. பெரும்பாலும் இதற்குக் காரணம் தாய்மார் தங்கள் தீனளவிற் தகுந்ததையும் தகாததையும் விகற்பமின்றிப் புசிப்பதும் தங்கள் தேகசுத்தத்தையும் சவுக்கியத்தையும் போதிய அளவு கவனியாமல் விடுவதுமாம். "கோபம் தாயின்பாலை நஞ்சாக்கி குழந்தைக்கு வலிவரப்பண்ணுமென்பது நன்றாய்த் தெரிந்தகாரியம்" என்று டோன் என்னும் பெயர்பெற்ற வைத்தியர் கூறுகின்றார். கடுங்கோபத்தோடு பால் கொடுத்த சில மாதாக்கள் இரண்டொரு நாளைக்குள் தங்கள் அரிய குழந்தைகளைச் சாகக்கொடுத்தார்களென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகையால், கோபந் தணிந்தபின் பாலூட்டுவதே புத்தியாகும். இவ்வித ஒழுங்கீனங்கள் அதிகமாயுள்ள சிலவிடங்களில் வருஷாவருஷம் பிறக்குங் குழந்தைகளில் அரைவாசிக்கு மேற்படப் பால்குடிக்கிற பருவத்திலேயே இறந்துபோவதை இன்றைக்கும் துக்கத்துடன் கண்டுவருகிறோம். ஆகையாற், பால்வழியாய்ப் பிள்ளைகளுக்கு விக்கினம் நேரக்கூடிய போசனபதார்த்தங்களையும் எவ்வித அசுத்தத்தையும் அசவுக்கியத்துக்குரிய எவையையும் மாதாக்கள் இயன்றளவு சாக்கிரதையாய் விலக்கிநடப்பார்களாக.



தாய் போதிய சுகமும் பெலனுமுடையவளாயிருக்கும்போது தன் குழந்தைக்குத் தானாகப் பால் கொடாமல் மற்றோரைக்கொண்டு கொடுப்பிப்பது சுபாவ ஒழுங்குக்கு மாறான குற்றமென்று பெரியோர் போதிக்கிறார்கள். இவ்வித தவறுசெய்யுந் தாயைப் பற்றி வேதாகமஞ் சொல்வதேதெனில், "குரூர மிருகங்கள் முதலாய்த் தங்கள் மடியைக்காட்டித் தங்கள் குட்டிகளுக்குப் பால்கொடுக்கின்றன. ஆனால், நமது சனத்தின் குமாரத்தியோ வனாந்தரத்தின் தீக்குருவியைப்போலக் குரூரமாயிருக்கிறாள். குழந்தையின் நாவு தாகமிகுதியால் அண்ணத்திலொட்டிக்கொண்டிருக்கிறது" (எரேமியாஸ் புலம்பல் 4. 3-4) வவோரின் என்னுந் தத்துவசாஸ்திரி தன் சீஷர்களில் ஒருவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்திருக்கிறதென்று கேள்விப்பட்டு அவருக்குச் சோபனஞ்சொல்ல அவருடைய வீட்டுக்குப் போனார். அங்கு சம்பாஷித்துக்கொண்டிருக்

கையில் "இப்போது பிறந்த குழந்தைக்குத் தாய்தானே
பாலூட்டுவாள்" என்றார். அதற்குப் பிள்ளையின் பேர்த்
தியார் மாறுத்தரமாக அப்படிச்செய்வது தாய்க்குப்
பெரும் அலுப்புந் தொல்லையுமாயிருக்கும். ஆகையால்,
பிள்ளைக்குப் பாலூட்ட நாங்கள் ஒரு கைத்தாயை
ஒழுங்குபண்ணியிருக்கிறோம் என உடனே சாஸ்திரி
அவளைத்தடுத்து "ஐயோ, அம்மா, உமதுமகள் தன் புத்
திரனுக்குப் பூரண மாதாவாகவிருக்கும் மகிமையை அவ
ளுக்கே விட்டுவிடும். ஏனெனில் தன் உதரத்தின்
கனியைப்பெற்று அதை எட்டத்தில் விலக்கிவிடுகிறவள்
அல்லது அது கண்ணுக்குத்தெரியாமல் உதரத்திலிருக்
கையில் அதைத் தன் சொந்த இரத்தத்தைக்கொண்டு
போஷித்தபின் அது பூமியிற் பிறந்து கண்ணுக்குத்
தெரியும்போது தனக்கென்று சுபாவமுறையாற் கொ
டுக்கப்பட்ட பாலைக்கேட் டழும்போது அதைக் கொ
டாமல் விடுகிறவள் பாதித்தாயேயன்றி முழுத்தாயல்
லவே" என்றார். இப்படி வஞ்சிக்கும் மாதாக்கள்மேல்
பிள்ளைகளுக்குள்ள நேசமும் பற்றுதலும் வழக்கமாய்க்
குறைவாம். பிள்ளைகள் மாதாக்களின் சுகம், நற்குணம்
போக்கு, சாங்கம் உடையவர்களாகவும் அவர்கள்மேல்
மெய்யான நேசம் நன்றியுடையவர்களாகவு மிருக்க
வேண்டுமாகில் தாய்மார் சுபாவ ஒழுங்குப்படி தாங்க
ளாகவே அவர்களுக்குப் பாலூட்டி வளர்க்கவேண்டும்.
என்றாலும் இத்தேசத்தில் பிற சீமையாரின் பழக்க
வழக்கங்களிலுள்ள குறைநிறைகளைப் பகுத்தறியாமல்
பேதமின்றிச் சகலத்தையும் பின்பற்றிநடக்க ஆசிக்கும்
சுதேசிகளிற் சற்று நிலைவரமுள்ள சிலர் தங்கள் குழந்
தைகளுக்குத் தாங்களாகப் பாலூட்டுவது தற்காலந்
தங்களுக்கு மகிமைக் குறைவென்றெண்ணி அல்லது
பிறரைக்கொண் டப்படிச் செய்விப்பது தங்களுக்கு
ஏதோ பெருமையும் புகழுமென்றாற்போலத் தாங்கள்
செய்யவேண்டிய கடமையான இவ் வலுவலைப் பிற
ரைக்கொண்டு செய்விக்க அல்லது செயற்கைப்பாலைக்
குழந்தைகளுக்குப் பருக்கிவளர்க்கத் துவங்கியிருக்கிறார்



கள். உள்ளபடி நோயாளிகளான அல்லது பாலற்ற
தாய்மார் அப்படிச்செய்வது குற்றமல்ல. மற்றப்படி
மாதாக்கள் தாங்களாகவே தங்கள் பிள்ளைகளுக்குப்
பாலூட்டவேண்டும். அப்படிச் செய்வதே, "உம்மைப்
பெற்ற உதரமும் உமக்குப் பாலூட்டிய கொங்கைகளும்
பாக்கியம் பெற்றவைகள்" (லூக். 11 27) என்று தேவ
தாயாரைப்பற்றிக் கூறப்பட்டதுபோல, சகல மாதாக்
களுக்கும் புகழும் பாக்கியமுமாயிருக்கும்.

ஒருகாலம் பிராஞ்சுதேசத்தை அரசாண்ட அர்ச்.
லூயிஸ் இராசா பிறந்தபோது அவர் மாதாவாகிய
பிளாஞ்ச் இராக்கினி தானாகவே அவருக்குப் பாலூட்டி
வந்தாள். ஒருமுறை அவள் வியாதியாயிருக்கையில்
அரண்மனையிலிருந்த வேறோர் அம்மாள் அவ் இராச
குழந்தைக்கு இப்பணிவிடையைச் செய்யவேண்டியிருந்
தது. தாய் சுகப்பட்டபின் முன்போலப் பால் கொடுக்
கிறதற்காக குழந்தையை யெடுக்க அது குடிக்கச் சம்
மதியாமல் வெறுப்புக் காட்டிற்று. இதிற் தாய் சமு
சயப்பட்டு வேறு யாராவது தன் பிள்ளைக்குப் பால்
கொடுத்தார்களோவென்று விசாரித்து இன்னாளென்று
அறிந்தபோது அவளுக்கு உபசாரஞ் சொல்வதற்குப்
பதிலாக அவளைக் கடுகடுப்பாய் ஏறிட்டுப்பார்த்து தன்
விரலை அந்த இராச குழந்தையின் தொண்டைக்குள்
விட்டு அது அவளிடங் குடித்த பாலைச் சத்திக்கச்
செய்து "தேவனாலும் சுபாவமுறையாலும் எனக்கரு
ளப்பட்ட மாதா என்னும் மகிமையை என்னிடமிருந்து
யாராவது பறிக்க விடுவேனோ" என்றாள். (L' Abbe
Noel vol. 5. p. 57) தற்காலத்திலும் விக்தோரியா
என்னும் இஸ்பானிய இராக்கினி தன் பிள்ளைகளுக்குத்
தானாகவே பால்கொடுத்து வளர்க்கிறாரென்று சிறிது
காலத்துக்குமுன் பத்திரிகைகள் கூறின. எவ்வளவு
பணம் பாக்கியமுள்ள மாதாக்களும் மேன்மையுடைய
இவ்விராக்கினிகளைக் கண்டுபாவிப்பதே அவர்களுக்கு
மெய்யான பெருமையும் புகழுமாயிருக்கும்.

## ஊண், உடை, உறக்கம்

பிள்ளைகளின் தேக சுகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சிறுப்பந்துவக்கி அவர்களை ஊணிலும், உடையிலும், உறக்கத்திலும் கிரமம் அனுசரிக்கப்பண்ணுவது அக்த்தியம். வேளைதப்பி நினைத்த நேரமெல்லாம் விருப்பப்படி சாப்படுவதினாலும், குடிப்பதினாலும், நித்திரை செய்வதினாலும் சரீரத்தின் ஆசாபாச இச்சைகள் வீறுகொண்டு புத்தியையுஞ் சித்தத்தையுஞ் சிறைப்படுத்திக்கொள்ளுகின்றன. இளைஞர் இப்படி விடப்பட்டால் சுறுசுறுப்பற்று சோம்பேறிகளாகி சிலுவையின் மார்க்கமாகிய கிறீஸ்துவேதத்தையும் அதில் அகத்தியம் அனுசரிக்கவேண்டிய தன்னடக்கம், ஒறுத்தல், உபவாசங்களையும் இயற்கையாய் வெறுப்பார்கள். திருச்சபையில் ஒரு பெரிய வேதபாரகராய் விளங்கும் அர்ச். பெர்நந்துவின் மாதா மிகச் செல்வமுடையவளாயிருந்தாலும் தன்பிள்ளைகள் சரீர ஆசாபாசங்களுக்கு அடிமைகளாய்ப் போகாதபடி அவர்கள் சிறுப்பந்தொட்டுத் தங்களை ஒறுத்துநடக்கப் பழக்குகிறதற்காக அவர்களை ஊண், உடை, உறக்கம் முதலியவைகளிலும் மிகக் கட்டுமட்டாய் நடத்திவருவாள். அயலார் இதைக் கண்டு பிள்ளைகளுக்காக மனுப்பேசி முறையிட்டாலும் கேளாமல், தன்பிள்ளைகள் சுகபோகிகளாகாமல் சருவேசுரனுக்கு உகந்தவர்களாகவும் உலகத்துக்கு உபயோகமுள்ளவர்களாகவும் வளரவேண்டுமாகில் அவர்கள் ஊண் உடை முதலிய லௌகீக காரியங்களிலும் ஒறுப்பனவாய் நடப்பது அவசியமென்பாள். அவ்வித வளர்ப்பின் பயனாக அவர்கள் எல்லாரும் உலக சுகபோகங்களை நீக்கித் துறவிகளாகி உலகத்துக்குப் பெரும்நன்மைகளைச் செய்துவந்தார்கள்.

ஊண்—சிறுபிள்ளைகள் நாளொன்றுக்கு நாலு ஐந்து தரம் மட்டாய் அன்னபானம் அருந்துவது நல்வழக்கமாயினும், நாள்முழுவதும் வாயாட்டிக்கொண்டு திரிவது தகாது. சில பிள்ளைகளைப்பார்த்தால் அவர்கள் சாப்படு



கிறதற்காகவே சீவிக்கிறார்களென்று சொல்லக்கூடியதாய் நாள்முழுதும் ஏதாவது காய், கனி, பலகாரம், இனிப்பு முதலியவைகளை நன்னிக்கொண்டிருப்பார்கள். நேர ஒழுங்கும் மட்டுத்திட்டமுமின்றி தகுந்ததையும் தகாததையும் கெலிதீர அடிக்கடி சாப்படுவதினால் இரைப்பையின் சீரணிக்கும்சக்தி கேவலப்பட்டுப்போக பற்பல நோய்கள் உண்டுபடுவதுமன்றிப் புத்தியும் மங்கிப்போகும். போசனத்தைச் சீரணிப்பித்தல் இரைப்பைக்குப் பொறுப்பானவேலை. பகல்முழுவதும் சரீரப்பிரயாசமான வேலைசெய்கிறவர்கள் இடையிடையே ஓய்ந்து சரீரத்துக்கு ஆற்றியைக் கொடுப்பார்கள். கல்வி முதலிய கருமங்களில் மனதை அப்பியாசப்படுத்துகிறவர்களும் அப்படி அடிக்கடி மனதுக்கு இளைப்பாற்றியைக் கொடுப்பார்கள். அப்படியே போசனபானம் பண்ணுகிறவர்களும் சீரணிப்புக்குரிய வேலைசெய்யும் இரைக்குடலையும் ஓயவிடுவது அவசியம். ஆகையால், தீன்பண்டங்களில அவாக்கொண்ட பிள்ளைகள் தங்கள் இரைப்பைமேல் இரக்கம்வைத்து அதற்குத் தாராளமான ஆற்றிகொடுக்கப் பெற்றோர் அவர்களைப் பழக்குவார்களாக. உணவில் விருப்பமில்லாத பிள்ளைகளை வில்லங்கமாய்ச் சாப்படப்பண்ணுவதினால் தின்மையேயல்லாமல் நன்மையில்லையாம். அவர்களை நேரத்துக்கு நேரம் நன்றாய் வியர்க்க ஓடியாடி விளையாடப்பண்ணினால் இலகுவாய்த் தீனில் விருப்பங்கொள்வார்களே. அவர்களுடைய விருப்பத்துக்கு மேற்படச் சாப்படப்பண்ணுவது பெருந்தவறு. பழவகைகளும் இனிப்புப் பண்டங்களும் சிறுவரின் உடலில் கிருமியையும் பிணியையும் பிறப்பிக்கின்றனவென்பதை வைத்தியரன்றிப் பெற்றோரும் நன்றாயறிவார்கள். இயன்றளவு குழந்தைகளுக்குப் பழந்தீனையும் அசீரணமான பதார்த்தங்களையுங் கொடாமல் விலக்குவதும் இரவில் உணவைக் குறைப்பதும் உத்தமமாம். சிறுவர் மிதமிஞ்சிச் சாப்படாதிருப்பார்களானால் இக்காலம் வைத்தியருக்குள்ள வேலையில் அரைவாசி குறைந்துபோகுமென்று மிக்க

அனுபவ அறிவுள்ள அநேக வைத்தியர் கூறுகின்றார்கள். ஆகையால், தாய் தந்தையர் தம்மக்களைக் குறித்த நேரங்களில்மாத்திரம் மட்டாய்ப் புசிக்கவுங் குடிக்கவும் பழக்குவார்களேயாகில், அவர்கள் எவ்வளவோ நற்சுகமும் தேகபெலனும் புத்தித்தெளிவுமுள்ளவர்களாக வளர்ந்து வருவார்களென்பதற்கு ஐயமில்லை. சில விடங்களிற் பெற்றோர் வறுமையைச்சாட்டி பிள்ளைகளுக்குக் கள்ளைக் காலைப்போசனமாகக் கொடுக்கிறார்கள். அதனாற் சிறுவர் சற்றுநேரம் பசிதீர்ந்து அக்களிப்புக் கொண்டாலும் பின்பு பள்ளிக்கூடநேரத்திற் சோர்ந்து மயங்கிப் படிக்க முடியாமற் கிடக்கிறதைப்பற்றிப் பலமுறையும் உபாத்திமார் முறையிட்டதைக் கேட்டிருக்கிறோம். இயல்புள்ள சில குடும்பங்களிற் தாய் தந்தையர் மதுபானத்தினாற் பிற்காலம் பிள்ளைகளுக்கும் குடும்பம் முழுவதுக்கும் எய்தக்கூடிய கணக்கற்ற கேடுகளை யோசியாமலோ அல்லது அதினாற் சிறுவருக்குச் சுகமும் பெலனும் வருமென்ற தவறான எண்ணத்தினாலேயோ விலையுயர்ந்த குடிவகைகளை அவர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் குடிக்கக்கொடுத்தும் அல்லது பலவந்தமாய்ப் பருக்கியும் வருகிறார்கள். இப்பிள்ளைகள் பிற்காலம் இக்கெட்ட பழக்கத்தைவிட முடியாமல் தீர்ந்த குடிகாராராகிக் கெட்டழிந்துபோவதும், வின்னாரியி லவிந்த வெண்காயம் போலச் சுகம், பலம், ஆண்மை, புத்தி, நினைவு சகலது மற்று சாதாழைகளாய்ப் போவதுஞ் சன்மார்க்கமற்றுத் தூர்த்தராய்ப் போவதும் அதிசயமல்ல. உலகத்தில் மிக்க அனுபவமுங் கீர்த்தியும்பெற்ற வைத்தியர்கள் மதுபானங்களால் எண்ணிறந்த தீமைகளேயன்றி யாதோர் நன்மையுமில்லையென்று ஒரே வாய்மொழியாய்க் கூறிய நிர்ணயங்களைப் பலமுறை பத்திரிகைகளில் வாசித்திருக்கிறோம்.

உடை—நகையைப்பார்க்கிலும் உடை மனுமக்களுக்கு அதிகந்தேவை. என்றாலும், நம்தேசத்தில் கைகாதில் நகையில்லாத குளந்தைகளைக் காணலரிது. ஆனால் சிற்சிலவிடங்களில் எத்தனையோ பிள்ளைகள் நாலு, ஐந்து



வயது நடக்கும்போதுமுதலாய் அரையில் ஒரு துண்டுத் துணியுமின்றித் தாய் பெற்ற மேனியாய்த் திரிவதைக் காணலாம். இது தாய் தந்தையருக்கு பெரும் வெட்கக் கேடான காரியம். இப்படிப் பிள்ளைகள் வெற்றுடம்பாய்த் திரிவதைக் காணுதல் சீர்திருத்தமுள்ளவர்களுக்கு எவ்வளவு அருவருப்பாயிருக்கிறதென்பதை இப்பெற்றோர் உணராதிருப்பது பெரும் ஆச்சரியம். சிறுவர் நிர்வாணராய்த் திரிவதினால் நாணமற்றுப்போவதுமன்றி பல துர்ப்பழக்கங்களையுங் கற்றுக்கொள்ள வழியாகின்றது. வழக்கமாய் வஸ்திரமணிந்திருக்குங் குழந்தைகள் சேற்றில், அல்லது புழுதியிற் புரண்டுருண்டு உடுப்பை ஊத்தையாக்காதபடி பெற்றோர் மெத்தக் கவனிப்பார்கள். ஆனால், வாடிக்கையாய் வஸ்திரமின்றித் திரியுங் குழந்தைகள் எப்படித் தரையிற் புரண்டுருண்டாலுங் கவனிக்கமாட்டார்கள். இதனால் தேகம் ஊத்தைக்கு உறைவிடமாகி நோயுறுவது நூதனமல்ல. பிள்ளைகளை நிருவாணமாய்த் திரியவிடுவது எப்படியோ அப்படியே அவர்களுடைய வயதுக்கும் நிலைபரத்துக்கும், சவுக்கியத்துக்குமேற்க அவர்களுக்கு உடைதரிக்காமல் காலத்துக்கேற்ற கோலமென்னும் வியர்த்தமான கோட்பாட்டை அனுசரித்து இறுக்கமான அல்லது மரியாதைக்குறைவான உடைதரித்தல் நன்மையுமன்று தகுதியுமன்று.

உறக்கம்—சிறுவரின் சுகத்துக்கும் வளர்ச்சிக்கும் நித்திரை அதிகம் தேவையாயினும் அவர்கள் வளர வளர அதையும் வயதுக்கேற்றபடி கொஞ்சங் கொஞ்சமாய் மட்டுப் படுத்தவேண்டும். ஏனென்னில், மிதமிஞ்சிய நித்திரையினால் சோம்பல் மிகுந்து ஆண்மை குறைந்து தேகம் ஊதி வெளிறி நீர்ச்சடலமாகின்றதென்று இரவிலும் பகலிலும் அதிகமாய் நித்திரை செய்யும் அநேகர் அனுபவத்தால் அறிவார்கள். வெள்ளெனப் படுத்து வெள்ளென விழித்தலானது மனுஷனுக்குச் சவுக்கியத்தையுஞ் சம்பத்தையும் ஞானத்தையும் அருளுமென்ற கருத்தமைந்த அங்கிலேய பழ

மொழியொன்றுண்டு. கல்வியிற் சிறந்த பல பிரபுக்களும் துறவிகளும் வாலிபந்தொட்டு வயோதிபமீறாக இரவில் ஐந்து ஆறுமணித்தியாலம் மாத்திரம் உறங்கி வந்தார்களென்றும் அதனால் அவர்கள் சுகத்தாழ்வடையாமல் நெடுங்காலஞ்சீவித்து உலகத்துக்கு பெரும் நன்மைகளைச் செய்துவந்தார்களென்றும் சரித்திரங்களில் வாசிக்கிறோம். பள்ளிப்பருவத்தில் மாணாக்கருக்கு எட்டு மணித்தியால நித்திரை தாராளமாய்ப் போதுமென்பதே கல்விபயிற்றும் பண்டிதர்களின் கொள்கை. ஆகையால், பிள்ளைகள் ஒன்பதுமணியளவிற் படுத்து ஐந்துமணியளவில் எழும்பப் பழகுவதே உத்தமம். ஆனால், பெற்றோரின் அசட்டையால் அநேக பிள்ளைகள் "வைகறைத் துயிலெழு" என்பதற்கு மாறாகப் பொழுதேறுமட்டும் அப்பக்கமும் இப்பக்கமும் புரண்டுருண்டு நித்திரைசெய்வார்கள். இவ்வித பிள்ளைகள் புத்திக் கூர்மையுஞ் சுறுசுறுப்புமற்ற மந்தராய்ப்போவது ஆச்சரியமல்ல. முகத்தை மூடிக்கொண்டு அல்லது வாய் திறந்தபடி அல்லது இருதயமிருக்கிற இடதுபக்கமாய்ச் சாய்ந்துபடுப்பது சுகத்துக்குக் கேடாம். ஆகையால், ஒன்றில் வலதுபக்கமாய் அல்லது நிமிர்ந்து படுப்பதே உத்தமம்.

## சுத்தம்

மனுஷனுடைய தோலின் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் சுமார் 2800 வெயர்வைத் துவாரங்கள் உண்டென்றும், அவைகள் ஒரு நடுத்தரமான மனுஷனின் முழுத்தேகத்திலும் ஏறக்குறைய எழுபது இலட்சம் இருக்கின்றனவென்றும், ஈனோ, டோன்முதலிய பெரிய வைத்தியர்கள் கூறுகின்றார்கள். இத்துவாரங்கள் வழியாக இரத்தத்திலிருக்கும். துந்நீர் நிதமும் வெயர்வையாகப் பொசிந்துகொண்டிருக்கிறதாம். நாளுக்கு நாள் குழிப்பு முழுக்கினால் தேகத்தைச் சுத்தமாக்காவிடில் மேற்படி துவாரங்கள் படிப்படியாய் அடைபட துந்நீர் உள்ளடங்கி இரத்தத்தைப் பழுதாக்கிக் கணக்கற்ற நோய்களைப் பிறப்பிக்கின்றதாம்.



பிள்ளைகள் கைக்குழந்தைகளாய் இருக்கையில் தாய் சகோதரிகள் அவர்களை அடிக்கடி குளிப்பாட்டித் துடைத்து உலர்த்தி ஊத்தைபடாதபடி கவனிப்பார்கள். ஆனால், அவர்கள் நடந்தோடித்திரிகிற பருவமாகும்போது பலநாள் குளிப்பு முழுக்கில்லாமல் எவ்வளவு அசுத்தமாயிருந்தாலும் பெற்றோர் முன்போலக் கவனிப்பதில்லை. பெற்றோரின் அசட்டையாலல்லவோ அநேக பிள்ளைகள் காலமே நித்திரையால் எழும்பும்போது முகங் கழுவாமலும், பல் விளக்காமலும், நாக்கு வழியாமலும், வாய் நீர் கடைவாயால் வழிந்து கன்னத்திற் காய்ந்தபடியிருக்க ஊத்தை முகத்தோடும் துர்நாற்றம்வீசும் வாயோடுந் திரிகிறார்கள். முத்துப்போல் முளைத்த பற்கள் கவனக்குறைவால் காவிபிடித்துச் சூத்தைகுத்தி அவலக்ஷணமானவையாயும் அரிகண்டம் செய்வனவாயும் இருப்பதுமன்றி உடம்பில் பற்பல நோய்களுக்கும் காரணமாகின்றன. சில நோயாளிகளுக்கு ஐரோப்பிய வைத்தியர் மருந்துசெய்யுமுன் ஒருதந்த வைத்தியனைக்கொண்டு பற்களைத் துப்புரவாக்குவித்துக்கொண்டு அல்லது அவைகளை முற்றாய்ப் பிடுங்குவித்துப்போட்டு வரும்படி கற்பித்ததை அறிவோம். பிள்ளைகள் சற்று வளர்ந்தபின் தங்கள் நாசியிலிருந்து வரும் சளியைத் தாங்களாகச் சீறியெறியப் பழக்கப்படாததினால் அது வடிந்துகொண்டிருக்கும், அல்லது அவர்கள் அதை உறிஞ்சி உறிஞ்சித் திரிவார்கள். சீறினாலும் சீலைத்தலைப்பிற் துடைத்துவிடுவார்கள். இவையெல்லாம் பிறருக்கு எவ்வளவு அருவருப்புக்கிடமானவையென்று சொல்லத் தேவையில்லை. விரல்களைப் பார்த்தால் பூனைக்குப்போல நகம் வளர்ந்து ஊத்தையடைந்திருக்கும். சாப்பிடத் துவங்குமுன் கை கழுவப் பழகாததினால் கையிலும் நகங்களிலுமிருக்கும் ஊத்தை நுதம்பிக் கழன்று உணவோடுசேர்வது அதிசயமல்ல. சிறுவருக்கு ஏதாகுதல் பழவகை, கிழங்கு பலகாரம் முதலியவை கிடைத்தால் அவைகளை மெத்த விருப்பத்தோடு அங்குமிங்குங் கொண்டுதிரிந்து சூப்பிக்

கடித்துச் சாப்பிடுவார்கள். சாப்பிட்டபின் கையையும் வாயையும் கழுவவோ அவர்களுக்குப் பழக்கமில்லை.

புகையிலை முக்கியமாக இளைஞரின் சுகத்துக்குஞ் சுத்தத்துக்கும் ஏற்றதல்ல. என்றாலும், அநேக பிள்ளைகள் கொடுப்பு நிறையப் புகையிலையைத் தக்கையாய் அடைந்துகொண்டு அல்லது வாயில் கொட்டன் சுருட்டைக் கவ்விக்கொண்டு திரிவார்கள். இவ்விஷயத்தைப் பற்றி துல்லொக் என்பவர் எழுதியிருப்பது யாதெனில் "முற்றாய் வளர்ந்தவர்கள் மட்டாய்ப் புகையிலை பாவிப்பதினால் அவர்களுக்குச் சற்று நயமுண்டென்று ஒத்துக்கொண்டாலும், இளைஞருக்கு அது சற்றுந் தேவையுமில்லை, அதினால் யாதோர் நன்மையுமில்லை. இதைப் பற்றி ஓர் பெரிய வைத்தியர் சொல்வதாவது: சுருட்டுக் குடிக்கும் பையன் ஆண்மையுள்ளவனாயும், கெட்டிக்காரனாயும் வருவது அரிது. வழக்கமாக அவன் சரீர பெலனற்றவனாயிருப்பதுடன் மனப்பெலனு மற்றவனாவான். ஆகையால், உலகத்தில் உயர்ச்சி அடைய விரும்பும் வாலிபர் புகையிலையைப் பாஷாணம்போல் விலக்குவார்களாக. புகையிலை பாவிக்கும் பழக்கம் அடிக்கடி உமிழ்நீர் துப்பும் அருவருப்பான பழக்கத்தை உண்டாக்கிச் சீரணிப்பைக் குறைத்து சுவாசத்தைப் பழுதுபடுத்தி, பணத்தையும், நேரத்தையும் பாழாக்கி விடுகின்றது. இக்கெட்ட பழக்கத்துக்கு அடிமைப்பட்ட பின் அதை விடுவது மிக வல்லையாகையால் அதைப் பழகாதிருபபதே தாவிளை" என்கிறார். புகையிலை தின்கிறவர்களுடைய வாய் எவ்வளவு நாறுகிறதென்பதை அவர்கள் அறியவும்மாட்டார்கள், பிறர் சொன்னால் அதை ஒத்துக்கொள்ளவும் மாட்டார்கள். புகையிலையைப்போல வெற்றிலை தின்னும் பழக்கமும் வெறுப்புக்குரியதாம். அதனாலல்லவோ சீர்திருத்தமுள்ளவர்கள் அதை விலக்கி வருகிறார்கள். என்றாலும், அநேக பெண்கள் வெற்றிலை பாவிப்பதினால் தங்கள் அழகான பல்லும் உதடும் நாவும் வாய்முழுவதும் எவ்வளவு அசுத்தமாயும் அலங்கோலமாயும் போகின்றனவென்



பதைக் கவனியாமல் அப்பழக்கத்தில் பெருமையும் அக்களிப்புங் கொள்ளுகிறார்கள். கட்டுமட்டில்லாமல் வெற்றிலை பாவிக்கிறவர்கள் வாயைத்திறந்து ஒரு முகக் கண்ணாடியில் தங்கள் உதடு பல்லு நாக்குமுதலியவைகளின் அவலக்ஷணத்தை உற்றுப் பார்ப்பார்களாகில் வெட்கப்பட்டு ஒருவேளை இப்பழக்கத்தை மட்டுப் படுத்திக்கொள்வார்கள். ஐயையோ சிலர் தேவாலயங்களிலும் கொடுப்பு நிறைய வெற்றிலையைத் தக்கையாயடைந்துகொண்டு வந்திருப்பார்களே.

சில பிள்ளைகளின் தேகம் முழுவதும் பசைபூசிக் காயவைத்த தோல்போல ஊத்தை நிறைந்திருக்கிறதையும் காலையில் உப்புப் பூத்திருக்கிறதையும் பெற்றோர் காணாமலிருக்கிறதில்லை. எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானமென்றாலும் அடிக்கடி தலை தோயாமலும் மயிர் சீவாமலும் விடுவதினால் சொடுகும் ஈரும் பேனும் நிறைந்திருக்கும். தலைமயிரோ என்றால் பிசான் பிடித்து சிக்கிமுறுகிப் பறட்டை பத்தியிருக்கும். தாய்மார் மக்களுக்குப் பேன்குத்துகிறதிற் செலவழிக்கும் நேரத்தில் கொஞ்சத்தையாகுதல் அவர்களுடைய தலைக்குக் கிழமைக்குக் கிழமை அரைப்பு சீயாக்காய் அல்லது சவுக்காரம் புரட்டி தோயவார்த்து நாளுக்குநாள் கொஞ்சம் எண்ணெய் தேய்த்துத் தலைமயிரைச் சீவிக் கட்டிவந்தால் அல்லது பிள்ளைகளை அப்படிச் செய்து வரப் பழக்கினால் இவர்கள் தலைநிறைய ஈசசீவசெந்துக்களான பேனையும் ஈரையும் சுமந்து திரியவும் பேன்கடி தாங்கமாட்டாமல் அடிக்கடி தலையைச் சொறிந்து விறாண்டிக்கொண்டிருக்கவும் வேண்டியதில்லையே.

அநேக பிள்ளைகள் கிழிந்த ஊத்தைக் கந்தையோடு திரிவதற்குப் பெற்றோர் சொல்லுஞ் சாட்டுப்போக்கு தாங்கள் முட்டுப்பட்டவர்களென்பதாம். இளைஞர் கிழமைக்குக் கிழமை அல்லது வேண்டுமானால் நாளுக்கு நாள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்துடுக்கவுங் கிழிந்ததைத் தைக்கவும் பெற்றோர் அவர்களைப் பழக்குவதற்கு எவ்வளவு செல்வந் தேவையோ தெரியவில்லை.

எத்தனையோ பிள்ளைகள் சிரங்கில் அவிந்து உத்தரிப்பதற்கு விசேஷ காரணங்களிலொன்று அசுத்தமல்லவா? கால் கை கழுவியபின்னும் ஸ்நானஞ்செய்தபின்னும் தேகத்தை நன்றாய்த் துடையாமல் விடுவதாலும் சிலருக்குச் சிரங்குண்டுபடக் கூடுமென்பது சில வைத்தியரின் எண்ணம். சேற்றிலும் வெள்ளத்திலும் விளையாடுவதினால் நீர்ச்சிரங் குண்டுபடுமென்று அநேகர் அனுபவத்தால் அறிவார்கள்.

பிள்ளைகள் நாள்தோறும் பள்ளிக்குப் போகுமுன் கால் கை முகங்கழுவித் தலைசீவித் துப்புரவாய் உடுத்துக்கொண்டு போகும்படி நல்லபெற்றார் மெத்தக் கவனிப்பார்கள். அது தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் மேன்மையும் பெருமையுமென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், கசுமாலரான பெற்றாருக்கு அதெல்லாம் அலுப்பாம். சில பாடசாலைகளிற் பிரவேசிக்கும்போது அங்குள்ள துர்நாற்றத்திலும் பிள்ளைகளின் அலங்கோலமான வேஷத்திலுமிருந்து அவர்களுடைய வளர்ப்பும் வீடுவளவும் எத்தன்மையானவையென்று இலகுவாய் உத்தேசிக்கக்கூடும்.

வீடுவாசலைப்பார்த்தால் அங்கே விளக்குமாறில்லையென்று விளங்கிக்கொள்ள வேண்டியதாயிருக்கும். இடைக்கிடை கூட்டினாலும் குப்பையை அள்ளி எட்டத்திலே குப்பைக்கிடங்கிற் கொட்டிவிடாமல் பலநாள் முற்றத்தில் மூலைக்குமூலை ஒதுக்கிவிடுவார்கள். துப்புரவும் சுறுசுறுப்புமற்ற சோம்பேறிப் பெண்கள் சமையல் சாப்பாடு முடிந்தவுடன் சட்டிபானைகளை நன்றாய்க் கழுவிக் காயவையாமல் அசட்டையாய் விட்டுவிடுவார்கள். அடுத்தநேரம் அவைகளைப் பரும்படியாய் அலைசிப் போட்டுச் சமைப்பார்கள். இது சுத்தத்துக்கும் சுகத்துக்கும் எவ்வளவு மாறுஎன்பதை அவர்கள் நினைக்கிறதில்லை. சிலகாலத்துக்குமுன் தொகையான மாணாக்கர் வசித்திருந்த ஓர் வீட்டில் அநேகருக்கு மும்முரமான வயிற்றுவலி உண்டுபட்டது. அங்கு வைத்தியஞ்செய்து



வந்த டக்டர் கிறெனியர் அவர்களைச் சுகப்படுத்தப் பிரயாசப்பட்டும் முடியாமல் ஒருநாள் அவ்வீட்டெசமானை நோக்கி நான் உங்கள் அடுக்களையைப் பார்க்க வேண்டுமென்றார். அவ்விடத்துக்கு அவரைக் கூட்டிப் போனபோது அவர் சமையற் பாண்டங்களைக் கவனமாய்ப் பரிசோதித்து அவைகளில் ஒட்டிக் காய்ந்திருந்த ஊத்தையை எசமானுக்குக் காட்டி, "இதுதான் பிள்ளைகளின் வருத்தத்துக்கு காரணம். இன்றுதொட்டு சமையற்காரர் தீன்முடிந்தவுடன் ஒவ்வொரு நேரமும் சகல சமையற்பாண்டங்களையும் நன்றாய்க் கழுவிக் காயவைக்கும்படி கவனித்துவாருங்கள். அப்போது பிள்ளைகளின் வருத்தமும் வலிய நீங்கும். அசுத்தமே அநேக நோய்களுக்குக் காரணம்" என்றார். சில நாட்களாக அப்படிச் செய்தபின் அவர் சொன்னது முழுதுஞ் சரியென்று கண்டுபிடித்தார்கள்.

காலையில் விழித்தவுடன் பாய் தலையணையைப் பத்திரமாய்ச் சுருட்டி வையாமலும் இடைக்கிடை வெயிலில் காயப்போட்டுத் துப்புரவாக்காமலும் விடுவதினால் மூட்டை மொய்த்து இரவில் நித்திரையைக் குளப்புவது நூதனமல்ல. யேசுநாதருடைய திருமேனியைக் கல்லறையில் அடக்கஞ்செய்தபோது யூதமுறைமைப்படி அவருடைய சிரசிற் கட்டியிருந்த துகில் அவர் உயிர்த்தெழுந்தபோது மறு வஸ்திரங்களோடு ஒழுங்கீனமாய்க் கலந்திராமல் மடித்து கல்லறையின் ஒரு பக்கத்தில் புறம்பாய் வைக்கப்பட்டிருந்ததென்று சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். (அர்ச். அருளப்பர் 20) இதற்கெதிராக ஒழுங்குந் துப்புரவுமற்றவர்கள் உடுபுடவைகளையும் மறு சாமான்களையும் மடித்து அடுக்கி ஒழுங்காக வையாமல் கண்டபடி கிடக்க விட்டுவிடுவார்கள்.

அன்றியும், ஊருக்குங் காலத்துக்குமுரிய சாமான்கள் அதாவது தவசதானியம் பழவகை புகையிலை கருவாடு சுண்ணாம்பு ஊத்தைப் புடவை முதலியவைகள் எவ்வளவு நோய்க்கு வழியானவைகளாயிருந்தாலும்

சிலர் அவைகளைத் தாங்கள் புழங்கும் அறைகளிற் குவித்துவைப்பார்கள். வீட்டுக்கருகில் வைக்கோல் எரு சருகு சாம்பல் குப்பை முதலியவைகளைக் குவிப்பதும், ஆடு மாடுகளைக் கட்டுவதும் சவுக்கியத்துக் கேற்றவையல்ல.

சிலர் கருத்தற்ற சாத்திரவிதிப்படி அல்லது செலவைச் சுருக்குகிறதற்காக பதிந்த வீடுகளைக்கட்டி கொளுவிஓடு போடுவதினால் அவ்வீடுகளிற் சஞ்சரிக்கிறவர்கள் சூரியவெப்பத்தால் வெம்பி நெடுகிலும் நோய்ப்பட்டு உத்தரிப்பதைக் கண்டுவருகிறோம். வேலியை உயர அடைத்து காற்றோட்டத்தைத் தடுப்பது தமிழரின் தப்பறைகளில் ஒன்றென்று பிறர் முறைக்குமுறை புறணி கூறுவதை நம்மவர் அறியாமலிருக்கவில்லை.

சில ஊரவர்கள் சவுக்கியத்தைக் கவனியாமல் வருமானத்தை மாத்திரங் கருதி வளவு நிறைய வாழை கொழுந்து பலா முதலிய பயிர்களை உண்டுபண்ணிச் சுகத்துக்கு வேண்டிய வெயிலையும் காற்றோட்டத்தையுந் தடுத்துவிடுவதினால் அவர்களில் அநேகர் ஊதி வெளிறியிருப்பதையும் மழை பனிகாலங்களில் வீட்டுக்குவீடு நாலு ஆறுபேர் காய்ச்சலாய்க்கிடந்து வருந்துவதையுங் காணலாம்.

முறைக்குமுறை அம்மை பேதி பெருவாரிக்காய்ச்சல் முதலான கொள்ளைநோய்கள் உண்டுபடும்போது குடிசனங்கள் தங்கள் வீடுவளவுகளைத் துப்புரவாக்கும்படியும் சவுக்கியத்துக்கு மாறானவைகளைத் தொலைக்கும்படியும் அரசாட்சியார் கட்டளைசெய்வதற்கும் தண்டம் விதிப்பதற்கும் காரணமென்ன? அசுத்தம் அநேக நோய்கள் உண்டுபடவும் பரம்பவும் காரணமாயிருக்கிறபடியாலல்லவா? ஆகையால், "வறுமையிற் செம்மை" என்னும் முதுமொழிப்படி பெரியோருஞ் சிறியோரும் தங்களாலியன்றளவு சுத்தத்தைக் கவனித்து நடப்பதே புத்தி.



## சில சுகவிதிகள்

பிள்ளைகளும் மற்றோரும் தங்கள் சரீரசுகத்தை இலேசாய்ப் பேணுவதற்கான பல குறிப்புகளையும் பொதுவிதிகளையும் மிகப் பெயர்பெற்ற ஈனோ, டோன் முதலிய வைத்தியர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளில் நம்மவருக்கு உபயோகமான சிலவற்றை இங்கு தருவோம்.

அன்னபானம்—நீ சாப்படுவதிலும் குடிப்பதிலும் மிக ஒறுப்புள்ளவனாயிரு. "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" அதாவது, போசனத்தைக் குறைத்தல் பெண்களுக்கு அழகு என்பது முதியோர் மொழி.

மனுக்குலத்திலே பத்தில் ஒன்பதுபேர் மிதமிஞ்சி தின்று குடித்து வருகிறார்கள்.

நீ நோயுறும்போது பத்தியங்காத்துத் தீனைக் குறைக்கும்படி வைத்தியர்கள் உனக்குக் கற்பிக்கிறார்கள் அல்லவா? அப்படிச்செய்வது நீ சுகப்பட வழியானால் சுகத்தைக் காப்பாற்றுவதற்கு அதிலும் கொஞ்சம் மாத்திரங் கூட்டுவது போதுமே. மிருகங்களுக்கு நோயுண்டுபடும்போது இரை தின்னாமல் விட்டுவிடுகின்றன. அப்படியே உனக்கும் அசவுக்கியம் உண்டுபடும்போது இரண்டொருநேரத் தீனை விட்டுவிடுவது நன்மையேயன்றித் தின்மையன்று.

நீ சாப்படும் அளவு அல்ல, சமிக்கும் அளவே உன்னைப் போஷிக்கின்றது. வீடுவாசலிலிருந்து இலேசான வேலைசெய்கிறவர்களிலும் வெளியே சரீரப்பிரயாசையான வேலைசெய்கிறவர்களுக்குப் போசனம் அதிகந் தேவையாயினும் ஒவ்வொருவருந் தத்தமக்குத் தேவையான அளவை அப்பியாசத்தினாற் கண்டுபிடித்து அதில் நிலைப்பதே புத்தியாகும். சாப்பட்டபின் சற்றாகுதல் முட்டுத்தாக்கு உண்டுபடக்கூடிய அளவு ஒருபோதும் சாப்படாதே. நடுவயதுக்குப்பின் வயது போகப்போகத் தீனைக் குறைப்பது அகத்தியம். ஏனெனில், பின்னிட்டவயதில் இரைப்பை படிப்படியாய்

மெலிந்துபோவதினால் மேல்மிச்சமான உணவு சீரணிக்க முடியாமல் பற்பல நோய்களை விளைவிக்கும். சுகத்தைப் பேண விரும்பினால் உனக்கு விருப்பமானவைகளை யல்ல உனக்கு ஒத்துக்கொள்ளுகிறவைகளை மாத்திரம் புசி.

பண்ணிகாரம் முதலிய மாப்பண்டங்களையும் அதிக இனிப்பு உறைப்பு கொழுப்பு உள்ளவைகளையும் மிகக் குறைத்து அல்லது முற்றாய் விலக்கிவருவது உத்தமம்.

பானத்தளவில் சுத்த சலத்தைப்போல உத்தம பானம் வேறொன்றில்லை. உட்டண தேசங்களில் மது பானங்களால் கணக்கற்ற தின்மைகளேயன்றி யாதோர் நன்மையுமில்லையென்பது மிக்க அனுபவமுள்ள பெரிய வைத்தியர்களின் கொள்கை.

தீன் சமிப்பது முழுதும் இரைக்குடலி லல்ல. அதில் ஒரு பெரும்பகுதி வாயிலேயே நடக்கிறது. வாய் செய்யவேண்டிய அலுவலை இரைப்பை சரியாய்ச்செய்ய முடியாது. அநேகர் நாள்தோறும் அசீரணத்தால் உத்தரிக்கிறதற்குக் காரணம் அவர்கள் தங்கள் பற்களைத் தக்கவிதமாய்ப் பாவியாததினாலேயாம். போசனத்தை நன்றாய்ச் சப்புவதினால் வாயில் உமிழ்நீர் ஊறும். உமிழ்நீரிலுள்ள சீரணசாரமே சமிப்பின் ஒருபகுதிவேலையைச் செய்கின்றது. ஆகையால், சாப்படும்போது சில பிள்ளைகள் செய்வதுபோல கெதியாய் அதக்கி அதக்கி விழுங்காமல் உணவு உரிசியற்றுப் பசையாகுமட்டும் மெல்லமெல்ல நன்றாய்ச் சப்பிவிழுங்கு. இப்படிச் செய்வாயாகில் அசீரணத்தினாலும் மலக்கட்டினாலும் உண்டுபடும் கணக்கற்ற நோய்களுக்குத் தப்பிக்கொள்வாய். "பைய பைய மென்றால் பனையையும் மெல்லலாம்" "நொறுங்கத் தின்றால் நூறு வயது" என்பன முதியோர் மொழிகளாம். ஒருகோப்பை பாலை பைய பைய உறிஞ்சிக் குடிப்பாயானால் அதிலிருந்து இருமடங்கு ஆகாரசத்தை அடைவாய். சாப்பட நேரமில்லாவிடில் சரசரென்று மிண்டி விழுங்காமல் நன்றாய்ச் சப்பிக் குறைய்ச் சாப்படுவதே உத்தமம். சாப்படும்போது



பானம்பண்ணுதல் சமிப்பிக்குஞ் சாரத்தைப் பலங் குறைத்து சீரணிப்பைப் பழுதாக்குகின்றது. ஆகையால், கூடுமாகில், சாப்பட்டு முடியுமட்டும் பானம்பண்ணாதிரு.

சாப்பட்டபின் தீன் சமிபாட்டிற் போகுமுன் மனதுக்கு அல்லது உடம்புக்கு பிரயாசமான வேலைகளை விலக்கி உலாவுவது உத்தமம்.

மன அமரிக்கை—கோபம், வெடுவெடுப்பு, எரிச்சல், அவா, துக்கம், பயம், துராசை முதலியவைகளை அடக்கி மன அமரிக்கையாயும் சந்தோஷமாயும் இரு. துர்க்குணமுள்ளவர்கள் நீடிய சுகவாழ்வைக் காத்திருக்க முடியாது. சுகத்தை இழவாமல் குணத்தை யிழக்க ஏலாது. கோபாக்கினி நரம்புவாங்கலையும் நடுக்கத்தையும் உண்டாக்கி சீரணத்தைக் குழப்பி இருதயத்தையும் மூளையையும் தாக்குகின்றது.

எத்தனையோ சமயங்களில் கோபவெறியால் பாரிசவாயும் பைத்தியமும் மரணந்தானும் நேரிடுகின்றன.

மனநிலை சுகத்தின்மேல் எவ்வளவு அதிகாரமுடையதென்று அநேகர் அறியார்கள். மிக உரிசியான தீனின் எண்ணம் வாயை ஊறச்செய்யும். அரோசிகமான காட்சி உவாந்தியை உண்டாக்கும். பயம் ஒரே இரவில் தலைமயிரை நரைக்கப்பண்ணும். துக்கம் பாலை வற்றச்செய்யுமென்று சில மாதாக்கள் அனுபவத்தால் அறிவார்கள். வேதாகமஞ் சொல்வதுபோல "துக்கம் அநேகரைக் கொன்றுபோட்டது, பிரயோசனம் அதில் யாதொன்றுமில்லை. காய்மகாரமும் கோபமும் வாணாளைக் குறைக்கின்றன. கவலை காலத்துக்கு முந்தியே விருத்தாப்பியத்தைக் கூட்டிவரும்" ( சர்வபிர 30 25. 26 ) துராசைக்கு இரையாய்ப் போகிறவர்கள் படும் நிர்ப்பாக்கியத்தை உலகம் எந்நாளும் கண்டுவருகின்றது. மன அடக்கம் சுகவிதிகளிலொன்று. ஆகையால், உன் துர்க்குணங்களையும் மனக் குழப்பங்களையும் துராசைகளையும் அடக்கி மனதை துக்க கலக்கமானவைகளில் புலன்பட விடாதே. கோபம் பகை எரிச்சல் பழிவாங்கும் எண்ணம் ஆதியவைகளுக்கு ஒருபோதும்

இடங்கொடாமலிரு. மனமகிழ்ச்சியேயன்றி மனவிசாரம் உன் தொந்தரவுகளைத் தாங்க உதவாது. வெடுவெடுப்பும் துக்கமும் உடையவர்கள் தங்களுக்குள்ள வயதிலும் கூடினவர்களாகத் தோற்ற, சாந்தகுணமும் சந்தோஷமுமுள்ளவர்கள் தங்களுக்குள்ள வயதிலும் குறைந்தவர்களாக விளங்கி நெடுங்காலஞ் சீவிக்கிறார்கள்.

கடவுளில் உறுதியான நம்பிக்கையுள்ளவர்களுக்கு எவ்வித ஆபத்து சம்பத்து நேரிட்டாலும் அவர்கள் ஒருபோதும் தங்கள் மன அமரிக்கையை இழந்து போகார்கள். ஏனெனில், அவருடைய திருச்சித்தமின்றித் தங்களுக்கு யாதொன்றும் சம்பவிக்கமாட்டாதென்றும் அவர் தங்களுக்கு வரவிடுவதெல்லாம் தங்கள் நன்மைக்கேயல்லாமல் தின்மைக்கல்லவென்றும் அவர்கள் பூரணமாய் அறிவார்கள்.

ஒழுங்கு—இயன்றளவு எப்போதும் குறித்தநேரத்தில் சாப்படவும் நித்திரை கொள்ளவும் விழித்தெழும்பவும் சாக்கிரதையாயிரு. நெடுநேரம் பசியிருந்தபின் நிறையச் சாப்படும் வழக்கம் குன்மத்துக்கு வழியாகின்றது. தீன் நேரத்துக்கிடையில் தண்ணீரன்றி வேறொன்றுஞ் சாப்படாமலும் குடியாமலும் விடுவதுதாவிளை. உன் கவலைகளையும் துயரங்களையும் ஒருபோதும் படுக்கைக்குக் கொண்டுபோகாதே. கடுங்கோபத்தோடு நித்திரைக்குப் போவது சவுக்கியத்துக்கு கேடு. நித்திரையின்மையினால் அல்லது கனவினால் கஸ்திப்படாதபடி இராப்போசனத்தை மெத்தக் குறைத்துக்கொள். நித்திரையின்மைக்கு நல்லமருந்து படுக்கப்போகுமுன் அரைக்கோப்பை சுடுபாலைக் சொஞ்சங் கொஞ்சமாய் உறிஞ்சிக் குடிப்பதாம். படுக்கப்போகுமுன் பல்லையும் நாவையும் சுத்திசெய்வது உச்சிதம்.

அடுப்பில் உண்டுபடுஞ் சாம்பலை நேரத்துக்கு நேரம் அள்ளாவிடில் நெருப்பு மங்குவதும் நூர்வதும் அதிசயமல்ல. அப்படியே நமது சரீரத்தில் உண்டுபடும் கழிவுகளை நாள்தோறும் கிரமமாய் நீக்கிவாராவிடில் அவைகள் இரத்தத்தோடு சேர்ந்து அதை



அசுத்தப்படுத்திப் பற்பல நோய்களைப் பிறப்பிக்கும். ஆகையால், மலசல விமோசனத்தை நாள்தோறும் குறித்தநேரத்தில் செய்யத் தெண்டிப்பது உத்தமம். அது தொடக்கத்தில் சித்தியாதிருந்தாலும் சுபாவமுறையானது பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் சார்புடைய தாகையால் சிலகாலத்துக்குப் பின் அனுகூலமுண்டாகும். இப்பழக்கத்திற் பிள்ளைகளைத் திடப்படுத்தும் பெற்றார் அவர்களுக்கு ஓர் சீவபரியந்த நன்மையை அருளுகிறார்கள்.

சரீர அப்பியாசம்—காலமே எழுந்தவுடன் ஒருநல்ல ஈரத் துவாயால் சரீரம் முழுவதையும் நன்றாய் உரைஞ்சித் துடைத்துலர்த்தி கால் கையைச் சற்றுநேரம் உதறிச் சரீரத்தைக் குலுக்கி யசைப்பது இரத்தவோட்டத்தைச் சீர்ப்படுத்தி சுறுசுறுப்பையும் மன உற்சாகத்தையுங் கொடுக்கும். இவ்வித அப்பியாசம் கடுநோயற்ற சகலருக்கும் முக்கியமாய் வாதக்காரருக்கும் கை கால் பிடிப்புள்ளவர்களுக்கும் மிகப் பயனுள்ளது.

சிறுபிள்ளைகளை எப்போதும் இடுக்கித் திரியாமல் அவர்களை நடந்தோடித்திரிய விடுவதும் விளையாடுகிற வயதில் நேரத்துக்குநேரம் நன்றாய் விளையாடப்பண்ணுவதும் நல்வழக்கம். புத்திக்குறைவும் குரூரமிகுதியுமுள்ள சில பெற்றார் தம் மக்களை விளையாட விடமாட்டார்கள். அவர்கள் விளையாடுவதைக் கண்டால் அவர்களை உறுக்கி அடித்தாக்கினைப்படுத்தித் தடுப்பார்கள். இது புத்தியுமல்ல, நல் வளர்ப்பின் அடையாளமுமல்ல. நெடுகிலும் விளையாடித்திரிவது ஆகாதாயினும் மட்டாய் விளையாடுவது பிள்ளைகளின் சுகத்துக்கும் வளர்ச்சிக்கும் படிப்புக்கும் அவசியம். சரீரப்பிரயாசையான விளையாட்டும் வேலையும் இரத்தத்தோடு கலந்திருக்கும் துந்நீரை வெயர்வையாகத்தள்ளி இரத்தத்தைச் சுத்தப்படுத்திச் சரீரத்தைப் பெலப்படுத்தும். மேலும், சரீரமுயற்சி போசனப்பிரியத்தையும் நல்லுறக்கத்தையும் மனக்களிப்பையும் நீடிய சுகவாழ்வை

யுங் கொடுக்கும். சரீரமுயற்சியில்லாமல் நன்றாய்த் தின்று குடித்துக் குசாலாய்ச் சீவிக்கிறவர்கள் எவ்வளவு பருத்துக் கொழுத்திருந்தாலும் நற்சுகம் பெலன் ஊக்கம் உறக்கம் அற்றவர்களாய் நாட் போகப் போகப் பற்பல நோய்களுக்கும் அடிமைப்பட்டு மருந்துங் கையுமாயிருக்க, சரீரப்பிரயாசையான வேலைசெய்துவருகிறவர்கள் பரும்படியான தீனை அரும்பூட்டாய்த் தின்று குடித்துவந்தாலும் நற் சுகமுள்ள பெலசாலிகளாகச் சீவிக்கிறார்கள். ஆகையால், "மருந்துகால் மதி முக்கால்" என்றபடி சுகவாழ்வை விரும்புவோர் தேகத்தை வேலை விளையாட்டினால் அப்பியாசப்படுத்திவருவதே புத்தியாகும்.

சுத்தகாற்று—சில மனுஷர் கிழமைக்கணக்காகப் போசனமில்லாமலும். நாட்கணக்காகப் பானமில்லாமலுஞ் சீவித்திருக்கிறார்கள். ஆனால், எவராயினும் காற்றில்லாமல் ஒரு மணிநேரஞ் சீவிப்பது பரிச்சேதங் கூடாது. நாம் பிறக்கும்போது முதற்செய்யுங் காரியம் மூச்சுவாங்குவது, நாம் இறக்கும்போது செய்யுங் கடைசிக்காரியம் மூச்சுவிடுவது. நாம் பிறந்தநிமிஷந் தொட்டு மரணபரியந்தம் இடைவிடாமல் மூச்சுவிட்டுக் கொண்டும் மூச்சுவாங்கிக்கொண்டுமிருக்கிறோம். ஆகவே, நாம்பிழைத்திருப்பதற்கு காற்று இன்றியமையாக் காரியம். எப்படி அசுத்த பதார்த்தங்களைச் சாப்பிடுவதினால் சரீரத்துக்கு வியாதி உண்டுபடுகின்றதோ அப்படியே அசுத்த காற்றைப் புகட்டுவதினால் வியாதி உண்டாகின்றது. ஒரு நடுவயதான மனுஷனின் தேகத்தில் சுமார் பத்துக்கொத்து உதிரமுண்டு. இந்த இரத்தமெல்லாம் இரண்டரை நிமிஷத்தில் சுவாச உறுப்புகளையும் சரீரம் முழுவதையும் சுற்றியோடுகிறபடியால் இரண்டரைநிமிஷம் அசுத்த காற்றை உட்கொள்ளுகிறவனுடைய இரத்தமெல்லாம் நஞ்சூட்டப்படத்தொடங்கி தேகம் முழுவதையுந் தாக்குகின்றது. ஆனதுபற்றி நெடுகிலும் அசுத்த காற்றைப் புகட்டும் பிள்ளைகளும் மற்றவர்களும் பற்பல நோய்களுக் கிரை



யாய்ப்போவதும் அவர்களுடைய வாணாள் குறைவதும் அதிசயமல்ல. ஒருவன் உட்கொள்ளும் ஆவி சுத்தமாயிருந்தாலும் அவன் விடும் ஆவி அசுத்தமானது. ஆகவே, வளரும் வயதில் விடுதிப்பாடசாலை, தருமசாலை முதலிய வீடுகளில் தொகையான பிள்ளைகள் நெடுநாட் சீவிக்கும்போது அவர்கள் வளர்ச்சியும் பெலனும் சவுக்கியமும் குறைந்தவர்களாகிறார்கள். சனம் நெருக்கமான கோவில்களிலும் காற்றோட்டமில்லாத வீட்டறைகளிலும் இருக்குங் குழந்தைகள் குழறியழுது திக்குமுக்குப்படுவதற்கு காரணமென்ன? சாதாரணமாக சுத்த காற்றில்லாததினாலல்லவா? அதற்கு அத்தாட்சி அவர்களை வெளியே கொண்டுபோய்விட்டால் அழாமல் அமரிக்கையாயிருக்கிறார்கள். கடற்கரையிற் சீவிக்கிறவர்கள் எவ்வளவு வறுமையும் வசதிக்குறைவுகளுமுள்ளவர்களாயிருந்தாலும் அவர்கள் சாதாரணமாக நல்ல சுகமும் சந்தான விருத்தியுமுடையவர்களாயிருப்பதற்குக் காரணம் கடற்காற்றல்லவா? ஆகையால், இயன்றளவு எப்போதும் வீடுவாசல்களிற் காற்றோட்டமிருக்கவும், அசுத்தகாற்றை விலக்கி சுத்தகாற்றைப் புகட்டவுங் கவனிப்பது அவசியம். காலையில் படுக்கையைவிட்டெழுந்தவுடனும் சுத்தகாற்றுள்ள வெளியான இடங்களிலிருக்கும்போதும் பலமுறை பெருமூச்சு வாங்குவதும் விடுவதும் மெத்த நல்லதாம்.

வீடுகளைத் தென்றற்காற்றுப்பட தெற்கே நன்றாக வெளிவிட்டுக் கட்டவேண்டுமென்றதைக் காட்டும்பொருட்டு "தெற்குக்குச்சு வடக்கு மாளிகையை அளிக்கும்" என்றொரு பழமொழி சொல்லுவார்கள். இது ஒரு வீண் "சாத்திர" மல்ல, நல்ல சுகாதார ஒழுங்கு. வீட்டின் தெற்குப்பக்கத்தை வேறொரு வீடாவது இன்னும் உயர்ந்த வேலி முதலியவைகளாவது அடைத்துப்போடவிட்டால் வீட்டிலே சுத்தமான காற்றோட்டமிருக்க மாட்டாது.

சிறுவந்தொட்டுச் சுகசரீரமுடையவர்களும் காற்றோட்டமுள்ள வெளியான இடங்களில் வேலைசெய்கிறவர்களும் மேற்படி ஒழுங்குகளைக் கவனியாமல் சுகமுள்ளவர்களாக இருந்தாலும் இவ்வொழுங்குகளை அனுசரித்துவருதல் சகலரும் நீடிய சுகவாழ்வடைய மிகவும் உதவியாயிருக்குமென்பது அனுபவமுடைய அநேக பெரிய வைத்தியரின் கொள்கையாம். “சரீர சௌக்கிய ஆஸ்தியைவிட மேலான ஆஸ்தியில்லை; இருதய சந்தோஷத்தைவிட மேலான சந்தோஷமில்லை” ( சர்வபிரசங்கி ( 30-16.)

## மட்டசனத்தின் பயனுக்கு ஓர் உதாரணம்

அளவுபிரமாணமின்றித் தின்று குடித்து சாப்பாட்டிராமராகச் சீவிக்கிறவர்கள் நினையாதநேரத்தில் நோய்வாய்ப்பட்டு உத்தரிப்பதுமன்றித் தங்கள் வாணாளையுங் குறுக்கிவிடுகிறார்கள். அவர்கள் தங்கள் இச்சைகளையடக்கிச் சீவியமுறையில் மட்டசனத்தை அனுசரிப்பார்களாயின் அவர்கள் ஆசிக்கும் நீடிய சுகவாழ்வை அடையக்கூடுமென்பதற்கு அநேக உதாரணங்களுண்டு. அவைகளில் ஒன்றை இங்கு தருவோம்.

லுவிஸ்கொர்நாரோ என்பவர் தான் நூறுவயதுமட்டுஞ் சீவித்த முறையைப்பற்றி எண்பத்தாறும் வயதில் தானாக எழுதிய சரித்திரம் சீர்திருத்தம்பெற்ற சகல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதுமன்றி அதிலோர் பிரதி இங்கிலாந்தின் நூதனசாலையிற் காப்பாற்றப்பட்டும் வருகின்றது. அவர் தம்மைப்பற்றிச் சொல்வதாவது:

நான் முப்பத்தைந்து வயதுக்கும் நாற்பது வயதுக்குமிடையிலிருக்கும்போது மெல்லிய விடாக்காய்ச்சல், கழிச்சல், வயிற்றுவலி, வாதரோகம் முதலிய நோய்களாற் பீடிக்கப்பட்டு ஒருவழியாலுங் குணப்படமுடியாமலிருந்தேன். எனது முற்கோபக்குணத்தையிட்டு யாராவது என்னோடு சீவிப்பது வல்லையாயிருந்தது. கடைசியாய் வைத்தியர்கள் எனக்குச் சொன்ன



தென்னவெனில், எனக்கு விருப்பமானவைகளையல்ல எனது உடம்புக்கு இணங்கிய அன்னபானத்தைப் பரிசோதித்தறிந்து அவைகளை மிகக் கட்டுமட்டாயும் கிரமமாயும் அருந்தி வருவதினாலும் வெடுவெடுப்பை அடக்கிச் சாந்தமாயிருப்பதினாலும் நயம்பெறக் கூடுமேயன்றி மருந்தினாற் கூடாதென்றார்கள். நான் நெடுகிலும் பற்பல நோய்களால் வாதிக்கப்பட்டிருந்தாலும் இளம் வயதிற் சாக மனமில்லாததினால் வைத்தியர்கள் எனக்கூட்டிய புத்தியின்படி சீரணிக்கப் பிரயாசமான பதார்த்தங்களை விலக்கி இலகுவாய்ச் சமிக்கக்கூடியவைகளை மாத்திரம் மிகக் கட்டுமட்டாய்ப் புசிக்கத்துவங்கினேன். அன்றியும், இயன்றளவு மிதமிஞ்சிய களைப்பையும் அதிக காங்கை குளிரையும் அசுத்தகாற்றுள்ள விடங்களில் நெடுநேரம் நிற்பதையும், நேரந்தப்பிச் சாப்படுவதையும் சயனிப்பதையும் விலக்கிவந்தேன். இதன் பயனாகச் சில நாட்களுள் அதிகம் நயங்கண்டதுமன்றி ஒரு வருஷத்துக்கிடையில் சகல வருத்தங்களிலுமிருந்து விடுதலையாகிப் பூரண சவுக்கியமடைந்தேன் என்பதை ஒருவேளை சிலர் நம்பமாட்டார்களாக்கும். எத்தனையோ நோயாளிகள் என்னைப்போலக் கிரமமாயும் மட்டசனமாயும் சீவிப்பார்களாயின் நற்சுகமும் நீடிய வாழ்வும் அடையக்கூடுமென்று அனுபவத்தால் அறிவார்களே.

நான் நாற்பதுவயதுக்கு மேற்படச் சீவிக்க முடியாதென்றிருந்தாலும் இப்போது எண்பத்தாறு வயதுள்ளவனாயிருக்கிறேன். என்றாலும், என் பார்வை, கேள்வி, பல்லு, குரல், புத்தி, ஞாபகம், இருதயம் முதலியவைகள் இன்னும் பூரணமான நிலையிலிருக்கின்றன. பிறருதவியில்லாமல் நானாகக் குதிரையிலேறிச் சவாரி பண்ணிவருவதுமன்றி, உயர்ந்த படிக்கட்டுகளிலும் மேடு குன்றுகளிலும் இலகுவாயேறிவருகிறேன். இந்நாட்களில் நான் எழுதிய பகிடியும் மகிழ்ச்சியும் நிறைந்த நாடகத்தினால் என் புத்தி இன்னும் எவ்வளவு தெளிவாயிருக்கின்றதென்பதையும், என் வாணாள் துக்கம் தூக்க

மற்ற செந்தளிர்ப்பான சீவியமென்பதையும் யாருங் கண்டுபிடிக்கலாம். போசனப்பிரியத்துக் கிடங்கொடுக்கும் ஓர் வாலிபன் எவ்வளவு சுகதேகமுடையவனாயிருந்தாலும் அவனுடைய சீவியத்துக்கு நான் சீவிக்கும் முறையையும் என் நரைத்த மயிர்களையும் மாற்றிக்கொள்ள ஒருபோதும் உடன்படேன். ஏனெனில், வாலிபர் தங்கள் ஆசாபாச இச்சைகளுக்கு அடிமைகளாகிக் கணக்கற்ற பிணிகளுக்கும் அகால மரணத்துக்கும் ஏதுவாய்ப் போகிறார்கள்.

வயது செல்லச்செல்ல என் சத்துக்கள் ஒன்றுங் குன்றாமலிருப்பதற்கு நியாயமேதெனில், வயது தளரத் தளர பெலனான தீனையும் குறைத்துக் குறைத்து வருகிறேன். இப்படிக் குறைப்பது அவசியம். ஏனெனில், ஒருவன் என்றென்றைக்குஞ் சீவிக்க முடியாது. அவனுடைய முடிவு கிட்டி வரவர அவன் இயற்கையாய்க் குறையக் குறையவே சாப்படக் கூடியவனாகிறான். அவ்வித அந்தஸ்தில் ஒரு முட்டையின் மஞ்சட்கருவும் கொஞ்சம் பாலும் ஒரு துண்டு அப்பமும் ஒரு நாளைக்குப் போதிய உணவு. அதற்கு மேற்பட்டது வருத்தத்தை உண்டாக்கிச் சீவியத்தைக் குறுக்கிவிடும். என் மட்டில் நான் நூறுவயதுமட்டும் சீவித்து நோய் வருத்தமில்லாமற் சாக முழு நம்பிக்கையாயிருக்கிறேன். வறியவராயினுஞ் செல்வராயினும் மட்டசனமாய்த் தின்று குடித்து மனரம்மியமாயிருக்கிற யாரும் அந்திய காலத்தில் இந்த நன்மையைக் காத்திருக்கலாம்.

ஒரு நோயாளிக்கு வைத்தியர் முதற் கற்பிக்குங் காரியங்களில் ஒன்று பத்தியம். பத்தியமின்றி மருந்து சித்திப்பது அரிது. பத்தியங்காக்கிறவன் தன் வழக்கமான தீனைக்குறைத்து அல்லது மாற்றி உருசியைப் பாராமல் சுகத்துக்கேற்றதை மாத்திரம் மட்டாய்ப் புசிக்கவேண்டியவனாகிறான். அப்படிச்செய்து குணப்பட்டவன் பிறகும் தனது உணவின் அளவையும் குணத்தையும் நியாயமாகத் தன் தேவைக்குத்தக்கதாகக் கொஞ்சம்மாத்திரங் கூட்டிக்கொள்வானாகில்



மீண்டும் மீண்டும் அவனுக்கு வைத்தியரும் மருந்தும் தேவையாயிராதே.

சுகத்தைப் பேணுவதற்காக எவரும் போசன பதார்த்தங்களின் தன்மையையும் அளவையும் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது. எல்லாருடைய உடலும் எல்லாவிதமான தீன் பண்டங்களையும் சீரணிப்பிக்க முடியாது. மேலும், எல்லாருக்கும் ஒரே அளவான போசனம் தகாது. ஆகையால், ஒவ்வொருவரும் உருசியையும் விருப்பத்தையும் பாராமல் தன் தன் இரைப்பையில் இலகுவாய்ச் சமிக்கக்கூடிய பதார்த்தங்கள் எவையென்றும், அவைகளில் எளிதாய்ச் சீரணிக்கக்கூடிய அளவு என்னவென்றும் பலநாள் அப்பியாசித்தறிந்து அதன்படி உறுதியாய் நிலைப்பதே சவுக்கியத்தைக் காப்பாற்ற நிச்சயமானவழி. இவ்வித மட்டசனமான சீவியத்தின் பயன் யாதெனில், அசீரணத்தால் உதிரத்தி லுண்டுபடும் துர்நீர் குறைந்து குறைந்து அற்றுப்போக, இரத்தம் சுத்தமும் பலத்ததுமாகி கனல், குளிர், களைப்பு, காயம், முறிவு முதலியவைகளை இலேசாய்த் தாங்கக் கூடியதாகும்.

எழுபதுவயதில் ஒருநாள் சவாரிபோகும்போது தற்செயலாய் வண்டி குடைக்கொள்ள நான் தரையில் விழுந்து, குதிரைகளை உடனே மறிக்க முடியாததால் வண்டியோடு வெகுதூரம் இழுபட்டேன். அதனால், என்னைக்கண்ட யாரும் ஏங்கத்தக்கதாய்ச் சரீரம் முழுவதுங் காயப்பட எலும்பு நரம்புகள் விலகி கால் கையெல்லாம் உளுக்கிக்கொண்டது. இந்தப் பரிதாபமான ஸ்திதியில் வைத்தியர்கள் என்னைக் கண்டபோது நான் மூன்று நாளைக்குள் செத்துப்போவேனென்றும், என்றாலும் வீக்கமுங் காய்ச்சலும் உண்டுபடாதபடி இரத்தமுமெடுத்து விரேசனமுங் கொடுத்துப்பார்ப்பது நல்லதென்றுஞ் சொன்னார்கள். ஆனால், நான் நெடுங்காலமாக மிக மட்டசனமாய்ச் சீவித்துவந்ததின் பயனாக என் இரத்தம் நல் நிலையிலிருக்கிறதென்று நான் திட்டமாய் அறிந்திருந்ததினால் வைத்தியர்களுடைய எண்

ணத்துக் கிணங்காமல் பிசகின எலும்பு நரம்புகளைச் சரிப்படுத்தச்செய்து நோவை எடுக்கிறதற்காக தைலம் மாத்திரம் பூசுவித்துக்கொண்டு வந்தேன். சில நாட்களுள் யாதொரு வீறு வருத்தமில்லாமல் நான் சுகப்பட்டது வைத்தியர்களுக்கு ஓர் புதுமைபோலத் தோற்றிற்று.

மட்டசனமாய்ச் சீவிக்கிறவர்கள் குளிர், காங்கை, களைப்பு முதலியவைகளால் சிலவேளைகளில் வருத்தப்பட்டாலும் ஏதாவது பெரும் மோசம் நேருமோவென்று பயப்படத் தேவையில்லை. ஆனால், அநேகர், வயோதிபர் முதலாய், தாங்கள் அன்னத்தையும் எவ்வளவாகத் தின்றாலும் குடித்தாலும் அதனால் தங்களுக்கு யாதொரு விக்கினமுமில்லையென்று விலாப்புடைக்கத் தின்று குடித்து வருகிறார்கள். இவர்கள் வழக்கமாய் நற்சுகத்தை அனுபவியாமல் இலேசாய் வெடுவெடுப்புக்கும் பற்பல நோய்களுக்கும் உள்ளாகித் தங்கள் வாழ்நாளையும் குறுக்கிவிடுவது நிச்சயம்.

தேவைக்கு மேற்படச் சாப்படுவதுங் குடிப்பதும் தின்மைக்கு வழியென்று அனுபவத்தால் அறிந்திருக்கிறேன். நாலு வருஷங்களுக்குமுன்னே நான் சாப்பட்டு வந்த போசனம் எனக்குப் போதாதென்று வீட்டுக்காரர் நெடுகிலும் அலட்டிக்கொண்டுவந்ததால் அவர்களுடைய அரிகண்டத்துக்கு அஞ்சி நான் நெடுங்காலமாய் நாள்தோறும் சாப்பட்டுவந்த பன்னிரண்டு அவுன்ஸ் உணவைப் பதினாலாக்கினேன். பன்னிரண்டு நாட்களுள் எனது மனரம்மியமும் சுறுசுறுப்பும் செந்தளிர்ப்பும் அற்றுப்போக, துக்கமுந் தூக்கமும் வெடுவெடுப்பும் காய்ச்சலும் குத்தும் உண்டுபட்டு முப்பத்தைந்து நாளாக வருத்தப்பட்டேன். இதற்கிடையில் என்னைக் கண்டவர்கள் இந்தமுறை என்பாடுமுடிந்து போகுமென்று கதைத்துக்கொண்டார்கள். ஆனால், நான் சுகப்பட்டெழும்பினேன். அதற்குக் காரணம் நான் நெடுங்காலமாக அனுசரித்துவந்த ஒழுங்கும் ஒறுப்பனவும் என்பதற்குச் சந்தேகமில்லை.



வாலிபர் மட்டசனமாய்ச் சீவிக்கச் சம்மதியாமலிருப்பதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறதில்லை. ஏனெனில், அவர்கள் தங்கள் ஆசாபாச இச்சைகளால் ஆளப்படுகிறார்கள். அவர்களுக்கு அப்பியாசமுமில்லை. ஆனால், நாற்பது ஐம்பது வயதுள்ளவர்கள் ஏன் தங்கள் இச்சைகளை அடக்கிக் கட்டுமட்டாய்த் தின்று குடித்துச் சுகமாயும் மனரம்மியமாயுஞ் சீவியாமலிருக்கிறார்களென்று எனக்கொருபோதும் விளங்கவில்லை.

கொர்நாரோ 95-ம் வயதில் எழுதியிருக்கிறதாவது: எனக்கிப்போது 95 வயது நடக்கிறது. என்றாலும், நான் இன்னும் நன்றாய்ச் சாப்பட்டு சயனித்து சந்தோஷமும் மனரம்மியமும் உற்சாகமும் நிறைந்தவராயிருக்கிறேன். இனி நான் நெடுங்காலஞ் சீவிக்க முடியாதாயினும் நூறு வயதுமட்டுஞ் சீவிப்பேனென்று முழு நம்பிக்கையாயிருக்கிறேன். இன்னும் என் புத்தி, குரல், பார்வை, கேள்வி முதலியவை சற்றுங் குன்றாமல் பூரணமாயிருக்கின்றன. எனது கவனமான சீவியத்துக்குச் சம்பாவனையாகக் கடவுள் இந்த நன்மைகளை எனக்கருளினதற்காக அவருக்கு நன்றி செலுத்தி வருகிறேன்.

கொர்நாரோ நமக்கூட்டும் படிப்பனை யாதெனில், மட்டசனமும் மனரம்மியமும் நீடிய சுக வாழ்வுக்கு வழி என்பதாம்.

# ஐந்தாம் அதிகாரம்

## பிள்ளைகளின் ஞானச்சீவியாரம்பம்

சருவேசுரன் ஆதித்தாய் தந்தையரைச் சிருட்டித்தபோது அவர்கள் சந்ததியார் அனைவரும் அவர்களுடைய நன்மைக்குந் தின்மைக்கும் பங்காளிகளாயிருக்கவேண்டுமெனச் சித்தமாயிருந்தாரென்று அனுபவத்திற் காண்கிறோம். அவர்கள் அழிவற்ற ஆத்துமமும் சுயாதீனமும் புத்தி, நினைவு, சித்தம் ஆதிய தத்துவங்களும் உடையவர்களாயிருந்ததுமன்றிப் பூமியிலுள்ள சகலவற்றின்மேலும் பூரண அதிகாரமுமுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் சந்ததியாராகிய நாமும் இந்த நன்மைகளுக்கெல்லாம் சுதந்தரராயிருக்கிறோம். அதுபோல அவர்கள் கடவுளின் எச்சரிப்பைச் சட்டைபண்ணாமல் காய்மகாரம் நிறைந்த பிசாசின் வார்த்தையை நம்பித் தாங்களும் தேவர்களாயிருக்கக் கொண்ட பேராசையினாற் செய்தபாவத்துக்கும் அதன் பயனாகப் பெற்ற உலக உபத்திரவம், சாவு, நரகம் முதலிய தண்டனைகளுக்கும் நாமனைவரும் பங்காளிகளாய்ப் போனோம். இத் தண்டனைகள் யாவிலும் தேவ சமாதானத்தையும் ஞானச்சீவியத்தையும் மோட்ச உரிமையையும் இழந்து நரகத்துக் கேதுவானதே அதி நிர்ப்பாக்கியமானது. இப் பரம நன்மைகளை இழப்பதற்குக் காரணமான பாவத்தை நாமாகச் செய்யாதபடியால் நீதியும் இரக்கமும் நிறைந்த நிர்மலதேவன் இப் பாவத்தில் நின்று நாம் நீங்கி ஞான சீவியத்திற் பிரவேசிப்பதற்கு மிக்க இலகுவான வழிவகையொன்றை அதாவது, ஞானஸ்நானம் என்னும் தேவதிரவிய அனுமானத்தை ஏற்படுத்தச் சித்தமாயினார். இதன் பயன், அவசியம் ஆதியவைகளை அறியாதவர்கள் பலமுறை பிள்ளைகளை ஞானத் தீட்சையின்றிச் சாகவிட்டுவிடுகிறார்கள், அல்லது அது ஓர் அற்ப காரியமென்றெண்ணினாற் போல நெடுநாட் கடத்தியே அதைக் கொடுப்பிப்பார்



கள். ஆகையால், இவ் அதிகாரத்தில் ஞானஸ்நானத்தின் பயனையும் அவசியத்தையும் விளக்கியபின் பெற்றோருக்கும் ஞானத் தாய் தந்தையருக்கும் இதன்மட்டிலுள்ள கடமைகளைக் காட்டுவோம்.

### ஞானஸ்நானத்தின் பயன்

ஞானஸ்நானத்திற்கு இன்றியமையாததாயுள்ள பகுதி ஓர் சுருக்கமான சடங்கிலேதான் அடங்கும். சில துளி தண்ணீரைத் தலையில் வார்த்துச் சில வார்த்தைகளை உச்சரிப்பதினால் எய்தக்கூடிய பெரும்பயன் ஏதென்று அறிவீனரும் அவிசுவாசிகளும் ஆச்சரியப்படுவார்கள். ஒரு குழந்தை ஞானஸ்நானம் பெறும்போது ஆதித் தாய் தந்தை கட்டிக்கொண்ட பாவத்தினாலே சென்மத்தின் வழியாய்ச் சகல மனுஷருக்கும் உண்டாகின்ற தோஷமாகிய சென்ம பாவத்திலும் பிசாசின் அடிமைத்தனத்திலும் நின்று நீங்கிச் சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் பிள்ளையாகி ஞானச் சீவியத்தையும் மோட்ச உரிமையையும் அடைகின்றது. பிராயப்பட்டவர்களும் முறைமையாய்த் தக்க ஆயத்தத்தோடு அதாவது, வேத சத்தியங்களைப் படித்தறிந்து பிசாசையும் சகல பொய்மதங்களையும் முற்றாய் விட்டு விலகி, தம் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மெய்யான சருவேசுரனை என்றென்றைக்கும் முழு மனதோடு விசுவசித்து வணங்கிச் சேவிப்போமென்றும் அவருடைய வேதம் படிப்பிப்பதையெல்லாம் விசுவசித்து அனுசரிப்போமென்றும் உண்மையான மனதுடன் வாக்குப்பண்ணி ஞானஸ்நானம் பெறும்போது சென்ம பாவத்திலும் தாங்களாகச் செய்த சகல கன்ம பாவத்திலும் நின்று நீங்கி மேலே சொல்லப்பட்ட சகல நன்மைகளுக்கும் பங்காளிகளாகிறார்கள். உண்டாகட்டும் என்ற ஒரே வார்த்தையினால் உலகத்தை ஆக்கிய உன்னத கடவுள் அற்ப காரியத்தைக்கொண்டு அதி நவமான காரியங்களைச் செய்வது தமக்கு வல்லையல்லவென்று அநேக சமயங்களில் வெளிப்படையாய்க் காட்டியிருக்கிறார்.

சீரியதேசத் தரசனின் படைத் தலைவனாகிய நாமான் என்பவன் தீரா நோயாகிய குஷ்டரோகத்தாற் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில் அவன் மனைவிக்கு இஸ்ரயேல் தேசத்து மங்கை யொருத்தி ஊழியக்காரியாயிருந்தாள். இவள் ஓர்நாள் தன் எசமாட்டியை நோக்கி எங்கள் எசமான் சமாரியாவிலிருக்கும் தீர்க்கதரிசியிடம் போனால் அவர் இவரைக் குணப்படுத்தி விடுவாரே என்றாள். நாமான் இதைப் பரீக்ஷித்துப்பார்க்க விரும்பி இஸ்றவேல் இராயனுக்கு தன் அரசனிடம் வாங்கிய ஓர் கடிதத்தோடும், தீர்க்கதரிசிக்கு வெகுமதிபண்ண விலையுயர்ந்த பொருட்கள் திரவியங்களோடும் பிரயாணமாகி மேற்படி காகிதத்தை இஸ்றவேல் இராயனிடங் கொடுத்தான். அதில் சீரிய விராயன் வரைந்திருந்தது யாதெனில் இக்கடிதத்துடன் வரும் நம் ஊழியனாகிய நாமானின் குஷ்டரோகத்தைக் குணமாக்கி விடும்படி அவனை உம்மிடம் அனுப்புகிறேன் என்பதாம். இராயன் இதை வாசித்துத் திகிலடைந்து தன் வஸ்திரங்களைக் கிழித்து நானென்ன, உயிரைக்கொடுக்கவும் உயிரை அழிக்கவும் வல்லமையுள்ள தேவனா? சீரிய வரசன் என்னோடு அநீதமாய்ச் சுரட்டுப் பிடிக்கச் சமயந் தேடுகிறாரே என்று பரிதபித்து நின்றார். எலிசே எனுந் தீர்க்கதரிசி இதை யறிந்து,நோயுற்ற அம் மனிதனைத் தம்மிட மனுப்பும்படி அரசனுக் கறிவிக்க, நாமான் தன் பரிவாரத்தோடு போய் அவர் வாசலில் நின்றான். அப்பொழுது எலிசே அவனுக்கு ஆளனுப்பி நீர் போய் யோர்தான் நதியில் ஏழு முறை குளித்தால் பூரண சவுக்கியமடைவீரென்று அறிவித்தார். நாமான் இதிற் கோபமுற்று தீர்க்கதரிசியானவர் என்னிடம் அணுகித் தேவ நாமத்தை முன்னிட்டு குஷ்டங்கண்ட இடங்களைத் தன் கரங்களாற் தொட்டு என்னைச் சொஸ்தமாக்குவாரென்றெண்ணி இங்கு வந்தேன். நான் குளிப்பதினாற் குணமுறக் கூடுமாயின் யோர்தானைப்பார்க்க அதிக சவுக்கியமான தெண்ணீரையுடைய நதிகள் எங்கள் ஊரில் இல்லையா என்று சினந்து தன் ஊருக்குத் திரும்ப ஆரம்



பித்தான். அப்போது அவனுடைய ஊழியர் அவனை நோக்கி ஆண்டவனே தீர்க்கதரிசி உமக்குக் கஷ்டமான ஒரு காரியத்தைக் கற்பித்திருந்தால் அதைச் செய்வீரல்லவா? அவர் போய்க் குளியும் சுத்தமாவீர் என்றபோது நீர் எவ்வளவு பூசிதமாய்க் கேட்டுக்கொள்ளவேண்டிய தென்றார்கள். நாமான் இதையுணர்ந்து யோர்தான் நதிக்குச் சென்று தேவ தொண்டர் தனக்குக் கற்பித்தபடி ஸ்நானஞ்செய்தான். உடனே தீர்க்கதரிசியின் வாக்குப்படி பூரண சவுக்கியமடைந்தான். பின்பு எலிசேயிடம் வந்து இஸ்ரயேலி லிருக்குந் தேவனல்லாதே லோகாதி லோகங்களில் வேறே தேவர்க ளில்லையென்று அங்கீகரித்ததுமன்றி இனிக் கர்த்தருக்கேயன்றி அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையுஞ் செலுத்துவதில்லையென்றும் பிரதிஞ்ஞை செய்து தன் காணிக்கைகளைக் கையேற்கும்படி வேண்டி நின்றான். தீர்க்கதரிசியோ அவ் வெகுமதிகளில் யாதொன்றையு மேற்றுக்கொள்ளாமல் அவனை அனுப்பிவிட்டார். (4. அரசர் 5.) ஆற்று நீரைக்கொண்டு குஷ்டரோகத்தைக் குணமாக்க வல்லமையுள்ள தேவனுக்கு ஞானஸ்நானத் தண்ணீரால் பாவக் கறையை நீக்கி ஆத்துமத்தைச் சுத்தமாக்குவது கஷ்டமல்ல. இவ்விடத்திலே, நாமான் சுக மடைந்த நதியாகிய யோர்தானிலேதான் பின்னொருகாலம் அர்ச். ஸ்நாபக அருளப்பர் தபசைப் போதித்து அவ் வாற்று நீராற் சனங்களுக்குத் தவத்தின் ஞானஸ்நானங் கொடுத்து உலக இரட்சகரின் வருகைக்கு அவர்களை ஆயத்தப்படுத்தினார் என்றதையும் மனுக் குலத்தைப் பாவத்தில் நின்று நீக்க வந்த யேசுநாதசுவாமியும் தமது பிரசித்த சீவியத்தைத் துவக்குமுன் நமக்கு முன்மாதிரியாகவும் ஞானஸ்நானத்தின் பயனையும் அவசியத்தையும் நமக்குப் படிப்பிப்பதற்காகவும் இவ் வாற்றிற்தானே இந்த அருளப்பர்கையால் ஞானத் தீட்சை பெறச் சித்தமானார் என்றதையுங் குறிக்கக் கடவோம்.

தண்ணீருக்கு விசேஷ வல்லமை அருளப்பட்டதற்கு வேறோர் உதாரணமாவது: எருசலேம் நகரில் பெத்சாயித் அதாவது ஆட்டுக் குளமென்று பேர் விளங்கிய ஓர் குளமுண்டு. முற்காலம் பலிக்குக் குறிக்கப்பட்ட ஆடு மாடு முதலிய மிருகங்களை இக் குளத்திற் கழுவி எடுப்பார்கள். அன்றியும், வரிவேத முறைமைகளுக்கெதிரான துடக்குள்ளவர்களும் அதிற் குளிப்பது வழக்கமாயிருந்தது. உலக இரட்சகரின் காலத்தில் இவ் வாவிக்கு ஐந்து மண்டபங்கள் இருந்தன. அவைகளில் பெருந்தொகையான குருடர் சப்பாணிகள் சூம்பின உறுப்புடையோர் முதலிய வியாதிஸ்தரை எந்நேரமுங் காணலாம். இவர்கள் அங்கிருந்த நோக்கம் யாதெனில், சில சமையங்களில் ஓர் தேவதூதன் இவ்வேரியிலிறங்கத் தண்ணீர் தளம்பும். தளம்பியபின் எவன் முந்தி அதி லிறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனா யிருந்தாலும் சொஸ்தமாவான். ( அருளப்பர். 5.)

மேலும், ஒரு உதாரணம்: யேசுநாதர் ஒருநாள் ஓர் பிறவிக்குருடனைக் கண்டபோது அவன்மேல் மனமிரங்கிக் கொஞ்ச மண்ணைக் கிள்ளி அதைத் தமது திருஉமிழ் நீரிற் குழைத்து அவன் கண்ணிற் பூசி நீ போய் சிலோவை என்னுங் குளத்தில் உன்னைக் கழுவு என்று திருவுளம்பற்றினார். சிலோவை என்பது அனுப்பப்பட்டவரென்று அர்த்தமாம். அவன் போய் அதிற் கழுவிப் பார்வையடைந்தான். ( அருளப்பர். 9. )

மேலே சொல்லப்பட்ட ஆறு குளங் குட்டைகளுக்குச் சவுக்கியத்தைக் கொடுக்குஞ் சக்தி இயல்பாயிருக்கவில்லை. சருவேசுரனே அவ் வரத்தைத் தமக்குச் சித்தமானபோது அவைகளுக்கு அருளிவந்தார். அவரே தாம் ஏற்படுத்திய ஞானஸ்நானத்துக்கும் பாவ அழுக்கில் நின்று ஆத்துமத்தைச் சுத்திகரிக்கும் தவறா வரத்தைத் தந்தருளினார். மேற் குறித்த நீர் நிலைகளில் ஆரோக்கிய மடைந்தவர்களும் தங்களெண்ணப்படியல்ல, தேவ சித்தப்படி சட்ட திட்டமாய்ச் செய்தே



குணப்பட்டார்கள். அவ்வாறே ஞானஸ்நானத்தையும் மனுஷர் தங்கள் புத்திக்கும் போக்குக்கும் இசைந்தபடியல்ல தேவ திருச்சபையின் முறைமைப்படி பெற்றே அதன் பயனை அடையவேண்டியது.

தண்ணீரானது ஊத்தையுள்ளதைச் சுத்தமாக்கவும் உலர்ந்ததை நனைக்கவும் தாகம் மூர்ச்சை முதலியவைகளைத் தீர்க்கவும் உதவும். அன்றியும், அது உடம்புக்குச் சுகத்தையும் பலத்தையும் பூமிக்குச் செழிப்பையும் தாவரவர்க்கங்களுக்கு வளர்ச்சியையுந் தரும். இவ்வண்ணமே ஞான முறையில் ஞானஸ்நான நீருஞ் செய்கின்றது. சமுத்திரத்தில் விழுந்த ஒரு பொறி நெருப்பு எவ்விதம் அவிந்துபோகுமோ அவ்விதமே ஆத்துமத்திலுள்ள சகல பாவங்களும் அவைகளுக்குரிய சர்வ ஆக்கினைகளும் ஞானஸ்நானத்தால் முற்றாய் அற்றுப் போகும். ஆகவே, ஞானத் திட்சை பெற்றபின் யாதொரு பாவத்தையுங் கட்டிக்கொள்ளுமுன் மரிக்கும் பாக்கியமுடையவர்கள் நேரே பரகதி சேருவார்கள். இத்திருச்சடங்கில் நாம் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவையும் அவருடைய சுத்திகரிக்கும் அருளையும் அடைகிறோம். “நீங்கள் மனந்திரும்பி உங்கள் பாவங்களின் மன்னிப்படைய உங்களில் ஒவ்வொருவனும் யேசுக்கிறீஸ்துநாதரின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைப் பெறக் கடவான். அப்போது இஸ்பிரீத்துசாந்துவின் வரத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். ( அப். நடபடி 2. 38.) இதை அர்ச். சின்னப்பர் மறுபிறப்பாகிய ஸ்நானமென்றழைக்கிறார். ( தீத்து. 3. 5. ) ஆகையால், ஞானஸ்நானம் ஆத்துமத்துக்கு ஞானப் பிறப்பாயிருக்கிறது. மற்றத் தேவதிரவிய அனுமானங்கள் ஆத்துமத்துக்கு அன்னமாயும் அவுஷதமாயு மிருக்கின்றன. தண்ணீர் தாகத்தைத் தீர்ப்பதுபோலவும் நல்ல பாவசங்கீர்த்தனம் இருதயத்துக்குச் சமாதானத்தையும் ஆறுதலையுமளிப்பது போலவும், ஞானஸ்நானம் ஆத்துமத்தின் ஞான விடாயைத் தீர்த்து அதற்கு ஆறுதலையும் அகமகிழ்ச்சியையும் அருளுகின்றதென்று அதைத் தக்க

ஆயத்தத்தோடு பெற்றுக்கொள்ளுகிறவர்கள் அனுப
வத்தால் அறிவார்கள். ஈடேற்றத்துக்கு அகத்திய
மாகிய விசுவாசமென்னும் விதையையும் பாவச்
சோதனைகளைச் செயித்துப் புண்ணியத்தை அநுசரிக்க
வேண்டிய தைரியத்தையும் இத்தேவதிரவிய அனு
மான மூலமாக அடைகின்றோம். ஞானஸ்நானத்தை
அர்ச். கிறிசோஸ்தம் ஆராதனைக்குரிய தேவ திரீத்து
வத்தின் முத்திரையென்றழைக்கிறார். ஒன்றும்பெறாத
ஒரு துண்டுக் கடுதாசியிற் பதிந்திருக்கும் இராச முத்
திரை அதை ஐந்து, ஐம்பது, ஆயிரம், ரூபாய் பெறுமதி
யான நோட்டு நாணய மாக்குவதுபோல ஞானஸ்நான
முத்திரையே நாம் செய்யும் அற்ப நற்கிருத்தியங்களுக்
கும் மோட்ச சம்பாவனைக்குரிய பேறுபலனை நமக்குக்
கிடைக்கப்பண்ணுகின்றது. ஞானஸ்நானம் ஆத்துமத்
தில் ஒருபோதும் அழியாத ஞான முத்திரையைப்
பதிக்கிறபடியால் அதை ஒருமுறைக்கதிகம் பெறக்
கூடாது. சிலர் ஞானஸ்நானம் பெற்றபின் லௌகீக
நோக்கங்கொண்டு அதன் முத்திரையை அழிப்பதற்
காகப் பற்பல பிறசமயச் சடங்குகளைச் செய்வார்கள்.
இவைகளாற் தேவ சாபத்தைத் திரளாய்த் தேடிக்கொள்
வார்களேயன்றி ஞானஸ்நான முத்திரையை ஒருபோ
தும் அழிக்கவே முடியாது. நாம் ஞானஸ்நானம் பெற்
றுச் சத்தியவேத திருச்சபையிற் சேரும்போது அதன்
தலைவராகிய கிறீஸ்துநாதரின் அங்கங்களாகி அவரோடு
ஏகபந்தனமாய் ஒன்றிக்கிறோம். "நீங்களோ கிறீஸ்து
நாதரின் சரீரமும் அவயவத்தில் அவயவங்களுமாயிருக்
கிறீர்கள்" (1 கொரி. 12. 27.) "உங்களுடைய சரீரங்
கள் கிறீஸ்துநாதருக்கு அவயவங்களா யிருக்கின்றன
வென்றறியீர்களோ?" (1 கொரி. 6. 15.) "கிறீஸ்துநாத
ரில் ஞானஸ்நானம்பெற்ற நீங்கள் எல்லாரும் கிறீஸ்து
நாதரைத் தரித்துக்கொண்டீர்கள். யூதனென்றும்
கிரேக்கனென்று மில்லை. அடிமையென்றும் சுயாதீன
னென்று மில்லை. ஆணென்றும் பெண்ணென்று மில்லை.
நீங்களெல்லாரும் கிறீஸ்துநாதரில் ஒன்றாயிருக்கிறீர்



கள்." ( கலாத். 3. 27. 28. ) ஆகையாற்தான் நாம் ஞான
ஸ்நானம் பெற்ற நாட்டொட்டு அவருடைய நாமத்தி
னாலே கிறீஸ்துவர்களென் றழைக்கப்படுகிறோம்.

ஞான தீட்சை பெற்றுக் கிறீஸ்துவர்களாவது சரு
வேசுரனுக்கு மிகவும் உவப்பான காரியமென்றும், அப்
படிச் செய்வதினால் அவரிடம் தங்களுக்கு வேண்டிய
அநேக இகபர நன்மைகளை இலகுவாய் அடையலா
மென்றும் பிற சமயிகளிலும் சிலர் நன்றாயறிவார்கள்.
ஆகையாற்தான் அவர்களிற் சிலர் தாங்கள் ஆவலா
யிச்சிக்கும் அருமையான சில நன்மைகளை வேறுவகை
யாய் அடையக்கூடாதிருக்கும்போது அவை கிடைத்
தால் தாங்கள் அல்லது பிள்ளைகள் அல்லது குடும்பம்
முழுவதும் ஞானஸ்நானம் பெறுவோமென்று நேர்த்தி
பண்ணுகிறார்கள். மனுமக்களனைவரும் ஞானத் தீட்சை
பெற்று ஈடேறவேண்டுமென்று மிக்க ஆவலுள்ள கட
வுள் அவர்கள் வேண்டுதலை இலகுவாய்க் கேட்டருளு
கிறாரென்றும் அதனால் வருஷா வருஷம் அநேகர் ஞான
தீட்சை பெற்று சத்திய திருச்சபையிற் சேருகிறார்க
ளென்றும் உலகம் எக்காலமுங் கண்டுவருகின்றது.
ஐந்தாம் நூற்றாண்டில் பிராஞ்சு தேசத்தின் ஓர் பகு
தியை அரசாண்டுவந்த குளோவிஸ் என்னும் பிறசமய
வரசன் அக்காலத்திலே திருச்சபையில் அடையக்
கூடியதாயிருந்த அனுமதிப்படி குளொற்றில்டா என்
னும் ஓர் கிறீஸ்துவ புண்ணியவதியை விவாகம்பண்ணி
யிருந்தார். இவள் தன் பத்தாவை மனந்திருப்பத் தன்
செப தபத்தாலும் அன்பான புத்தி போதனையாலும்
வெகு பிரயாசப்பட்டுவந்தும் அவர் அசையாதவரா
யிருந்தார். காத்திராப்பிரகாரமாக இவருக்கும் செரு
மானியருக்கு மிடையில் யுத்த முண்டுபட்டது. அதில்
இவர் தன் சிறு சேனையோடு தோற்கடிக்கப்பட்டு பின்
காட்டவேண்டிய தருவாயி லிருந்தபடியால் மனங்கலங்
கித் துக்கசாகரத்தி லமிழ்ந்தியிருந்தார். அவ்வேளை
அவுறேலியன் என்னும் அவருடைய சேனாபதி அவ

ரை நோக்கி ஆண்டவனே இனி உமக்கு ஒரே அடைமானம் மாத்திரமுண்டு. அதாவது, உமது தேவியாராகிய குளொற்றில்டா உமக்குப் போதித்துவரும் தேவனை விசுவசியும், அப்போது வானத்துக்கும் பூமிக்கும் பகவானாகிய அவர் உமது சத்துராதிகள்மேல் உமக்குச் செயங்கிடைக்கச் செய்வார் என்றார். குளோவிஸ் இதைக்கேட்டுக் கண்ணீரோடு வானத்தை நோக்கி "சீவியரான கடவுளின் குமாரனென்றும், தங்கள் உபத்திரவங்களில் உமது சலுகையைத் தேடுகிறவர்களுக்கு ஆறுதலளிக்கும் தேவனென்றும், உம்மில் நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு வெற்றியருளுகிறவரென்றும் குளொற்றில்டா எனக்குப்போதிக்கும் கிறீஸ்துவே நான் உமது பரம வல்லமையின் சரணத்தைத் தாழ்மையுடன் இரந்து கேட்கிறேன். நீர் என்னைச் செயமடையச் செய்வீராகில் இனி நான் உம்மையே வணங்கி உமது நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவேன். நான் நம்பிப் பிரார்த்தித்த என் தேவர்கள் எனக்கு உதவி புரியத் திராணியற்ற தெய்வங்களா யிருக்கிறார்கள். ஆகையால், நான் இச்சமயம் விண்ணப்பஞ்செய்யும் யேசுக்கிறீஸ்துவே உம்மை உறுதியாய் விசுவசிக்க உண்மைப்படி ஆசிக்கிறேன். என் சத்துராதிகள் கையில் நின்று என்னை விடுதலைசெய்வதினால் எனக்கு விசுவாசந் தந்தருளும்" என்று உரத்த சத்தமாய் வேண்டிக் கொண்டார். உடனே அவர் சேனை தேவசெயலாற் தைரியங்கொண்டு பகைவர் படையைப் பறக்கடித்துப் பூரண செயமடைந்தது. இதன் பயனாகவே குளோவிஸ் இராயன் வேத சத்தியங்களைக் கற்று வேண்டிய ஆயத்தங்கள் செய்தபின் அர்ச். றெமியுஸ் என்பவர் கையால் ஞானத்தீட்சை பெற்றார். அத் திருச்சடங்குக்குத் தேவையான பரிசுத்த தைலத்தை ஒரு வெள்ளைப் புறா சிறு சிமிளிற் கொணர்ந்து கொடுத்தது. அன்றையத்தினம் பிராஞ்சுக்காரரில் பெண்களையும் பிள்ளைகளையுந் தவிரப் பிராயப்பட்ட ஆடவரில் மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.



நம்முடைய தேசத்திலும் சிலதடவைகளில் பிறசமயிகள் ஆபத்துக்களில் நேர்த்திபண்ணிக்கொண்டபின் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதை அறிவோம். மருதமடுத் திருப்பதியில் பிராயப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் ஞானஸ்நானங்கள் பெரும்பாலும் இப்படிப்பட்டவைகளேயாம்.

## ஞானஸ்நானத்தின் அவசியம்

ஞானஸ்நானம் இரட்சணியத்துக்கு இன்றியமையாக்காரியமெனபது யேசுநாதர் யூத பிரபுவான நிக்கொதேமுஸ் என்னும் பரிசேயனுக்கு வசனித்த வார்த்தைகளினால் தெளிவாய் விளங்குகின்றது. இவர் ஓர் இரவு யேசுநாதரிடம் வந்து குருவே நீர் சருவேசுரனிடத்திலிருந்துவந்த போதகரா யிருக்கிறீரென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடன் தேவன் இராவிடில் நீர் செய்யும் இவ்வற்புதங்களைச் செய்யமாட்டான் என்றார். அப்பொழுது யேசுநாதசுவாமி ஈடேற்றத்துக்கு முதல் அவசியமாகிய ஞானஸ்நானத்தைப்பற்றியே அவருக்கும் போதிக்கச் சித்தமானார். "மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்: ஒருவன் மறுபடியும் பிறவாவிடில் சருவேசுரனுடைய இராச்சியத்தைக் காணவே மாட்டான்" என்று திருவுளம்பற்றினார். அதற்குப் பிரபு வயோதிபனான ஒருவன் மீளவும் பிறப்பதெப்படி? தன் தாயுதரத்திற் திரும்பப் பிரவேசித்து மறுபடி பிறக்கக் கூடுமோ என்றார். யேசுநாதர் பிரதியுத்தரமாக ஒருவன் தண்ணீரினாலும் இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபிறப்புப் பெறாவிடில் சருவேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்று வசனித்தார். (அர்ச். அருளப்பர் 3.) அன்றியும், பரிசுத்தரிற் பரிசுத்தராகிய யேசுநாதசுவாமிக்கு ஞானதீட்சை சற்றுந் தேவையில்லாதிருந்தும் அது நமக்கெவ்வளவு அவசியமென்று படிப்பிக்கும்பொருட்டு தாம் சுவி

சேஷத்தைப் போதிக்கத் துவங்குமுன் அர்ச். ஸ்நாபக அருளப்பர் கையால் ஞானஸ்நானம் பெற்றாரென்று முன் காட்டியிருக்கிறோம். ஈற்றில் தாம் பூமியைவிட்டுப் பரலோகத்துக்கு எழுந்தருளமுன்னும் தமது சீஷரை நோக்கி நீங்கள் போய் சகல சாதி சனங்களுக்கும் பிரசங்கித்து பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்து நாம் உங்களுக்குக் கற்பித்த யாவையும் அனுசரித்துவரும்படி அவர்களுக்குப் போதியுங்கள் என்று கட்டளையிட்டார். ( மத்தேயு 28. ) விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சணிய மடைவான். ( மாற்கு 16. 16.) என்றதும் வேறோர் திருவாக்கு.

மரண சமயத்தில் தண்ணீரால் ஞானஸ்நானம் பெற அவகாசமற்றவர்கள் தங்கள் பாவங்களுக்காக உண்மையாக மனஸ்தாபப்பட்டு மெய்யான சருவேசுரனை உறுதியாக விசுவசித்து ஞானஸ்நானம் பெற ஊக்கமாய் ஆசிப்பார்களானால் அல்லது வேதசாட்சிகளாய் மரித்தால் இரட்சணிய மடைவார்கள். ஆயினும், தண்ணீரால் ஞானஸ்நானம் பெறக் கூடுமாயிருக்கும்போது அதைப் பெறுவது அகத்தியம். இயல் வேத காலத்தில் திருச்சபைக்கு முற்குறியாயிருந்த நோவாவின் பேழையிற் பிரவேசிக்க ஒரேயொரு வாசல் மாத்திரமிருந்ததுபோல் இரட்சணிய பேழையாகிய திருச்சபையிற் சேர ஞானஸ்நானமெனும் ஒரேயொரு வழி மாத்திர முண்டு. ஞானஸ்நானம் செங்கடலுக்கொப்பிடப்படும். எகிப்திராச்சியத்திற் பார்வோன் அரசனுக்கு அடிமைகளாயிருந்த எபிரேயரெனுந் தேவ பிரசைகள் பாலுந் தேனும் பெருகிப் பாய்ந்துகொண்டிருந்த கானான் தேயத்துக்குப்போக தேவ வாக்குப்படி எத்தனித்தபோது வழியில் செங்கடலைக் கடக்க வேண்டியிருந்தது. அவ்வாறே நாமும் இம்மையிற் பிசாசின் சிறையில் நின்று நீங்கிப் பரலோக இராச்சியஞ் சேரவேண்டுமானால் ஞானஸ்நானமெனுங் கடலைத் தாண்டியே போகவேண்டும்.



பிறந்தபின் இறக்குங் குழந்தைகள் பிறப்பிலேயே குற்றவாளிகளாயிருப்பதினால் ஆக்கினையுள்ள ஓரிடத்துக்குப் போகிறார்களென்று வரகவியாகிய வீர்ஷில் முதலிய சில முற்கால பிறசமயிகள் எண்ணினார்கள். அக்காலமிருந்த ரோமர், கிரேக்கர், எஜிப்தியர் ஆதிய பிற சமயிகள் தங்களான்மாக்களைச் சுத்திகரித்து தெய்வங்களுக்கு உகந்தவைகளாக்கும்பொருட்டு சில குறிக்கப்பட்ட தண்ணீர்த் தடாகங்களில் ஸ்நானஞ் செய்து வந்தார்கள். வரிவேத காலத்திற் சருவேசுரனுடைய சனங்களாயிருந்த யூதருள் விருத்தசேதனம் ஞானஸ்நானத்துக்கு வதிலும் முற்குறியுமாயிருந்ததென்று வேதாகமத்திற் பலவிடங்களிலும் காண்கிறோம். இற்றைக்கும் இந்துமதத்தாருள் சில குறிக்கப்பட்ட தீர்த்த தலங்களில் ஸ்நானஞ்செய்தால் ஆன்மாவிலுள்ள பாவ அழுக்குத் தீருமென்ற நம்பிக்கையுண்டு. இவைகளையெல்லாஞ் சுருங்கச் சொல்லவேண்டுமாயின் பாவ நிவிர்த்திக்கு ஏதோ ஒருவகை ஸ்நானம் தேவையென்ற கோட்பாடு மனுமக்களுள் எக்காலமு மிருந்து வந்ததெனக் காண்கிறோம். ஆனால், பாவ அழுக்கைத் தீர்க்குஞ் சக்தியை ஸ்நானத்துக்குக் கொடுக்கக்கூடியவர் பாவத்தை மன்னிக்க வல்லமை யுடையவராகிய கடவுளேயன்றி வேறு யாருமல்ல. அந்தச் சக்தியை சருவேசுரன் தாம் சத்தியவேதத்தி லேற்படுத்திய ஞானஸ்நானத்துக்கேயன்றி மனுஷர் தங்கள் போக்கின்படி நியமிக்கும் ஸ்நானங்களுக்கு கொடுக்கிறாரென்று சாதிக்க யாதோர் அத்தாட்சியுமில்லை. இந்துக்களுடைய தீர்த்த ஸ்நானத்தினால் உள்ளபடி பாவம் போவதேயில்லை என்பதை:

தீர்த்த மாடினாலும்—அகப்பே
தீவினை போகாதே
ஊத்தை போனாலும்—அகப்பே
ஊழ்வினை போகாதே

என்று அவர்களுடைய ஞானிகளே அறிக்கையிட்டிருக்கிறார்கள். குஷ்டரோகியாகிய நாமான் எலிசே

யெனுந் தீர்க்கதரிசி கற்பித்தபிரகாரம் யோர்தான் நதியிலேழுதரங் குளிக்கிறதற்குப் பதிலாய்த் தன் எண்ணப்படி வேறிடத்தி லெத்தனையாயிரம் முறை குளித்திருந்தாலும் சுக மடைந் திருப்பானா? ஒருபோது மடையமாட்டானென்று அவ னூழியர் தாமே தீர்க்கமா யறிந்து தீர்க்கதரிசியின் சொற்படி யோர்தானில் அவனை எழுதரம் ஸ்நானஞ்செய்யப்பண்ணிச் சவுக்கிய மடையச் செய்தார்கள். பிறவிக் குருடனும் யேசுநாதர் கற்பித்தபடி சிலோவையெனுந் தடாகத் தண்ணீரிற் தன்னைக் கழுவாமல் தன் மனம்போனபடி வேறு சலத்திற் கழுவியிருந்தாற் பார்வை யடைந்திருப்பானா? ஆமென்று அறிவுள்ள யாருஞ் சொல்லத் துணியார்கள். ஏனெனில், இவர்க ளிருவரும் இதற்குமுன் இயல்பாய் எத்தனையோ தடவைகளிற் பல தண்ணீரிலுந் தங்களைக் கழுவிக் குளித்திருப்பார்கள். அப்படியிருந்தும் இதற்குமுன் இவர்கள் குணப்படவில்லையே. அவ்வாறே ஆத்தும சுத்திகரத்தளவிலும் மெய்யான தேவனும் மனுஷனுமாகிய யேசுநாதசுவாமி ஏற்படுத்திய ஞானஸ்நானத்தின் மூலமாகவே பாவமன்னிப் படையலாமன்றி வேறு ஸ்நானங்கள் வழியாய் அடையமுடியாது.

ஞானஸ்நானங்கொடுக்கும் அதிகாரம் குருமாருக்கே உரியது. ஆயினும், இத் திருச்சடங்கு ஈடேற்றத்துக்கு இன்றியமையாததானபடியால் சகலரும் பரகதியடையவேண்டுமென்னும் ஆவலுள்ள பரிசுத்த மாதாவாகிய திருச்சபை மரணத்தருவாயில் அல்லது அவசியமான தருணத்தில் சாதி சமய பேதமின்றிச் சகலருக்கும் இவ்வதிகாரத்தை அருளுகின்றது. என்றாலும் ஐயையோ கிறீஸ்தவர்களுக்குள் முதலாய் எவ்வளவு சொற்பபேர் இத் திருச்சடங்கை நிறைவேற்ற அறிந்திருக்கிறார்கள்! இதை அறியாததினாலும் அசட்டையினாலும் எத்தனையோ குழந்தைகள் ஞானஸ்நானமில்லாமற் செத்து மோட்சபாக்கியத்தை யிழந்துபோக விடுகிறார்களே. வேண்டிய தருணத்தில் ஞானஸ்நானங்கொடுக்க யாருக்குங் கடமையானபடியால் சகல



ரும் முக்கியமாய் வைத்தியரும் மருத்துவம் பார்ப்போரும் உபாத்திமாரும் உபதேசிகளும் கோயிற் கட்டளைகாரர் முதலியவர்களும் இதை நன்றா யறிந்திருப்பது மிக்க அவசியம். இவர்களிற் தேவபத்தியுள்ள சிலர் இவ்வலுவலில் எந்நேரமுங் கரிசனையாயிருந்து எத்தனையோ ஆத்துமாக்களை ஈடேற்றியிருக்கிறார்கள். இதைப் பார்க்கிலும் ஒருவன் பூமியிற் செய்யக்கூடிய பெரும் புண்ணியமென்ன? இந்துக்கள் முதலிய பிறசமயிகளில் அறிவுள்ள சிலர் தங்கள் குழந்தைகள் அவஸ்தையா யிருக்கையில் அல்லது குறைமாதத்திற் பிறந்திருக்கும்போது குருமாரை அல்லது ஞானஸ்நானங் கொடுக்க அறிந்த வேறு யாரையாகுதல் அழைத்து அக் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பிப்பதைச் சிலசமயங்களில் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். இது இக் குழந்தைகளின் குடும்பங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதத்தை வருவிக்குமென்பதை விளக்கவேண்டியதில்லை. பிறசமயக் குடும்பங்களிற் பிள்ளைகள் குறைமாதத்திற் பிறந்திருப்பதாக அல்லது அவஸ்தையாயிருக்கிறதாகக் கிறீஸ்தவர்கள் அறியும்போது அக் குழந்தைகளின் பெற்றாருக்கு ஞான தீட்சையின் பயனையும் உபயோகத்தையும் சற்று விளக்கினால் தங்கள் அரிய குழந்தைகளுக்கு ஞான நன்மையை விரும்பும் பலர் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கத் தடைசெய்யார்களென்பது அனுபவத்தா லறிந்த விஷயம்.

பிராயப்பட்ட பிற சமயிகளை மரணத்தருவாயில் மனந்திரும்பும் பாக்கியத்தைப் பெறுவோர் அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்குமுன் தேவ திரீத்துவம், மீட்பு, நித்திய மோட்சம், நரகம் முதலிய வேத சத்தியங்களைப் பரும்படியாயாகுதல் விளக்குவது அவசியம். ஆகையால், அச்சமயங்களில் ஓர் குருவானவரை அழைக்கக்கூடுமானால் அதி உத்தமம். பிராயப்பட்டவர்கள் சாகுந் தருவாயிலாவது ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவது பெரும் பாக்கியமாயிருக்கும். சத்திய வேதத்தின் உண்மையையும் அதன் கட்டுப்பாடு

களையும் அறிந்துகொண்டு அசட்டையாலும் வேறு பல
காரணங்களினுலும் ஞானஸ்நானத்தை சாங்காலமட்
டும் பின்போடுவது மகா அபத்தமான காரியம். மரண
மட்டும் மெய்யான கடவுளை வணங்கவேண்டியவிதமாய்
வணங்காமலும் புண்ணியதிரவியத்தைச் சம்பாதியாம
லும் தங்க ளெண்ணப்படி நடந்தபின் அந்திய காலத்
தில் ஞானஸ்நானம்பெற்று நேரே பரகதிசேரக் காத்
திருப்பது நீதியுமல்ல, புத்தியுமல்ல. இப்படிக் காத்
திருந்தவர்களிற் பலர் இவ்வரமடையாமற் செத்ததை
நன்ருயறிவோம்.

## ஞானஸ்நானங் கொடுக்கும் முறை

அவஸ்தைச் சமயத்தில் ஞானஸ்நானங் கொடுக்க
யாருக்கும் அதிகாரமுண்டாயினும் ஒரு குருவானவர்
சமீபத்தி லிருந்தால் அவரை அழைப்பதே முறை.
குருவானவர் இல்லாவிடில் இத்திருச்சடங்கை நன்ரு
யறிந்த வேறு ஒருவர் செய்யத்தகும். இதைச் சகல
ரும் இலகுவாய் அறிந்திருக்க வழியாகவே திருச்சபை
இச் சடங்கைச் சுருக்கமும் சுலுவுமாக்கி யிருக்கிறது.
இதன் முறை யாதெனில், திருச்சபை செய்வதையே
தானுஞ் செய்கிறேனென்ற கருத்தோடு ஞான ஸ்நானம்
பெறப்போகிறவனுக்கு இட வேண்டிய பெயரை உச்
சரித்து அவனுடைய தலையிற் தண்ணீரைச் சிலுவை
யடையாள மாதிரியாய் வார்த்து வார்த்து "பிதாவுடை
யவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துவுடையவும்
நாமத்தினுலே நானுன்னைக் கழுவுகிறேன்" என்று
தெளிவாய்ச் சொல்லவேண்டியதேயாம். இந்த வார்த்
தைகளில் யாதொன்றையும் மாற்ருமலும் குறைக்கா
மலும் அவைகளுடன் வேறென்றைச் சேராமலு
மிருக்கவேண்டும். இவ் வார்த்தைகளை உச்சரிப்பது
தண்ணீர் வார்க்கமுன்னுமல்ல, வார்த்தபின்னுமல்ல
வார்க்கும்போதுதானே வேறு ஆள் அல்ல வார்க்கிற
ஆள்தானே சொல்வது அவசியம். தண்ணீரை விர
லிற் தொட்டுத் தலையிற் தடவுவது போதாது. அது



சற்ருவது வடிதல் அகத்தியம். இப்படி ஞானஸ்நா
னம் கொடுக்கும் பாக்கியத்தைப்பெறுவோர் ஞானதீட்
சை பெற்றவர்களின் பெயர் ஊர் வயது ஞானஸ்நானம்
பெற்ற தினம் முதலிய விபரங்களை அவ்வூர்க் கட்டளைச்
சுவாமியாருக்கு அல்லது வேருேர் குருவானவருக்கா
வது கொடுப்பதே முறை. அன்றியும், அவஸ்தைஞான
ஸ்நானம் பெற்றவர்கள் தப்பிப் பிழைத்தால் தாமச
மின்றி அவர்களைக் கோவிலுக்குக் கொண்டுபோய்க்
குருவானவரைக்கொண்டு மீதியான சடங்குகளைச் செய்
விக்கவேண்டியது.

## பெற்ருரின் கடமை

ஞானஸ்நானம் இரட்சணியத்துக்கு இன்றியமை
யாத காரியமானபடியால் பிள்ளைகள் இத்திருச்சடங்
கின்றிச் சாகாதபடி வேண்டிய பிரயாசமெல்லாம் படு
வது பெற்ருருக்குப் பாரதூரமான கடமையாம். ஆகை
யால் அல்லவோ சிலசமயங்களிற் பிள்ளைகள் பிறக்கமாட்
டாத ஸ்திதியி லிருக்கும்போது வேத விசுவாசமுள்ள
ஐரோப்பிய பெற்ருர் அனுபவமுள்ள வைத்தியர்களைக்
கொண்டு தாயுதரத்திற்தானே பிள்ளைகளுக்கு ஞான
தீட்சை கொடுப்பிக்கிருர்கள். இளைஞரின் பாதுகாவல
ராகிய அர்ச். ஞானப்பிரகாசர் பிறந்தும் பிறவாமலிருக்
கையில் அவரை முற்ருய்ப் பிரசவிக்கத் தாய் சக்தியற்று
அபாயமான அந்தஸ்திலிருந்தபடியால் பிள்ளை அப்படி
யேயிருக்க ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. அதன்
பின் தாயுங் குழந்தையும் சேதமின்றித் தப்பிப் பிழைத்
தார்கள். ஆகவே அக்குழந்தை பகல்வெளிச்சத்தைக்
காணமுன் பரம ஞானவெளிச்சமடையப் பாத்திரம்
பெற்றதென்று சொல்லப்படுவதாயிற்று. குறைமாதத்
திற் பிறக்குங் குழந்தை உயிரற்றதாய் அல்லது வெறுங்
கருவாய்க் காணப்படினும் சந்தேக நிபந்தனை அதாவது
நீ உயிரோடிருந்தால் உனக்கு ஞானதீட்சை கொடுக்
கிறேனென்னுங் கருத்துடன் ஞானஸ்நானங் கொடுக்க
வேண்டுமென்று வேதசாஸ்திரிகள் படிப்பிக்கிருர்கள்.

அதற்கு நியாயமேதெனிற் தற்காலம் பெயர்படைத்த பண்டிதர்களின் அபிப்பிராயப்படி கரு உதரத்தில் உற்பத்தியாகும்போதே ஆன்மாவுள்ளதாகின்றதாம். பிள்ளை பிறக்குமுன் தாயிறக்க நேரிடின் எவ்விதமாயாவது பிள்ளைக்கு ஞானஸ்நானங் கொடுப்பது பெருங் கடமையென வேதசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

பிள்ளை பிறந்தபின் தாமதமின்றிக் கூடியளவு சீக்கிரமாய் ஞானதீட்சை கொடுப்பிப்பது பெற்றோர்மட்டிற் பெருங் கடமை. என்றாலும், தேவ பயமும் பத்தியுமற்ற சில பெற்றோர் அசட்டையினால் அல்லது அற்ப நியாயங்களையிட்டு இக்கடமையை வெகுநாளாய்ப் பின்போடுவதினால் ஐயையோ எத்தனை குழந்தைகள் ஞானஸ்நானமின்றிச்செத்து நித்திய பேரின்ப பாக்கியத்தை இழந்து போகிறார்கள். பிள்ளை பிறந்தபின் விசேஷ நியாயமின்றிப் பத்து அல்லது பன்னிரண்டு நாட்களுள் ஞானஸ்நானங் கொடுப்பியாமல் விடுவது சாவானபாவமெனவே வேதபாரகரான அர்ச். விகோரியார் வசனிக்கிறார். ஆனாற் குறைமாசத்திற் பிறந்த பிள்ளைகளும் நோயுற்ற குழந்தைகளும் எச்சணத்திலும் இறக்கக்கூடிய மென்மையான தேகமுடையவர்களாகையால் சற்றேனுந் தாமதமின்றி அவர்களுக்கு ஞானதீட்சை கொடுப்பிப்பதே புத்தி.

ஞானஸ்நானத்தின் முக்கியத்தையும் மேன்மையையும் அறியாதவர்கள் இத்திருச்சடங்குக்குக் குழந்தைகளைக் கொண்டுவரும்போது பற்பல பிழைகள் செய்கிறார்கள். இப்பிழைகள் பலவாயினும் அவைகளுள் பிரதானமானவைகளைப்பற்றி மாத்திரம் இங்கு சில வார்த்தைகளைச் சொல்லுவோம். இப்பிழைகள் நேரிடுவது முக்கியமாய், பிள்ளைக்கிடவேண்டிய பெயர், பெற்றோர் பெயர், பிள்ளை பிறந்த திகதி, ஞானத்தாய் தந்தையரைத் தெரிந்துகொள்ளல் முதலியவைகளிலாம்.

பிள்ளையின் பெயர்: பூர்வகாலத்தில் விளங்கிய சொக்கிறேற்றஸ் எனும் வித்துவான் பிள்ளைகள் சில புண்ணிய



வான்களின் சுகிர்த நடையைக் கண்டுபாவிக்கும் பொருட்டு அவர்களுக்கு இவர்களின் பெயர்களையே இடும்படி பெற்றோரைத் தூண்டிவருவார். பேர்பெற்ற அலெக்சாந்தா என்னுஞ் சக்கிரவர்த்தி தமது சேனைகளில் தம் பெயருடையவர்கள் ஒன்றில் அலெக்சாந்தர் எனுந தங்கள்பெயரை மாற்றிவிடும்படி அல்லது தம்பெயருக்குப் பாத்திரராய் நடக்கும்படி எச்சரிப்பாராம். திருச்சபையில் ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்களையிடுவதே முறை. அதன் நோக்கம் யாதெனில், அச்சுத்தவாளர் தங்கள் பெயர்கொண்டவர்களுக்கு விசேஷ பாதுகாவலராயிருக்கவும் அவர்கள் புண்ணியங்களை அவர்களுடைய பெயர் தரித்தவர்கள் கண்டுபாவிக்கவுமேயாம். ஆகையால், பெற்றோர் பிள்ளைகளுக்கு அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்களை இடுவதுமன்றி பிள்ளைகள் வளர வளர அவ்வர்ச்சியசிஷ்டர்களுடைய சரித்திரங்களை இயன்றளவு விவரமாயறிந்து அவர்கள்மேல் விசேஷ பத்தி நேசம் வைத்து அவர்களுடைய புண்ணியங்களை அனுசரிக்கப் பயிற்றியும் வருவார்களாக. அன்றியும், தேவசிநேகமுள்ள சிலர் செய்வதுபோல மக்கள் சற்றுப் பிராயமானபின் வருஷந்தோறுந் தங்கள் பாதுகாவலரின் திருநாட்களிற் தேவநற்கருணைபெற்று அத்தினங்களைப் பத்திக்குரியவிதமாய்க் கொண்டாடப் பழக்குவது மிக உச்சிதமான வழக்கம்.

ஆனால், இவை யாவுக்கும் பதிலாய் தேவபத்தியிற் தளர்ந்த சிலர் அர்ச்சியசிஷ்டர்களின் பெயரையும் பாதுகாவலையுந் தேடாமல் பேரன் பேத்தியின் பெயர்களையே பேரப்பிள்ளைகளுக்கிடவேண்டுமென்று மெத்த ஆத்திரப்படுவார்கள். இது விலக்கப்படாததாயினும் வியப்புக்குரியதல்ல. அர்ச். ஸ்நாபக அருளப்பர் பிறந்த எட்டாம்நாள் அயலகத்தாரும் இனபந்துக்களும் அவர் பிதாவின் நாமப்படி அவருக்குச் சக்கரியாஸ் என்று பெயரிட எத்தனித்தார்கள். அவர் மாதாவாகிய எலிசபேத்தம்மாள் அவர்களைத்தடுத்து பிள்ளைக்கு அருளப்பர்

எனப் பெயரிடவேண்டுமென்றாள். அதற்கு அவர்கள் உமது உறவின்முறையாரில் இப்பெயருள்ளவன் ஒருவனுமில்லையேயென்று சொல்லிக் குழந்தையின் பிதாவிடம் விசாரித்தார்கள். சிலகாலத்துக்குமுன் தேவாலயத்திற் கபிரிகேலெனுந் தேவதூதன் இவரைநோக்கி உன் மனைவி உனக்கோர் புத்திரனைப் பெறுவாள். அதற்கு அருளப்பரெனப் பெயரிடுவாயாக என்றறிவித்தபோது சக்கரியாஸ் தன் மனைவி மலடியும் மிக்க வயதுசென்றவளுமாயிருக்க இதெப்படியாகுமென்று ஐயப்பட்டதினாலே இது நிறைவேறுமட்டும் ஊமையாயிருப்பாயென்று அவ்வானவரறிவித்தார். அதன்படி அந்நாட்டொட்டு வாய்பேசமுடியாதவராயிருந்ததினால் ஓர் எழுத்துப்பலகையை வாங்கி அதிற் தன் பிள்ளைக்குப் பெயர் அருளப்பரென்று வரைந்தார். உடனே அவர் வாய்திறக்கப்பட்டு தேவனைத் துதித்துப் பேசத்தொடங்கினாரென்று சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். ( லூக். 1 )

திருச்சபையில் ஆயிரக்கணக்கான அர்ச்சியசிஷ்டர்கள் இருந்தாலும் சில ஊர்களில் நாலு ஆறு பத்து சுத்தவாளரின் நாமங்கள்மாத்திரம் வழங்கும். இப்பெயர்களுடையவர்களை வகுத்துக் கணக்கிட்டால் ஒருபெயருடையவர்களில் இருபது முப்பதுபேரை ஒரேகுறிச்சியிற் காணலாம். இதனால் எய்துவதியாதெனில் ஒருபெயருடைய இத்தனைபேரைப் பகுத்தறிய முடியாததினால் அநேகர் வெட்கத்துக்குரிய பட்டப்பெயர்களாலும் வசைப்பெயர்களாலும் அறியப்படுதலேயாம். தங்கள் ஊரில் அதிகமாய் வழங்காத அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்களைப் பெற்றார் இவர்களுக்கு இட்டிருப்பார்களானால் இவர்கள் இவ் இழிவான பெயர்களால் அழைக்கப்பட இலகுவாய் நேரிடாதே. பலபெயர்கள் பிறபாஷைச் சொற்களாயிருப்பதினால் அவைகளைச் சரியாய் உச்சரிக்கமாட்டாதவர்கள் அவைகளை வெறுக்கிறதுண்டு. ஆனால், ஏறக்குறைய எல்லாச் சுத்தவாளர்களின் பெயரும் தமிழில் பெயர்க்கப்படவும் தமிழ்மாதிரியாய் உச்சரிக்கப்படவுங் கூடியதாயிருக்கிறபடியால் இப்படியான தமிழ்ச்சொல்லுக்கிணங்கப் பெயர்களை வேண்டியமட்டும் வழங்கலாமே.



ஞானஸ்நானங் கொடுக்குமுன் குருவானவர் பிள்ளையைப்பற்றி இடாப்பிலெழுதவேண்டிய விபரங்களை அதாவது பிள்ளையின் பெயர், பிறந்ததிகதி, ஆதியவைகளைக் கேட்கும்போது அநேகர் அவைகளைப்பற்றிச் சற்றும் யோசியாமல் வருகிறபடியால் தட்டுக்கெட்டுத் தடுமாறி வாயில் வந்தபடி பெயரையுந் திகதியையுஞ் சொல்லுவார்கள். திரும்ப இவர்களிற் சிலர் அரசாட்சியாரின் கந்தோரிற்கொடுக்கும் பெயருந் திகதியும் வேறு. இதனாற் பிற்காலம் பிள்ளைகளுக்கு எவ்வளவு சோலி நேரிடக்கூடுமென்பதை இப்பெற்றார் சற்றும் யோசனை பண்ணாதிருப்பது பரிதாபம்.

சிலர் குழந்தைக்கு ஞானஸ்நானத்தில் இட்ட பெயரை முற்றாய் மறந்துபோகிறார்களென்று பலசமயங்களிலும் கண்டுவருகிறோம். வேறநேகர் ஞானஸ்நானப் பெயரைப் பொருட்பண்ணாமல் உன்னதமாயொலிக்கும் செல்லப்பெயரைத் தேடித் தெரிந்து வைப்பார்கள். இது பிள்ளைகளுக்கு ஏதோ பெரும் அழகும் புகழுமெனப் பெற்றார் எண்ணினாலும் இதில் யாதோர் விசேஷத்தையுங் காணோம். இது பலசமயங்களிலும் கள்ளிக்கட்டைக்கு வெள்ளிப்பூணிட்டாற்போல நகைப்புக்கே இடமாயிருக்கிறது. இவ்வெள்ளிப்பூணாகிய செல்லப் பெயர் எவ்வளவு ஓசை ஒலியுடையதாய்த்தோற்றினாலும் காற்காசு பெறாததும் எல்லோர்க்கும் பொதுவுமானதாகையால் ஆடு மாடு மேய்த்துத் தெருக் கூட்டி வயிறுவளர்க்கும் கூலிக்காரரும் குடிமக்களும் பேதமின்றிப் பெரியோரின் மக்களைப்போல ஐயாத்துரை, துரைராசா, ராசதுரை, ராசநாயகம், செல்வநாயகம், தங்கமணி, ராசமணி, தங்கராசம் என்றே அழைக்கப்படுகிறார்கள். தாழ்ந்த நிலையிலுள்ளோர் இப்படி அழைக்கப்படுவதைக் கேட்கும்போது இப்பெயர்களைத் தங்களுக்குச் சொந்தமென்றாற்போலெண்ணிப் பெருமை பாராட்டும் பெரியோரின் பிள்ளைகள் பல சமயங்களில்

வெட்கவும் வெறுப்புக்காட்டவும் நேரிடுகின்றது. காரியம் இப்படியிருக்க ஞானஸ்நானப்பெயரைப்பார்க்கிலும் செல்லப்பெயரிலுள்ள விசேஷமேதென்று விளங்கவில்லை. சிலர் ஞானஸ்நானப்பெயருக்கும் செல்லப்பெயருக்குமுள்ள வித்தியாசத்தை விளங்காதிருப்பதைப் பலசமயங்களிற் கண்டுவருகிறோம். சிலபகுதிகளில் அநேக பிள்ளைகளுக்கு நாலுபெயர்களுண்டு. அதாவது ஞானஸ்நானப்பெயரும் குடும்பப்பெயரும் பெற்றார் வழங்கும் செல்லப்பெயரும் பிறர் எட்டத்தில் வழங்கும் பட்டப்பெயருமாம். இப்பட்டப்பெயர் பெரும்பாலும் படிக்கிறவயதில் பள்ளிப்பிள்ளைகளாலிடப்படுகின்றது. உபாத்திமார் கவனித்தால் பட்டப்பெயரிடும் இவ் இழிவான வழக்கத்தைக் குறைக்கவும் தடுக்கவுங்கூடுமே. செல்லப்பெயரினால் அல்லது வசைப்பெயரினால் அழைக்கப்படும் வேறநேகர் தங்கள் ஞானஸ்நானப்பெயரை அறியாமல் அல்லது முற்றாய் மறந்து முறைக்குமுறை வேண்டிய தருணங்களில் வெவ்வேறு நாமங்களைக் கொடுத்துவருவதைக் கணக்கற்ற சமயங்களிற் கண்டிருக்கிறோம். பள்ளிக்கூட இடாப்பில் ஞானஸ்நானப்பெயரை எழுதுவதே ஒழுங்கு. என்றாலும், சில பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றாருக்கும்முதலாய்த் தங்கள் மக்களின் ஞானஸ்நானப்பெயர் தெரியாததினால் ஒரு பொய்ப்பெயரை அல்லது வீட்டில்வழங்கும் செல்லப் பெயரை இடாப்பில் எழுதுவிப்பார்கள். பிற்காலம் அரசாட்சியாரின் பரீட்சைக்காக அல்லது வேறு பல விசேஷ நோக்கங்களுக்காகப் பிறப்புப்பத்திரம் தேவையாயிருக்கும்போது பெயர் தெரியாததினால் ஞானஸ்நானப் புத்தகத்தில் அதைக் கண்டுபிடிக்கப்படும் பிரயாசமும் வினைக்கேடும் மெத்த. சிலசமயங்களிற் கண்டுபிடிக்க முற்றாய் முடியாமற்போவதுமுண்டு. அவ்விதசமயங்களிற் சிலருக்கெய்திய பெருஞ் சோலிகளையும் நஷ்டங்களையும் கண்டுங்கேட்டுமிருக்கிறோம். இப்படி வேதப்பெயரைத் திட்டமாயறியாத, சிலபிள்ளைகள் பராயப்பட்டுச் சடங்கு முடிக்கவரும்போது கலியாணக்கூறலுக்கு ஏதுமொரு



வேதப்பெயரையும் றெஜிஸ்திரார்க்கந்தோரில் தங்கள் செல்லப்பெயரையுங் கொடுப்பார்கள். இதனால், திரும்ப அரசாட்சியாருக்கும் றெஜிஸ்திராருக்கும் கலியாணகாரருக்குமிடையிற் கேள்விமறுமொழி உண்டுபடுவதும் அபூர்வமான சம்பவமல்ல.

பெற்றார் பெயர்.—சில பெற்றாரும் தங்கள் ஞானஸ்நானப்பெயரைச் சரியாய் அறியாததினால் முறைக்குமுறை வெவ்வேறு பெயரைக் கொடுக்கிறார்கள். இவர்கள் ஒரு குழந்தையை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவரும்போது தங்கள் பெயரை ஒருவிதமாயும் மறுபடி இரண்டொரு வருஷத்துக்குப்பின் அடுத்த குழந்தையைக் கொண்டுவரும்போது தங்கள் பெயரை வேறுவிதமாயும் கொடுக்கிறார்களென்று பலமுறை ஞானஸ்நான இடாப்புகளில் கண்டிருக்கிறோம். பிள்ளைகளின் கலியாணக்கூறலிலும் பெற்றாரின் பெயர்மட்டில் முறைக்குமுறை இப்படிப்பட்ட மாற்றங்கள் நேரிடுகின்றன. இவ்வித ஒழுங்கீனங்கள் யாவுக்கும் காரணம் பெற்றாரும் பிள்ளைகளுந் தங்கள் ஞானஸ்நானப் பெயரைப் பொருட்பண்ணாமலும் வழங்காமலும் அறியாமலும் இருப்பதேயாம். சில பெண்கள் விவாகஞ்செய்யுமுன் அல்லது கணவரைவிட்டுப் பிரிந்திருக்கும்பொழுது அல்லது விதவைகளாயிருக்கும்போது சோரத்தனமாய் நடந்து சென்மிக்கும் பிள்ளைகளை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவரும்போது சோரப்புருஷன்வந்து தன் பெயரைக் கொடுத்தாற்சரி, கொடுக்கச் சம்மதியாவிடில் "பிதா சந்தேகம்" என்று ஞான்ஸ்நான இடாப்பில் பதியப்பண்ணவேண்டியது. ஆனால், அதற்குமாறாகச் சிலர் செய்யுந்தவறுகளும் அநீதங்களும் பல. விவாகம்பண்ணாமல் அழிந்துபோன சிலர் தங்களோடு பகையான ஒருவனை அல்லது பிள்ளைகளைத் தாபரிக்கக்கூடிய குற்றமில்லாத ஒருவனை அல்லது தங்களை வேலைக்குவைத்திருந்த வீட்டுக்காரரைச் சாட்டுவார்கள். சமுசாரிகளானவர்கள் தங்களைவிட்டுப் பிரிந்திருக்குங் கணவரையும், விதவைகள் கற்பவதியாகமுன் காலஞ்சென்று

போன தங்கள் புருஷரையுஞ் சாட்டுவதைப் பலமுறையுங் கண்டுகேட்டிருக்கிறோம். இதெல்லாம் பெரும் அநீதமும் பிற்காலம் அப்பிள்ளைகள் விவாகஞ்செய்ய வரும்போது முறைபார்ப்பதில் அநேக தவறுகள் நேரிடுவதற்கு வழியும் ஆகின்றது. ஆகையால், அவ்விதபிள்ளைகளுக்கு பிதா சந்தேகம் என்று சொல்லக்கடவார்கள்.

பிள்ளை பிறந்த தினம்—சிலர் அசட்டையினால் பிள்ளைபிறந்து நெடுநாட்சென்றபின் அதை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவரும்போது குருவானவரின் கண்டிப்புக்குப் பயந்து நாளைக் குறைத்துச் சொல்லுவார்கள். வேறனேகர் பிள்ளைபிறந்து இற்றைக்குப் பத்துநாள் இருபதுநாளென்று சொல்லுவார்களேயன்றி இன்னமாசம் இத்தனையாந்திகதி என்று சொல்ல அறியார்கள். சரியான திகதியைச் சொல்வோரைக் காண்பது மிக்க அரிது. காலம் போகப்போகப் பிள்ளை பிறந்த திகதியும் தெரியாது. ஞானஸ்நானத்திலிடப்பட்ட பெயருந் தெரியாது. அறிவுள்ள சிலர் செய்வது போலச் சகலருந் தங்கள் பிள்ளைகள் ஒவ்வொன்றும் பிறக்கும்போது அதின் ஞானஸ்நானப்பெயரையும் பிறந்த திகதியையும் ஞானஸ்நானம்பெற்ற திகதியையும் உடனுக்குடனே எழுதிப் பத்திரமாய்க் காப்பாற்றி வருவது நன்று. சிலர் இவ்விபரங்களைத் தங்கள் வேதாகம புத்தகத்தின் அல்லது செபப் புத்தகத்தின் கடையொற்றைகளிலே எழுதிவைப்பார்கள்.

சிலர் தாங்கள் பிறந்த திகதியை முக்கியமாய்க் கொண்டாடுவார்கள். இது விலக்கப்பட்டதல்ல. பிறந்தநாள் சந்தோஷமான நாளென்பது மெய்தான். என்றாலும் நாம் விசுவாச வெளிச்சத்தின்படி சற்று யோசிப்போமாகில் இத்தினம் அவ்வளவு அகமகிழ்ச்சிக்குரியதல்லவென்று இலகுவாய்க் கண்டுபிடிப்போம். எப்படியெனில், கண்ணீர்க் கணவாயென்றழைக்கப்படும் இப்பூமியில் நாம் உதித்தபோது பாவத்தோடு பிறந்தபடியால் பாவத்தின் பயனாகிய தேவகோபாக்கினையோடு பிசாசுக்கடிமைகளாய்ப் பிறந்தோம். ஒருமித்தும் ஒன்



றின்பின் ஒன்றாயும் இம்மையில் நமக்கு நேரிடும் சகல உபத்திரவங்களும் நிர்ப்பாக்கியங்களும் தொடங்கினது நாம் பிறந்தநாளிலல்லவா? இதினாலல்லவோ யோபு என்னும் மகாத்துமா தாம் பிறந்தநாளைப் பின்வருமாறு சபித்தார். நான் பிறந்தநாளும் ஒரு ஆண்பிள்ளை உற்பத்தியாயிற்றென்று சொல்லப்பட்ட இராத்திரியும் அழியக்கடவன. அந்தநாள் அந்தகாரப்படுவதாக: தேவன் உன்னதத்திலிருந்து அதை விசாரியாமலும் ஒளி அதன்மேற் பிரகாசியாமலும் அந்தகாரமும் மரண இருளும் அதைக் கறைப்படுத்தி மப்பு அதைமூடி மந்தாரங்களின் பயங்கரங்கள் அதை அருக்களிப்பாக்குவதாக, அந்தஇராத்திரியை அந்தகாரம்பிடிப்பதாக, வருஷத்தின் நாட்களில் அது சந்தோஷப்படுகிற நாளாயிராமல் மாதங்களின் கணக்கிலே அது வராமலும் போவதாக. அந்தஇராத்திரி தனிமையாயிருப்பதாக. அதிற் கெம்பீர சத்தமில்லாமற் போவதாக. நாளைச் சபிக்கிறவர்களும் லேவியாத்தானை எழும்பப்பண்ணத்தக்கவர்களும் அதைச் சபிப்பார்களாக. (யோப். 3.) எரேமியாஸ் என்னுந் தீர்க்கதரிசியும் தாம் பிறந்தநாளைச் சபித்தார். "நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக. என் தாயார் என்னைப் பெற்றநாள் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக" (எரேமியாஸ். 20-14.) பரிசுத்தமாதாவாகிய திருச்சபை அர்ச்சியசிஷ்டர்கள் பிறந்தநாட்களையல்ல அவர்கள் மரணத்தினங்களையே வருஷாவருஷங் கொண்டாடுகின்றது. ஏனெனில், இவர்களும் பிறந்தபோது தேவகோபத்தின் பிள்ளைகளாகவே பிறந்தார்கள். மரிக்கும்போதோவெனில் புண்ணிய பேறுபலன் நிறைந்தவர்களாயும் நித்திய பேரின்பவாழ்வுக்குப் பாத்திரராயும் மரித்தார்கள். பரிசுத்த தேவதாயார் சென்மபாவமில்லாமல் உற்பவித்தும், ஸ்நாபகயுவானியார் சென்மபாவத்தினின்று தாயுதரத்திலேதானே சுத்திகரிக்கப்பட்டும் பிறந்தபடியால் இவர்களுடைய பிறந்த திருநாட்கள்மாத்திரம் திருச்சபையிலே கொண்டாடப்படுகின்றன.

முற்காலம் சில தேசங்களில் ஓர் குழந்தையின் செனனநாளில் அதின் பெற்றாரும் இனபந்துக்களும் துக்கங்கொண்டாடுவார்களாம். "ஒருவன் பிறந்தநாளைப் பார்க்கிலும் அவன் இறந்தநாளே நல்லது" (சங்கப்பிர. 7-2.) என்று வேதாகமமுஞ் சொல்லுகிறது. நீதிநியாயப்படி நாம் பிறந்தநாளைப்பார்க்கிலும் ஞானஸ்நானம் பெற்றநாளையே தேவதோத்திரத்துக்குரியவிதமாய்க் கொண்டாடவேண்டும். ஏனெனில், இந்தநாளிற் றானே நாம் பாவத்திலும் பிசாசின் அடிமைத்தனத்திலுமிருந்து நீங்கித் தேவனுக்கும் திருச்சபைக்கும் பிள்ளைகளாகி மோட்ச உரிமையையும் அடைந்தோம். ஆகையால், அன்று சருவேசுரன் நமக்கருளிய இம் மகத்தான நன்மைகளுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமாக வருஷந்தோறும் அத்தினத்தில் பூசைகண்டு நன்மைவாங்குவதும் வேறுபல நற்கிருத்தியங்களைச் செய்வதும் மிக நலமாம்.

ஞானத்தாய் தந்தையர்.—சுபாவமுறைப்படி பிள்ளைகளுக்குத் தாய் தந்தை இருப்பினும் அவர்களுடைய ஆத்தும சரீர நன்மைகளைப்பற்றி என்றுங் கரிசனையுள்ள பரிசுத்த மாதாவாகிய திருச்சபையானது அவர்களுக்கு ஞானதீட்சை கொடுக்கும்போது ஓர் ஞானத் தகப்பனையும் ஓர் ஞானத் தாயையும் நியமிக்கும்படி எக்காலமுங் கற்பித்துவருகின்றது. என்றாலும், சில பெற்றார் ஞானத்தாய் தந்தையரைக் கொண்டுவாராமலும் அவர்களுடைய சம்மதியைக் கேளாமலும் வந்து இன்னார் இன்னாரை இடாப்பில் எழுதும்படி சொல்வார்கள். இப்படிச்செய்வது முறையல்ல. தலைதொடுகிறவர்கள் ஞானஸ்நானச் சடங்குநேரத்தில் சமுகமாயிருப்பதே திருச்சபை ஒழுங்கு. அப்படியிருக்கச் சற்றும் வசதிப்படாதவர்கள் ஞானஸ்நானத்துக்குமுன் தங்கள் சம்மதத்தை வாக்குமூலமாய் அல்லது எழுத்துமூலமாய்க் குருவானவருக்கறிவித்துத் தங்களுக்குப்பதிலாய்நின்று தலைதொடும்படி வேறுபேரை நியமிக்கவேண்டியது. கவனமற்ற வேறுசில பெற்றார் குழந்



தையைக் கோவிலுக்குக் கொண்டுவந்தபின்மாத்திரம் ஞானத்தாய் தந்தையைத் தேடித்திரிவார்கள் அல்லது அயல் அட்டத்திற் கண்டநின்றயாரையும் தலைதொடப் பிடிப்பார்கள் அல்லது தங்கள் கூட்டாளிகள் இம் மேலான அலுவலுக்கு எவ்வளவு அபாத்திரராயிருந்தாலும் அவர்களையே அழைப்பார்கள். இப்படி அழைக்கப்படுகிறவர்களில் அநேகர் பிள்ளைகளாற் தொட்டப்பு தொட்டாச்சி என்றும் பெற்றாரால் கும்பா அல்லது கும்பாதிரி என்றும் அழைக்கப்படுவதில் பெருமைபாராட்டுகிறார்களேயன்றி தங்கள் ஞானப்பிள்ளைகளின் இகபர நன்மைகளைக் கவனிக்கிறார்கள்போற் காணவில்லை. வேதவிசுவாசமற்றுக் குருடர்போலிருக்கும் தூர்த்தர் துர்மார்க்கர் சோரர் குடிகாரர் முதலியவர்களும் குருடருக்கொப்பாயிருக்குங் குழந்தைகளுக்கு ஞானத்தாய் தந்தையராகத் துணிகிறார்களே! "குருடனுக்குக் குருடன் வழிகாட்டியாயிருக்கக் கூடுமா? இருவரும் பள்ளத்தில் விழாதிருப்பார்களா?" (லூக். 6-39.) "அவர்களை விட்டுவிடுங்கள். அவர்கள் குருடரும் குருடருக்கு வழிகாட்டுகிறவர்களுமாயிருக்கிறார்கள். குருடன் குருடனுக்கு வழிகாட்டினால் இருவருங் குழியில் விழுகிறார்கள்." (மத்.15-14.) என்று யேசுநாதசுவாமி தாமே திருவுளம்பற்றியிருக்கிறார்.

ஞானதீட்சைக்கு ஒரு குழந்தையைக் கொண்டுவரும்போது அதின் பெற்றார் வாராவிடில் ஞானத்தாய் தந்தையர் வேண்டிய விவரங்களை அதாவது, பிள்ளைக்கிடவேண்டிய பெயர், பிறந்த சரியான திகதி, தாய் தந்தையரின் முழுப்பெயர், சாதி, ஊர் ஆதியவைகளைக் கேட்டறிந்து அல்லது குறித்துக்கொண்டு வரவேண்டியது. ஞானஸ்நானச்சடங்குநேரத்தில் ஞானத்தாய் தந்தையர் தெளிவாய்ச் சொல்லவேண்டிய விசுவாசமந்திரத்தைச் சிலர் சரியாய் அறியாததினால் அந்நேரம் வெட்கித் திகைத்துத் தடுமாறுகிறார்கள், அல்லது அறிந்தவர்கள்போற் பாசாங்குபண்ணி வாய்க்குள் ஏதோ முணுமுணுக்கிறார்கள். இப்படிச் சாலமாலஞ்

செய்வது சரியல்லவென்று இவர்களும் நன்றாயறிவார்கள்.

ஞானதீட்சை பெறுகிறவர்கள் பிசாசையும் அதன் கிரியைகளையும் ஆடம்பரங்களையும் விட்டுவிட்டுச் சருவேசுரனை என்றென்றைக்கும் விசுவசித்து வணங்கிச் சேவிப்போமென்றும் வாக்குப்பண்ணவேண்டியது. அறிவற்ற குழந்தைகள் இவ்வாக்கைப்பண்ணத் திராணியற்றவர்களாகையால் அவர்களுடைய ஞானப்பெற்றாரே அவர்களுக்காக இதைச் செய்கிறார்கள்.

இவர்களது விசேஷ கடமைகள் எவையெனில் தங்கள் ஞானப்பிள்ளைகளுக்காக மன்றாடிவருவதும் அவர்கள் வளரும்போது வேதசத்தியங்களைப் படித்துத் தேவபயம் பத்தி நல்லொழுக்கமுடையவர்களாய் நடக்கிறார்களோவென்று கவனிப்பதுமாம்.

மேலும் அப்பிள்ளைகளின் தாய் தந்தையர் அவர்களைத் தாபரிக்கவும் படிப்பிக்கவும் வழிவகையற்றவர்களாயிருந்தால் அல்லது காலஞ்சென்றுபோனால், ஞானத்தாய் தந்தையரே அவர்களது லௌகீக நன்மைகளையுங் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். எல்லாரும் இம்மேலான கடமைகளை நிறைவேற்றக்கூடிவர்களல்ல. ஆகையால், பெற்றார் எழுந்தபடி கண்டநின்ற யாரையும் ஞானத்தாய் தந்தையராக ஏற்படுத்தாமல் வேண்டியசமயத்திற் பிள்ளைகளுக்கு உதவிசெய்யக்கூடியவர்களைத் தேடி நியமிப்பதே புத்தி. ஞானத்தாய் தந்தையரின் கடமைகளை நன்றாயறிந்தவர்கள் வழக்கமாய் இரண்டொரு பிள்ளைகளுக்குமேல் தலைதொடச் சம்மதியார்கள். என்றாலும், வேறுசிலர் யோசனையின்றிக் கண்டநின்ற பிள்ளைகளுக்கெல்லாம் ஞானத்தாய் தந்தையராக ஆத்திரப்படுவார்கள். இவ்வித அலுவலுக்கேற்படுகிறவர்கள் தாங்கள் தேவனுக்கு முன்பாகச் சுமந்துகொள்ளும் பாரமான கடமைகளைக் கவனமாய் யோசிப்பார்களாக.

சகல சடங்குகளோடும் குருவானவர் ஞானதீட்சை கொடுக்கையில்மாத்திரமன்றி அவஸ்தை ஞான



ஸ்நானத்திலும் கூடுமானால் ஞானத்தாய் தந்தையரை நியமிக்கவேண்டுமென்பது திருச்சபையின் ஏற்பாடு. ஞானஸ்நானங் கொடுக்கிறவரும் தலைதொடுகிறவர்களும் பிள்ளையோடு மெய்விவாகத்துக்குத் தடையான ஞானவுரித்துடையவர்களாகிறார்கள். இவ்வித உரித்து அதிகமாய்ப் பரம்பாதபடி பரிசுத்த மாதாவாகிய திருச்சபை ஒரு பிள்ளைக்கு ஒரு ஞானத்தாய்க்கும் ஒரு ஞானத்தகப்பனுக்கும் மேற்படவைக்க உத்தரவுகொடுக்கிறதில்லை. இருவரில்லாவிடில் ஒருவர் அதாவது ஞானத்தாய் அல்லது ஞானத்தந்தைஇருந்தாற் போதும்.

## பராயப்பட்டவர்களின் ஞானஸ்நானம்

பூர்வகாலத்திற் பராயப்பட்ட பிறசமயிகள் ஞானஸ்நானம்பெறுமுன் இரண்டுவருஷம்வரையில் வேதசத்தியங்களைத் தீர்க்கமாய்ப் படிப்பதிலும் அனுசரிப்பதிலும் செலவழிப்பது பெருங் கடமையாயிருந்தது. அப்படிச் செய்தபின் அவர்கள் சத்தியவேதத்தில் உறுதியாய் நிலைகொண்டு உத்தம கிறீஸ்தவர்களாய் நடப்பார்களெனக் கண்டால்மாத்திரம் ஞானதீட்சை கொடுக்கப்படும். இதனாலல்லோ அக்காலம் ஞானஸ்நானம்பெற்றுக் கிறீஸ்தவர்களாயிருந்தவர்கள் சத்துராதிகள் கையில் எவ்வளவுகாலத்துக்கு எவ்வித வேதனைகளை அனுபவிக்கவேண்டியிருந்தாலும் வேதவிசுவாசத்திற் தத்தளியாமற் தைரியமாய் நிலைகொண்டு வேதத்துக்காகத் தங்கள் உயிரைமுதலாய் இழக்கவேண்டிஇருந்தபோது அதையுமிழந்து வேதசாட்சிகளானார்கள். இப்படி இருவருட ஆயத்தத்துக்குப்பின்மாத்திரம் ஞானஸ்நானங்கொடுக்கும் வழக்கம் இன்னுஞ்சில வடதேசங்களிலும் தருமசாலைகளிலும் நிலைத்திருக்கின்றது. அப்படியிருக்க இத்தேசத்திற் சில பிறசமயிகள் சத்தியவேதத்திற் சடங்குமுடிக்கிறதற்காக ஞானஸ்நானம்பெற வரும்போது வேதகாரியங்களை வேண்டியவிதமாய்ப் படியாமலும் கொஞ்சக்காலமாவது அவைகளை அனுசரியாமலும் சிலமந்திரங்களைமாத்திரம் ஒன்றும்

விளங்காமல் கிளிப்பிள்ளைபோல வாய்ப்பாடமாய்ப் படித்துக்கொண்டுவந்து ஞானஸ்நானங் கொடுக்கும்படி கேட்பார்கள். இத்திருச்சடங்குக்குப்பின் தாங்கள் சகலமுஞ் சரியாய்ப்படித்து அனுசரிப்போமென்று வேண்டிய வாக்கெல்லாம் பண்ணுவார்கள். இது ஆக்கமுன் அருந்தவும் விதைக்கமுன வெட்டி மிதிக்கவும் எத்தனித்தாற்போலாகின்றது. இவர்களுக்குத் துணையாக வேறுசிலர்வந்து தாங்கள் எல்லாத்துக்கும் பொறுப்பாளிகளாயிருப்போமென்றும் தங்களை நம்பி ஞானதீட்சை கொடுக்கும்படியாகவும் நெருக்குவார்கள். இல்லாவிடில் சோற்றுக்கலியாணமாய்ப் போகுமென்றும் வெருட்டுவார்கள். காரியம் ஒப்பேறிவிட்டால் திரும்ப இவர்களைக் கண்டுபிடிக்க முடியாது, இப்படித் தக்க ஆயத்தமின்றி ஞானதீட்சை பெற்றுச் சடங்குமுடித்தவர்களில் பலர் போலிவேதக்காரராக மாத்திரமிருக்கிறார்கள். வேறுசிலர் வேதத்தை முற்றாய் மறுதலித்துத் திரும்பவுஞ் சாத்தானுக்குச் சிறைகளாகித் தங்களுக்குந் தங்கள் குடும்பங்களுக்கும் தங்களுக்காகத் தரகுக்குநின்று காரியத்தை அறம்புறமாய் ஒப்பேற்றினவர்களுக்கும் தேவசாபத்தைத் தேடிக்கொள்ளுகிறார்கள். "நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்துநாதரை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளிற் சிக்கிக்கொண்டு செயிக்கப்பட்டால் அவர்களுடைய முன் நிலைமையிலும் பின் நிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கின்றது. ஆகையால், அவர்கள்நீதியின் மார்க்கத்தை அறிந்தபின் தங்களுக்கு ஒப்பிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையைவிட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினதென்று சொல்லப்படும் பழமொழி அவர்களிடத்தில் உண்மையாய் நிறைவேறிக்கொண்டுவருகிறது. (2. இராயப்பர் 2-ம் அதிகாரம்.) அம்மனிதனின் முந்



தின ஸ்திதியிலும் பிந்தின ஸ்திதி அதிக கேடுள்ளதாகின்றது. (மத். 12. 40.) இப்படிப்பட்டவர்களுக்காகத் தரகுபேசத் தலையிடுகிறவர்கள் திருச்சபை அதிகாரிகளை நெருக்கி வெருட்டி அல்லது ஆசைவார்த்தை சொல்லிக் கெஞ்சிப் பிணைநின்று முறைகேடாய்க் காரியத்தை ஒப்பேற்றப்பார்ப்பதற்குப்பதிலாய் வேதத்திற் சேர விரும்புவோருக்கு வேண்டிய புத்திசொல்லி அவர்கள் வேதசத்தியங்களைச் சரியாய்ப்படிக்கும்படி நெருக்கித் தூண்டித் தக்க ஆயத்தத்தோடு ஞானஸ்நானம் பெறத் தங்களாலியன்ற உதவிசெய்வார்களாகில் இருதிறத்தாருக்கும் எவ்வளவோ பெரும் நன்மையாயிருக்குமே. இதற்குமாறாகச் செய்வதில் ஏதும் விசேஷ நன்மை கெட்டித்தனமுண்டென்று சிலர் நினைக்கிறார்களாக்கும். அப்படி யாதொன்றையுங் காணோம். இதனால் தேவபழியைமாத்திரந் தேடிக்கொள்ளுகிறார்களென்பதை மறவாதிருப்பார்களாக.

போதிய வேத அறிவில்லாமல் ஞானஸ்நானம் பெற்றுச் சடங்குமுடித்தவர்களுக்குப் பொறுப்பாளிகளானவர்கள் பின்பாவது அவர்களுக்கு வேதசத்தியங்களைப் படிப்பிக்க அல்லது அவர்களைப் படிக்கப்பண்ண நினைக்கிறார்களா? அதுவுமில்லையே. நம்முடைய அநுபவத்தில் ஒரேயொருமுறைமாத்திரம் சீர்சிறப்பும் செல்வமுமுடைய ஒரு உத்தம கிறீஸ்தவன் இப்படிச்செய்ததைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம். இவர் பிறசமயத்திற் பிறந்துவளர்ந்த ஒரு பெண்பிள்ளையை விவாகஞ் செய்ய எண்ணினபோது அப்பெண்மணி ஞானஸ்நானம்பெறமுதல் வேதசத்தியங்களை இயன்றளவு நன்றாய்ப் படிக்கிறதற்கு வேண்டிய வழிவகை பண்ணியிருந்தார். மேலும் விவாகஞ்செய்தபின் தன் மனைவி இன்னும் அதிகம் ஆழமான வேத அறிவுடையவராயிருக்க வேண்டுமென்ற ஆத்திரத்தினால் தானாக வேதகாரியங்களைச் சொல்லிக்கொடுத்துவந்ததுமன்றி ஒரு குருவானவர் வேதசத்தியங்களையும் அனுசாரங்களையும் தாராளமாகப் படிப்பித்துவிடும்படி கேட்டு ஒழுங்குபடுத்திக்

கிழமைக்குக் கிழமை அவரை அவரிடமனுப்பிவருவார். சிலசமயங்களில் அவருடன் கூடிக்கொண்டுபோக வேறு ஆள் வசதிப்படாவிடில் தாமே கூடப்போவார். வேத விசுவாசமற்ற கணவர் இதை நம்புவார்களோ இல்லையோ தெரியாது.

விவாகத்துக்குப்பின் குடும்பத்தை முழுதும் பிற சமயத்துக்குக் கொண்டுபோகும் சதிநோக்கத்துடன் ஞானதீட்சை பெறுவாருமுண்டு. ஈற்றில் இவர்கள்பாடு பார்வோன்பாட்டுக்கு ஒக்கும். இவன் தேவசெயலாற் செங்கடலைத்தாண்டி அக்கரை சேர்ந்துகொண்டிருந்த எபிரேயரைத் திரும்பவும் எஜிப்தியருக்குச் சிறைகளாகக் கொண்டுவரத் தீர்மானித்து அக்கடலில் கடவுள் அவர்களுக்குப் புதுமையாய்த் திறந்துகொடுத்த பாதையாற் தானும்போக இறங்கினான். ஆயினும், அக்கரை சேரமுன் தன் சர்வபடை, பரி, இரதங்களோடும் ஆழி வாய்ப்பட் டமிழ்ந்தி யிறந்தானென்று யாத்திராகமங் கூறுகின்றது. (யாத்திராகமம். 14.) இப்படிச் சதிமானமாய்ச் சத்தியசமயத்தாரைச் சாத்தானுக்குச் சிறைப்படுத்தும் நோக்கத்துடன் ஞானஸ்நானநீரில் இறங்குகிறவர்களை ஒருகாலம் நிர்மலதேவன் நித்திய நரகநெருப்பில் அமிழ்த்திவிட நேரிட்டால் அதைப்பற்றி ஆச்சரியப்பட அணுவளவேனு மிடமிராது. ஆகையால், இவர்கள் சிநேகங்காட்டி வினையஞ்செய்யத் துணியாதிருப்பார்களாக.

# ஆறும் அதிகாரம்

## பாலபருவம்

### நல்வளர்ப்பின் பலன்

பார்வோன் அரசனின் குமாரத்தி தான் நயில்நதியிற் கண்டெடுத்த பச்சைக்குழந்தையைத் தனக்கு வளர்த்துக்கொடுக்கும்படி தேவாதீனமாய் அதன் சொந்தத்தாயிடமே கையளித்தாள். "நீ இந்தப் பிள்ளையைக் கொண்டுபோய் இதை எனக்கு வளர்த்துத்தா, நான் உனக்குச் சம்பளங்கொடுப்பேன்" என்றாள். (யாத்திர் 2.9.) அப்படியே அவள் அதைப் பத்திரமாய்வளர்த்து திரும்ப அவ் இராசகுமாரத்தியிடம் ஒப்பித்தாள். இக் குழந்தைதான் பிற்காலம் இஸ்சிறவேல் சனங்களின் நடுவரும் தலைவரும் சட்டநிரூபணருமாகக் கடவுளால் நியமிக்கப்பட்ட மோசேஸ்என்பவர்.

இவ்வாறே சருவேசுரனும் ஞானஸ்நானநீரிலிருந்தெடுக்குங் குழந்தையைத் தமக்கேற்க வளர்த்துத்தரும்படி அதின் பெற்றாருக்கே கையளிக்கிறார். அப்படிச் செய்யுந் தாய் தந்தையருக்கு அவர் அளிக்கும் நித்திய சம்பாவனை பார்வோனஇராசகுமாரத்தி அளித்த சம்பளத்தைப்பார்க்கிலும் அணைகடந்தமடங்கு பெரிதென்பதற் கையமில்லை. பிள்ளைகளை வளர்ப்பது பிதாவும் மாதாவுமாயினும், பாலியபருவத்தில் அதி முக்கியமாய் மாதாவே அவ்வலுவலைப்பார்க்கிறாள். மாதாவின் முதல் வளர்ப்பே மக்களின் சீவியத்துக்கு அத்திவாரம். பிள்ளைகள் பள்ளிப்பருவமாகும்போதே பிதா அவர்களில் விசேஷ கவனஞ்செலுத்தத் தொடங்குகிறார். ஆனால், எக்காலமும் மக்களின் ஞான நன்மைகளை அதிகமாய்க் கவனித்துவருகிறவர்களும் கவனிக்கக்கூடியவர்களும் மாதாக்களேயாம்.

ஞானஸ்நானநீரிலிருந்தெடுக்கப்படுங் குழந்தையா
னது குஷ்டரோகத்திலிருந்து யோர்தான்நதியிற் குண
மாக்கப்பட்ட நாமானைப்போல பாவ நோயில்நின்று
சொஸ்தமாக்கப்பட்டு தேவ வரப்பிரசாதத்தினால்
நிறைந்து தேவனுக்குந் திருச்சபைக்கும் பிள்ளையாகி
இஸ்பிரீத்துசாந்துவின் ஆலயமாகி மோட்சஉரிமை
அடைகின்றது. இம்மேலான வரங்களை அடைந்து
ஓர் சம்மனசுக் கொப்பாயிருக்கும் அக்குழந்தையை
ஏந்தி அணைத்துப் பாலூட்டி வளர்க்கவும் படிப்பித்துப்
பரலோகபாதையில் நடத்தவும் பேறுபெற்ற மாதா
பெரும் பாக்கியவதியென்பதிற் சந்தேகமில்லை. அக்
குழந்தை ஞானதீட்சையில் அடைந்த பரிசுத்தம் தேவ
பயம் பத்திமுதலிய கொடைகளில் மரணபரியந்தங்
குன்றாமலும் மங்காமலும் நாளுக்குநாள் வர்த்திக்கத்
தக்கதாய் அதை வளர்க்க விடாமுயற்சிப்படும் மாதாவை
யாருக்கொப்பிடுவோம்! அவள் அடையவிருக்கும் நித்
திய சம்பாவனை எவ்வளவென்று சொல்வோம்! ஒரு
நாள் சனக்கூட்டத்திலிருந்த ஓர் ஸ்திரீ யேசுநாதரை
நோக்கி, "உம்மைப்பெற்ற உதரமும் நீர் அமுதுண்ட
கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகள்" என்று
அவர் மாதாவைக்குறித்துக் கூவினாள். (லூக். 11.27.)
இவ்வசனத்தை மேற்சொல்லியவிதமாய்த் தன் குழந்
தையைவளர்க்குந் தாயைப்பற்றியும் ஒருகாலம் சொல்
லக்கூடியதாகும். அவளுடைய நல்வளர்ப்பின்பயனாக
அப்பிள்ளை பிற்காலஞ்செய்யுஞ் சகல நன்மைகளுக்கும்
அவைகளால் அடையும் பேறுபலன் புகள் ஆதியவை
களுக்கும் அவள் பெரும் பங்காளியாயிருப்பாளென்பதற்
கையமுண்டா? அவள் இறந்தபின்னும் இறவாதவள்
போல் தன் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மூலமாய் இன்
னும் நெடுங்காலம் உலகுக்குப்பெரும் நன்மைகளைச்
செய்வாளே. இவ்வாறே அவள் பூதவுடம்பு போனாலும்
புகழுடம்பு நிலைநிற்குமே. அதினால் தலைமுறை தலை
முறையாய் அவள் தன் புத்திர சந்தானத்தாலும் பிறரா
லும் பாக்கியவதியென் றழைக்கப்படவும் "பெண்ணுக்



கணிகலமே பேரழகுக் கோருருவே கண்ணுக்கணியே
கமலத்திற் செந்திருவே" என்று புகழப்படவும் பாத்திர
முடையவளாவாளே. இவ்வித நன்மைகளையெல்லாம்
பிதா மாதாக்கள் அனைவரும் அடைவதற்கு முதல்
வேண்டியதென்ன? நன்மனமும், பிரயாசமும், விடா
முயற்சியுமேயாம்.

## அசட்டையான வளர்ப்பும் அதன் பலனும்

பிள்ளைகளைச் சன்மார்க்கராக வளர்க்க அநேக
ருக்கு நன்மனம் இல்லாததினால் அவர்கள் வீண் சாக்
குப்போக்குச்சொல்லி வேண்டாவெறுப்பாய் வளர்க்கி
றார்கள். இப்பெற்றாருடைய எண்ணப்படி சன்மார்க்கத்
தையும் தேவபத்தியையும் பிள்ளைகளுக்குப் பயிற்ற
வேண்டியவர்கள் குருமாரும் உபாத்திமாருமாம். பிள்ளை
கள் கோவிலுக்கும் பள்ளிக்கூடத்துக்கும்போய் அவ்
விடங்களிற் படிப்பிக்கப்படுகிறவைகளைக் கற்றுக்கொள்ள
முடியாத சிறுவராயிருக்கையில் குருமாரும் உபாத்தி
மாரும் என்னசெய்யக்கூடும்? இவர்கள் தினந்தோறும்
வீட்டுக்குவீடுபோய் தங்கள் நேரத்தைமுழுதுங் குழந்
தைகளோடு செலவழிக்க முடியுமா? முடியாதென்று
புத்தியுள்ள யாரும் ஒத்துக்கொள்வார்கள். அன்றியும்,
படிக்கிறவயதில் கோவிலிலும் பள்ளிக்கூடத்திலும்
பிள்ளைகளுக்கு ஊட்டப்படும் புத்திபோதனைகளின்படி
வீடுவாசலில் நடக்கிறார்களா? இல்லையென்று அனுபவத்
திற் காண்கிறோம். அதற்குக் காரணமென்ன? என்ன
வெனில், அவ்விடங்களிற் சொல்லிக்கொடுக்கப்படும்
புத்திபோதனைகளின்படி மக்கள் நடக்கவேண்டுமென்று
பெற்றோர் சற்றாகுதல் கவனிக்கிறார்களில்லை. அல்லது
அன்றாடு ஞானோபதேசத்தில் என்னத்தைப் படித்தார்
கள், அவர்களுக்கு என்னென்ன புத்திமதி சொல்லிக்
கொடுக்கப்பட்டதென்றாவது தாய் தந்தையர் விசாரிக்
கிறார்களா? அதுவுமில்லையே. அல்லது அரிதாய் விசா
ரித்தாலும், அதன்படி நடக்கவேண்டுமென்று அவர்
களைத் தாங்களும் தூண்டி நடப்பிக்கிறார்களா? இல்லை

யென்று அவர்கள்தாமே நன்றாயறிவார்கள். அன்றியும், ஊழியக்காரர் தானியத்தை விதைத்தபின் சத்துராதிவந்து களையை விதைத்துவிட்டானென்று யேசுநாதர் வசனித்த உவமையிற்போல குருமாரும் உபாத்திமாரும் பிள்ளைகளுக்கு எவ்வளவு நற்புத்தி போதனைகள் ஊட்டிவந்தாலும் வீடுவாசலிற் தாய் தந்தையர் தங்கள் துர்மாதிரியான போக்குவாக்கினாலே மக்களுக்குத் துர்ப்பழக்கங்களையே யூட்டுகிறார்கள்.

அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் சொல்லியபடி மனுஷர் தங்கள் குதிரைக்குட்டிகளைக் கவனமாய் வளர்த்து அவைகளை நன்றாய்ச் சவாரிபோகவும் பாரமிழுக்கவும் வயலுழவும் வேறு பலகாரியங்களைச்செய்யவும் பழக்குவதில் அலுத்துப்போகாமல் விடாமுயற்சியாய்ப் பிரயாசப்படுவார்கள். ஆனால், தங்கள் கடமைப்படியும் தங்கள் பிள்ளைகள் படைக்கப்பட்ட கருத்துப்படியும் அவர்கள் சருவேசுரனை அறிந்து வணங்கி உறுதியான தேவபத்தியுடையவர்களாகச் சீவிக்கப் பண்ணவேண்டுமென்று சற்றும் பிரயாசப்படமாட்டார்கள். இதன்பயனாக நேரிடுவது யாதெனில், பிள்ளைகள் சிறுவயசிலேயே அநேக துர்க்குணங்களுக்கும் துர்ப்பழக்கங்களுக்கும் அடிமைகளாகித் தேவகாரியங்களில் யேசுநாதருடைய காலத்தில் ஊமைப்பேய்பிடித்து உபத்திரப்பட்டிருந்த பையனுக்கொப்பாய்ப் போகிறார்கள். அந்தப் பையனைத் தகப்பன் யேசுநாதரிடங் கொண்டுவந்தபோது பிசாசு அவனை வாதிக்க அவன் தரையில் விழுந்து நுரைதள்ளி புரண்டு உருண்டுகொண்டிருந்தான். அவன் எந்தநாட்தொட்டு அப்படி வாதிக்கப்படுகிறானென்று ஆண்டவர் திட்டமாய் அறிந்திருந்தாலும் மனுஷர் வழக்கமாய்ச் சிறுவயசுதொட்டே கெட்டழிந்து பிசாசுக்கடிமைகளாய்ப் போகிறார்களென்று நமக்குணர்த்தும்பொருட்டு பையனைப் பிசாசில்நின்று விடுதலையாக்குமுன் தகப்பனைப்பார்த்து எப்போதுதொடங்கி இவனுக்கு இப்படிச் சம்பவிக்கிறதென்று கேட்டார். தகப்பன் மறுமொழியாக "சிறுவமுதற்



கோண்டுதான்" பிசாசு அவனைக் கொன்றுபோடும்படி நெருப்பிலுந் தண்ணீரிலும் அநேகமுறை அவனைத் தள்ளினதென்றான். (மாற்கு. 9.) அப்படியே பத்திவிசுவாசமில்லாமற் துட்டராய்த் திரிகிறவர்கள் எப்போதுதொடங்கி இப்படிக் கெட்டுப்போனார்களென்று ஆராய்ந்துபார்த்தால் "சிறுவமுதற்கோண்டுதான்" என்றறியலாம். உதாரணமாக: ஒரு வாலிபன் கோபங்கொள்ள, அமைச்சலீனம்பண்ண, பிடிவாதமாயிருக்க எரிச்சல்கொள்ள, பிறரைப் பழிக்க, பழிவாங்க, பொய்சொல்ல, களவாட, சண்டைபிடிக்க, கெட்ட சேட்டைசரசம்பண்ண எப்போதுதொடங்கினானென்று வரையறவாய் விசாரித்தால் "சிறுவமுதற்கோண்டுதான்" என்று கண்டுபிடிக்கலாம். சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கிறவர்கள் எப்போதுதொடங்கிக் குறும்புசெய்யப் பழகினார்களென்று கேட்குமிடத்து அவர்கள் உண்மையைப் பேசுவார்களாகில் "சிறுவமுதற்கோண்டுதான்" என்பார்கள். நரகபாதாளத்திற்கிடந்தழுந்தும் கணக்கற்ற வாலிபரையும் மடந்தைகளையும்பார்த்து நீங்கள் எப்போதுதொடங்கிக் கெட்டுப்போனீர்களென்று விசாரித்தால் அவர்களும் உண்மையைப்பேசில் "சிறுவமுதற்கோண்டுதான்" என்று சொல்வார்க்ள். நீங்கள் இங்குவரக் காரணமாயிருந்தது யாரென்று வினவினால் நாங்களல்ல, பிறரல்ல, தேவனுடைய அளவில்லாத நீதியல்ல, பிசாசுகளல்ல, ஆனால் எங்களுக்குச் சிநேகங்காட்டி வினையஞ்செய்த எங்கள் தாய் தந்தையரே எங்களை இந்த நித்திய நெருப்பில் விழுத்திவிட்டார்கள். காட்டுமிருகங்கள் தங்கள் குட்டிகளை இயற்கையாக நேசித்து வளர்க்குமாப்போல அவர்கள் எங்களை வளர்த்தார்களேயல்லாமல் சுபாவமுறைக்கு மேலான அன்போடு கடவுளுக்கோர்க்க வளர்க்கவில்லை. நாங்கள் நன்மை தின்மை அறியாதவயசில் புகைபோல மறைந்துபோகிற உலகவாழ்வே நித்திய கதியென்றாற்போல வியர்த்தமான உலக இன்பசுக செல்வங்களையே வியந்துபாராட்டி அவைகளிலேயே எங்களை நாட்டங்கொள்ளப்

பண்ணினார்களல்லாமல் கடவுளையும் அவருடைய சத்தி
யங்களையும் படிப்பித்து அவரில் பத்தி பற்றுதல்கொள்
ளப்பண்ணவேண்டுமென்று எள்ளளவுங் கவனியாமல்
விட்டுவிட்டார்கள். நாங்கள் பாவபுண்ணியம்பாராமல்
நன்றாயுழைத்துச் சம்பாதித்து மேட்டிமையாய்ச் சீவிக்
கத் தங்கள் போக்குவாக்கினால் பழக்கினார்களேயல்
லாமல் பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச் சம்பா
தித்து மோட்சத்தை அடையப்பண்ணவேண்டுமென்ற
ஆத்திரம் அவர்களுக்கு இருக்கவில்லை. எங்கள் துர்க்
குணங்களையும் குறைகுற்றங்களையும் தண்டனையினாலா
வது திருத்தாமல் எங்கள் எண்ணப்படி நடக்கவிட்டார்
கள். எங்களுக்கு நற்பழக்கங்களைப்பயிற்றி முன்மாதிரி
காட்டி நடத்துகிறதற்குப்பதிலாக அவர்களே எங்க
ளுக்கு இடறுகட்டைகளாயிருந்தார்கள். நாங்களும்
அவர்களைக் கண்டுபாவிப்பதில் அப்பியாசப்பட்டு அவர்
களைப்போலச் சருவேசுரனுக்குத் துரோகிகளாகி
மோட்ச உரிமையை இழந்துபோனோம். அவர்களு
டைய கேடுகெட்ட வளர்ப்பின் பலனாகவல்லோ நாங்
கள் சருவேசுரனை நேசியாமலும் தேடாமலும் மதியா
மலும் அவருடைய கற்பனைகளை அறம்புறமாய் மீறி
நடந்து கடைசியில் இந்த நரகநெருப்பில்விழுந்து இதில்
நித்தியகாலமாய்க் கிடந்தழுந்தவேண்டியவர்களானோம்”
என்றிப்படித் தங்களுக்குச் சதிமோசஞ்செய்த தாய்
தந்தையரைப்பற்றி விவரிக்க முடியாதவிதமாய் முறை
யிட்டு அலறுவார்களென்று வேதபாரகரான அர்ச்.
சிப்பிரியான் வசனிக்கிறார். ஆபேலின் இரத்தம் தன்
னைக் கொலைசெய்த தன் சகோதரனாகிய காயீனிற்
பழிவாங்கக் கடவுளைப்பார்த்து அபயமிட்டதுபோல
இவர்களும் தங்களை நரகநெருப்பிற் தள்ளிவிட்ட தங்கள்
தாய் தந்தையரில் என்றென்றைக்கும் பழிவாங்கக்
கடவுளைப்பார்த்துக் கையெடுத்துக் கதறாமல் இருப்பார்
களா? “மகன் தகப்பனை அவமானஞ்செய்கிறான், மகள்
தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு
விரோதமாகவும் எழும்புகிறார்கள். மனிதனுக்குச்



சத்துராதிகள் அவன் வீட்டார்தானே” (மிக்கேயாஸ்.
7-6.) என்னுந் தீர்க்கதரிசியின் வாக்கியம் நரகத்தில்
எந்நாளும் நிறைவேறிவர லௌகீகபெற்றோரே காரண
மாயிருப்பார்கள்.

தேவபயம் பத்தியில்லாமல் லௌகீகராய்ப் பிள்ளை
களை வளர்க்குந் தாய் தந்தையரே “தங்கள் குமாரர்
களையுங் குமாரத்திகளையும் பிசாசுக்குப் பலியிட்டார்
கள்” (சங்கீ. 105-37.) என்று இராசதீர்க்கதரிசி புலம்
பினது உங்களைப்போன்ற பெற்றோரைப்பற்றியல்லவா?
“ஆண்டவரே அவர்களுக்குக் கொடும். அவர்களுக்கு
என்னத்தைக் கொடுப்பீர்? அவர்களுக்கு மலடான
உதரத்தையும் பாலூறாத கொங்கைகளையும் கொடுத்தரு
ளும்.” (ஓசே. 9-14.) என்று ஓசே எனுந் தீர்க்க
தரிசி ஏன் மன்றாடினாரென்று நினைக்கிறீர்கள்? அவர்கள்
தங்களைப்போலத் தங்கள் மக்களையுங் கெட்டுப்போக
விடுவார்களென்று அஞ்சியல்லவா? “அவர்கள் தங்கள்
பிள்ளைகளை வளர்த்தாலும் மனுஷர் மத்தியில் அவர்
களைப் பிள்ளைகளில்லாதவர்களாக்குவோம், நாம் அவர்
களைவிட் டகலும்போது அவர்களுக்கு ஐயோ கேடாம்”
(ஓசே. 9-12.) என்று சருவேசுரன் தமது தீர்க்கதரிசி
யைக்கொண்டு வசனித்தவாக்கியம் மக்களை லௌகீக
ராய் வளர்க்குந் தாய் தந்தையரே உங்களுக்குப் பொருந்
தாதென்று எண்ணுகிறீர்களா? “ஒருவன் நூறு பிள்ளை
களைப்பெற்று அநேகவருஷகாலஞ் சீவித்துத் தீர்க்
காயுசை அடைந்திருந்தாலும்” அவன் தன் பிள்ளைகளைக்
கடவுளுக்கேர்க்க வளர்க்காதிருப்பானாகில் “அவனைப்
பார்க்கிலுங் குறைமாதத்திற் பிறந்த சாபிள்ளையே
அதிகம் நல்லது” (சர்வப்பிர. 6-3.) “துட்டபிள்ளைகள்
அதிகரிப்பதினால் சந்தோஷங்கொள்ளாதே, அவர்களி
டத்திலே தேவபயமில்லாவிடில் அவர்களைப்பற்றி அக
மகிழ்ச்சிகொள்ளாதே. அவர்கள் சீவியத்தில் நம்பிக்கை
வையாதே. அவர்கள் வேலைகளுக்கு எதிர்பார்த்தி
ராதே. துர்மார்க்கரான ஆயிரம்பிள்ளைகளைவிட தேவ
பயமுள்ள ஒரு பிள்ளை மேலானவன். துர்மார்க்கரான

மக்களை விடுவதைவிட மக்களில்லாமற் சாவது உத்தமம்." (சர்வப்பிர. 16.1-4.) ஒரு இந்துசமய நூலாசிரியரும் இந்தக் கருத்தைத்தான் வெளியிட்டு "கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி எச்சம் அற்று ஏமாந்து இருத்தல் நன்றே" என்றும், "பன்றிபலவீன்றுமென்ன குஞ்சரமொன்றீன்றதனாற் பயனுண்டாமே" என்றும் மொழிந்தார்.

பிள்ளைகளைத் தேவநேசமில்லாமல் லௌகீகராகவும் நெறிகெட்டவர்களாகவும் வளர்க்கும் பிதா மாதாக்களே! யேசுநாதர் சிலுவை சுமந்துகொண்டு போகும்போது தம்மைக்கண்டு புலம்பியழுத ஸ்திரீகளைப்பார்த்து "நம்மைப்பற்றி அழாதேயுங்கள், ஆனால், உங்களையும் உங்கள் பிள்ளைகளையும்பற்றி அழுங்கள், ஏனெனில், இதோ மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைப் பெறாத உதரங்களும் பால்கொடாத பயோதரங்களும் பாக்கியம்பெற்றவைகளென்றும் சொல்லப்படும் நாள் வருகிறது" (லூக். 23-29.) என்று வசனித்ததற்கு நியாயம் என்னவென்று நினைக்கிறீர்கள்? யூத ஸ்திரீகள் தங்கள் பிள்ளைகளைத் தேவபயமற்றவர்களாக வளர்த்ததின் பயனாக அவர்கள் உலக இரட்சகரை வதைத்துக் கொலைசெய்து அதனாற் தங்களுக்கும் தங்கள் பெற்றாருக்கும் புத்திரசந்தானத்துக்கும் மிகப் பயங்கரமான தேவபழியைச் சீக்கிரந் தேடிக்கொள்வார்களென்றதினாலல்லவா? யோசேப்பஸ் என்பவரும் அக்காலத்து வேறு சரித்திர நூலாசிரியர்களும் எழுதிவைத்தபடி யூதபுத்திரர் தங்கள் அதிக்கிரமமிகுதியால் யேசுநாதருடைய இரத்தப்பழி தங்கள்மேலும் தங்கள் மக்கள்மேலு மிருக்கக்கடவது என்று கூக்குரலிட்டு அவரைச் சிலுவையிலறைந்துகொன்ற சிலகாலத்துக்குப்பின் ரோமர் எருசலேம்நகரியை முற்றிக்கைபோட்டிருந்தபோது மூன்றுமாதத்துக்கிடையில் இரண்டிலட்சம் யூதர் பஞ்சத்தினாற்சாக ஒரு இலட்சத்துப் பதினாயிரம் பிரேதங்கள் நகரியின் ஒருவாசலால்மாத்திரங் கொண்டுபோகப்பட்டன. பதினொருஇலட்சம்பேர் நகரியிலும்



இரண்டிலட்சத்து நாற்பதினாயிரம்பேர் யூதேயாவின் மறுவிடங்களிலுங் கொல்லப்பட்டார்கள். வளவுகளிலுங் கொல்லைகளிலும் வயல்வெளிகளிலுந் தெருவீதிகளிலுங் காடுபோல நாட்டப்பட்ட சிலுவைகளில் எண்ணற்ற ஆடவர் தூக்கப்பட்டுத் தங்கள் இரட்சகரைச் சிலுவையிலறைந்து கொன்றபழிக்கு உத்தரித்தார்கள். ரோமருக்குச் சிறைகளாக ஏற்றப்பட்டவர்களும் பிறசாதியாருக்கு அடிமைகளாக விற்கப்பட்டவர்களும் அநந்தம்பேர். யேசுநாதரை முப்பது வெள்ளிக்கு விற்றுவாங்கின யூதபுத்திரர் ஒருவெள்ளிக்கு முப்பதுபேர் வீதமாக விற்கப்பட்டார்கள். (Chanoin Alfred Webner p. 309.) யூதரின் அக்கிரமங்களுக்குத் தண்டனையாக வரவிருந்த எருசலேம் சங்காரத்தைப்பற்றிச் சருவேசுரன் எரேமியாஸ் என்னுந் தீர்க்கதரிசியைக்கொண்டு அறிவித்திருந்த பயங்கரமான காரியங்களிலொன்று "அவர்களது குமாரரின் மாமிசங்களையும், குமாரத்திகளின் மாமிசங்களையும் அவர்களுக்கு உணவாகக் கொடுப்போம். அவர்களுடைய சத்துருக்கள் முற்றிக்கையிட்டு வளைத்து நெருக்கிடைபண்ணி அவர்களது உயிரைப் பறிக்கத்தேட ஒவ்வொருவனுந் தன் சிநேகிதனின் மாமிசத்தைச் சாப்பிடுவான்." (எரேமி. 19-9.) இந்த வாக்கியமும் அந்நாட்களிற் பூரணமாய் நிறைவேறிற்று. கடூரபஞ்சத்தினால் யூதர் தம் மக்களைக் கொன்று சுட்டுத்தின்பதை ரோம இராணுவத்தார் கண்டு திகைத்தேங்கிப்போனார்களாம். தேவ பிரசைகளாயிருந்த யூதபெற்றார் தம் மக்களைத் தேவபயமும் பத்தியும் உடையவர்களாக வளர்த்திருப்பார்களானால் மேற்படி உபத்திரவங்களை அனுபவிக்கவும், இற்றைக்கும் ஒரு சாதிசனமாயில்லாமல் உலகமெங்குஞ் சிதறடிக்கப்பட்டுத் திரியவும், எல்லாருக்கும் பழிப்புக்கும் வெறுப்புக்குமுரியவர்களாய்ப்போகவும் நேரிட்டிருக்குமா?

இக்காலத்திலும் எத்தனையோ குடும்பங்களில் பிள்ளைகளைத் துன்மார்க்கராய் வளரவிட்டதின்பயனாக ஏலியின் குடும்பத்தைப்போல அக்குடும்பங்களும் வே

ரோடு களையப்பட்டதை உலகங் கண்டுவருகின்றது.
ஐயையோ! இன்னும் எத்தனை குடும்பங்களுக்கு அப்
படிச் சீக்கிரம் நேரிட இருக்கின்றது.! அதற்குக் கார
ணம் பெற்றோர் தம் மக்களைப் பாலப்பருவந்தொட்டுச்
சன்மார்க்கராக வளர்க்கப் பிரயாசப்படாமலிருப்பதி
லல்லவா?

## நல்வளர்ப்புக்குதவி

பெற்றோரே நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பூமியிற்
சன்மார்க்கராகவும் மெய்யான தேவநேசமுடையவர்க
ளாகவுஞ் சீவித்து முடிவில்லாத மோட்ச பேரின்ப
பாக்கியமடைவதற்காக உலக இரட்சகராகிய யேசுநாத
சுவாமி தாமாகவும் தமது திருச்சபை மூலியமாகவும்
செய்துவரும் நன்மைகள் எவ்வளவென்பதை. எப்போ
தாகுதல் யோசித்திருக்கிறீர்களா? இல்லாவிடில் அவை
களை நீங்கள் சுருக்கமாயாகுதல் யோசித்தறிவது நலமா
யிருக்குமென் றெண்ணுகிறேன். எனெனில், அந்த
அறிவு உங்கள் அசட்டையை நீக்கி உங்கள் பிள்ளை
களைச் சிறுவந்தொட்டுச் சருவேசுரனுக்கேற்க வளர்ப்ப
தற்கு மெத்த உதவியாயிருக்கும்.

யேசுநாதர் பூமியிற் தமது ஆயுள்காலம் முழுவதும்
மனுமக்களனைவருக்கும் முன்மாதிரியாகத் தாழ்மை,
அமைச்சல், கற்பு, ஈகை, தபசு, தரித்திரம் முதலிய
சகல புண்ணியங்களையும் பரிபூரணமாய் அனுசரித்து
வந்தார். அன்றியும், தமது பிரசித்த சீவியகாலத்தில்
புத்தி போதனைகளாலும் புதுமைகளாலும் உலகத்துக்கு
ஈடேற்றவழியைப் படிப்பித்துவருகையிற் சிறுவரையும்
நினைவுகூர்ந்து அவர்கள்மட்டில் விசேஷ அன்புகாட்டி
வந்தமையால் பெற்றோர் தங்கள் குழந்தைகள்மேல் அவர்
தமது கரங்களைவைத்து ஆசீர்வதித்தருளும்படி அவ
ரிடங் கொண்டுவருவார்கள். அவர்கள் அவ்வளவு
நெருக்கமாய்வருவது அவருக்குத் தொந்தரவாயிருக்கு
மென்றெண்ணி அவருடைய சீஷர்கள் அவர்களை மறிக்
கப்பார்த்தபோது அவர் இவர்களைத் தடுத்து " குழந்தை



களை நம்மிடம் வரவிடுங்கள், அவர்களுக்குத் தடை
பண்ணாதிருங்கள், ஏனெனில், சருவேசுரனுடைய இராச்
சியம் அவர்களுக்குச் சரியொத்தவர்களுக்கே சொந்தமா
யிருக்கின்றது. ஒரு பாலனைப்போலச் சருவேசுரனுடைய
இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாத எவனும் அதிற்
பிரவேசியானென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்று வசனித்து அந்தக் குழந்தை
களை அரவணைத்து அவர்கள்மேல் தமது கரங்களைவைத்து
ஆசீர்வதிப்பார்" (மாற்கு. 10. 14-16.) மேலும், உல
கத்தின் எத்திசையிலுமுள்ள சகல சாதி சனங்களுக்கும்
சன்மார்க்கத்தைப் போதித்து அவர்களைச் சீர்திருத்திப்
பரலோகபாதையில் நடப்பிக்கிறதற்காகத் திருச்சபை
யை ஸ்தாபித்து மனுஷர் தங்கள் பற்பல அந்தஸ்திலும்
தேவ அனுக்கிரகத்தை அடைவதற்கு வழியாகத் தேவ
திரவிய அனுமானங்களை ஏற்படுத்தினார். ஈற்றில், மனு
மக்களின் இரட்சணியத்துக்காகக் கடின பாடுபட்டுச்
சிலுவையிற் தமதுயிரையும் பலியிட்டார். அதுமாத்
திரமா? இன்னும், பெற்றோரே பிள்ளைகளே நாள்தோறும்
உங்கள் இகபர நன்மைகளுக்காக அவர் தம்மைப் பரம
பிதாவுக்குத் திவ்வியபூசையிற் பலியாக ஒப்புக்கொடுத்
துத் தேவநற்கருணைவழியாகத் தமது திருச்சரீரத்தை
யும் திரு இரத்தத்தையும் உங்கள் ஆத்துமங்களுக்கு
அன்னபானமாகத் தந்தருளுகிறார்.

உலகம் அவருடைய திருச்சபையை முளையில்
நசுக்கிவிட எவ்வளவாகப் பிரயாசப்பட்டாலும் அது
அவருடைய ஆதரவினால் உலகமெங்கும் பரம்பி உங்கள்
அனைவருக்கும் கணக்கற்ற நன்மைகளைச் செய்துவரு
கின்றது. பூமியிற் திருச்சபைக்குத் தலைவராயிருக்கும்
பரிசுத்த பாப்பாண்டவரும் ஆயிரக்கணக்கான மேற்றி
ராணிமாரும் இலட்சக்கணக்கான குருமாருஞ் சந்நியாசி
களுங் கன்னியாஸ்திரீகளும் உலகத்தைத் துறந்து தேவ
ஊழியத்தில் அமர்ந்து சீவியகாலம்முழுதுஞ் செய்து
வரும் பணிவிடையெல்லாம் நீங்கள் சருவேசுரனை
அறிந்து நேசித்து வணங்கி நித்திய மோட்சபாக்கிய

மடைய வழியாகவல்லவா? அவர்களில் எத்தனையாயிரம் பேர் தங்கள் இனபந்துகளையும் உலக சம்பத்துக்களையும் ஊர் தேசத்தையும் விட்டுவிட்டுப் பிறதேசங்களுக்குப்போய் நானாவித இடையூறுகளையும் கஸ்தி துயரங்களையும் அநுபவித்து தங்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்றபடி வேதத்தைப் போதித்துப் பாவிகளை மனந்திருப்புவதிலும் தேவதிரவிய அனுமானங்களைக் கொடுப்பதிலும் மற்றுந் தேவாராதனைகளை நடத்துவதிலும் இளைஞரைப் படிப்பிப்பதிலும் அனாதபிள்ளைகளைத் தாபரிப்பதிலும் நோயாளிகளைச் சந்தித்து உதவிபுரிவதிலும் வயோதிகர், கூன், குருடு, குஷ்டரோகி, சப்பாணி முதலியவர்களைப் பராமரிப்பதிலும் வேறுபல நன்மைகளைச் செய்வதிலுந் தங்கள் வாழ்நாளைச் செலவழிக்கிறார்கள். துறவிகளாக மடங்களிற் சீவிக்கிறவர்கள் தங்கள் செப தப தான தர்மத்தினாலும் பிரபந்தங்களாலும் பற்பல கைத்தொழில்களாலும் உங்கள் இகபர நன்மைக்குப் பெரும் உதவிசெய்து வருகிறார்கள். இன்னும் திருச்சபை காலத்துக்குக்காலம் பெருஞ்செலவிட்டு ஆங்காங்கு அநேக பெரிய தேவாலயங்களையும் குருமடங்களையுஞ் சந்நியாசமடங்களையுந் தரும சாலைகளையுங் கலாசாலைகளையுங் கல்லூரிகளையுங் கட்டியெழுப்பும் நோக்கம் உங்கள் இகபர நன்மையல்லவா? மேலும் உங்களுடைய ஆத்தும நன்மைக்காகவே செபங்கள் பலன்கள் திருச்சடங்குகள் ஆராதனைகள் கூட்டங்கள் திருச்சுரூபங்கள் படங்கள் கணக்கற்ற வேதபுத்தகங்கள் பத்திரிகைகள் செபமாலை குருசு வாவணிக்கம் உத்தரியம் ஆசிநீர் முதலிய யாவையும் பரிசுத்த மாதாவாகிய திருச்சபை ஏற்படுத்தி இடைவிடாமல் எந்நேரமும் உங்கள் ஆத்தும நன்மையிற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றது.

பிதா மாதாக்களே! உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் யேசுநாதசுவாமி தாமாகவும் தமது திருச்சபை மூலமாகவும் இவ்வளவெல்லாஞ் செய்துவர நீங்கள் உங்கள் பிள்ளைகளைச் சன்மார்க்கராக வளர்க்கிற



தற்குச் செய்துவருவதென்ன? செலுத்தும் கவனமென்ன? படும் பிரயாசமென்ன? அவர்களுடைய சரீர நன்மைக்காக நீங்கள் செய்வதிலும் படும் பிரயாசத்திலும் அரைவாசியாகுதல் அவர்களுடைய ஆத்தும நன்மைக்காகச் செய்துவருகிறீர்களா? அவ்வளவுமில்லாமல் முழுதும் அசமந்தமாயிருந்தால் அது ஆண்டவருக்கேற்குமா? அல்லது நடுத்தீர்வையில் அவருக்கு எப்படிக் கணக்குக் கொடுப்பீர்கள்! உங்கள் ஓயாத கவனமும் விடாமுயற்சியும் பிரயாசமுமில்லாதுபோனால் உங்கள் பிள்ளைகளுக்காக யேசுநாதர் தாமாகவுந் தமது திருச்சபைவழியாகவுஞ் செய்துவருவதெல்லாம் வீணாய்ப் போகுமென்பதை அறியாதிருக்கிறீர்களா? அப்படி வீணாய்ப்போவதை எந்நாளும் மிக்க விசனத்தோடு கண்டுவருகிறோம். ஆகையால், தாய் தந்தையரே இனிமேலாகுதல் உங்கள் பிள்ளைகளைச் சன்மார்க்கராக வளர்க்க நல்மனதோடும் விடாமுயற்சியோடும் பிரயாசப்பட்டுவரும்படி அர்ச். பவுல் அப்போஸ்தலரைப்போல எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர்பேரால் உங்களை மன்றாடுகிறேன்.

சிலருக்கு நன்மனமும் முயற்சியுமிருந்தாலும் மக்களை நன்னெறியில் நடத்தத் தொடங்கவேண்டிய நற்பருவமென்ன? முறையென்னவென அவர்களுக்குத் தெரியாததினால் அனுகூலமடையாமற்போகிறார்கள். ஆகையால், இவ்விஷயங்களைப்பற்றி இனிப் பேசுவோம்.

## நற்பருவம்.

பெரும்பாலும் பெற்றார் தம் மக்கள் ஏழெட்டு வயசுவரைக்கும் என்னென்ன குற்றங்குறைசெய்தாலும் "குழந்தைக்கிப்போதென்ன தெரியும், வயசு வர வர வலியத் திருந்தும், வளர்ந்தபின் எல்லாம் வலியச் செய்யும்" என்றுசொல்லிப் பிள்ளைகளைத் திருத்தாமலும் அவர்களுக்கு நற்பழக்கங்களைப் பழக்காமலும் தங்கள் இச்சைக்கும் போக்குக்கும் அற்ப புத்திக்கும் ஏற்றபடி நடக்க விட்டுவிடுகிறார்கள். இதுவே பிற்காலம்

பிள்ளைகளுக்கும், பிள்ளைகளாற் பெற்றாருக்கும் நேரிடுஞ் சகல கேடுகளுக்குங் காரணம். "வயசு வரவர வலியத் திருந்தும், வளர்ந்தபின்னெல்லாம் வலியச் செய்யும்" என்னும் கிழவிக்கதை "ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?" "முதற்கோணினால் முற்றுங்கோணும்" "தொட்டிலிற் பழக்கஞ் சுடலைமட்டும்" என்னும் முதுமொழிகளுக்கு முழுதும் மாறு. "சுயபோக்காய்ப் (போகிற) வாலன் கிழவனானபொழுதும் அதினின்று அகலான்" (பழமொழி ஆக. 22.6.) "பருவத்தே பயிர் செய்" "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றவாறு குழந்தைகளை நல்வழியில் நடத்துவதிற் சித்தியடையவேண்டுமானால் அவர்கள் பாலபருவமாயிருக்கும்போதே தொடங்கவேண்டும். தேவபத்தியுள்ள ஓர் துரைசாணி தன் குழந்தைக்கு உபாத்தியாயராகத் தான் யாரைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சிறுவரைப் பயிற்றுவதில் மிகப் பெயர்பெற்ற துப்பான்லூ என்பவரிடம் யோசனை கேட்டபோது அவர் குழந்தைக்கு வயதென்னவென்று விசாரித்தார். தாய் மறுமொழியாக பதினொரு மாதமென்றாள். அப்போது அவர் அவளைநோக்கி அம்மா நீர் இந்தக் கேள்விகேட்க பதினொருமாதம் பிந்திப்போனீர் என்றார். குழந்தைக்குச் சுபாவமுறையில் முதல் உபாத்தியாயியாக கடவுளால் நியமிக்கப்பட்ட மாதாவே அதைப் பெற்றநாட்தொட்டுத் தினந்தோறும் அதற்காகச் சருவேசுரனிடம் மன்றாடி அதை ஆசீர்வதித்து அதன் ஆத்தும சக்திகளையுஞ் சரீரத்தையுஞ் சேதமின்றிக் காத்து வளர்த்து விருத்தியாக்கவேண்டுமென்று மேற்படி மறுமொழியினாற் படிப்பித்தார்.

சென்மபாவத்தின் பயனாகப் பிள்ளைகள் பிறவிதொட்டுத் தின்மைக்குச் சாய்ந்திருக்கிறபடியால் இயல்பாய் அவர்களிடத்தில் முதல் உண்டுபடுவது கோபம், மூர்க்கம், வெடுவெடுப்பு, துட்டாட்டம், பெருமை, பேராசை, பிடிவாதம், பொறுதியீனம், எரிச்சல், அவா, சுயபட்சம், சோம்பல் முதலிய தின்மைகளேயன்றி



சாந்தம், பொறுமை, தாழ்மை, அமைச்சல், பிறர்நேசம், சுறுசுறுப்பு ஆதிய நன்மைகளல்ல. கரடி சிங்கம் புலி யானை முதலிய துட்டமிருகங்களைக்கொண்டு விதம்விதமான வித்தைகளைக்காட்டிப் பணஞ் சம்பாதிக்கும் வித்தைக்காரர் வழக்கமாய் இம்மிருகங்களை எப்போ தொடங்கிப் பழக்குகிறார்கள்? இவைகள் மிகச் சிறு குட்டிகளாயிருக்கும்போதல்லவா? வளர்ந்த மிருகங்களை வசக்கிப் பழக்கவேண்டுமாயின் முதல் அவைகளின் மதமடங்க இரை தண்ணீர் கொடாமல் கட்டிவைத்துப் பட்டினிகிடத்தி அடித்து வதைத்து ஆக்கினைப்படுத்தவேண்டியிருக்கிறது. இப்படிச் செய்வதினால் அநேக மிருகங்கள் பழகமுன் செத்துப்போவதுமுண்டு. அரசாட்சியாரின் அனுமதியோடு சிலர் வன்னியிற் பிடித்து முன்சொன்னவாறாய் வதைத்துப் பழக்கும் பல யானைகளில் சிலவேளை ஒன்றாகுதல் தப்பாமல் எல்லாமிறந்துபோவதை அவ்விடத்தார் நன்றாயறிவார்கள். துட்டராய் வளர்ந்த பிள்ளைகளை இப்படி வதைத்துத் திருத்த முடியுமா? அல்லது அப்படிச்செய்யப் பெற்றாருக்கு மனம்வருமா? ஒருபோதுமில்லை. என்றாலும், அநேக தாய் தந்தையர் தம் மக்களைத் தேவபயம் பத்தியற்ற துட்டராய் வளரவிட்டபின் அவர்களாற் குடும்பங்களுக்கெய்தும் பல நட்டம், வசை, சங்கடம், துயரம், ஆதியவைகளை அனுபவத்தாற் கண்டறிந்து உணருங்காலம் வரும்போது அவர்களைக் கண்டித்துந் தண்டித்தும் திருத்த முடியாததினால் தலைதலையென்றடித்துத் துக்கித்துக் கலங்குவதும், பெரியோரிடம் முறையிடுவதும் மக்களைத் திட்டி வைது அவர்களோடு சண்டையிட்டு சங்கையீனப்படுவதுங் கோடேறி வழக்குப்பேசுவதும் அபூர்வமான சம்பவங்களல்ல.

ஓர்மரம் சிறு கன்றாயிருக்கையில் அதை விருப்பம்போல எப்பக்கத்துக்கும் இலகுவாய் வளைத்து வளர்க்கலாம். ஆனால், அது வளர்ந்து முதுமரமானபின் அப்படிச்செய்ய முடியாது. அது சாய்ந்த பக்கத்துக்கே வளரும். வளர்ந்த பக்கத்துக்கே விழும். பிள்ளைகளின்

நடை குணம் பழக்கம் முதலியவைகளிலும் அப்படியேயாம். உலையிலிருந்தெடுக்கப்பட்ட பொன் வெள்ளி இரும்பு முதலிய லோகவகைகள் இளகியிருக்கையில் அவைகளைத் தட்டியடித்து வளைத்து வேண்டிய வேலைகளைச் செய்யலாம். ஆனால், அவைகள் சூடாறி இறுகியபின் அப்படிச்செய்ய முடியாது. அப்படியே பிள்ளைகளும் இளகிய இரும்புக்கொப்பாயிருக்கும் இளவயதில் வேண்டியவிதமாய் அவர்களைத் திருத்தி வளர்க்கலாம். வளர்ந்தபின் அவர்களின் நடக்கையை மாற்றுவது மிகுவல்லை. லோகவகை சூடாறி இறுகிப்போனால் மீண்டும் அதை உலையிலிட்டு இளகச்செய்யலாம். ஆனால், பிள்ளைகளையோ வளர்ந்தபின் திருத்த முடியாது. இளைஞரை வளர்ப்பதிலும் படிப்பிப்பதிலும் நெடுங்கால அனுபவமுடைய ஓவொபேர்க், கெற்றெலெர், அல்பன்ஸ்ற்றெல்ஸ், கிருயர் முதலிய அநேக அறிவாளிகள் பிள்ளைகள் ஆறு ஏழுவயதில் எவ்வித குணம் நடையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவ்விதமே வயோதிகத்திலும் இருப்பார்களென்று ஒரே வாய்மொழியாய் உரைக்கின்றனர். வேறோர் வித்துவான் சொல்வதென்னவெனில், ஒரு நாலுவயதுக் குழந்தையை என்னிடம் ஒப்பித்து அதை ஒரு சம்மனசாக்க அல்லது பிசாசாக்கச் சொல்லுங்கள். நான் அதை அப்படியாக்குவேன் என்கிறார். இஸ்சிறவேலருள் விளங்கிய பத்தொன்பது இராசாக்களில் இடையில் மனந்திரும்பின மனாசேயைத்தவிர வேறு ஒருவனாகுதல் உத்தமனாய்ச் சீவிக்கவுமில்லை, உத்தமனாய்ச் சாகவுமில்லை. ஏனெனில், அவர்கள் இளைஞராயிருக்கையில் உத்தமராய் வளர்க்கப்படவில்லை. யூதாகோத்திரத்தில் விளங்கிய இருபது இராசாக்களில் ஆறுபேர்மாத்திரம் புண்ணியவான்களாய்நடந்து புண்ணியவான்களாய் மரணித்தார்கள். ஏனெனில், அந்த ஆறுபேர்மாத்திரம் சிறுவந்தொட்டு சன்மார்க்கராய் வளர்க்கப்பட்டார்கள். மற்றைய பதினான்குபேரும் துன்மார்க்கராக வளர்ந்து துன்மார்க்கராகவே மடிந்தார்கள்.



லோறியோ என்பவர் சொல்வதுபோல ஒரு குழந்தை ஞானதீட்சைபெறும்போது இஷ்டப்பிரசாதம் விசுவாசம் நம்பிக்கை தேவநேசம் முதலான கொடைகளை நிச்சயமாகப் பெறுகின்றது. ஆனால், அக்கொடைகள் மனுச்சுபாவத்துக்கு இயல்பான துர்க்குணங்களையும் துராசைகளையும் அழித்துவிடுகிறதில்லை. அக்கொடைகள் மிகச் சத்துடையவைகளாயினும் ஞானஸ்நானம்பெற்ற குழந்தை வளரும்போது அக்கொடைகள் விளங்காமலிருப்பதற்கு அல்லது அற்ப சொற்பமாகமாத்திரம் விளங்குவதற்கு நியாயமென்ன? ஞானஸ்நானம்பெற்ற குழந்தைக்கும் பெறாத குழந்தைக்குமிடையிற் சாதாரணமாய் வித்தியாசங் கண்டுபிடிக்க முடியாமற்போவதேன்? ஞானஸ்நானம்பெறாத பிள்ளையிற்போலப் பெற்றபிள்ளையிடத்திலும் பற்பல துர்க்குணங்களும் துராசைகளும் முளைத்து மதாளிக்கின்றதேன்? இதற்கெல்லாம் நியாயமேதெனில் துர்க்குணங்களுந் துராசைகளும் நன்றாய்ச் செழித்து வளருவதற்கு எந்நேரமும் எப்பக்கத்திலும் வேண்டிய வழி வகைகள் தாராளமாகவுண்டு. குழந்தைகள் கோபங்கொள்ளவும் பழிவாங்கவும், பிடிவாதமாயிருக்கவும், பிறரைப் பழிக்கவும், வீண் சேட்டை சரசங்களைப்பண்ணவும், தகாத வார்த்தைகளைச் சொல்லவும், வீட்டுக்காரரின் துர்மாதிரியும் ஏவுதலும் எப்போதும் நல்ல பசளைபோல் உதவியாயிருக்கின்றது. அர்ச். அகுஸ்தீன் இவ்விஷயத்தைப் பற்றி எழுதியிருப்பது யாதெனில் தாம் சிறுவயதிற் கொச்சை வார்த்தைகளைச் சொல்லும்போதும் அடாத காரியங்களைச் செய்யும்போதும் பிறர் தம்மைக் கண்டிப்பதற்குப் பதிலாகத் தம்மைக் கெட்டிக்காரனாகப் புகழ்ந்து சிரித்து உசார்ப்படுத்திவிடுவார்களாம், இது பிள்ளைகளின் துர்க்குணங்களும் துர்ச்செயல்களும் நன்றாய் மதர்த்தெழும்புவதற்கு வழியாகின்றது. ஆனால், அவர்களிடத்திலுள்ள தேவகொடைகள் வளருவதற்கோ யாதொரு உதவியுமில்லை. ஒரு வயலில் விதைக்கப்பட்ட தானியம் நெடுநாளாய் மழைதண்ணீரில்லாமலும் காவல்

கட்டில்லாமலுந் தேடாக்கூறாய் விடப்பட்டால் அது வலிய முளைத்து வளர்ந்து விளையுமென்று காத்திருக்கலாமா? அது ஊடுடே முளைத்தாலும் செய்கையில்லாததினால் களை வளர்ந்து பயிரைச் சேட்டங்கொள்ளவிடாது. ஒரு குழந்தை ஞானஸ்நானம் பெற்றபோது அதின் ஆத்துமத்தில் விதைக்கப்பட்ட ஞானக்கொடைகள் நாலு ஐந்து வயதுவரைக்கும் தேடாக்கூறாய் விடப்பட்டால் அவைகள் பலனற்றுப் பாழாவதுந் துர்க்குணங்கள் களைபோல வளர்ந்து செழிப்பதும் ஆச்சரியமல்ல.

உள்ளபடி அநேக பிள்ளைகள் பள்ளிக்குப்போகும் வரையும் அவர்களுக்குத் தேவனையும் தேவகாரியங்களையும்பற்றிச் சொல்லிக்கொடுப்பாரில்லை. அவர்களுக்கு நற்பழக்கங்களைப் பழக்குவாருமில்லை. அவர்களுக்கு நன்முன்மாதிரி காட்டி நன்னெறியில் நடத்துவாருமில்லை. அவர்களுடைய குறை குற்றங்களைத் திருத்துவாருமில்லை. அவ்வித பிள்ளைகள் தேவபயம் பத்தியற்றுத் துட்டராய் வளருவதும் பிற்காலம் பெற்றாருக்கும் பிறருக்கும் அவர்களால் பெருந் தின்மைகள் விளைவதும் அதிசயமல்ல. ஆகையால், பெற்றாரே உங்கள் பிள்ளைகள் சன்மார்க்கராக வளரவேண்டுமானால் அவர்களுடைய ஆத்துமத்தில் விதைக்கப்பட்ட தேவகொடைகளாகிய வித்துக்கள் முளைத்துவர அவைகளுக்கு நீர் பாய்ச்சுங்கள்; அதாவது, அவர்களுக்காக எப்போதும் செபமுந் தபசுந் தருமமும் செய்யுங்கள். கமக்காரன் நெற்பயிரோடு உண்டுபடுங் களையைக் கவனமாய்ப் பிடுங்கிவருவதுபோல நீங்களும் உங்கள் பிள்ளைகளிடத்தில் உண்டுபடுந் துர்க்குணங்களையும் துர்ப்பழக்கங்களையும் நாளிலும் பொழுதிலும் களைந்துகொண்டு வாருங்கள். நெற்பயிரை ஆடு மாடுகளும் வழிப்போக்கரும் சேதப்படுத்தாதபடி எப்படிக் காவல் கட்டுப்பண்ணுவீர்களோ அப்படியே உங்கள் பிள்ளைகளையும் துட்டதோழரும் ஊழியக்காரருங் கெடாதபடி அவர்கள் மேல் எந்நேரமும் கண்ணுங் கருத்துமாயிருந்து அவர்கள் அங்குமிங்கும் விடுகாலிகளாய்த் திரிந்து கெட்ட



பிள்ளைகளோடு சேர்ந்து துர்ப்பழக்கங்களைப் பழகாதபடி விழிப்பாயிருங்கள். மேலும், அவர்களிடத்திலுள்ள தேவகொடைகளை உங்கள் புத்திபோதனைகளாலும் நன்முன்மாதிரியினாலும் நன்றாய்ச் செழித்து வளரச் செய்யுங்கள்.

சில நல்ல குடும்பங்களில் பிள்ளைகள் கைக்குழந்தைகளாயிருக்கையில் வீட்டுக்காரர் அவர்களுக்கு பல நல்லகாரியங்களையுஞ் சொல்லிக்கொடுத்தும் பழக்கியும் வருகிறார்கள். ஆனால், அடுத்த குழந்தை பிறந்துவிட்டால், அல்லது அவர்கள் நடந்தோடித்திரியத் தொடங்கிவிட்டால் அவர்களைக் கவனக்குறைவாய் விட்டிட்டு இளையகுழந்தையிற் கவனமெல்லாஞ் செலுத்துவார்கள். அதினால் நேரிடுவதென்னவெனில் மூத்த குழந்தைகள் "நடந்த பிள்ளை நகருகிறது" என்னும் வசைமொழிக்கிடாக மிகச் சிறுவத்திற் சொற்பமாய்க் கற்றவைகளை போதிய அறிவும் அப்பியாசமுமில்லாததால் இலேசாய் மறந்துபோகிறார்கள்; மேலும், பெற்றாரின் கண்காணிப்புக் குறைவினால் தங்களெண்ணப்படி திரிந்து படிப்படியாய்ப் பற்பல கெட்ட பழக்கங்களையும் பழகிக்கொள்ளுகிறார்கள். ஆகையால், பிள்ளைகள் எவ்வளவு வளர்ந்தபோதிலும் பெற்றார் அவர்கள்மேல் கண்ணுங் கருத்துமாயிருந்து அவர்களுக்கு நல்லறிவூட்டி நற்பழக்கங்களைப் பழக்கி நன்முன்மாதிரிகாட்டி அவர்களுடைய குறை குற்றங்களைத் திருத்தி நன்னெறியில் நடத்திவர வேண்டியது.

## உரியமுறை

குழந்தைகள் பேச விளங்கத் துவங்குமுன் மாதாக்களும் மூத்த சகோதரங்களும் பொறுமையாயும் சுறுசுறுப்பாயும் பிரயாசப்பட்டு வருவார்களானால் அவர்களுக்கு அநேக நல்ல காரியங்களைப் பழக்கக்கூடும். ஆனால், அதற்குச் சிறுவரை அதிகம் நெருக்காமலும் பயப்படுத்தாமலும் அன்பாகவும் தயவாகவும் நாளுக்கு நாள் கொஞ்சங்கொஞ்சமாகப் பழக்கிவரவேண்டியது.

அப்படிச்செய்துவந்தால் சிறிதுகாலத்துக்குப்பின் தாங்களாக வலியச் செய்வார்கள். உதாரணமாக: தவழுகிற குழந்தையை தாய் கையிற்பிடித்து அடிக்குமேல் அடிவைத்து நடக்கப் பழக்குகிறாள். சிலகாலத்துக்குப்பின் குழந்தை தானாகத் தத்தித்தத்தி நடக்கத் துவங்குகின்றது. இடைக்கிடை தவறிவிழுந்தழுதாலும் தாய் திரும்பத் தூக்கிவிட்டு நடக்கப் பழக்குகிறாளேயன்றி குழந்தை விழுகிறது அழுகிறதென்று அலுத்துப்போய் நெடுகத் தவழ்ந்து திரியட்டுமென்று விடமாட்டாள். இவ்வாறே வேறு நற்பழக்கங்களையும் விடாமுயற்சியாய்ப் பழக்கவேண்டியது.

இப்படியே கெட்டித்தனமுள்ள சில மாதாக்கள் யாரும் மெய்ச்சக்கூடிய காரியங்களைத் தங்கள் கைக்குழந்தைகளைக்கொண்டு செய்விக்கிறார்களெனக் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். சில வருஷங்களுக்குமுன் இஸ்பானியதேசத்து விக்தோரியா இராணியார் தமது தலைச்சன் பிள்ளையைப்பெற்ற முதலாம் வருடாந்த தினத்தில் தேவனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமாகத் தமது மாளிகையில் திவ்வியபூசை வைப்பித்தார். அச்சமயம் குழந்தைக்குவேண்டிய இராணுவ உடுப்புகளைத் தாமாகச் செய்து உடுத்திப் பூசைக்குப்போகும்போது தாம் தாமே பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போனார். பூசை முடிந்து இராசாவும் பிரபுக்களும் சம்பாஷணைச்சாலைக்குத் திரும்பியபோது இராணியார் பாலகனை அவர்களுக்கு முன்பாக நிறுத்தி ஏதோ காதுக்குள் சொன்னார். உடனே குழந்தை தத்தித்தத்தித் தன் தந்தையாகிய இராசாவுக்கு முன்பாகப்போய் இராணுவத்தார் செய்வதுபோல நிமிர்ந்துநின்று தன் புறங்கையை நெற்றியில் வைத்துச் சலாம் பண்ணிற்று. அதன்பின் அங்கிருந்த மற்றும் பெரியோருக்கும் அப்படியே செய்தது. இதைக்கண்ட சகலரும் அகமகிழ்ந்து ஆச்சரியப்பட்டுக் கைகொட்ட இராசா பெருமையுஞ் சந்தோஷமும் நிறைந்தவராய் தம்மரிய மகனை வாரியெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டார். இந்த ஒருவருஷக் குழந்



தைக்கு இதை யார் பழக்கியிருக்கக்கூடுமென்று விசாரித்தபோது இராசாத்தி தாமேயென்றறிந்து வியந்துகொண்டார்கள். இங்கும் இப்படிச் சில நல்லமாதாக்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பல நற்பழக்கங்களைப் பயிற்றிவருவதைக் கண்டுவருகிறோம். பத்திவிசுவாசமுள்ள சில குடும்பங்களில் தாய்மார் தங்கள் குழந்தைகளையெடுத்துக்கொண்டு அங்குமிங்கும் உலாவும்பொழுது தங்கள் வீடுகளிற் பூச்சியமாய் வைக்கப்பட்டிருக்குந் திருச் சுரூபங்களையும் படங்களையுங் காட்டி அவைகளாற் குறிக்கப்பட்டவர்கள் இன்னார் இன்னாரென்றுசொல்லி அவர்களைக் கைகுவித்து தலை சாய்த்து வணங்கப் பண்ணுகிறார்கள். குருமாரைக் காணும்போது தங்கள் சிறு கைகளைக்கூப்பி வணங்கச்செய்கிறார்கள். அந்திசந்தி மணிச்சத்தங் கேட்டவுடன் தாங்கள் முழந்தாளிலிருந்து திருந்தாதி சொல்லும்போது குழந்தைகளும் முழந்தாளிலிருந்து கைகுவித்துத் தேவனை வணங்கப்பண்ணுகிறார்கள். சிலகாலத்துக்குப்பின் தாய் சகோதரங்களின் ஏவுதலின்றிக் குழந்தைகள் தாங்களாக இவ்வித நற்பழக்கங்களை அனுசரிக்கிறார்கள்.

இப்படிப் பழக்கப்பட்ட சில குழந்தைகள் அந்திசந்தி மணிச்சத்தங் கேட்கும்போது வீட்டிலுள்ளவர்கள் திரிகாலச்செபஞ்சொல்லத் தாமதித்தால் அல்லது அசட்டையாய் விட்டுவிட்டால் அவர்கள் இவர்களைக் கையிற்பிடித்திழுத்து "மணி, மணி, மன்றாடு மன்றாடு" என்றலட்டுவார்கள். அல்லாமலும் தாங்களுந் தாய் சகோதரங்களோடு முழந்தாளிலிருந்து கை குவித்து "தாயே தாயே" என்றேதோ வாய்க்குள் முணுமுணுப்பார்கள். இது அக்கம்பக்கமிருக்கிறவர்களுக்குச் சற்று பாரக்குக்கிடமாயிருந்தாலும் குழந்தைகளுக்கு நல்ல பழக்கமென்பதிற் சந்தேகமில்லை. நான் அறிந்த ஒரு வீட்டில் பூங்காவனத்தில் மரணாவஸ்தைப்பட்ட யேசுநாதர் படமொன்று இருந்தது. அங்குள்ள ஓர் இடுக்குப் பிள்ளைக்கு அவ்வீட்டுக்காரர் அந்தப்படத்தைப் பல நாளுங் காட்டி நமஸ்கரிக்கச் செய்துவந்ததின் பயனாக

அக்குழந்தை சிலசமயங்களில் அப்படத்துக்கு முன்பாகப் போய் முழந்தாளிலிருந்து தனக்குப் பழக்கப்பட்டபடி செய்யும். அச்சமயங்களில் வீட்டிலுள்ளவர்கள் எட்டத்தில் மறைந்துநின்று குழந்தை செய்வதை சந்தோஷத்தோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

சிறிதுகாலத்துக்குமுன் ஒருநாள் மாலைநேரம் ஓர் நோயாளியைச் சந்திக்கப் போயிருந்தேன். அந்நேரம் அங்கிருந்த சிறுபிள்ளைகள் கிலுமொலென்று சத்தமிட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். சற்றுப்பின் "திருந்தாதி" மணி கேட்டது. உடனே விளையாட்டை நிறுத்திப் பிள்ளைகளெல்லாரும் முழந்தாளிலிருந்து திரிகாலச் செபம் சொன்னார்கள். சொன்னபின் அங்கிருந்த பெரியோருக்கும் முதியோருக்கும் முன்பாகப்போய் தோத்திரஞ் சொன்னார்கள். இந்த நற்பழக்கத்தைக் கண்டு சந்தோஷப்பட்டு அவர்களுக்குச் சில நல்வார்த்தைகளைச் சொன்னேன். அப்பொழுது அங்கிருந்தவர்கள் அவ்வீட்டில் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் அப்படிச் செய்வது நெடுநாட்பட்ட வழக்கமென்றார்கள். பின்னேரமாறு அவ்வீட்டருகாற் செல்லும்போது பிள்ளைகளும் பெற்றாருஞ் செபமாலை யோதுவதைக் கேட்கலாம்.

பெற்றாரனைவரும் இவ்வித நற்பழக்கங்களைத் தங்கள் பிள்ளைகளுக்குப் பழக்கிவருவார்களாகில், அது அவர்கள் குடும்பங்களுக்கு எவ்வளவோ தேவாசிர்வாதத்துக்கு வழியாயிருக்குமே. வழக்கமாய்த் தாய் சகோதரங்கள் கைக்குழந்தைகளுக்கு ஆச்சி, அப்பு, அம்மா என்று முதல் சொல்லிக்கொடுப்பார்கள். இதைப்பார்க்கிலும் அர்ச். ஞானப்பிரகாசரின் தாய் செய்ததுபோலச் செய்வதே அதி உத்தமம். இந்தப் புண்ணியவதி விவாகம் பண்ணிய காலந்தொட்டுத் தனக்கு தலைச்சன் பிள்ளையாகத் தேவன் ஓர் ஆண்குழந்தையைத் தந்து அதைத் திரும்பத் தேவ ஊழியத்துக்கு அழைத்துக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டுவந்தாள். அவள் வேண்டுதற்படி ஓர் ஆண்குழந்தையைப்பெற்று அது முதல் தாய்தந்தையைக் கூப்பிடப் பழக்காமல் யேசுமரியென்னுந் திருநாமங்களையே உச்சரிக்கப்பண்ணவேண்டுமென்ற ஆசையினால் இந்த இனிய வார்த்தைகளையே எப்போதும் அதன் காதில் சொல்லிவருவாள். பிள்ளை பேசப் பருவமானவுடன் தாயின் ஆசைப்படி முதன்முதல் "யேசுமரி" என்றே சொல்லிற்று. தாய் இந்த அனுகூலத்தினாற் தேற்றப்பட்டு வேறும் அவ்வித வார்த்தைகளையும் வசனங்களையும் பிள்ளையின் வயதுக்கும் வளர்ச்சிக்குந்தக்க சிறுசிறு செபங்களையும் நாளிலும் பொழுதிலும் சொல்லிக்கொடுத்துக்கொண்டுவந்தபடியால் அது சிறுவயதிற்றானே செபகுணம் நிறைந்த பிள்ளையாயிற்று. மறு குழந்தைகள் சிறுவயதில் விளையாட்டை விரும்பி அதில் அதிக நேரத்தைக் கழிப்பதுபோல ஞானப்பிரகாசர் என்னும் இக்குழந்தை செபத்தையே அதிகமாய் ஆசித்து அதிலே தன் நேரத்தில் பெரும்பங்கைச் செலவழித்துவரும். செபத்தினாலடைந்த பலனைக்கொண்டே பாவத்தையும் பிசாசின் சோதனைகளையும் துர்ப்பழக்கங்களையும் விலக்கி நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய்ப் புண்ணியத்திலும் புத்தியறிவிலும் வர்த்தித்து வந்தது. "கொஞ்சக்காலஞ் சீவித்தும் நெடுஞ்சீவியத்தின் வேலைகளை நிறைவேற்றினார்." (ஞானா. 4-13.) என்னும் ஞானாகம வசனத்துக்கொப்ப இவர் வாலிப வயதில் மரணித்திருந்தாலும் தம் சந்தானத்துக்கு மங்கா மகிமை பெருமையாயும் யேசுசபைக்கு ஆபரணமாயும் வாலிபருக்குப் பாதுகாவலராயும் வந்தார். இவையாவுக்கும் புண்ணியவதியான இவர் தாய் இவருக்குப் பாலவயதுதொட்டுப் பழக்கிவந்த செபம் முதலிய நற்பழக்கங்களே காரணமாம்.



அர்ச். கிறீசோஸ்தமருளப்பர் சொல்வதுபோல பெற்றாரனைவரும் தங்கள் பிள்ளைகளுக்கு முதற் குருவும் உபாத்தியும் வைத்தியருமென்பதை யொருபோதும் மறவாமல் இம்மூவரின் தொழில்களையும் முக்கியமாய் மாதாக்களே தம் மக்கள்மட்டில் நிறைவேற்றி வருவார்களாக. இதற்கு வழியாகத் தாய் தன் பிள்ளைக்குப்

பாலுடன் தேவபத்தியையும் ஊட்டவேண்டுமெனச்
சில மகாத்துமாக்கள் கூறுகிறார்கள். அதாவது: பால
பருவந்தொட்டு தாய் தன் பிள்ளைக்குச் செபங்களையும்
வேதசத்தியங்களையும் வேதாநுசாரங்களையும் நல்லொ
ழுக்கங்களையும் கொஞ்சங் கொஞ்சமாய் நாள்தோறும்
படிப்பித்துவரவேண்டும். உதாரணமாக முதல் யேசு,
மரி, சூசை, தேவனுக்குத் தோத்திரம், மரியாய்க்கு
மங்களம், மரியாயே வாழ்க, யேசுவே எங்களை இரட்
சியும், மாசில்லாத மாதாவே எங்களுக்காக மன்றாடும்,
"பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும்
தோத்திரம் உண்டாவதாக", ஆண்டவரே எங்களை
ஆசீர்வதியும். என் காவற் சம்மனசே எனக்காக மன்றா
டும். சகல மோட்சவாசிகளே எங்களுக்காக மன்றாடுங்
கள் என்று இவ்வித சிறு மனவல்லயச் செபங்களை பய
பத்தியாய் நாள்வட்டத்திற் பலதாம் கை குவித்துச்
சொல்லப்பண்ணலாம். குழந்தை நடந்தோடும் பருவ
மாகையில் பரமண்டலம், பிரியதத்தம், திருந்தாதி முத
லான சிறு செபங்களை ஒவ்வொரு வசனமாகச் சொல்
லிக்கொடுத்துப் பாடமாக்கியபின் "தினமிருபொழுதுந்
தெய்வந்தொழுதிரு" என்றபடி அந்திசந்தி முழந்தாழி
லிருந்து சொல்லப்பண்ணுவதும் தாய் சகோதரங்கள்
இலகுவாய்ச் செய்யக்கூடிய ஓர் காரியம்.

படிப்படியாய் மற்றும் மந்திரங்களையும் பிரதானவேத
சத்தியங்களையும் படிப்பிக்கலாம். உதாரணமாக, சருவே
சுரன் ஒருவர். அவர் தாம் எங்களையும் எல்லாவற்றையும்
படைத்தவர், எங்களை இரட்சித்தவர், எங்களை அருமை
யாய் நேசித்துக் காப்பாற்றுகிறவர். நாங்கள் நினைப்ப
தையெல்லாம் அறிகிறார். சொல்வதையெல்லாங் கேட்கி
றார். செய்வதையெல்லாங்காண்கிறார். தம்மைச்சேவித்து
வணங்கக் கற்பனைகளைக் கொடுத்திருக்கிறார். அவைக
ளென்னென்ன, தேவனுடைய கற்பனைகளை மீறுவது
தான் பாவம். பாவம் எத்தனை வகைப்படும். தேவன் பா
வத்தைப் பகைக்கிறார். பாவஞ்செய்கிறவர்களைப் பலவித
மாய்த் தண்டிக்கிறார், மூர்க்கமான பாவிகளை நரகத்திற்



தள்ளிவிடுகிறார். நரகம் என்றால் என்ன. மோட்சமென்
றால் என்ன. பாவிகள் நரகத்துக்குப் போவார்கள். அங்
கே சாகமுடியாமல் முடிவில்லாத பசி தாகத்தையும் பற்
பல ஆக்கினைகளையும் அனுபவித்து பிசாசுகளோடே
நெருப்பில் வேகுவார்கள். நல்லவர்கள் மோட்சத்துக்குப்
போவார்கள். அங்கே சருவேசுரனை முகமுகமாய்த்
தரிசித்துச் சகலவித பேரின்ப பாக்கியங்களையும் என்
றென்றைக்கும் அனுபவிப்பார்கள். சருவேசுரன் முதல்
அரூபிகளான சம்மனசுகளைப் படைத்தார். அவர்களிற்
சிலர் ஆங்காரத்தினாற் கெட்டுப்போனார்கள். அப்படிக்
கெட்டுப்போன சம்மனசுகள்தான் பிசாசுகள். நல்ல
சம்மனசுகளில் ஒவ்வொன்றை சருவேசுரன் மனுஷரில்
ஒவ்வொருவருக்குங் காவலாக நியமித்திருக்கிறார். மனு
ஷனுடைய சரீரம் மண்ணாலாக்கப்பட்டது. ஆத்துமம்
தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்டது. முதல்
மனுஷனுக்குப் பெயர் ஆதாம். முதல் மனுஷியின்
பெயர் ஏவாள். அவர்களுடைய நன்மைக்கும் தின்மைக்
கும் அவர்கள் சந்ததியாராகிய நாங்கள் அனைவரும் பங்
காளிகளாயிருப்பது தேவசித்தம். அவர்கள் செய்த
பாவமென்ன? அதினால் வந்த கேடுகளென்ன. அந்தப்
பாவத்துக்கும் அதற்குரிய ஆக்கினைகளுக்கும் நாங்க
ளெல்லோரும் பங்காளிகளாய்ப் பிறக்கிறோம். அதினாற்
தான் நாங்கள் பிறக்கும்பொழுது மரணத்தீர்வையோடு
பிறக்கிறோம். எவ்வளவுகாலம் சீவித்தாலும் ஒருநாள்
சாகவேண்டும். சாவுக்குப்பின் சரீரம் தூசியாய்ப்போம்.
ஆத்துமம் ஒருபோதும் அழியாது. எங்கள் ஆத்து
மங்களை இரட்சிக்கிறதற்காகத்தான் தேவன் மனுஷனா
கப் பிறந்து பாடுபட்டு மரணித்தார். இப்படிச் சருவே
சுரனையும் அவருடைய இலட்சணங்களையும், உலக
சிருட்டிப்பையும் மனுஷனுடைய படைப்பையும், கேட்
டையும், இரட்சிப்பையும், அவனுடைய கடமைகளையும்
கதியையும், பாவத்தினால்வருங் கேடுகளையும், புண்ணி
யத்தினால் விளையும் நன்மைகளையும் மற்றும் வேதசத்தி
யங்களையும் சம்பவங்களையும் உலக இரட்சகரான யேசு

நாதசுவாமியுடையவும் சுத்தவாளருடையவுஞ் சரித்திரங்
களையும் நாளுக்குநாள் கொஞ்சங் கொஞ்சமாய் பெற்றோர்
பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பார்களானால் அதுவே
மக்களின் சன்மார்க்க சீவியத்துக்கு அசைவற்ற அத்தி
வாரமாயிருக்கும். "சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்"
தென்ற முதுமொழிப்படி பிள்ளைகள் சிறுவயதிற் படித்த
வைகளை யொருபோதும் மறந்துபோகமாட்டார்கள்.

இப்படிச் சில பெற்றோர் பிள்ளைகளைப் படிப்பித்து
வருவதைக் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். ஒருநாள்
ஒரு குருவானவர் ஒரு வயல்வெளியாற் போகும்போது
நாலுவயதுப் பையனொருவன் வரம்பில் விளையாடிக்
கொண்டிருந்தான். அவர் அவனைப்பார்த்து, "தம்பி
உனக்குச் சிலுவைமுத்திரைபோடத் தெரியுமாவென்று
கேட்டார்." இது எவ்வளவு அற்ப கேள்வியென்று
தனக்குட் சிந்தித்தாற்போல பையன் ஒன்றும் பேசா
மல் புன்னகையோடு குருவானவரை யேறிட்டுப்பார்த்
தான். வயலில் வேலைசெய்துகொண்டிருந்த தாய்
கிட்டவந்து குருவானவரை நோக்கி, "சுவாமி அது
போதாது, ஞானோபதேசத்திற் சில கேள்விகளைக் கேட்
டுப்பாரும்" என்றாள். அப்படியே அவர் வேதசத்தி
யங்களில் அதி முக்கியமானவைகளைப்பற்றிப் பலகேள்வி
களைக் கேட்டார். பையன் தத்தளியாமற் சுருக்கமாயும்
தெளிவாயுஞ் சொன்ன விடைகளைக் கேட்டுக் குருவான
வர் சந்தோஷப்பட்டு இதையெல்லாம் இச்சிறுவனுக்
குக் கற்றுக்கொடுத்தது யாரென்று வினவினார். அதற்கு
தாய் மறுமொழியாக, "நான் பிள்ளைக்கு உடுத்தும்
போதும், தீன் கொடுக்கும்போதும், ஒழிவான நேரங்
களிலும், வேலைசெய்யும்போதும் இதைப் பக்கத்தில்
வைத்துக்கொண்டு ஒவ்வொருநாளும் தேவகாரியங்களைச்
சொல்லிக்கொடுத்துத் திரும்ப அவைகளைப் பலமுறை
யும் எனக்குச் சொல்லப்பண்ணிவருகிறேன். அதினால்
சருவேசுரன் என் பிரயாசத்தை ஆசீர்வதித்திருக்கிறார்"
என்றாள். பத்தியும் புத்தியுமுள்ள இந்த மாதாவைப்
போல மற்றும் மாதாக்களனைவரும் இப்படித் தங்களா



லியன்றளவு செய்துவருவார்களாகில் தேவன் அவர்கள்
பிரயாசத்தை ஆசீர்வதியாமல் விடுவாரா?

இப்படி நாள்தோறும் வேதசத்தியங்களைக் கொஞ்
சங் கொஞ்சமாயும் தெளிவாயும் படிப்பிப்பதுடன் தேவ
தோத்திரத்துக்குரிய பத்திக் கிருத்தியங்களையும் அனு
தினம் அனுசரித்துவரப்பண்ணவேண்டும். காலையில்
விளித்தவுடன் "யேசு மரி சூசை உங்கள் அடைக்கலத்
திற் கண்விழித்து பொல்லாப்பைக் காணாமலும் நினை
யாமலும் செய்யாமலும் இருக்கக் கடவேனாக" என்றும்
எழுந்தவுடன் "யேசுநாதருடைய திரு நாமத்தினால்
எழுந்திருக்கிறேன். படுக்கையில்நின் றெழுந்ததுபோல
சகல பாவங்களையும் விட்டெழுந்து மறுபடி பாவத்தில்
விழாதபடி என்னைக் காத்தருளுஞ் சுவாமி" என்றும்
சொல்லப்பண்ணலாம். நாம் இம்மையிலும் மறுமையி
லும் பரம திரீத்துவத்தை வணங்கித் துதிக்கிறதற்கா
கப் படைக்கப்பட்டபடியால் பிள்ளைகள் காலையில் எழுந்
தவுடன் முழந்தாளிலிருந்து "பிதாவுக்கும் சுதனுக்கும்
இஸ்பிரீத்துசாந்துவுக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக"
என்று சொல்லி மும்முறை தரையை முத்தமிடப் பழக்
குவது மிக நல்லவழக்கம. அதன்பின் சிலுவைவரைந்து
பிதாச் சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய திரியேக சருவே
சுரா என்னும் காலைச்செபம், பரமண்டலம், பிரியதத்
தம், விசுவாசமந்திரம், திரிகாலச்செபம், முதலியவை
களைக் கைகுவித்துப் பயபத்தியாய்ச் சொன்னபின்
சருவேசுரன் தங்களையும் தங்கள் தாய் தந்தை சகோ
தரங்களையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றியருளும்படியா
கவும் தங்கள் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் வேண்
டிய நன்மைகளைத் தந்தருளும்படியாகவும் மன்றாடப்
பண்ணலாம். இப்படியே மாலையிலும் மக்கள் நித்தி
ரைக்குப் போகும்போதும் தவறாமல் செபஞ்சொல்லப்
பண்ணவேண்டியது.

இதற்குமாறாக ஐயையோ எத்தனையாயிரம் பிள்ளை
கள் பெற்றோரின் அசட்டையால் அந்திசந்தி செபம்பண்

ணாமல் ஆடு மாடுகளைப்போல படுத்தெழும்புகிறார்கள்.
தினந்தோறும் குறைந்தபட்சம், காலைமாலையிலாவது
தம்மை வணங்கித் துதிக்க நம்மைப் படைத்த தேவன்
இப்படிப்பட்ட குடும்பங்களை ஆசீர்வதித்துக் காப்பாற்றி
யீடேறப்பண்ணுவாரென்று காத்திருக்கச் சற்றேனும்
இடமுண்டா? ஆத்துமத்தின் அனுதின ஆகாரமாகிய
செபமில்லாமற் சிறியோர் சன்மார்க்கராய் வளருவார்க
ளென்றெண்ணுவது பெரும் பேதமை. பிள்ளைகள் இர
விற் சாப்படாமல் சயனித்துவிட்டால் மாதா மறவாமல்
அவர்களை அருட்டித் தீன்தீற்றித் தண்ணீர் பருக்கி
நித்திரைகொள்ளப்பண்ணுவாள். இது மெத்த நல்ல
வழக்கம். ஆனால், அவர்கள் செபஞ்செய்யாமற் சய
னித்துவிட்டால் அவர்களை எழுப்பிச் செபஞ்சொல்வி
விட்டுப் படுக்கப்பண்ணும் பெற்றோரை யெண்ணிக் கணக்
கிடவேண்டுமாகில் ஒருகையிலிருக்கும் விரல்கள் மெத்த.
என்றாலும், சில தேவபத்தியுள்ள மாதாக்கள் தங்கள்
பிள்ளைகள் காலைமாலைச் செபங்களை மாத்திரமல்ல திரி
காலச் செபத்தையும் அசனத்துக்கு முன்னும் பின்னும்
சொல்லவேண்டிய சிறு செபங்களையும் கிரமமாய்ச்
சொல்லப்பண்ணுவார்கள். அன்றியும் மாலைநேரம் தங்
களோடு பிள்ளைகளும் அல்லது தங்களுக்கு நேரங்கிடை
யாவிடிற் பிள்ளைகளாவது ஒன்றாய்ச்சேர்ந்து செபமாலை
யோதப்பண்ணுவார்கள். இன்னுஞ் சில மாதாக்கள்
செய்துவரும் மிக உச்சிதமான வேறோர் வழக்கமுண்டு.
அதாவது தினந்தோறும் தாங்கள் பூசைக்குப் போகும்
போது பிள்ளைகளையும் வெள்ளென எழுப்பிக் கூட்டிக்
கொண்டுபோவார்கள். தங்களுக்கு வசதிப்படாதவேளை
களிற் பிள்ளைகளையாவது அனுப்புவார்கள்.

இவ்வுத்தம வழக்கங்களை யனுசரித்துவருங் குடும்
பங்களைத் தேவன் விசேஷவிதமாய் ஆசீர்வதித்துக் காப்
பாற்றிவருவதைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம். இரண்
டாம் அதிகாரத்திற் சொல்லப்பட்ட கைம்பெண் நெடு
நேரம் வேலைசெய்துகொண்டிருக்கும் வேளைகளிற் தன்
னேக புத்திரனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பல




செபங்களையும் செபமாலையோதுவதற்கு அறியவேண்
டிய காரணிக்கம் பிரார்த்தனை முதலியவைகளையும் ஒவ்
வொன்றாக நாளிலும் பொழுதிலும் படிப்பிப்பதுமன்றித்
தான் அறியாத சில விசேஷ செபங்களைத் தலையி
லிருந்த ஓர் நல்ல கிறீஸ்தவனிடங் கேட் டெழுதிவரும்
படி பலநாளும் அனுப்புவாள். மேலும் தான் நெடுங்
காலத்துக்கு முன்னும் பிரசங்கங்களிற் கேட்டிருந்த
அநேக நல்ல காரியங்களையும் உலகபொருட்களின் விழ
லையும் சருவேசுரனை நேசித்துச் சேவிப்பதிலுள்ள இக
பர நன்மைகளையும்பற்றிச் சொல்லி வருவாள். இவள்
நாள்தோறும் தன் மகனோடு செபமாலை சொல்வது வழக்
கம். ஓரிரவு போசனத்துக்குப்பின் அவள் வீட்டி
லிருந்த வேறோர் பெண்பிள்ளையோடு அயல் வீட்டில்
அன்றுதானே காலஞ்சென்றுபோன ஓர் பிறசமயத்தவ
னுடைய ஆத்துமத்தின் முடிவு நித்தியமாய் எவ்வளவு
நிர்ப்பாக்கியமுள்ளதா யிருக்குமென்று நெடுநேரங்
கதைத்துக்கொண்டிருந்தபடியால் மகன் பக்கத்திற் படுத்
து விட்டான். நெடுநேரத்துக்குப்பின் செபமாலை சொல்
லுகிறதற்காகத் தாய் அவனைத் தட்டியெழுப்ப அவன்
நித்திரைச் சோப்பத்தினாற் கேட்டுங் கேளாதவன்போ
லக் கிடந்துவிட்டான். அவள் அவனை யெழுப்புவதிற்
பிடிவாதமாயிருப்பதை மற்றவள் கண்டு ஐயோ பாவம்
பிள்ளை நித்திரையாய்ப் போனபடியால் கிடக்கட்டும்,
நாங்களிரண்டுபேரும் செபமாலை யோதுவோமென்றாள்.
ஆனாற் தாயோ அதைக் கேளாமல் ஆமோ செபமாலை
யோதாமல் என் பிள்ளையை நித்திரைசெய்ய விடுவே
னோ என்று சொல்லி அவனை யருட்டி யெழுப்பி செப
மாலை சொன்னபின்மாத்திரம் உறங்கவிட்டாள். இவள்
தன் வீட்டுக்குச் சமீபமாயிருந்த கோவிலில் குருவான
வர் இருக்கும்போதுமாத்திரமன்றி அவர் அயல் ஊர்க்
கோவில்களிலிருக்கும்போதும் தினந்தோறும் தன் மக
னையும் பூசைக்குக் கூட்டிக்கொண்டுபோவது வழக்கம்.
தான்போக வசதிப்படாத நாட்களில் மகனையாவது
அனுப்பிவருவாள். ஒருநாட்காலமே அவன் சில பிள்ளை

களோடு விளையாடிக்கொண்டுநிற்பதைத் தாய் கண்டு
பூசைக்குப் பிந்தாமல் சீக்கிரம் வாவென்று சொல்லி
விட்டுப்போக அவன் அன்று கடன் திருநாளல்லத்
தானேயென்றோ அல்லது விளையாட்டுப் பராக்கினாலோ
தெரியாது பூசைக்குப்போகாமல் விட்டுவிட்டான். தாய்
பூசைமுடிந்து வீட்டுக்கு வரும்போது அவன் இன்னும்
விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு கையிலொரு தடி
யை யெடுத்துவந்து அவனைப் பிடித்து துடிக்கப் பதைக்க
அடித்ததுமன்றித் திரும்ப ஒருபோதும் அப்படி அசட்
டையினாற் பூசைப்பலனை யிழந்துபோகாதபடி கண்டிப்
பாய் எச்சரித்துவிட்டாள். இதல்லவோ சிறுவந்தொட்
டுப் பிள்ளைகளை வளர்க்கும் முறை. இவ்வித கண்டிப்
பின் பயனாக இந்தப் பையன் திரும்ப ஒருபோதும்
தினப்பூசைகாணத் தவறவில்லை. தினப்பூசை காண்ப
தினாற் பிள்ளைகளுக் கெய்தக்கூடிய நன்மையை நப்போ
லியன் என்னும் இராசாவைப்போலப் பெற்றாரும் அறி
வார்களானால் எவ்வளவு நன்மையாயிருக்கும். இவர்
ஒருநாள் ஒரு கலாசாலையைத் தரிசிக்கப் போயிருந்த
பொழுது, அங்குள்ள பிள்ளைகள் கிழமையில் எத்தனை
நாள் பூசை காண்கிறார்களென்று விசாரித்தார். மூன்று
நாள் என்றார்கள். அவர் கலாசாலை ஒழுங்குப் புத்தகத்
தை வாங்கிப் "பூசை காணவேண்டியது ஒவ்வொருநா
ளும்" என்று எழுதிவிட்டார்.

இவரைப்போல அநேக பெரியோரும் சிறியோரும்
தினப்பூசை காண்பதின் நன்மையை அறிந் துணர்ந்
திருக்கிறார்கள். அதன் பயனாக அவர்கள் எவ்வித அந்
தஸ்திலிருந்தாலும் என்னென்ன தொழில் பணிவிடை
பார்த்துவந்தாலும் நாள்தோறும் கிரமமாய்ப் பூசை
கண்டுவந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டும் வாசித்து
மிருக்கிறோம். மன்சோனி என்னும் வரகவி இளமை
தொட்டு நாள்தோறும் பூசைகாணும் நற்பழக்கத்தை
வயோதிகத்திலும் விடாப்பிடியாய் அனுசரித்து வந்தார்.
ஒரு ஞாயிற்றுக்கிழமை புசலும் குளிரும் மூடுபனியுமா
யிருந்ததால் வீட்டுக்காரர் அவரைப் பூசைக்குப்போக



விடாமல் மறித்துப்போட்டார்கள். அன்று பின்னேரம்
ஓர் சிநேகிதன் அவரைக் காணவந்தபோது அவர் மன
ரம்மியமற்று சற்று வெடுவெடுப்பாயிருப்பதைக்கண்டு
அதற்குக் காரணம் ஏதென்று விசாரித்தறிந்தது வீட்
டுக்காரர்செய்ததுதான் சரியென்று சிரிப்பாய்ச் சொன்
னார். புலவனார் மாறுத்தரமாக "ஒரு பூசை ஒரு இலட்
சம் பிராங்குநாணயத்துக்கு மேலான பேறுள்ளது"
லொத்திரியென்று சொல்லப்படும் "அதிர்ஷ்டபாகச்
சீட்டுமுறையிற் கிடைக்கும் எந்த மேலான வெகுமதி
யும் ஒரு பூசைக்கு இலக்காகாது, பூமியிலுள்ள பொன்
னெல்லாம் ஒரு பூசையின் நிறைக்கும் விலைக்கும் ஈடா
காதே" என்றார். பிராஞ்சுதேசத்து லூவிஸ் இராசா
நாட்பூசை காண்பதைப்பற்றிச் சனங்கள் கதைக்கிறார்க
ளென்று கேள்விப்பட்டபோது "அவர்கள் எனது நே
ரத்தைப்பற்றி எவ்வளவு கவனமாயிருக்கிறார்கள்; நான்
விளையாட்டிலும் வேட்டையிலும் இருமடங்குநேரஞ்
செலவழித்தாலும் அதைப்பற்றி ஒருவார்த்தையும்
சொல்லமாட்டார்கள்" என்றாராம். முத்திப்பேறுபெற்ற
தோமாஸ்மோர் என்னும் அங்கிலேய மந்திரியார் "இரா
சாதிராசாவுக்கு வணக்க நமஸ்காரமாக நாட்பூசை காண்
பதையே எனக்கு மிகப் பெரிய சங்கையாக எண்ணுகி
றேன்" என்பாராம். இவ்வாறு பெரிய மகான்கள்
மெய்ச்சி அனுசரித்துவந்த இவ் அரிய பழக்கத்தைப்
பெற்றார் பிள்ளைகளுக்குச் சிறுவந்தொட்டுப் பயிற்றிவரு
வார்களாகில் இகத்திலும் பரத்திலும் இவர்களுக்கும்
இவர்கள் குடும்பத்தாருக்கும் பெரும் பாக்கியமாயிருக்
குமே. அன்றியும் இளமையிற் பழகும் இவ் உச்சித
வழக்கத்தைப் பிள்ளைகள் பிற்காலம் இலேசாய் விட்டு
விடமாட்டார்கள். இதுவே பிள்ளைகளைத் தேவபத்தி
யும் நல்லொழுக்கமுமுடையவர்களாக வளர்ப்பதற்குரிய
உத்தம வழிகளிலொன்று. இன்னும் பிள்ளைகளுக்குச்
சிறுவந்தொட்டுப் பயிற்றவேண்டிய காரியங்களைப்பற்
றிப் பின்வரும் பாகங்களில் விரிவாய்ப் பேசுவோம்.



# பொருள் அட்டவணை


| பொருள் | பக்கம் |
|---|---|
| முதலாம் அதிகாரம்—பெற்ரேரின்மேன்மையும்அதிகாரமும் | 1 |
| பெற்ரேரின் மேன்மை, பெற்ரேரின்பூரண அதிகாரம் | 3—5 |
| பெற்ரேரின் ஆசீர்வாதமும் சாபமும் … … | 6 |
| பெற்ரேர் சருவேசுரனின் பதிலாளிகள் … | 9 |
| இரண்டாம் அதிகாரம் பெற்ரேர் அன்பு … | 11 |
| பெற்ரேர் சிலரின் கல்நெஞ்சுத்தனம் … | 13 |
| பிள்ளைகளுக்குப் பாரபட்சம்; மறுதாரப் பிள்ளைகள் | 17—21 |
| வேறுசில கொடுமைகள் முறைகேடான அன்பு | 24—26 |
| முறையான அன்பு; இவ் அன்பின் இலட்சணம் | 32—35 |
| தேவசித்தத்துக்குக் கீழ்ப்பட்ட அன்பு … | 38 |
| ஒரு மகா பெருங் குருட்டாட்டம் … | 41 |
| மூன்றும் அதிகாரம்—உழைப்பும் ஒறுப்பான நடையும் | 44 |
| பெற்ரோராகுமுன் உழைப்பும் ஒறுப்பும் … | 46 |
| பிள்ளைகள் வேலையும் ஒறுப்பான நடையும் … | 48 |
| பெற்ரோரானபின் உழைப்பு … … | 51 |
| உழைப்புக்கும் ஒறுப்புக்கும் உரியமுறை … | 54 |
| உழைப்பும் ஒறுப்புமில்லாமையால் விளையும்கேடுகள் | 60 |
| ஊதாரிப்பெண், குடியனுல் வரும்கேடு … | 64—67 |
| அசட்டைத்தனம் … … | 72 |
| நாலாம் அதிகாரம்-பிள்ளைகளின் உயிரும்சவுக்கியமும் | 76 |
| பெற்ரோராகுமுன் சவுக்கியத்தைப் பேணுதல் … | 77 |
| பிள்ளைகளின் உயிர், பாலூட்டல் — … | 79 - 86 |
| ஊண், உடை, உறக்கம்; சுத்தம்; சிலசுகவிதிகள் | 90-94—101 |
| மட்டசனத்தின்பயனுக்கு ஓர் உதாரணம் … | 109 |
| ஐந்தாம் அதிகாரம்-பிள்ளைகளின் ஞானச்சீவியாரம்பம் | 114 |
| ஞானஸ்நானத்தின் பயன் … … … | 115 |
| ஞானஸ்நானத்தின் அவசியம் … | 123 |
| ஞானஸ்நானங் கொடுக்கும் முறை … | 128 |
| பெற்ருரின் கடமை … … | 129 |
| பராயப்பட்டவர்களின் ஞானஸ்நானம் … | 141 |
| ஆறம் அதிகாரம்—(பாலபருவம்) நல்வளர்ப்பின்பலன் | 144 |
| அசட்டையானவளர்ப்பும் அதன் பலனும் … | 147 |
| நல்வளர்ப்புக்குதவி; நற்பருவம் … … | 154-157 |
| நல்வளர்ப்புக்கு உரியமுறை … … | 163 |